உ

சிவமயம்

நகரத்தார் மாணவர் சங்கம்

சென்னை

கலை கல்வி உயர்வு

சிறப்பு மலர்

1964

உ

சிவமயம்.

நகரத்தார் மாணவர் சங்கம்

சென்னை

கல்வி மலர்

உயர்திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள் தலைமையில்

ராஜா சர் மு. அ. முத்தையா செட்டியார் அவர்களால் வெளியிடப்பெற்றது

12-7-1964

மலர்க் குழு

சொ. வள்ளியப்பன் (சங்கத் தலைவர்)

இராம. வெள்ளையப்பன் (சங்கச் செயலர்)

வே. கண்ணன்

அழ. கதிரேசன்

வீர. குமரப்பன்

சு. பழ. பழநியப்பன்

ஆ. நாராயணன்

'சோமலெ' (பதிப்பாசிரியர்)

உள்ளுறை

முன்னுரை

நகரத்தார் மாணவர் சங்கம் எட்டு ஆண்டுகட்கு முன் சென்னையில் ஏற்பட்டது. நகரத்தார் மாணவர்களின் நலங்கருதி, இவ்வெட்டு ஆண்டுகளாக இச்சங்கம் ஆற்றியுள்ள பணிகள் பலவாகும். இதைப் பற்றிய விவரங்களைப் பலரும் அறியச் செய்யவும், சங்கத்தின் கருத்துக்களைப் பரப்பவும், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் காணவும் சிறப்புமிக்க ஒரு மலரை வெளியிடுதல் இன்றியமையாததென உணர்ந்தோம்.

கடந்த எட்டு ஆண்டுகளாகச் செய்துள்ளவற்றைத் திரும்பிப் பார்த்து, இனி வரும் எதிர்காலத்தில் செய்யவேண்டுவனவற்றைத் திட்டமிட்டுக்கொண்டு, எங்கள் கழகப்பணியின் இரண்டாம் கட்டத்திற்கு உறுதியுடன் காலெடுத்துவைத்து முன்னேறும் முயற்சிக்கு இம் மலர் மகிழ்வும் ஊக்கமும் தருவதாக வேண்டும் என்பது எங்கள் விழைவாகும். கட்டுரைகள், கவிதைகள், பொருள் பொதிந்த செய்திகள் இம்மலருக்கு மணம் தரவேண்டுமென்று கருதினோம்.

'சோமலெ' அவர்கள் உலகம் சுற்றிய தமிழர்; மாவட்ட வாரியாகத் தமிழகத்தை விரித்து விளக்கித் தமிழர்களுக்கு உணர்த்திவரும் நற்றமிழர். அவரது 'வளரும்தமிழ்' தமிழ் உரை நடை வளர்ச்சி வரலாறு. அவர் பதிப்பித்து வெளிவந்துள்ள மலர்கள் கருத்துக் கருவூலங்களாக விளங்குகின்றன.

இவ்வாறு மலர்களைப் பதிப்பித்து உருவாக்குவதில் பயிற்சியும் ஆர்வமும் உடையவரும் நம் இனத்தின் மேம்பாட்டிலும் நம் மாணவர்களின் முன்னேற்றத்திலும் ஈடுபாடும் ஊக்கமும் கொண்டவருமாகிய 'சோமலெ' அவர்கள் பல ஆண்டுகளாக எங்கள் சங்கத்துடன் தொடர்புகொண்டு வந்துள்ளார்கள்.

பதிப்பாசிரியர் பொறுப்பை ஏற்று 'சோமலெ' அவர்கள், நகரத்தார்கள் பற்றிய புள்ளி விவரங்களையும் வரலாற்றுக் குறிப்புக்களையும் மிகவிரிவாகத் தொகுத்துள்ளார்கள்; இன்னும் தொகுத்து வருகின்றார்கள். அரிதின்முயன்று தொகுத்த அவற்றுள் சிலவற்றை வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தமை, எங்கள் மலருக்கமைந்த நற்பேறாகும். காசிப் பல்கலைக் கழகத்தில் நகரத்தார்கள் பயில, உதவிச் சம்பளத் திட்டங்களை ஏற்படுத்துவதில் நம் 'சோமலெ' அவர்கள்கொண்ட பங்கினை நினைந்து, நம் இனத்து மாணவர் சமுதாயம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

நம் இனத்தைச் சார்ந்த 'பட்டதாரிகள் பட்டியல்' ஒன்றைச் சேகரிக்க நாங்கள் மேற்கொண்ட முயற்சி பெரிதாகும். சென்ற 1964 ஜனவரி மாதம் முதல் இவ் வேலையில் ஈடுபட்டோம். ஜனவரி இரண்டாவது வாரத்தில் 'இந்து' நாளிதழில் விளம்பரமும் வெளியிட்டோம். பின்பு பல ஊர்கட்கு நகரத்தார்களுக்கு எழுதினோம். மேலும் தெரிந்த நண்பர்கட்குப் பத்துப் பத்துக் குறிப்புப் படிவங்கள் (Forms) அனுப்பினோம். இவ்வாறெல்லாம் முயன்றும் அன்பர்கள் போதிய அளவு ஊக்கம் காட்டிலர். குறிப்பிட்ட சிலரிடமிருந்த விவரங்களையும் சோமலெ அவர்களிடமிருந்த முகவரிகளையும் கொண்டு இயன்ற வரை ஒரு பட்டியலை இப்போது வெளியிட்டுள்ளோம். இதிலுள்ள குறைபாடுகளை நீக்கி, அடுத்த ஆண்டில் செம்மையான பட்டியலை வெளியிட அன்பர்கள் துணைசெய்ய வேண்டுகின்றோம்.

முதற்கண், பல்லாண்டுகளாக நன்கொடைகள் நல்கி எங்களை ஊக்குவித்து வருபவர்கட்கு எங்களுடைய மனமுவந்த நன்றியறிதல் உரியதாகும். அடுத்து இம் மலர் மணம் கமழக் கட்டுரை, கவிதை, வழங்கியவர்கட்கும், வாழ்த்துச் செய்தி களனுப்பிய பெருமக்கட்கும், அழகுற அச்சிட்டுத்தந்த 'ஐடியல்' அச்சகத்தாருக் கும்—குறிப்பாக திருவாளர்கள் அரு. பெரியண்ணன், கவிஞர் நாரா. நாச்சி யப்பன் ஆகியோருக்கும், ராஸ் அச்சகத்தார்க்கும் ஓவியர் 'அய்க்கண்' அவர்கட் கும் எங்கள் நன்றி உரியதாகும். மேலும், விளம்பரங்கள் தந்து எம் முயற்சியை ஆதரித்துள்ள வணிக நிறுவனங்கட்கு நாங்கள் மிகவும் கடமைபட்டிருக் கின்றோம். இவர்களுடைய ஒத்துழைப்பு இன்றேல் இம் மலர் வெளிவந்திராது. இவ் விளம்பரங்களைச் சேகரித்துத் தந்தும் மலர் வெளியிடும் பணியில் ஒத்துழைத் தும் உதவிய நண்பர்கள் வே. கண்ணன், அழ. கதிரேசன், சு. பழ. பழநியப்பன், வீர. குமரப்பன், இராம. வெள்ளையப்பன், ஆ. நாராயணன் ஆகியோர்க்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

" இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
இயந்திரங்கள் வகுத்திடு வீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடு வீரே "

என்று ஆவேசத்தோடு பாடினார் கவியரசர் சுப்பிரமணிய பாரதியார்.

பாட்டின் குரலைக் கேட்டவர்கள் பல கோடி ஆகும். பாட்டின் பொருளை உணர்ந்தவர்கள் சிலரே. அந்தச் சிலருள் சிறப்புக்கு உரியவர் திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியார், அவர் இரும்பைக் காய்ச்சத் திட்டங்கள் வகுத்தார். இயந்திரங்களைப் படைக்க நிலையங்கள் கண்டார். இன்று தொழில் உலகின் ஒளி விளக்காகத் திகழ்கின்றார். இம்மலர் வெளியீட்டு விழாவில் தலைமைதாங்க அவர்கள் இசைந்தது எங்கள் பேறு.

மலரை வெளியிட டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் ஒப்புக் கொண்டதும் எங்கட்குப் பெருமை தருகிறது. வள்ளன்மையாம் பெருங் குணமும் வாய்மை அறநெறியும் வாய்ந்தவராய், பல்கலையும் தமிழிசையும் வளர்த்துப் பாருலகம் பாராட்ட வாழ்ந்த அண்ணல் அண்ணாமலையரசர் அரும்புதல்வராய்ப் பிறந்து அவர்தம் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். அரசியல் உலகில் அவர்கள் பெற்றுள்ள செல்வாக்கும் கல்வித்துறையில் அவர்கள் காட்டிவரும் ஆர்வமும் நாடு நன்கறிந்தவை. இவ்விரு பெருமக்களும் தங்கள் பொன்னான நேரத்தை எங்கள் பாலுள்ள அன்பால் சிறிது ஒதுக்கிவைத்து சங்கத்தைப் பெருமைப் படுத்துவதற்காக நாங்கள் அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்.

கொச்சைத் தமிழில் கோணல் பாட்டெழுதிக் குறையுற்றுக் கிடந்த திரைப் படத்தொழில் துறையில், தென்றல் மணங் கமழும் செந்தமிழிற் பாட்டெழுதிச் சிறப்புச் செய்யவந்த பிறப்புப் பெருங் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் காசிச் சத்திர மலரில் குறிப்பிடுவதுபோல,

" தத்தமது சாதியினைச் சாதியினர் போற்றுமட்டும்
சபையில் முழங்கிடுவோர் சாதிக்கே வாழுமட்டும்
நாமும் நமதுகுல நலங்காணப் போரிடுவோம்
நகரத்தார் நலஉலகை நாளைக்கே நாம்சமைப்போம்!"

12—7—1964
சென்னை

சொ. வள்ளியப்பன்,

தலைவர், நகரத்தார் மாணவர் சங்கம்.

பதிப்புரை

தருமமிகு சென்னைமாநகரின்கண், கல்வி பயிலும் நம் இனத்து இளைஞர்கள், 'நகரத்தார் மாணவர் சங்கத்தைத்' தோற்றுவித்து 1956-ஆம் ஆண்டு முதல் சிறப்பாக நடத்தி வருகின்றனர். இச் சங்கத்தின் ஆதரவில் வெளிவரும் கல்வி மலரைப் பதிப்பிக்குமாறு, சங்க அன்பர்கள் என்னை வேண்டினர். எனது பல அலுவல்களுக்கிடையே, இதனையும் யான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன். இதற்கு 'இனவெறி' எதுவும் காரணமன்று; அறநெறியே காரணமாகும். உண்மை நிலையை விவரமாக உலகிற்கு அறிவிக்கவேண்டும் என்ற வேட்கையே என்னை இதில் ஊக்கியது. இவ் வாய்ப்பை நல்கிய இளைஞர்கட்கு, சிறப்பாக இச்சங்கத்தின் தலைவர் சொ. வள்ளியப்பன் அவர்கட்கு என் நன்றி உரியதாகும்.

கல்வி வளர்ச்சிக்கு நகரத்தார்கள் தொன்று தொட்டுச் செய்துவரும் பணி ஒப்புயர்வற்றதாகும். காலப்போக்கில், அரசாங்கம் கல்வித்துறையில் புதிய பொறுப்புக்களைப் பெரிய அளவில் ஏற்று வருகிறது. சான்றாகத் தொடக்கப் பள்ளிகளை, ஊராட்சி மன்ற ஒன்றிப்புக்கள் நடத்திவருகின்றன. உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் அரசாங்கத்தின் உறுப்பாகும் நிலை விரைந்து உருவாகிவருகிறது. இன்னுஞ் சில ஆண்டுகளில் பள்ளிகளின் பெயர்கள் எல்லாம் மாற்றப்பட்டு, எண்களையும் இலக்கங்களையும் மட்டும் குறிப்பிட்டுப் பள்ளிகளைச் சுட்டிக்காட்ட நேரும் என எண்ணுதலில் தவறில்லை. இதுபோல வரும் மாறுதல்களால் பல உண்மைகள் மறைதல்கூடும்; மறந்து போதலும் கூடும். எனவே, நகரத்தார்கள் செய்துள்ள கல்விப் பணிகளை விரிவாகவும் விளக்கமாகவும் சேகரித்து இம் மலரில் தர முயன்றுள்ளோம்.

வெள்ளி பெரிதன்று; விளங்கும் அறிவு தரும்
பள்ளி பெரிதென்று படைத்த கலைக்கோயில்

எனப் போற்றுமாறு 'எண்ணும் எழுத்தும் தம் கண்'ணென எண்ணும் தனவணிகர் கண்ணுக் கழகு தரக் கட்டியுள்ள கலைக்கோயில்களின் ஏடாக மட்டும் இம்மலர் அமையவில்லை.

நகரத்தார்களில் குறிப்பிடத்தக்கவர்கள்—வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள் ஆகிய இருதிறத்தாரும்—பற்றிய சில விவரங்களையும் மலரில் காணலாம்.

நம் இனத்தைச் சேர்ந்த 'பட்டதாரிகளின் பட்டியல்' ஒன்றையும் உருவாக்கி வெளியிட்டுள்ளோம். இதை உருவாக்க நாங்கள் மேற்கொண்ட முயற்சி பெரிது. இது தொடர்பாக ஏறத்தாழ ஓராயிரம் கடிதங்கள் எழுதியும் பலர் பதில் எழுதவே இல்லை. இதனால் எங்கள் பெருமுயற்சி முழுவெற்றியாக அமையவில்லை. எனினும் விவரங்கள் அனுப்பியவர்கட்கும், வெளிநாடுகளிலிருந்து எங்கள் முயற்சியை ஆதரித்தவர்கட்கும் மிகவும் நன்றி செலுத்துகிறோம்.

விவரங்கள் யாவும் ஆங்கில அகரவரிசைப்படி தரப்பட்டுள்ளன. பட்டதாரிகள் பட்டியல் ஊர் வரிசைப்படி அமைக்கப்பட்டிருக்கிறது. 'நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வரலாறு' என்ற நூலில் குறிக்கப்பட்டுள்ள ஊர்கள் மட்டுமே நகரத்தார்களின் ஊர்களாகக் கருதி இதில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

நகரத்தார் பட்டதாரிகள் குறிப்பிடத்தக்க அளவினராய், பத்து ஊர்களில் மட்டுமே உள்ளனர். அவர்களுள்ளும் பெரும்பாலோர் ஒரு சில குடும்பத்தினரே. பிற ஊர்களில் பட்டதாரிகள் எண்ணிக்கை மிகச் சுருக்கம் ஆகும். செல்வத்தைப் போல, கல்வியும் தேங்கிக் கிடக்கிறது. எனவே கல்வித் துறையில் நம் சமூகம் பின்தங்கியிருக்கிறது என்பது தெளிவு.

தமிழ் நாட்டிலுள்ள 1800 உயர்நிலைப் பள்ளிகளில் நம் பங்கு 3%. கல்லூரிகளிலும், தொழிற் கல்வி நிலையங்களிலும் நம் பங்கு இன்னும் மிகுதி. ஆனால் கல்வி நிலையங்களைத் தோற்றுவித்த அளவிற்கு இன்னும் நம்மிடையே கல்விப் பெருக்கம் ஏற்படவில்லை.

திருவாளர்கள் வே. கண்ணன், அழ. கதிரேசன், இல. பழநியப்பன், சு.பழ.பழநியப்பன் ஆகியோர் இம்மலரை உருவாக்குங்கால் எனக்கு உறுதுணையாக இருந்தார்கள். அவர்களுடைய ஒத்துழைப்புக்கு நன்றியுடையேன். தலைவர் திரு சொ. வள்ளியப்பன் அவர்கட்கும் அச்சுநகல் திருத்த உதவிய திருவாளர்கள் தமிழண்ணல் இராம. பெரிய கருப்பன், கா. முருகப்பன், ராம. பழ. அருணாசலம், மெய் உடையப்பன், மா. ஆறுமுகம் ஆகியோர்க்கும் எம் நன்றி உரியது.

கல்வியில் ஆர்வம் பெறவும், கடனுதவிகள் செய்யும் பல்வேறு சங்கங்கள்பற்றி அறியவும், வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய கல்வி நிலையங்கள் பற்றித் தெரிந்து கொள்ளவும், நம் இனத்தவர் பற்றிய பிற பொதுக் குறிப்புக்கள் பலவற்றை அறிந்து கொள்ளவும் இம் மலர், நம் மாணவர்கட்கும் மற்றும் அனைவருக்கும் பயன்படுவதாகும்.

ஆனந்த விகடன் இதழில் அண்மையில் வெளியான கேலிச் சித்திரத்தில்


"திரைகடலோடியும் திரவியம் தேடு
துன்பம் வந்திடில் தாயகம் நாடு"

என்று குறிப்பிட்டிருக்குமாறு நம் இனத்தைச் சோதனையும் வேதனையும் சூழ்ந்துள்ளன. இச் சூழலில் வருங்காலத்தைப் பற்றி வகையாகச் சிந்திக்கவும், அழியாச் செல்வமான கல்வியில் அழுத்தமான கருத்தைச் செலுத்தவும் இம்மலர் துணையாகவும் தூண்டுதலாகவும் விளங்குமாக! சுப்பிரமணிய பாரதியார் பாடியிருப்பதுபோல,

'திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே'

சென்னை
2—7—1964

'சோமலெ'
பதிப்பாசிரியர்




கல்விமலர் வெளியீடு காணவந்த அன்பர்களின்
நல்ல திருக்கூட்டம் நகரத்தார் பெருங்கூட்டம்!


★



செல்வர் முருகப்பர் செந்தமிழில் தலைமையுரை
செட்டிநாட் டரசருடன் செவிமடுக்கும் 'சோமலெ.'



நகரத்தார் இனந்தனிலே நற்கல்விப் பட்டமெனும்
சிகரத்தை முதன்முதலில் சேர்சோம சுந்தரர்க்கு
வரிசைபெறு கல்விமலர் வளர்கவிஞர் முன்னிலையில்
அரசர்திருக் கையாலே அளிக்கின்ற காட்சியிது.



வள்ளியப்ப ரோடு வருமாண்டுப் புதுத்தலைவர்
வெள்ளையப்ப னாரும் விழைந்து தமிழ்வாணன்
கைரேகை பார்க்கும் கைக்குச் செண்டளித்து
மைவண்ணத் தோளுக்கு மலர்மாலை சூட்டுகின்றார்.

பிற்சேர்க்கை

கல்வி மலர் வெளியீட்டு விழா

இவ்விழா, 12-7-64-ல் ராஜா அண்ணுமலை மன்றத்தில், மிகச் சிறப்பாக நடைபெற்றது. மன்றத்தின் அகமும் புறமும் அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்தன. நகரத்தார் பெருமக்களும் மாணவர்களும் திரளாக வந்திருந்தனர். மணம் தரும் மலர்ச் செண்டும் சுவைதரும் கற்கண்டும் வந்தவர்கட்கு வழங்கி, மாணவர்கள் மனங்குளிர வரவேற்றனர்.

தொழில் மேதை முருகப்ப செட்டியார் அவர்கள் தலைமை தாங்க, தமிழ் இசைக் கல்லூரி மாணவிகள் இறை வணக்கம் பாட, விழா தொடங்கிற்று. சங்கத் தலைவர் திரு. சொ. வள்ளியப்பன், வரவேற்புரை ஆற்றினர். நகரத்தார்கள் கல்வித்துறையில் பிற்பட்ட இனமாக அறிவிக்கப் பட வேண்டும்; அதற்குரிய சலுகைகளை அரசினர் வழங்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினர்.

மலர்ப் பதிப்பாசிரியர், திரு. 'சோமலெ', மலரிலுள்ள பகுதிகள் இன்னின்ன என்பதைச் சுட்டிக்காட்டினர். ஆண்டுதோறும் நகரத்தார்கள் கல்வி மாநாடு கூட்டவேண்டும் என்றும் கூறினர். கேரளத்திலுள்ள நாயர் சர்விஸ் சொசைட்டி போன்று, நகரத்தார் கல்வி நிலையங்கள் ஒரே ஆட்சியில் அமைவது நலம் என்றும் தெரிவித்தார். கணிதத்தில் 100-க்கு 100-மார்க்கு வாங்கியும் பொறியியல் கல்லூரியில் அரியக்குடி நகரத்தார் மாணவர் ஒருவர் சேர்க்கப்படாத அநீதியையும் படிக்கப் பணம் இல்லாமையால் குளிபிறை மாணவன் ஒருவன் உயிர் நீத்துக்கொண்ட கொடுமையையும் அவர் எடுத்துரைத்தார். பணம் இருந்தபோது நம்மவர் படிக்கவில்லை என்றும் படிக்கத் தொடங்கியபோது அதற்கு வேண்டிய பணவசதி இல்லை என்றும் சொன்னர்.

விழாத் தலைவர் உயர்திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள், தலைமையுரை நிகழ்த்தினர்கள். (அவ்வுரையைத் தனியே காண்க.)

அடுத்து, ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் பேசும்போது, நம் இனத்தார் செட்டியார் என்று சொல்லிக் கொள்ள யாரும் வெட்கப்படவேண்டாம் என்றும், பல சமூகங்கள் முன்னேறினால்தான் நாடு முன்னேறும் என்றும், நகரத்தார்கள் காலத்துக்கேற்ற தருமங்களை எப்போதும் செய்து வருவதாயும் கூறினர்கள். வட்டித் தொழிலில் நகரத்தார் 150 ஆண்டுகளாகத்தான் ஈடுபட்டிருப்பதாயும் அதற்குமுன் தம் குடும்பத்தார் விருதுபட்டி (இன்றைய விருதுநகர்)யில் பஞ்சு வியாபாரம் செய்ததாயும் தூத்துக்குடியில் உப்பளம் நடத்தியதாயும் அதுபோல் இனியும் வட்டித்தொழில் அல்லாத பிற தொழில்களைச் செய்யலாம் என்றும் சொன்னர்கள். பர்மா இந்தியர் பிரச்சினையில் அரசாங்கம் நம்மை ஏமாற்றி விட்டதையும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

குமாஸ்தா உத்தியோகத்துக்கு நகரத்தார்கள் போகக்கூடாது என்றும் தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ள நகரங்களில் போய்ச் சிறு தொழில்கள், கடைகள் நடத்த வேண்டும் என்றும்,

வெளிநாடுகளில் உயர் கல்வி பயிலவேண்டும் என்றும் ராஜா அவர்கள் கூறினர்கள். ஆங்கில மொழியில் அழுத்தமான புலமையும், குடும்பக் கட்டுப்பாடும் நம்மவர்க்கு இன்றியமையாதன என்று அவர்கள் வலியுறுத்தினர்கள்.

மலாய் நாட்டிலுள்ள பொதுப் பணங்களை இந்தியாவுக்கு விரைவில் அனுப்புவது அறிவுடைமை என்றும் பர்மா விஷயத்தில் நாம் தோல்வியடைந்ததுபோல இதிலும் தோல்வியடையக் கூடாது என்றும் அவர்கள் கூறினர்கள். மலரில் கூடுமான வரை விசாரித்து விருத்தாந்தங்களை, அனுபவம் நிறைந்த 'சோமலெ' வெளியிட்டிருப்பதாயும் விடுபட்டிருக்கக் கூடியவற்றை எழுதியனுப்பலாம் என்றும் ராஜா அவர்கள் கூறினர்கள்.

முதல் மலரை நகரத்தார்களுள் முதல் பட்டதாரியான பலவான்குடி சோமசுந்தரம் செட்டியார் அவர்களுக்கு ராஜா அவர்கள் வழங்கினர். குழுமியிருந்த மக்கள் அனைவரும் கையொலி செய்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

பின்னர், கவிஞர் கண்ணதாசன் பேசினர். சட்டக் கல்லூரி தவிர வேறு எந்தக் கல்லூரியிலும் நம்மவர்க்கு எளிதில் இடம் கிடைப்பதில்லை என்பதை அவர் எடுத்துரைத்தார். செட்டியார் கான்டிமென்ட்ஸ் என்ற பெயரில் நகரத்தார் பெண் மக்களைக் கொண்டு ஊறுகாய் போடுதல், அப்பளம் தயாரித்தல், ஓலைப்பெட்டி பாய்தடுக்கு மிடைதல் முதலியன செய்யும் தொழிற்சாலை சென்னையில் கூட்டுறவு முறையில் அமைதல் நலம் என்று கண்ணதாசன் கருத்துக் கூறினர். உருது, பிரெஞ்சு, இலத்தின், உருசிய மொழிகளை நம் மாணவர்கள் கற்றுத் தேர்ச்சி பெற்று பிறநாட்டினரோடும் பிற சமூகத்தினரோடும் இரண்டறக் கலக்கவேண்டும் என்றும் சொன்னர்.

பல்கலை வல்லுனர் தமிழ்வாணன் அவர்கள் பேசும்போது, தாம் முதலில் இந்தியன் என்றும் இனத்தால் நகரத்தார் என்றும் தம் ஒவ்வொரு துளி இரத்தத்திலும் நகரத்தார் என்ற உணர்ச்சி ஓடுவதாயும் சொன்னர். கடல் கடந்த நாடுகளில் நம் மக்கள் படும் அல்லல்களை அவர் விளக்கிக் கூறினர். ராஜா, அ. மு. மு., கருமுத்து தி., ஏ. வி. எம். ஆகிய நால்வரும் நம் இனத்தின் பெருவாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வகை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். குமாஸ்தா உத்தியோகம் கூடக் கிடைக்காமல் பல செட்டியார் இருப்பதால், அவர்களுக்கு வாழ்வளிக்குமாறு புரட்சி எழுத்தாளர் "நால்வரை" வேண்டினர். பறவைகள் இனத்தில் குருவி முதல் தோட்டான் வரை பல வகைகள் இருந்த போதிலும் பொதுவாக அவற்றைப் பறவைகள் என்றுதான் குறிக்கிறோம். அதுபோல இந்தியர் என்ற பொதுப் பெயர் பெற்றிருப்பினும், செட்டியார் போன்ற தனித்தனிப் பிரிவு இருப்பது இயல்பே என்றும் இன உணர்ச்சி வயப்படுவது குற்றமன்று என்ற தத்துவத்தைத் தமிழ்வாணன் எடுத்துரைத்தார்.

முதல் பட்டதாரி பலவான்குடி சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் பேசுகையில் தாம் 1922-ல் திருச்சி செண்ட் ஜோசப் கல்லூரியில் பட்டம் பெற்றதையும் அதற்குமுன் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு படிக்க மதுரைக்குச் சென்றதையும் கூறினர். பலவான்குடியிலிருந்து மதுரைக்கு 45 மைல் பிரயாணம் செய்ய அந்நாளில் 30 மணி நேரம் மாட்டு வண்டியில் செல்ல வேண்டியிருந்தது என்று கூறினர். செய்கோனிலுள்ள பொதுப் பணங்களைத் தாய்நாட்டுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் சொன்னர்.

பிறகு, வழக்குரைஞர் வே. கண்ணன், கல்வி மலர் பதிப்பித்ததற்காகவும் விவரங்கள் சேகரித்ததற்காகவும் 'சோமலெ'யைப் பாராட்டினர். அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்கள், 'சோமலெ'க்கு மலர்மாலை அணிவித்துப் பாராட்டினர்கள்.

முடிவுரை கூறுகையில், தலைவர் அ. மு. மு. அவர்கள், அனைவரும் மேலும் விவரங்கள் தெரிவித்து நம்மவர்களின் கல்விப்பணி விளக்கம் பெற உதவவேண்டும் என்று கூறினர். முதல் வெளியீட்டைக் கொண்டு வருவது கடினமென்றும் அதன் விரிவாகவும் திருத்தமாகவும் பிந்திய வெளியீடுகள் சிறப்புற இயலும் என்றும் கூறினர்.

சங்கச் செயலாளர் இராம. வெள்ளையப்பன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினர்.

நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

வந்திருந்த அனைவர்க்கும் குளிர்பானம் வழங்கப் பெற்றது.

பின்னர், சங்க உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. 1964-65 க்கும் கீழ்க்கண்டவர்கள் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

தலைவர் : இராம. வெள்ளையப்பன் (தேவகோட்டை) அழகப்பா தொழிற் கல்லூரி, B. Tech. நான்காமாண்டு மாணவர்.

செயலாளர் : பெரி. பெரியகறுப்பன் (இராங்கியம்) அழகப்பா தொழிற் கல்லூரி, B. Sc. Tech. இறுதியாண்டு மாணவர்.

பொருளாளர் : ஆ. நாராயணன் (புதுப்பட்டி) பச்சையப்பன் கல்லூரி பி. காம். இறுதியாண்டு மாணவர்.

நகரத்தார் மாணவர் சங்கத்தின்

கல்வி மலரை வெளியிட்டு 12—7—1964-ம் நாளன்று

உயர்திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள்

ஆற்றிய

தலைமையுரை

★

இன்றைய இக்கூட்டம் இரண்டு விதங்களில் முக்கியமானது. இதை ஏற்பாடு செய்துள்ளவர்கள் செட்டிநாட்டு நகர சமூகத்தைச் சேர்ந்த மக்கள். பெரும்பான்மையினர் இளைஞர்கள். தொழில் அனுபவம், உலக அனுபவம் இரண்டும் அதிகமாகப் பெருதவர்கள். கல்வியிலும், அறிவைப் பெருக்கிக்கொள்வதிலும் முக்கியமாக ஈடுபட்டிருப்பவர்கள். இளைஞர்கள் உற்சாக மிகுதியினல் செய்யும் எந்த நல்ல காரியத்தையும் முதியவர்களாகிய ராஜா அவர்களைப் போன்றவர்களும், என்னைப் போன்றவர்களும் பாராட்டவேண்டியது எங்கள் கடமை. எங்களுக்கு சந்தோஷம் அளிக்கக்கூடியது. உங்களுடைய நடவடிக்கைகளைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறேம். இது முதல் காரணம், இன்றைய கூட்டத்தின் முக்கியத்தை எடுத்துக் காட்டுவதற்கு.

இரண்டாவது, இன்றைய கூட்டத்தில் மேற்கொள்ளவிருக்கும் பிரதான நிகழ்ச்சி, புத்தக வெளியீடு. புத்தகம் என்ருல் சாதாரணப் புத்தகம் அல்ல. பதிப்பகத்தை நடத்தும் பிரசுர கர்த்தாக்கள், அவ்வப்போது வெளியிடும் புத்தகங்களைப் போன்றது அல்ல. இது ஒரு அசாதாரணப் புத்தகம். நகரத்தார் சமூகத்தின் முக்கியத்துவம் பற்றியும், முக்கியஸ்தர்கள் பற்றியும், அவர்களுடைய தொழில், கல்வி, சமூக நிலைமை போன்ற அம்சங்கள் பற்றியும் 'சோமலெ' அவர்களால் மிகுந்த பிரயாசைப்பட்டு தொகுக்கப்பட்டுள்ள, புத்தகம். நகரத்தார் மக்களைப் பற்றிய முக்கிய விவரங்களை இங்கே சுருக்கமாகக் காணலாம். ஆகையால் இது நமக்கு முக்கியமான புத்தகம். நகரத்தார் சமூகத்தினரைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டுமென்ற ஆசையுள்ள மற்றவர்களுக்கு

இன்றியமையாதது. இதனுடைய சிறப்புக்களைப் பற்றி ராஜா அவர்கள் நிறையச் சொல்லுவார். இதை வெளியிடுவதற்கு ராஜா அவர்கள் முன்வந்திருப்பது மிகவும் பொருத்தம். அவருடைய கையால்தான் இதை வெளியிடவேண்டும் என்றே சொல்லுவேன். இதைத் தயாரித்து அளித்தவர்களை என் மனதாரப் பாராட்டுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நமது சமூகத்தினரைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பெரும்பான்மை நகரத்தார் மக்கள் அடங்கிய இக் கூட்டத்தில் நான் பேசுவது நமது குடும்பத்தினருடன் பேசுவதுபோல். பல விஷயங்கள் நமக்குத் தெரிந்தவை. நாமே அனுபவித்துள்ளவை. இருந்தாலும் அவ்வப்போது நமது நிலைமையைச் சிந்தித்து, ஆராய்ந்து கொண்டிருப்பது நன்மையைத் தரும்.

நம்முடைய பண்டைக்கால சிறப்புக்களைப்பற்றிச் சொல்லுவது இந்திய சரித்திரத்தின் பழங்கால மேன்மையைப்பற்றிப் பேசுவதுபோல. இவற்றைக் கண்டு நாம் பெருமை கொள்ளலாம். அவற்றிலிருந்து நாம் உற்சாகம் பெறலாம். தைரியம் அடையலாம். மனச்சோர்வை அகற்றிக்கொள்ளலாம். அகற்றிக் கொண்டு புதுப்புது வழிகளில், புதுப்புதுத் துறைகளில் நமது முயற்சிகளைப் புகுத்தவேண்டும். சரித்திரத்தின் முக்கியத்துவம் இங்கேதான் இருக்கிறது. நீண்டகால சரித்திரத்தின் தன்மை இதில்தான் உள்ளது. நாடுவிட்டு நாடுகள் சென்று வெற்றிகரமாக வாணிபம் நடத்திய ஆண்டுகள் பல. தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த எந்தநாட்டை எடுத்துக் கொண்டாலும் அங்கே நகரத்தார் மக்களின் பணி முக்கியமானதாகவே இருந்துவந்துள்ளது. மேல்நாட்டவர்கள் ஆதிக்கத்தை முதன்மையாகக் கொண்டு "காலனி" ஆட்சிகளை ஏற்படுத்திக்கொண்டு அதிகாரம் செலுத்தி செங்கோல் நடத்தினர். நமது மக்கள் வாணிபம் செய்து, கடன்கள் உதவி, ஆட்களை அனுப்பி நாடுகள் செழிக்க உதவினர்கள். அன்பையும், பண்பையும், நட்பையும் மட்டுமே துணையாகக்கொண்டு அவர்கள் பணியாற்றினர்கள். ஆனல் அரசமரத்தைப் பிடித்த பிசாசு அதன்கீழ் இருந்த பிள்ளையாரையும் பிடித்தது என்பதுபோல், காலனி ஆட்சியின்மீது ஏற்பட்ட வேகம், நமது மக்களையும் பிடித்தது. காலத்தின் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களினல் நமது சமூகத்தினர்கள் பெரும்பான்மையினர் தாயகம் திரும்பி விட்டனர். இந்தத் தாயகம் திரும்பும் இயக்கத்தின் இறுதி பாகத்தைத்தான் இன்று பர்மாவில் காண்கிருேம். வேலையை இழந்து, சொத்தையும் இழந்து, நட்பையும் இழந்து வழிச் செலவுக்கும் பணமில்லாது அகதிகளாகப் பலர் சென்னை வந்துகொண்டிருக்கின்றனர். அநீதி, அக்கிரமம், கொடுமை என்று இதைச் சொன்னல் மிகையல்ல. அந்நிய நாட்டு அரசாங்க நடவடிக்கைகளால் ஏற்படும் கஷ்டங்களுக்கு நிவாரணம் நமது அரசாங்கம் மூலம்தான் கிடைக்க வேண்டும். தென்னுட்டிலுள்ளவர்களின் அகதிப் பிரச்னை ஒவ்வொருநாளும் மிகவும் சிக்கலாக மாறிக்கொண்டு வருகிறது. இதனல் பாதிக்கப்படுவோர்கள் பெரும்பான்மையினர் நமது சமூகத்தினர்கள். இது பற்றி தீவிர கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர் நமது அரசாங்கத்தினர்.

சர்க்காரிடமிருந்து நிவாரணம் எந்த வகையில், எந்த அளவுக்கு, எப்போது, கிடைக்கும் என்று சொல்லமுடியாது. ஆனல் நமக்கு, பொறுப்பு உடனடியாக அதிகமாகிறது. தாயகம் திரும்பும் நம்மவர்களுக்குத் தேவையான உதவியளிக்கவேண்டியது நமது கடமை, நமது பண்பு.

நம் நகரத்தார்கள் வெளிநாடுகளில் போய்த் தொழில் செய்து வந்த, வருகிற இடங்களிலெல்லாம், தெய்வ பக்தியுடன் கோவில்களை அமைத்து அவைகள் சரிவர நடப்பதற்கு வேண்டியன செய்து நடத்தி வருகிருர்கள். நான் முன் சொன்னது போல் சில தேசங்களிலிருந்து நம் சமூகத்தினர் வெளியேற வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. இந்த நிலைமை இப்படி ஏற்படுமென்று வெகு காலத்திற்கு முன்னுடியே நான் நினைத்தேன். அதைப் பலரிடமும் சொல்லியிருப்பதோடு அந்தந்த தேசங்களுக்குப் போயிருந்த சமயமும், நான் சொல்லியிருக்கிறேன். நம்மவர்கள் தொழில் முறை வழக்கங்களை வெகு சீக்கிரத்தில் மாற்றிக் கொள்ளப் பிரியப்படாத

தினலோ, இவ்வளவு மோசமாக வருமென்று நினைக்காமலோ, அல்லது ஒடுக்கிக் கொண்டுவர சூழ்நிலை சரியில்லாததினலோ, அதைப் பெரு வெட்டாக நினைத்து விட்டார்கள். இப்பொழுது அநேகருக்கு அது நன்ருகத் தோன்றுகிறது என்றுதான் நான் நினைக்கிறேன். இப்பவும் அவரவர்கள் சொந்தத் தொழில்களை எப்படிவேண்டு மென்ருலும் அவரவர்களுக்குள்ள சூழ்நிலைக் குத் தக்கபடி செய்து கொள்ளலாம். ஆனல் கோவில் சம்பந்தமான, மற்ற பொதுவான சொத்துக் களை ஒரு ஒழுங்கு செய்து நமது சமூகத்திற்கு பிரயோசனப்படும்படியாக இளைஞர்களாகிய நீங்களெல்லாம் முயற்சித்தால் முடியுமென்றுதான் இன்னமும் நினைக்கின்றேன். அதாவது பர்மாவிலும், சிலோனிலும் தான் நம்மவர்கள் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அநேக இடங்களில் தொழில்களை நிறுத்தி விட்டார்கள். அந்த மாதிரியான இடங்களிலும், தொழில் இன்னும் செய்து வரும் இடங்களில் தேவைக்கு மேற்பட்டு இருப்பவைகளையும் ரெங் கோனிலுள்ள டிரஸ்டு பணங்களையும் ஒழுங்கு படுத்தி நல்ல முறையில் சமயம் கிடைக்கும்பொழுது இந்தியாவிற்குக் கொண்டு வரக்கூடிய நிலைமையில் வைத்திருந்தால் ராஜா அவர்களைப் போன்ற வர்களும், மற்றவர்களும் சேர்ந்து கெவர்மெண்ட் மூலம் இந்தியாவுக்குக் கொண்டு வந்து இங் குள்ள நகரத்தார்கள், என்ன விதமாகப் பரிபாலிக்க வேண்டுமென்று நினைக்கிருர்களோ, அந்தப் படிக்குச் செய்து நம் சமூகத்து இளைஞர்கள் நூற்றுக் கணக்கானவர்களுக்கு படிக்க வசதிகள் செய்து கொடுத்தும் திருமணங்கள் செய்து வைத்தும் இன்னும் நம் சமூகத்தினருக்கு என்னென்ன விதமான நன்மைகள் செய்யவேண்டுமென்று நினைக்கிருேமோ, அவைகளையெல்லாம் செய்து கொடுத்தால் நம் சமூகம் முன்னிருந்த நிலைமைக்குமேல் சிறந்து பிரகாசிக்குமென்பதில் சந் தேகமேயில்லை. நாடார் சமூகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கொஞ்ச காலத்துக்குள் அவர்கள் எவ்வளவு முன்னேறி விட்டார்கள். அதற்கு முக்கியமான காரணம் நாம் முன்காலங்களில் எவ் வளவு ஒற்றுமையாகவும், ஒருவருக்கொருவர் எவ்வளவு ஒத்தாசையாகவும், நெறிதவருமலும் இருந்து வந்தோமோ அவைகளைப் பின்பற்றி, அந்த சமூகம் வெகு சீக்கிரத்தில் முன்னேறி விட்டது. இது நமது பழக்கத்திலிருந்து வந்தாலும்கூட, சென்ற இருபதாண்டுகளில் இதை நாம் கைவிட்டு விட்டோமென்று நான் நினைக்கிறேன். இதிலும் இளைஞர்களாகிய நீங்கள் முயற்சி எடுத்து முன்னிலைமைக்கு கொண்டுவர வேண்டியது அவசியம். உங்கள் கடமையும் கூட.

இது ஒருபுறம் இருக்கட்டும். நமது சமூகத்தைப் பொறுத்தவரையில் ஒருவிதத்தில் இதை நன்மையாகவும் கருதலாம். கெடுதல் என்று தோன்றும் சம்பவங்களிலும் சில நன்மைகள் இருக்கின்றன. எதிர்பார்த்தோ, எதிர்பாராமலோ சில புதிய சம்பவங்கள் நிகழ்கின்றன. அண்டை நாடுகளுக்கு நம்முடைய சேவை அவசியமில்லாவிட்டால், அந்தச் சேவையை நமது நாட்டுக்கு அளிப்போம். அவர்களுடைய நஷ்டம் நம் நாட்டுக்கு லாபகரமாக இருக்கட்டும். இந்தத் திருப்தியைக் கொண்டுதான் நாம் நம் நாட்டிலேயே புது முயற்சியில் ஈடுபட்டிருக்கிருேம். வெளிநாடுகளில் நாம் முன்னேற்றம் அடைவதற்கு எந்த சாமர்த்தியம், என்ன திறமைகள், எந் தெந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வெற்றிகண்டோமோ, அதே சாமர்த்தியங்களையும், திறமைகளையும் கையாண்டு நமது நாட்டிலேயே நமது தேசத் தொழில் வளர்ச்சிக்கு நாம் பாடு படவேண்டும்.

இதைத்தான் புது முயற்சி என்று நான் குறிப்பிடுகிறேன். நமது பழங்கால முன்னேற்றத் துக்கும், இப்போதைய முன்னேற்றத்துக்கும் சில முக்கியமான வித்தியாசங்கள் உண்டு. இரண்டைமட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். இங்கே சூழ்நிலை வேறு. திட்டமிட்டு முன்னேறி, நாட்டைத் தொழில் மயமாக்கவேண்டும் என்ற வேகத்தில் நமக்குள்ள வாய்ப்புகள் இருப்பினும், பெரும்பான்மையான வாய்ப்புக்கள் உற்பத்தித் துறையிலேதான் இருக்கின்றன. இதில்தான் நாம் அதிகமாக கவனம் செலுத்தவேண்டும். இரண்டாவது, இதில் நாம் அதிகமாகப் புகுந்து முன்னேற வேண்டுமானல் நவீனமுறைக் கல்வியும், தேர்ச்சியும் முக்கியம். இவற்றை நாம் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். சுமார் 30, 35 ஆண்டுகளுக்குமுன்பு நமது சமூகத்தினர்களில்

இங்கிலீஷ் கல்வி பயின்று பட்டம் பெற்றவர்கள் மிகச் சிலரே. ஆனால் இப்போது எண்ணிக்கை அதிகம். வெளியிடவிருக்கும் புத்தகத்திலிருந்து பார்த்துக் கொள்ளலாம். நமது பண்பில் ஆலயம் அமைப்பதும், அறம் புரிவதும் முதலிடம் பெற்றுள்ளன. இதர நாடுகளில் நாம் திருப்திகரமாக வட்டிக் கடைகள் நடத்தி வந்தபோது, குடிபுகுந்த அந்தந்த நாடுகளிலும், நமது தாயகத்திலும் பல திருக்கோயில்களைக் கட்டிப் பராமரித்து வந்திருக்கிறோம். இப்பொழுது நவீனகாலக் கோவில்கள் என்று கருதப்படும் கல்விக் கோவில்களை நாம் விரிவாக நிறுவி வருகிறோம். உயர் பள்ளிகளும், கல்லூரிகளும், சர்வகலாசாலையும், தொழிற்கல்விப் பள்ளிகளும், பாலிடெக்னிக்குகளும் நம் தென்னகத்தில் பரவிக்கிடக்கின்றன. இவற்றை நிறுவுவதிலும், போஷிப்பதிலும் நமது சமூகத்தினருடைய பங்கு அதிகம். முதன்முதலாக கல்விக்கு முக்கிய இடமளித்து, ஆலயத் திருப்பணிக்குச் சமமாக இதைக் கருதி செயலில் காட்டிய பெருமை ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்களுக்குத்தான். அவர்கள் தான் வழிகாட்டிக் கொடுத்தார்கள். இதைச் சீரும் சிறப்புமாக விரிவு படுத்தியுள்ளார் நமது ராஜா அவர்கள். இவர்களது முயற்சியைப் பின்பற்றி, பலர் கல்வித் துறையில் பெரும்பணியாற்றி வருகின்றனர். அதைக்கண்டு நாம் பெருமையடையவேண்டும்.

இப்போதுள்ள சூழ்நிலையில் 'சோமலெ' சொன்னதுபோல நவீன முறைத் தொழிலில் ஈடுபாடும் நமது சமூகத்தினருக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று துணை. கல்வி அறிவையும், தொழில் அறிவையும் வளர்த்துக்கொண்டால், தொழிலில் ஈடுபட்டு நாட்டு வளத்தைப் பெருக்கலாம். நாமும் முன்னேறலாம். தொழில்வளம் பெருகப் பெருக கல்வியின் தேவையும் விரிவடைகிறது. இரண்டு துறைகளிலும் நமது முன்னேற்றம் இணைந்தே நடைபெறும். இதுதான் நமது புதிய வாய்ப்பு, நமது எதிர்காலத்தின் அமைப்பு. இதை அடிக்கடி நாம் சிந்தித்துக் கொண்டேயிருந்தால்தான் நமது முன்னேற்றம் தடையின்றி நடைபெறும்.

தொழில் முறையில் முன்னேற்றம் அவசியம் என்று வற்புறுத்திச் சொல்லும்போது நமது நடவடிக்கைகளில் நேர்மையும் நாணயமும் குன்றாது பார்த்துக் கொள்ளவேண்டும். இத்துறையில் நமது தரம் குறைந்து வருவதாகச் சில சமயம் எண்ணப்படுகிறது. அதற்கு இடமளிக்கக்கூடாது. நமது பண்புகளை வழுவாது போற்றி, அவற்றின் ஆதாரத்திலேயே நமது முன்னேற்றமும் அமைய வேண்டும்.

உங்கள் மத்தியில் இன்று பேச எனக்கு வாய்ப்பு அளித்ததற்கும், இந்த வைபவத்தில் கலந்துகொள்ள எனக்குக் கொடுத்த இந்த சந்தர்ப்பத்துக்கும் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, ராஜா அவர்களை இந்த அரிய நூலை வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

★



கலைமகள் வணக்கம்

கலையெலாம் பெற்ற தாயே,
கற்பவர் போற்றும் தாயே,

உலகிலே நிலைத்த செல்வம்
உன்னருட் செல்வ மன்றோ?

பலகலை பயில வேண்டிப்
பணிவுடன் வேண்டு கின்றேன்

மலரினில் விளங்கும் நீஎன்
மனத்திலும் விளங்கு வாயே!

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

கல்வியின் சிறப்பு

வெள்ளத்தால் போகாது
வெந்தணலால் வேகாது
வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவொழியக் குறையாது
கள்ளர்க்கோ மிக வரிது
காவலோ மிக வெளிது
கல்வி யெனும் உள்ளத்தே பொருளிருக்க
உலகமெலாம் பொருள்தேடி உழல்வதேனே

அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் — உறுங்கவல்
ஒன்று உற்றுழியும் கைகொடுக்கும்
கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க்கு உற்ற துணை.

— நீதிநெறி விளக்கம்

Dr. RAJAH
Sir MUTHIAH CHETTIAR
of Chettinad

CHETTINAD HOUSE, ADYAR,
RAJAH ANNAMALAIPURAM P.O.
MADRAS-28.

ஸ்ரீ. சொ. வள்ளியப்பன் அவர்கள்,
தலைவர், நகரத்தார் மாணவர் சங்கம்
சென்னை.

அன்புடையீர்,

தங்கள் அன்புள்ள 30-1-64உ கடிதம் கிடைத்தது. இவ்வாண்டு தங்கள் சங்கத்தின் சிறப்பு மலர் ஒன்று வெளியிட முடிவுசெய்திருப்பதைப்பற்றி திருப்தி. நகரத்தார் மாணவர்கள் கல்விக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டு தொண்டாற்றிவரும் தங்கள் சங்கம் பற்பல பெரியோர்கள் நல்லாசிபெற்று வளர்ந்து வருகிறது. மேன் மேலும் நகரத்தார் மாணவர்களுக்காக தொண்டாற்றிவர தங்கள் சங்கம் வளம்பெற்று மேலும் மேலும் சிறப்புற்று விளங்கவேண்டுமாயும் தாங்கள் வெளியிட முயற்சித்துவரும் சிறப்பு மலரும் ஓர் சிறந்த மலராக திகழவேண்டுமாயும் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

மு. அ. முத்தய்யா செட்டியார்

உ

சிவமயம்

A. M. M. MURUGAPPA CHETTIAR

"CHAMUNDESWARI BAUGH"
SANTHOME HIGH ROAD,
SANTHOME, MADRAS-4.

9-5-1964

நகரத்தார் மாணவர் சங்கத்தின் சார்பாக ஒரு கல்விச் சிறப்பு மலர் வெளியிட உத்தேசித்திருப்பதும், திரு. 'சோமலெ' அவர்கள் ஷ மலருக்கு பதிப்பாசிரியராக இருக்க சம்மதித்திருப்பதும் நம் நகரத்தார் சமூகத்தினர் யாவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்பதற்குரியது. இம்மலர், கூடியவரை எல்லா நகரத்தார்களுக்கும் கிடைத்து அவர்கள் அதிலிருந்து நம்மவர்கள் புரிந்துள்ள அரும்பெரும் பணிகள் பற்றியும், கல்வித்துறைகள் எல்லாவற்றிலும் நம்மவர்கள் தொடர்ந்து ஆற்றிவரும் சேவைகள் பற்றியும் சரிவரத் தெரிந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்தச் சிறப்பு மலரில் வெளிவரவிருக்கும் நகரத்தார் சமூகத்திலுள்ள பட்டதாரிகளின் பட்டியலும் கல்வி சம்பந்தமான பல அரிய கட்டுரைகளும் மனித சமூகத்தின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள யாவருக்கும் மிகவும் உபயோகமாக இருக்கும்.

நகரத்தார் மாணவர் சங்கமும் திரு. 'சோமலெ' அவர்களும் மேற்கொண்டுள்ள கல்விச் சிறப்பு மலர் வெளியீட்டுப் பணி பூரண வெற்றிபெற வேண்டுமாய் வாழ்த்துகிறேன்.

அ. மு. மு. முருகப்ப செட்டியார்

வாழ்த்துரை

நகரத்தார் மாணவர் சங்கம் மிகச் சிறப்பான விதத்தில் 'கல்வி மலர்' வெளியிட முனைந்துள்ளமை கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

என்றும் உள்ள தென் தமிழைப் போன்று நகரத்தார் பழம் பெரும் சிறப்பும், புகழும் சான்றவர் ஆவர். காடும் மலையும் கடந்து உள்நாட்டிலும், கடல்கள் பல வென்று அயலகங்களிலும் அளப்பரும் நல் வாணிகம் செய்து மாசாத்துவராகவும், மாநாய்கராகவும் அவர்கள் விளங்கி வந்தனர்.

தாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் தமிழகத்தின் தொல்லருங் கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றையும், சிவநெறியோடு செந்தமிழையும் அவர்கள் பரப்பினர். இமய முதல் குமரி வரையில் இறைவன் கற்றளிகளையும், அறச்சாலைகளையும் கோடிக்கணக்கான பொருள் செலவிட்டு நிறுவினர். அம்மட்டோ? கடல் கடந்த கடாரம், சாவகம், ஈழம் முதலிய அயல் நாடுகளிலும் அத்தகைய அறப்பணிகளைச் சிறக்கப் புரிந்தனர்.

மேலும், 'அறிவுடையார் எல்லாம் உடையர்', 'கல்வியளித்தோர் கண்கொடுத்தோர்' என்ற பழமொழிகளைக் கருத்துட்கொண்டு, தமிழகத்திலும், பிறபகுதிகளிலும் பல கோடி பொருட் செலவில் எண்ணற்ற கலைக் கோயில்களை அவர்கள் எடுத்துள்ளனர்.

சுருங்கக் கூறின், "தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு" என்ற வள்ளுவர் பெருமான் வாய்மொழிக்கேற்ப அவர்கள் பாடுபட்டு ஈட்டிய செல்வத்தைப் பொது நன்மைக்கே செலவிட்டனர்; இன்றும் செலவிட்டு வருகின்றனர்.

பிறர் நலம் போற்றி வாழும் இந்நற் சமுதாயத்தை இன்று அல்லல்கள் பல சூழ்ந்துள்ளன. பர்மா, இலங்கை, மலேயா முதலிய நாடுகளில் ஏற்பட்டு வரும் அரசியல் பொருளாதார மாற்றங்களால் நகரத்தார் பேரிடருக்கு ஆளாகியிருக்கின்றனர்.

இவ் இன்னல்களினின்று அவர்கள் மீட்சியுற வேண்டுமாயின், நகரத்தார் மரபினரும், சிறப்பாக இளைஞரும் கல்வித் துறையில் தேர்ந்து, புதிய பல தொழில், வாணிக முயற்சிகளில் ஈடுபடுதல் இன்றியமையாதது.


அத்தகைய ஊக்கத்தை நகரத்தார் பெறும் விதத்தில், சிறந்தபல நலங்களுடன் 'கல்வி மலர்' பூத்து மணம் வீச இருப்பதறிந்து கழிபேருவகை எய்துகிறேன்.

வாழ்க நகரத்தார் மாணவர் சங்கம்! வெல்க அவர்தம் நன் முயற்சி!! ஓங்குக இறைவன் இன்னருள்!!!

கருமுத்து தியாகராசன்.

★

நகரத்தார் மாணவர் சங்கம், சென்னை.



முதலாவது ஆண்டு விழாவில் எடுத்த படம், 1957.

★

நகரத்தார் மாணவர் சங்கம், சென்னை.

வளர்ச்சியும் வரலாறும்

பரந்துகிடக்கும் இவ்வுலகில் உயர்கல்வி பெறவேண்டியோ, வேலேதேடியோ பிறந்த ஊரை விட்டு வெளியூர்களுக்குச் செல்லும் மாணவர் சமூகத்தினருக்கு செல்லுமிடங்களில் தம் இனத்தவரின் சங்கம் பெரிதும் பயன்படும். அப்படி ஒரு சங்கம் உள்ளது என்பதைப் போல் அவர்கள் மனத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியது வேறொன்றும் இருக்க முடியாது.

மேற்கண்ட அடிப்படையில் சென்னை நகரில் கல்வி பயின்றுவரும் நகரத்தார் சமூக மாணவர்களிடையே நல்லதொரு தொடர்பையும் ஒற்றுமையையும் வளர்க்கும் பொருட்டும் அதனேடு நம் தாய் மொழிக்கும், நம் சமூகத்தினருக்கும் நல்ல முறையில் தொண்டாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடும், சென்னையில் நகரத்தார் மாணவர் சங்கம் நிறுவுவது என 1956-ம் ஆண்டில் நம் மாணவர்கள் சிலர் நினைத்தனர். இதே எண்ணம் நம் சமூக மாணவர்களிடையே இதற்கு முன் பல முறை இருந்திருப்பினும் சிதறிக் கிடக்கும் பலரையும் ஒன்று சேர்ப்பது கடினமாகத் தெரிந்து, முயற்சிகள் கைவிடப்பட்டிருக்கின்றன. ஆனுல், 1956ம் ஆண்டில் சென்னையில் உயர்கல்வி பயின்ற மாணவர்கள் "முயற்சி திருவினையாக்கும்" என்ற நம்பிக்கையில் மிகவும் பாடுபட்டு, பல கல்லூரிகளிலும் பயின்றுவந்த மாணவர்களைத் தனித்தனியே சந்தித்து சங்கத்தின் தேவையை எடுத்துக் கூறினர். எல்லோரையும் அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஒன்று சேர்த்தனர். அவ்வாறு சேர்ப்பதற்கு மிகவும் பாடுபட்ட திரு. மெ. முத்துக்கருப்பன், திரு. ச. மாணிக்கம், திரு. கண. சித்சபேசன், திரு. முத்து. அருணசலம், ராம. அருணசலம், கும. வெங்கடாசலம் போன்ற நண்பர்களை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வாறு ஒன்று சேர்த்து அமைக்கப்பட்ட சங்கத்திற்கு "நகரத்தார் மாணவர் சங்கம்" என்று பெயரிடப்பட்டது. சங்கத்தின் விதி முறைகளை 14-10-1956ல் தீர்மானித்துச் சங்கத்தை நம் சமூகப் பெருமக்களின்உதவியையும் வாழ்த்தையும் பெற்று நடத்தமுடிவு செய்தோம்.

முதல் ஆண்டு சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 72.

சங்கம் 28-10-1956ம் ஆண்டு நம் மதிப்பிற்குரிய டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களால் தொடக்கிவைக்கப் பெற்றது. அவ்வமயம் ராஜா அவர்கள் பேசும் பொழுது இம்மாதிரியான சங்கம் நம் சமூக மாணவர்களின் உயர்கல்விக்கு மிகவும் பயன்படும் என்றும், ஒரு சமூகத்தைச் சேர்ந்ததாக இருப்பதால் குறுகிய நோக்கம் கொண்டது என்று நினைப்பது தவருகும் என்றும் கூறினுர்கள்.

நம் சமூக மாணவர்களில் ஏழ்மை நிலையினுல் கல்லூரிகளில் தொடர்ந்து படிக்க இயலாதவர்களுக்கு நம்மால் முடிந்த உதவியைச் செய்யவேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. இவ்வெண்ணத்தைச் செயலாற்ற முடியுமா என்ற பெருத்த ஐயப்பாடு சங்க உறுப்பினர்களுக்கும், சங்கத்தோடு தொடர்பு கொண்ட சிலருக்கும் இருந்தது. காரணம், மாணவர்கள் நடத்திவரும் சங்கத்தில் எத்தனை பேர் நம்பிக்கை கொண்டு சங்கத்தின் முயற்சியைப் பாராட்டி உதவுவார்கள் என்ற ஐயப்பாடுதான்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்" என்ற முடி

வோடு சிந்திக்கும் பொழுது சங்கத்தின் சின்னத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நான்கு உருவங்களில் முக்கியமாகத் "தோணி" எங்களுக்குத் தோன்றியது. "திரைகடலோடித் திரவியம் தேடும்" நம் வணிகமுறை எங்களுக்கும் ஒரு வழிகாட்டியது. கடல் கடந்து பர்மா, செய்கோன், இலங்கை, மலேயா, சிங்கப்பூர் முதலிய பகுதிகளில் தொழில்செய்து வரும் நம் இனத்தவர் நினைவு வந்தது. ஆங்காங்குள்ள நாணயக் கட்டுப்பாடு, அங்கு நம் சமூகத்தினர் இருக்கும் நிலைமை முதலியவைகளைச் சிந்திக்கும் பொழுது, மலேயா, சிங்கப்பூர் நாடுகளில்தான் வெற்றிபெற இயலும் என்று முடிவு செய்தோம். அங்கே சென்று நிதி வசூலிக்க என்னையும் நண்பர் திரு. மெ. முத்துக்கருப்பன் அவர்களையும் 1958ம் ஆண்டு மே மாதம் சங்க உறுப்பினர்கள் அனுப்பி வைத்தார்கள். இந்த மலேயாப் பயணத்திற்கு சங்க ஆரம்பத்தில் எங்களை ஊக்குவித்து டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களும், திரு. A.V. மெய்யப்ப செட்டியார் அவர்களும் நிதி உதவி செய்தார்கள்.

இப்பெருமக்கள் ஆதரவோடும் வாழ்த்தோடும் 1958 ஜூன் முதல்வாரத்தில் பினாங்குக்குப் போய்ச் சேர்ந்த எங்களைப் பினாங்கு நகரத்தார் பெருமக்கள் அன்போடு வரவேற்றனர்; எங்களுடைய பயணத்தின் நோக்கத்தையும், சங்கத்தின் பணியையும் அவர்கள் பாராட்டினார்கள். இருப்பினும், பினாங்கு நகரத்தார் பெருமக்களுக்கு, இளைஞர்களால் நடத்தப்படும் இச் சங்கம் எப்படிச் செயல்படுமோ என்ற ஐயம் அவர்கள் கொடுப்பதை யோசிக்கும்படி செய்துவிட்டது. பினாங்கு நகரத்தார்கள் கொடுத்ததைக் குறைவென்று குறிப்பிடுவதாக நினைக்கக்கூடாது. நிறையக் கொடுக்கக் கூடியவர்கள் அவ்வாறு செய்யாததின் காரணத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

பினாங்கு நகரத்தார்கள் அளித்த தொகையோடு கிட்டா (அலோர் ஸ்டார்) நகரத்தார்களைச் சந்திக்கச் சென்றோம். அங்கு அவர்களிடம் எங்களுடைய நோக்கத்தைப் பெரிதும் எடுத்துச் சொன்னோம்; குறிப்பிட்ட தொகையை எங்களுக்குக் கொடுத்து அவர்கள் உதவியைக் குறைத்து விடாமல் இருக்க, ஒரு வழி வகுத்தோம். சங்கத்தால் தேர்ந்தெடுக்கப்படும் மாணவன் ஒருவன் பொறியியல் கல்வி கற்பதற்கு அவனுடைய படிப்பு முடியும் வரை ஆகக்கூடிய செலவுகளை ஒவ்வோர் ஆண்டும் அனுப்பி வரவும் அவ்வாறு அவர்கள் கொடுக்கும் தொகையை "அலோர் ஸ்டார் நகரத்தார் உபகாரச் சம்பளம்" என்ற பெயரில் வழங்கவும் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். இவ்வாறு அலோர் ஸ்டார் நகரத்தார்கள், சங்கத்துடன் நிரந்தரமாகத் தொடர்ந்து தொடர்பு கொள்ள வழி கோலியதற்காகவும், எங்களுடைய வளர்ச்சியை பொறுப்போடு கவனிக்க வேண்டுமென உணர்த்தியதற்காகவும் அவர்களை மிகவும் பாராட்டுகிறோம்.


இந்தநிலையில் மலேயா நாட்டில் எங்களுடைய நிதி வசூல் குறிப்பாக இரண்டு வகையில் நடைபெற்றது. ஒன்று ஒவ்வோர் ஊரிலும் உள்ள நகரத்தார்கள் அவ்வூர்ப் பொதுவில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரே முறையில் கொடுப்பது. மற்றொன்று குறிப்பிட்ட கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கு அவன் படிப்பு முடியும்வரை ஆகக்கூடிய செலவுகளை ஒவ்வோர் ஆண்டும் சங்கத்திற்கு அனுப்பிச் சங்கம் தேர்ந்தெடுக்கக்கூடிய மாணவனுக்கு அனுப்பிவைப்பது.

சிறு ஊர்கள் பலவற்றில் இருந்த நகரத்தார் பெருமக்களை அவரவர்கள் விருப்பத்திற்கிணங்கக் கொடுக்குமாறு கேட்டு நிதி உதவி பெற்றோம்.

பினாங்கு, கோலாலம்பூர், கிள்ளான், மலாக்கா, மூவார், வத்துபகாட், சிங்கப்பூர் ஆகிய இடங்களில் உள்ள நகரத்தார்கள் குறிப்பிட்ட தொகைகளாகவும், அலோர்ஸ்டார் நகரத்தார்கள் பொறியியல் மாணவன் ஒருவனுக்கும், ஈப்போ நகரத்தார்கள் மருத்துவக் கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கும், பேராக்கோவில் நகரத்தார்கள் பொறியியல் கல்வி பயிலக்கூடிய மாணவன் ஒருவனுக்கும், பட்டப்படிப்பு எது படித்தாலும் அவ்விதம் படிக்கக்கூடிய மாணவி ஒருத்திக்கும், தைப்பிங் நகரத்தார்கள் கலைக்கல்லூரியில் பட்டப் படிப்புப் படிக்கக்கூடிய மாணவன் ஒருவனுக்கும், சிரம்பான் நகரத்தார்கள் 'பாலிடெக்னிக்' கல்வி பயிலக்கூடிய மாணவன் ஒருவனுக்கும், உபகாரச் சம்பளங்கள் கொடுக்க இசைந்து உதவி செய்து வருகிறார்கள்.


(தொடர்ச்சி 25ம் பக்கம் பார்க்க)

சங்கத்தில் நம் பெருமக்கள்




டாக்டர் இராஜா சர். முத்தையா செட்டியார்

★




திரு. K. V. AL. M. இராமநாதன் செட்டியார்,
டாக்டர் அழகப்ப செட்டியார் படத்தைத் திறந்து வைத்தார்கள்.



திரு. ஏ. எல். சீனிவாசன், திரு. S. A. P. அண்ணாமலை
திரு. Y. சத்தியமூர்த்தி, திரு. PR. அருணாசலம்


★




திரு. தமிழ்வாணன், திரு. எம். எம். முத்தையா




கருமுத்து தியாகராசச் செட்டியார்




கவிஞர் கண்ணதாசன்
திரு. ஏ. வி. மெய்யப்ப செட்டியார், டாக்டர் AL. அண்ணுமலை



திரு. சின்ன அண்ணுமலை
திரு. எம். எல். எம். மஹாலிங்கம் செட்டியார்
திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார்
திரு. SV. AN. அண்ணுமலை செட்டியார்




திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார்
திரு. SV. AN. அண்ணுமலை செட்டியார்
திரு. எம். எல். எம். மஹாலிங்கம் செட்டியார்



திரு. ஏ. எல். சீனிவாசன்,
திரு. M. S. M. M. மெய்யப்ப செட்டியார், திரு. Y. சத்தியமூர்த்தி

★



திரு. ஆ. நாகப்ப செட்டியார், திரு. Y. சத்தியமூர்த்தி

சங்க விழாக்களைச் சிறப்பித்த பெருமக்கள்

டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள்

திருவாளர் அ. க. அ. சித. அழ. அழகப்பன் அவர்கள்

,, கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் அவர்கள்

,, க. வீ. அழ. மு. இராமனுதன் செட்டியார் அவர்கள்

,, ப. வ. ராம. குழந்தையன் செட்டியார் அவர்கள்

,, ஆ. நாகப்ப செட்டியார் அவர்கள்

,, டாக்டர் அழ. அண்ணுமலை அவர்கள்

,, அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள்

,, A. V. M. மெய்யப்ப செட்டியார் அவர்கள்

,, மு. அ. சிதம்பரம் செட்டியார் அவர்கள்

,, M. M. முத்தையா அவர்கள்

,, மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள்

,, கரு. முத்து. தியாகராசன் செட்டியார் அவர்கள்

,, AL. சீனிவாசன் அவர்கள்

,, கவிஞர் கண்ணதாசன் அவர்கள்

,, தமிழ்வாணன் அவர்கள்

,, சின்ன அண்ணுமலை அவர்கள்

,, ந. சொ. அரு. அருணுசலம் செட்டியார் அவர்கள்

,, Y. சத்தியமூர்த்தி அவர்கள்

,, M. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்

,, M. V. அருணுசலம் செட்டியார் அவர்கள்

,, A. M. கதிரேசன் செட்டியார் அவர்கள்

,, A. L. சாத்தப்ப செட்டியார் அவர்கள்

,, PR. அருணுசலம் செட்டியார் அவர்கள்

,, டாக்டர் பேராசிரியர் சோம. லெட்சுமணன் அவர்கள்

,, 'சோமலெ' அவர்கள்

,, பேராசிரியர் டாக்டர் சுப. சண்முகனுதன் அவர்கள்

,, உ. ராம. சுப. சேவு. அண்ணுமலை செட்டியார் அவர்கள்

,, மெ. லெ. மெ. மகாலிங்கம் செட்டியார் அவர்கள்

,, S. A. P. அண்ணுமலை செட்டியார் அவர்கள்

,, A. K. செட்டியார் அவர்கள்

நகரத்தார் மாணவர் சங்கப் பாதுகாப்புக் குழு

(TRUST BOARD)

"இக்குழுவில் சென்னையிலிருக்கும் நம் சமூகப் பெருமக்கள் இருவரும், அந்தந்த ஆண்டின் சங்கத் தலைவர், செயலாளர், துணை உறுப்பினர் பிரதிநிதி ஆக ஐவர் இடம் பெறுவர்.

இதில் இடம் பெறும் சென்னையில் இருக்கும் நம் சமூகப் பெருமக்கள் இருவரும் மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பதவி வகிக்கத் தகுதியுடையவர்கள்.

இவர்கள் செயற்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுடையவர்கள்.

இக்குழு அமைக்கப்படும்போது சங்கத்திலிருந்து செயற்குழு கொடுக்கும் தொகையையும், ஒவ்வொரு ஆண்டும் சங்கத்தின் மூலமும், நேரடியாகவும் வரும் நன்கொடைகளையும், திருப்பித்தரும் உதவிப்பணம் கொடுப்பதற்காக வரும் தொகையையும், மற்றும் சங்கத்திலிருந்து கிடைக்கும் இதரத் தொகைகளையும் "நகரத்தார் மாணவர் சங்க டிரஸ்ட்" என்ற பெயரில் அங்கீகாரம் பெற்ற வங்கிகளிலோ அல்லது இக்குழு தேர்ந்தெடுக்கும் பொது வணிக நிலையங்களிலோ குறிப்பிட்ட காலத்தவணை முறையில் முதலீடு செய்ய வேண்டும். மேலும் டிரஸ்டின் நிதிநிலைமையைப் பொருத்து டிரஸ்டின் பெயரால் சென்னை நகரத்தில் சொத்துக்கள் வாங்கவும், சொத்துக்களில் முதலீடு செய்யவும் டிரஸ்ட்டிற்கு உரிமையுண்டு.

இப்பணத்தை இக்குழுவில் இடம் பெறும் சமூகப் பெருமக்கள் இருவரில் யாரேனும் ஒருவரும் (either or) சங்கத் தலைவரும் சேர்ந்து வரவு செலவுகள் செய்யவேண்டும்.

இக்குழுவினர் சமூகப் பெருமக்கள் இருவரில் ஒருவரைப் பாதுகாப்புக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும். மற்றைய நால்வரில் ஒருவரை இக்குழுவினர் இக்குழுவின் செயலாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஆண்டுதோறும் சங்கச் செயற்குழு, திருப்பித்தரும் உதவிப் பணம் கொடுக்க முடிவு செய்யும் மாணவர்களுக்கு செயற்குழு சிபாரிசு செய்யும் தொகையைச் செயற்குழு மூலம் அனுப்ப பாதுகாப்புக் குழுவினர் கடமைப்பட்டவர்கள். சங்கச் செலவுகளுக்கு நிதிபற்றுக்குறை ஏற்படும் காலத்து சங்கச் செயற்குழு தீர்மானத்தின்படி, டிரஸ்டிலிருந்து சங்கத்தின் செயற்குழுவிற்குத் தேவைப்படும் தொகையைக் கொடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்."

✣

மேற்குறிப்பிடப்பட்டுள்ள, சங்க அமைப்பியல் விதிகளுக்குட்பட்டு நகரத்தார் மாணவர் சங்கப் பாதுகாப்புக்குழு 1963ம் ஆண்டு நிறுவப்பெற்றது. மேற்படி குழுவில் திருவாளர் பெரி. அருணாசலம் செட்டியார் (Chief Accountant, Coramandal Engineering, Madras) அவர்களும், திருவாளர் அழ. சாத்தப்பசெட்டியார் (Assistant Secretary, The Indian Bank Ltd., Madras) அவர்களும் டிரஸ்டிகளாக இருந்து சங்க நலனைப் பாதுகாத்து வருகிறார்கள். திருவாளர் அருணாசலம் செட்டியார் அவர்கள் குழுவின் தலைவராகவும் இருந்து வருகிறார்கள்.

இவ்வலுவலகம் (ராஜா அண்ணாமலைபுரம் 12, கனல் பாங்க் ரோடு) திருவாளர் பெரி. அருணாசலம் செட்டியார் அவர்கள் இல்லத்தில் இருந்துவருகிறது. அலுவலகத்திற்கு இடம் கொடுத்து உதவிவரும் அன்னாரின் பெருந்தகைமை பாராட்டுக்குரியது.

நகரத்தார் மாணவர் சங்கம்

சென்னை.

திருப்பித்தரும் உதவிப்பணம் பெறுதற்குரிய நிபந்தனைகள்

1. நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நகரத்தார் மாணவர் சங்கத்திலிருந்து அளிக்கப்படும் இவ்வுதவி இனும் அல்ல.

2. இவ்வுதவியைப் பெற, மாணவரின் பெற்ருேர், பெற்ருேர் இல்லையேல் காப்பாளர் சம்மதிக்கவேண்டும்.

3. இவ்விரண்டு விதிகளுக்கும் உட்பட்டு உதவியைப் பெற முன்வந்தால் கீழ்க் கொடுக் கப்பட்டிருக்கும் விதிகளின்படி பெற்றுக்கொள்ளும் உதவியைத் திரும்பவும் சங்கத்திற்குக் கொடுக்கவேண்டும்.

(a) உதவி பெறும் தொகை முழுவதையும் பெற்ற தேதியிலிருந்து ஆறு ஆண்டு களுக்குள் திரும்பக் கொடுக்கவேண்டும்.

(b) திரும்பக் கொடுக்கப்படும் தொகை மாதமொரு முறையாகவோ ஆண்டிற்கொரு முறையாகவோ இருக்கலாம்.

4. கல்லூரியில் சேர்ந்த பிறகுதான் இவ்வுதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

5. விண்ணப்பத்தாளில் அச்சிடப்பட்டிருக்கும் சான்றிதழில் மாணவரின் சொந்த ஊரில் உள்ள நம் சமூகப் பெரியார் ஒருவரிடம் கையெழுத்துப் பெறவேண்டும்.

6. விண்ணப்பத்தாளில் கொடுத்திருக்கும் மதிப்பெண்கள் அசலுக்குச் சரியான நகல் என்று பயின்ற கல்லூரி ஆசிரியர் ஒருவரிடமாவது சான்றிதழ் கொடுப்பவரிடமாவது கையொப்பம் பெற்று அனுப்பவேண்டும்.

7. விண்ணப்பத்தைப் பரிசீலித்து உதவியளிக்கும் உரிமை சங்கச் செயற் குழுவைச் சார்ந்தது.

8. உதவி பெற்றுக்கொள்ளும் தொகைக்குச் சங்கச் செயற்குழு அறிவிக்கும் முறைப்படி சங்கத்தின் பெயருக்கு ஒரு புரோநோட்டு எழுதித் தரவேண்டும்.

9. இவ்வுதவிப்பணம் பெறுபவர் ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பிக்கவேண்டும். தொடர்ந்து கொடுக்கவோ அல்லது இடையில் எக்காரணத்தை முன்னிட்டும் நிராகரிக்கவோ, அந்தந்த ஆண்டுச் செயற் குழுவுக்கு உரிமை உண்டு.

10. இவ்வுதவிப்பணம் பெறுபவர் இச்சங்கத்தில் உறுப்பினர் / துணை உறுப்பினராகச் சேர்ந்து அவ்வாண்டிற்குரிய சந்தாவைச் செலுத்தியிருக்கவேண்டும்.

நகரத்தார் மாணவர் சங்கம், சென்னை

அலுவலர்கள்

ஆண்டு	தலைவர்	செயலாளர்	துணைச் செயலாளர்	பொருளாளர்	பொதுநலச் செயலாளர்	துணை உறுப்பினர் பிரதிநிதி
1956—'57	ச. மாணிக்கம்	மெ. முத்து	கண சித்சபேசன்	முத்து அருணசலம்	பழ. செல்லப்பன்	....
1957—'58	வெ. கண்ணன்	சுப. திண்ணப்பன்	கும. வெங்கடாசலம்	அரு. இலக்குவன்	அழ. வடிவேலு	....
1958—'59	முத்து அருணசலம்	மு. முத்துப்பழனியப்பன்	மா. முத்தையா	பழ. விஸ்வநாதன்	நா. இராமசாமி	....
1959—'60	மு. சிதம்பரம்	சோம. செந்தில்நாதன்	....	சித. அழகப்பன்	அழ. பெரியண்ணன்	....
1960—'61	அழ. கதிரேசன்	A. முத்து	AR. முத்துவீரப்பன்	சுப. கிருஷ்ணன்	அ.மு. ப. அருணசலம்	....
1961—'62	வீர.குமரப்பன் B.COM	சுப. அரசகேசரி B.SC.	இராம. நாச்சியப்பன்	M. A. அழகப்பன்	சுப. கிருஷ்ணன்	....
1962—'63	வீர.குமரப்பன் B.COM	சொ. வள்ளியப்பன்	இராம. வெள்ளையப்பன்	M. A. அழகப்பன்	சுப. கிருஷ்ணன்	கும. வெங்கடாசலம் M.A.
1963—'64	சொ. வள்ளியப்பன்	இராம. வெள்ளையப்பன்	லெ. சின்னக்கருப்பன்	ஆ. நாராயணன்	மு. அ. அழகப்பன்	அழ. கதிரேசன்

உதவிப் பணங்கள் (Returnable Scholarships) பெற்றவர்கள்

எண்	பெயர், முகவரி	படிப்பு	கல்வி நிலையம்	கல்வி ஆண்டு	தொகை ரூபாய்	மொத்தம் கொடுத்த தொகை	நிதி	குறிப்பு
1.	R.M. தியாகராசன் ஆ. தெக்கூர்	B. Sc. Hons. Final year	அண்ணுமலைப் பல்கலைக்கழகம்	1958—59	425	425		தொகை திருப்பிச் செலுத்தப் பட்டது
2.	ஏ.ராம. சிங்காரம் S/o ராம.எ. ராமசாமி செட்டியார் இராங்கியம்	I B. E. II B. E. III B. E. Final B. E.	தியாகராசர் பொறியியல் கல்லூரி மதுரை	1958—59 1959—60 1960—61 1961—62	350 400 400 400	1550	அலோர் ஸ்டார் கிட்டா நகரத்தார்கள்	
3.	சா. மீனுட்சி சுந்தரம் S/o நா. நா. சாத்தப்ப செட்டியார் கல்லல்	I B. E. II B. E. III B. E. Final B. E.	கிண்டி பொறியியல் கல்லூரி சென்னை	1958—59 1959—60 1960—61 1961—62	250 400 250 300	1200		
4.	அ. சுப்பிரமணியன் S/o ராம. அண்ணுமலை செட்டியார் சிறுகூடல்பட்டி	I M. Sc II M. Sc	மாநிலக் கல்லூரி சென்னை	1960—61 1961—62	350 350	700		
5.	பழ. இராமநாதன் S/o சுப. பழநியப்ப செட்டியார் வேகுப்பட்டி	I B. E. II B. E. III B. E Final B. E.	அழகப்பா பொறியியல் கல்லூரி காரைக்குடி	1959—60 1960—61 1961—62 1962—63	400 400 400 400	1600	பேராக் கோயில் (டெலுகான்சன்) நகரத்தார்கள்	
6.	அ. லெட்சுமணன் ப. சா. அ. அண்ணு மலைச் செட்டியார் புதுப்பட்டி	Polytechnic Final year	அழகப்பா பாலிடெக்னிக் காரைக்குடி	1961—62	300	300		
7.	ச. லெட்சுமணன் S/o வெ. சண்முகம் செட்டியார் கல்லல்	I B. E. II B. E. III B. E. Final B. E.	தியாகராசர் பொறியியல் கல்லூரி மதுரை	1959—60 1960—61 1961—62 1962—63	400 400 400 300	1500	செய்கோன் நகரத்தார்களும் ஈப்போ நகரத்தார்களும் ரூ. 800	

8.	ந. நல்லப்பன் S/o. ந. நல்லப்ப செட்டியார் கல்லல்	I year II ,, III ,,	தமிழ் நாடு பாலிடெக்னிக் மதுரை	1960—61 1961—62 1962—63	400 400 400	1200	சிரம்பான் நகரத்தார்கள்	
9.	மெய். உடையப்பன் S/o உ. அ. சா. மெய் யப்ப செட்டியார் அழகாபுரி கொல்லங் குடி	II B. Com. III B. Com	அழகப்பா கல்லூரி காரைக்குடி	1961—62 1962—63	300 300	600	தைப்பிங் நகரத்தார்கள் ரூ. 300	
10.	சொ. சொக்கலிங்கம் S/o சு. சொ. அரு. சொக்கலிங்கம் செட்டியார் கானாடுகாத்தான்	I year	அண்ணாமலை பாலிடெக்னிக் செட்டிநாடு	1962—63	250	250		
11.	மு. வ. வள்ளியப்பன் S/o RM. M. முத்து வள்ளியப்ப செட்டியார் புதுவயல்	I B. Sc.	தியாகராசர் கல்லூரி மதுரை	1962—63	300	300		
12.	சுப. மீனாட்சி சுந்தரம் S/o சுப. ராம. சுப்ர மணியன் செட்டியார் தேவகோட்டை	A. M. I. E.	மதராஸ் காலேஜ் ஆப் இன்ஜினீயரிங்	1962—63	250	250		தொகை திருப்பிச் செலுத்தப் பட்டு விட்டது
13.	ராம. திரு நாவுக்கரசு S/o பெரி. ராமன் செட்டியார் குளிபிறை	III B. E. IV B. E.	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	1962—63 1963—64	300 200	500		
14.	குழ. முத்து S/o சு. குழ. குழந் தையன் செட்டியார் இராயவரம்	I. M. Sc. II M. Sc.	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	1962—63 1963—64	300 300	600		

எண்	பெயர், முகவரி	வகுப்பு	கல்வி நிலையம்	கல்வி ஆண்டு	தொகை	மொத்தம் கொடுத்த தொகை	நிதி	குறிப்பு
15.	**பனா. பழநியப்பன்** S/o பனையப்ப செட்டியார் நெற்குப்பை	தமிழ் ஆசிரியப் பயிற்சி	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	1963—64	200	200		
16.	**இ. விசாலாட்சி** D/o கிருஷ்ணப்ப செட்டியார் குளிபிறை	III B. Sc.	ஹோலிகிராஸ்கல்லூரி திருச்சி	1963—64	250	250		
17.	**மு. வேங்கடாசலம்**	Final year L.M.E.	தியாகராசர் பாலிடெக்னிக் சேலம்	1963—64	200	200		
18.	**கும. குமரப்பன்** S/o மு. கும். குமரப்ப செட்டியார் பள்ளத்தூர்	II B. E. III B. E.	தியாகராசர் பொறியியல் கல்லூரி மதுரை	1962—63 1963—64	300 200	500		
19.	**இராம. தியாகராசன்** வேகுப்பட்டி	I L. T. M. II L. T. M.	தியாகராசர் பாலிடெக்னிக் சேலம்	1962—63 1963—64	250 200	450		
20.	**சுப. மீனாட்சிசுந்தரம்** S/o சுப. ராம. சுப்ர மணியம் செட்டியார் தேவகோட்டை	I B. Sc. II B. Sc. III B. Sc. I M. Sc.	இலயோலா கல்லூரி சென்னை மாநிலக் கல்லூரி சென்னை	1959—60 1960—61 1961—62 1963—64	350 350 400 400	1500	தைப்பிங் நகரத்தார்கள் ரூ. 1050	
21.	**சே. நாகப்பன்** S/oபி.ஆ.மு.சே. சேது ராமன் செட்டியார் வலையபட்டி	I M. B. B. S. II M. B. B. S. III M. B. B. S.	தஞ்சை மருத்துவக் கல்லூரி தஞ்சை	1961—62 1962—63 1963—64	400 400 400	1200	ஈப்போ நகரத்தார்கள்	
22.	**லெ. காந்திமதி** D/o வ. யி. லெட்சுமணன் செட்டியார் கல்லல்	G. C. I. M. G. C. I. M. G. C. I. M. I M. B. B. S. II M.B.B.S. III M. B. B. S.	கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி சென்னை மதுரை மருத்துவக் கல்லூரி மதுரை	1958—59 1959—60 1960—61 1961—62 1962—63 1963—64	350 400 400 400 400 200	2150	சங்க நிதி பேராக் கோயில் டெலுகான்சன் நகரத்தார்கள் சங்க நிதி	

23.	சுப. அண்ணாமலை S/o அண. உ. சுப்பிர மணியன் செட்டியார் இராமச்சந்திரபுரம்	I M.B.B.S.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி சென்னை	1963—64	550	550	திரு.S. PL. P. பழநியப்ப செட்டியார் திரு S. PL. ST. பழநியப்ப செட்டியார் அலோர்ஸ்டார்
24.	நா. மாணிக்கம் S/oபெரி.ராம. நாகப்ப செட்டியார் உலகம்பட்டி	I B. Pharm.	சென்னை மருத்துவக் கல்லூரி	1963—64	200	200	
25.	மா. சதாசிவம் S/o கும. மாணிக்கம் செட்டியார் செம்பனூர்	I Polytechnic	அண்ணாமலை பாலிடெக்னிக் செட்டிநாடு	1963—64	250	250	
26.	சொ. சுந்தரம் S/o பெ. மெ. சொக்க லிங்கம் செட்டியார் வலையபட்டி	I. B. E.	தியாகராசர் பொறியியல் கல்லூரி மதுரை	1963—64	300	300	
27.	இராம. ஜெகந்நாதன் S/o சுப.சோம. இராமசாமிசெட்டியார் நாட்டரசன் கோட்டை	I B. E.	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	1963—64	345	345	செய்கோன் நகரத்தார்கள்
					ரூ.	19,270	
				திருப்பித்தரப்பட்ட தொகை	ரூ.	675	
				வசூலாகவேண்டிய தொகை	ரூ.	18,595	

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

இவை தவிர கூலிம், சுங்குரும்பை, சுங்கப் பட்டாணி, கோலக்கன்சார் முதலிய ஊர் நகரத்தார்கள் அவரவர் விருப்பத்திற் கிணங்க உதவி செய்தார்கள்.

மலேயாப் பயணத்தில் எங்களுக்கு மிகவும் உற்சாகத்தைக் கொடுத்த செயல் கோலாலம்பூரில் நடந்துவரும் தனவைசிய இளைஞர் சங்கத்தார் முயற்சியில் கோலாலம்பூரில் வேலையிலிருந்துவரும் நம்மவர்களிடம் தனித்த முறையில் நிதி வசூல் செய்து கொடுத்ததும், சிங்கப்பூரில் அதே முறையில் ஒரு சிலர் முயற்சியில் நம் இனத்து இளைஞர்களிடம் நிதி வசூல் செய்ய முடிந்ததும்தாம். அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் என்றும் விரும்புகிறோம்.

இவ்வாறு எங்களுடைய மலேயாப் பயணத்தில் நகரத்தார்கள், சங்கத்தின்பால் காட்டிய அன்பாலும் ஆதரவாலுமே சங்கம் தொடர்ந்து நடந்து இன்று இந்த அளவிற்குச் செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எங்களுடைய மலேயா நிதி வசூல் பயணத்தில் எங்களுக்கு மிகவும் உதவிய நண்பர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் எங்கள் சங்கத்தின் நன்றி உரியது.

மலேயாப் பெருமக்களிடம் கிடைத்த உதவியை விவரித்து கடிதம் எழுதிய போது செய்கோன் நகரத்தாரிடம் நாங்கள் கேட்ட உதவி தங்கு தடையின்றிக் கிடைத்தது. "பொறியியல்" கல்வி பயிலும் மாணவன் ஒருவன் அவர்களால் பயன்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சங்கத்திற்குக் கிடைத்த உதவியைக் கொண்டு சமூகத்தினருக்கு உதவுவதற்கு ஒரு திட்டம் வகுத்தோம். சங்கத்தின் முக்கிய நோக்கமான கல்வி வளர்ச்சியைத் தான் நாங்கள் நம் சமூகத்தினருக்குச் செய்யக் கூடிய பேருதவியாக எடுத்துக் கொண்டோம். சங்கம் என்றும் வளர்ந்துவரவேண்டும், தேவையுள்ளவர்களுக்கு எம் ஆற்றலுக்கு ஏற்ப உதவவேண்டும், சங்கத்தின் உதவி பெற்றவர்களுக்குப் பொறுப்பும், பிறரும் பயனடைய வேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட வேண்டும். இவற்றை எல்லாம் மனத்திற் கொண்டு, சங்கத்திலிருந்து நம் சமூக மாணவர்கள் பெறக்கூடிய சலுகைகள் இனாமாக இருக்கவேண்டாம், அவர்கள் கல்வி பயின்று முடிந்து வேலைகளில் அல்லது தொழில்களில் அமர்ந்தபின் அவ்வாறு பெற்றுக்கொண்ட நிதி உதவியைத் தவணை முறைகளில் சங்கத்திற்குத் திரும்பக்கொடுத்து விடவேண்டும் என்று விதி வகுத்தோம். உதவி பெறக்கூடிய மாணவர்களும் இனாமாகப் பெற்றுப் படித்தோம் என்றுபிறர் கூறுவார்கள் என்று நினைக்கவேண்டாம், சங்கமும் திரும்பத்திரும்ப நிதி சேர்க்கப் பாடுபட வேண்டாம் என்ற நிலையில் பொருளாதாரத்தால் தடைப்பட்டு படிப்பை விட்டுவிட நினைக்கும் மாணவர்களுக்கு ஒரு இடைக்கால உதவிதான் சங்கம் செய்து வருகிறது. ஆகையால் உதவி பெறுகிறோமே என்ற தாழ்மை நினைப்பும், உதவி செய்கிறோம் என்ற பெருமையான எண்ணமும் யாருக்கும் கிடையாது. சங்கத்தின் நிதி நிலைமை இடம் கொடுக்காததன் காரணமாக பலருடைய வேண்டுகோள்களைப் புறக்கணிக்க வேண்டியதிருக்கிறதே என்ற மன வருத்தம் எங்களுக்கு உண்டு. சங்கத்தின் உதவி கோரியவர்கட்கு, உதவி கிடைக்காது போனதற்கு சங்கத்தின் நிதி நிலைமை மட்டுமே காரணம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மலேயாவிலும் செய்கோனிலும் நிதி வசூலித்த பின், நம் நாட்டிலும் நிதி வசூல் செய்து வருகின்றோம். அனைவருடைய அன்பும், ஆதரவும் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஊக்கம் தருகின்றன. இதுவரை சங்கத்திற்கு நன்கொடை கொடுத்தவர்கள் விவரம் இம்மலரில் தனியே கொடுக்கப்பட்டிருக்கிறது.

சங்க உறுப்பினர்கள் பெரும்பாலும் கல்வி பயின்றுவரும் மாணவர்களாகவும், இளைஞர்களாகவும் இருப்பதால் சங்க நிதியை, தக்க முறையில் முதலீடு செய்து பாதுகாத்துவர பெரியோர் சிலர் கொண்ட ஓர் அமைப்பு இருப்பின் நலம். எனவே, பேரவை 1963ம் ஆண்டு "நகரத்தார் மாணவர் சங்க டிரஸ்ட்" என்ற அமைப்பு ஏற்படுத்தியது. அவ்வாறு அமைக்கப்பெற்ற குழுவில் பங்கு முதலீட்டுத் துறையில் பழுத்த அனுபவம் பெற்ற திரு. பெரி. அருணசலம் செட்டியார் அவர்களும், இந்தி

யன் வங்கியின் உயர் அலுவலரான திரு. அழ. சாத்தப்ப செட்டியார் அவர்களும் உறுப்பின ராக இருக்க இசைந்தார்கள். அவர்களுடைய பேராதரவுடன் சங்க டிரஸ்ட் நடந்துவரு கிறது. இதனுல் சங்கம் பொறுப்போடு நடக் குமா என்ற ஐயம் பெருமளவு நீங்கிவிட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள் கிறேம்.

இதுவரை சங்கத்திற்கும், சங்கத்தோடு நம் சமூகப் பெருமக்களுக்கும் உள்ள தொடர்பு களைக் குறிப்பிட்டோம். இனி, சங்கத்தின் ஏனைய செயல்களையும், அதன் உறுப்பினர் களோடு அதற்குள்ள தொடர்புகளையும் குறிப்பிடுவோம்.

சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 250. உறுப்பினர் தொகையை இன்னும் மிகுதி யாக்க முயன்று வருகிறேம். ஆனுல் தக்க பலன் அளிக்கவில்லை. உறுப்பினர் அனைவரும் சங்கத்திற்குச் செய்யக்கூடிய உதவிகளை முழு மனத்தோடு செய்தால் உறுப்பினர் எண் ணிக்கை பெருகும்.

நம் சமூகத்து வள்ளல்களும் அறிஞர்களும் விழாக்களில் கலந்து கொண்டிருக்கிருர்கள். அவ்வாறு வருகை தந்த பலரையும் இங்கு தனியே குறிப்பிட்டிருக்கிறேம். அவர்கள் அனைவருக்கும் சங்கத்தின் நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேம். சங்கத்தின் வளர்ச்சிக் குத்தொடர்ந்து ஆதரவுதர அவர்களை வேண்டு கிறேம்.

சங்கத்தில் ராஜா. சர். அண்ணுமலை செட்டியார் திருவுருவப் படத்தையும். டாக்டர் அழகப்ப செட்டியார் திருவுருவப் படத்தையும், முறையே டாக்டர் யு. கிருஷ்ண ராவ் அவர் களும், க. வீ. அள. மு. இராமனுதன் செட்டி யார் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

சங்கத்திலிருந்து இதுவரை எத்தனை மாணவ நண்பர்களுக்கு உதவ முடிந்தது என்ப தைத் தனிப்பட்டியலாகக் கொடுத்திருக்கிறேம். அவ்வாறு உதவிபெற்ற, பெறும், நண்பர்கள் தாங்கள் படித்து முடிந்து வேலையில் சேர்ந்த பின் சங்கத்திலிருந்து பெற்ற உதவியைக் கேட்டுத்தான் திரும்பக் கொடுக்க வேண்டும் என்று நினையாது அவர்களால் எவ்வளவு விரை வில் திருப்பிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் திருப்பிக் கொடுத்தால் பிறகு உதவி கேட்கும் நண்பர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதை வற்புறுத்திக் கூற விரும்பு கிறேம். சங்கத்தின் நோக்கத்தையும், நன் மையையும் பிறர்க்கு எடுத்துக் கூறுவதற்கு அவர்களைவிடத் தகுதி வாய்ந்தவர்கள் ஒருவரு மில்லை; ஆதலால் அப்பணியைச் செய்வதும் அவர்களுடைய கடமை என்று குறிப்பிடலாம்.

சென்னையில் கல்விகற்ற பொழுது சங்க அலுவல்களில் பங்கு கொண்டு பணியாற்றிய வர்களைச் சங்கம் மறக்கமுடியாது. அவர்கள் இப்போது தத்தம் தொழில், வேலை இவை களால் பல இடங்களில் இருக்க நேர்ந்தாலும் அவர்களால் சங்கத்திற்கு நிறைய உதவி செய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறேம். அந்த நண்பர்கள் அனைவர்க்கும் சங்கத்துக் கும் இருந்த தொடர்பு, இந்தச் சிறப்பு மலரின் வாயிலாகப் புதுப்பிக்கப்படும் என்று எதிர் பார்க்கிறேம்.

சங்கத்தின் நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும் வண்ணம் இன்னும் சில செயல் களைச் சிறப்பாகச் செய்ய விருக்கிறேம். உயர்கல்விக்குத் தேவையான புத்தகங்களைப் பலரிடமிருந்து இலவசமாகப் பெற்று அதனை ஓர் இடத்தில் வைத்து, படிக்கும் மாணவர் பல ருக்கும் உதவுமாறு நூல் நிலையம் அமைப்பது எங்கள் குறிக்கோள் ஆகும். இதனுல் விலை யுயர்ந்த புத்தகங்கள் பலவும், எல்லோர்க்கும் கிடைக்க வழி செய்யலாம். கல்லூரிகளில் புகுமுகவகுப்பு, பட்டப்படிப்பு, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் சாதாரணமாகத் தேவைப்படும் பாடப்புத்தகங்கள் ஆகியவற் றையும் இதில் சேர்த்து வைத்தால் பலரும்பயன் அடைவர். இவ் வேண்டுகோளைப் படிக்கும் அன்பர்களின் ஒத்துழைப்பால் எங்கள் கனவு நனவாகும் என்று நம்புகிறேம். நூல்களை அனுப்புவோர் Book Bank, Nagarathar Manavar Sangam, 12, Canal Bank Road, Madras-28. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேம்.

இரண்டாவதாக நம் சமூகத்தில் உயர் கல்வி பயின்று பட்டம் டிப்ளமா பெற்று ஆழி சூழ் உலகெங்கும் உள்ள அனைவரின் முகவரி கள் அடங்கிய பட்டியல் ஒன்று சங்கத்தில்

சிந்தையும் செயலும் வாழ்க!

சே. கனகசபை, பி. ஏ., கண்டவராயன்பட்டி.

செட்டிமார் சைவத் திற்கும்
தெய்வமாம் தமிழன் னைக்கும்
மட்டிலாத் தொண்டு செய்தார்!
வரவேற்பும் வாழ்த்தும் பெற்றார்!
வட்டிஓர் தொழிலாய்க் கொண்டோர்
வள்ளன்மை குணமாய்ப் பெற்று
கட்டிப்பொன் நிதிய மெல்லாம்
கல்விக்கே வாரி ஈந்தார்!

வீதிகள் தோறும் பள்ளி
வேண்டினான் கவிஞன்—அந்த
சோதிமெய் வாக்கைப் பேணும்
துணிவுளார் நகரத் தாரே
காதலால் கலை மகள்தன்
கவின்நடம் காணும் நெஞ்சர்
ஓதுநற் கல்விக் கூடம்
ஊர்தோறும் உவந்து காண்பார்!

பள்ளிகள் இல்லா ஊர்கள்
பாழூராம் என நினைந்து
பிள்ளைகள் கல்வி கற்றுப்
பேரறி வெய்துங் கூடம்
வள்ளன்மை யாலே எங்கும்
வரிசையாய் நட்டு வைக்கும்
தெள்ளிய நகரத் தார்தம்
சிந்தையும் செயலும் வாழ்க!

பிறர்நமை ஆண்ட நாளில்
பெருந்தமிழ் கதறி வாடி
சுருங்கியே சோர்ந்த நாளில்
துணிந்துநற் றமிழ் வளர்க்க
அருந்தமிழ்க் கல்விச் சாலை
அமைத்திட்டார் பழநி யப்பர்!
சிறந்ததொண் டிதுபோ லிங்கு
செய்தவர் கணக்கற் றோரே!

தனிஒரு பணித னின்நற்
சாதனை இதுவாம் என்ன
வனைகவே எனா அண்ணா
மலைமன்னன் சிதம் பரத்தில்
அணியுடன் நிறுவி வைத்த
பல்கலைக் கழகம் காண்பார்
இனியநம் குலத்தின் 'கல்விக்
காதல்தான்' என்னே என்பார்!

" நாட்டிலே தொழில் நமக்கு
நற்கல்வி வளர்த்தல்" என்று
ஈட்டிய செல்வம் முற்றும்
இருநிதிக் கல்விக் கீந்தான்!
காட்டிலே கலை யரங்கம்
கண்டிட்டான் அழகன்- நாட்டுக்
கோட்டையார் தவத்தின் கல்விக்
குரிசிலாய் விளங்கி னான்!

கருமுத்து தியாக ராசர்
கலைப்பணி மதுரை போற்றும்!
பெருமைக்கும் உரிய தாகப்
பேரூர்சிற் றூர்க ளெங்கும்
திருமிக்க நகரத் தாரின்
சீர்க்கல்விப் பணி துலங்கும்!
அறிவுக்குச் சாலை காணும்
அறத்தொண்டர் புகழ் முழங்கும்!

வைத்துக் கொள்வது என்பது. இதன் மூலம் நம் சமூகத்தில் யார் யார் எங்கெங்கு இருக்கிறார்கள் என்பது தெரியும், அவர்களுடைய உதவி வேண்டுவோர் எளிதில் பெறவும் வாய்ப்பு கிடைக்கும். இந்த நோக்கத்தில் ஓரளவு முயன்று நாங்கள் சேர்த்த விவரம் இங்கு கொடுத்திருக்கிறோம். கொடுத்திருக்கும் பட்டியல் நம் சமூகத்தில் உள்ள பட்டதாரிகள் அனைவரையும் குறிப்பிட்டது அல்ல. எங்களுக்குக் கிடைத்துள்ள விவரங்களைத்தான் குறிப்பிட்டிருக்கிறோம். இவ் விவரங்களைச் சேகரிக்க உதவிய நண்பர்களுக்கு, சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

நகரத்தார் மாணவர் சங்கத்தின் சார்பில் சென்னையில் படித்துவரும் நம் சமூக மாணவர்களுக்கு, உணவு விடுதி ஒன்று ஏற்படுத்தி நடத்த விரும்புகிறோம். நினைப்பது எளிது, நடப்பது கடினம் என்று பலரும் சொல்லலாம். உண்மைதான். இருப்பினும் முயன்றால் செல்வர்களின் உதவிகொண்டு எளிதாகச் செய்து விடலாம் என்று நம்புகிறோம்.

சங்கம் அமைக்கப்பெற்று எட்டாண்டுகள் ஆகியும் சங்கத்திற்கு நிரந்தரமாக இருந்து பணிபுரிய ஒரு இடம் கிடைக்கவில்லை. ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படும் சங்கத் தலைவரின் உறைவிடமே சங்கத்தின் அலுவலகமாக இருக்கிறது. சங்கத்தோடு தொடர்பு கொள்ள நினைக்கும் பலருக்கு இதனால் தொல்லை ஏற்படுகிறது. இக்குறையைப் போக்க நம் சமூகப் பொது நிறுவனங்கள் எங்களுக்குப் பெரிதும் உதவும் என்று முழுமனத்தோடு நம்புகிறோம்.

சங்கத்திற்கு எவ்வளவு நன்கொடை கொடுத்தாலும் அவைகளை நல்ல முறையில் பயன்படுத்தவும், மாணவர்கள் பலர் உதவி பெறவும் வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. நாங்கள் பெற்ற நன்கொடைகள் எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றன என்பது சங்கத்தின் நடைமுறைகளைக் கவனித்துவரும் பலரும், இந்த மலரைப் படிக்கும் அனைவரும் அறிவார்கள். எங்களுடைய முயற்சிகளைப் பாராட்டியும் செயல்களை அறிந்தும் பலர் நன்கொடைகள் தாங்களாகவே அனுப்பி வருகிறார்கள். அண்மையில் கிட்டாவில் (அலோர்ஸ்டாரில்) இருந்து திருவாளர்கள் S. PL. P. பழநியப்ப செட்டியார், S. PL. ST. பழநியப்ப செட்டியார் ஆகிய இருவரும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 550 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு மருத்துவக் கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கு உதவுவதாகக் கூறிப் பணம் அனுப்பியுள்ளார்கள். இவ்வாறு பலரும் சிறப்பாக மலேயாவாழ் அன்பர்கள் முன்வந்து உதவ வேண்டுமென்று சங்கத்தின் சார்பாக பணிவன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

—வே. கண்ணன்

இருமொழிப் புலமை வாய்ந்து, தமிழகம் எங்கும் கலையொளி வீசிய தண்டமிழாசான் பண்டிதமணியைத் தந்த நாடு செட்டிநாடன்றோ? தில்லையம்பதியின் எல்லையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்னும் கலைக்கோயில் அமைத்த செட்டிநாட்டரசரது வள்ளன்மை அறிவுலகத்தில் என்றும் அழியாததன்றோ? முத்தமிழ் வளர்த்த மதுரையம்பதியில் சிறந்த கல்லூரிகள் அமைத்துப் பழைய பாண்டியர் போல் கன்னித் தமிழைப் பேணி வளர்க்கும் பெருமை சான்ற அறிஞர் கருமுத்து தியாகராசச் செட்டியாரை அறியாதார் இந்த நாட்டில் உளரோ? செட்டிநாட்டிலுள்ள காரைக்குடியில் சிறந்த கல்லூரிகள் அமைத்துக் கலைவளர்க்கும் அழகப்ப செட்டியாரவர்கள் இந் நாட்டிற்கு ஒரு நல்லணியன்றோ? இன்னும் 'செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்' என்னும் அருள்மொழியின் பொருளுணர்ந்து அறப்பணி ஆற்றும் செட்டிநாட்டுப் பெருமக்களும் என்றும் போற்றுதலுக்கு உரியரன்றோ?

— சொல்லின் செல்வர், **டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை.**
('செட்டுநாடும் தமிழும்'—சோமலெ)

நகரத்தார் சங்கம்

திருச்சிராப்பள்ளி.

நகரத்தார்கள் இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப, கல்வி தொழில் இரண்டிலும் முன்னேற வேண்டும்; மாணவர்களின் கல்வி வசதிக்கு கடன் கொடுத்து உதவவேண்டும்; ஆட்சியில் நகரத்தார்கள் தங்களுக்குரிய இடத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கங்களோடு இப்பொழுது தமிழ்நாட்டில் பல சங்கங்கள் ஏற்பட்டுள்ளன.

இவற்றுள் முதலாவதாகத் தோன்றியது திருச்சிராப்பள்ளியில் இயங்கிவரும் நகரத்தார் சங்கம் ஆகும். இது10-9-1948ல் தோற்றுவிக்கப்பட்டது.இச்சங்கம் ஏற்படுவதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் பணி புரிந்து வருபவர்கள் இச் சங்கத்தின் தலைவர் பள்ளத்தூர் திருவாளர் மு. அ. அருணாசலம் செட்டியார் அவர்கள் ஆவார்கள்.

திரு அருணாசலம் செட்டியார் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வருபவர்கள் தேவகோட்டை ஆவி. க. ஆவிச்சி செட்டியார் அவர்கள், காரைக்குடி சு. ராம. சு. சுப்பையா செட்டியார் அவர்கள், இராயவரம் மெ. செல்லப்பன் எம். ஏ. அவர்கள் ஆகியோர் ஆவர். உறுப்பினர் தொகை 153.

சங்கத்தின் குறிக்கோளுள் ஒன்றாகிய கல்வி வளர்ச்சிக்கு ஆவன செய்ய திருச்சிராப்பள்ளியில் "செட்டியார்கள் கல்வி வளர்ச்சிக் கழகம்" தனியாக நிறுவப் பெற்றுள்ளது. இக் கழகத்தின் வரலாறு இம்மலரில் தனியே தரப் பெற்று இருக்கிறது.

நகரத்தார் சங்கம் பல ஆண்டுகள் திருச்சி வாழ் நகரத்தாரின் பேரவைகள் கூட்டி வைத்தும், அவர்களுக்கும் திருச்சியில் உள்ள பிற சமூகப் பெருமக்களுக்கும் தொடர்பும் நல்லுறவும் ஏற்படுத்தியும் சீரிய முறையில் தொண்டு புரிந்திருக்கிறது. நகரத்தார்கள் பிரச்சினைகளை திருச்சிக்கு வருகை புரியும் அமைச்சர்கள், அரசினரின் அலுவலர்கள் ஆகியோரிடம் அவ்வப்போது சங்கம் தூது சென்று எடுத்துரைத்திருக்கிறது. நகரத்தார்சமூகப் பெருமக்களுக்கு வரவேற்பு வழங்கியிருக்கிறது. சிறப்பான முறையில் ஆண்டு விழாக்களை நடத்தி வந்திருக்கிறது. திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தாருக்கு நகரத்தார் சங்கம் தனது நூல் நிலையத்தை அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறது.

பணம் கொடுக்கல் வாங்கல் தொழிலிலுள்ள எல்லா சமூகத்தினரையும் ஒன்று சேர்த்து ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதன் வாயிலாக இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நம் சமூகத்தாருக்கு அரசினரின் புதிய சட்டங்களால் ஏற்படும் தீங்குகளை பெரும் அளவில் குறைக்க இச்சங்கம் மிகவும் பாடுபட்டு இம்முயற்சியில் வெற்றி கண்டிருக்கிறது.

திருச்சி தேசியக் கல்லூரியில் கானாடுகாத்தான், திவான் பகதூர், மு. ராம. இராமசாமி செட்டியார் பெயரில் இரண்டு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்பெற்று வருகிறது. இச்சங்கத்தின் முயற்சியில் இவ்வுதவி நம் சமூகத்தை சேர்ந்த மாணவர்களுக்கு கிடைத்து வருவது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் உறுப்பினர்களுக்கு ஆண்டுச் சந்தா ரூபாய் ஆறு; ஆயுள் சந்தா ரூபாய் 250/- ஓராயிரம் ரூபாய் நன்கொடை வழங்குபவர்கள் ஆதரவாளர்களாக ஏற்றுக்கொள்ளப் பெறுகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளாகச் சங்கத்தின் வளர்ச்சி சிறிது தடைப்பட்டிருக்கிறது. இயற்கையமைப்பால் தமிழ் நாட்டின் நெஞ்சமாக இருந்து வரும் திருச்சிராப்பள்ளி நகரம் தொழில் துறையிலும் மக்கள் தொகையிலும் நாளும் பெருகிப் பெருநகரமாக வளர்ச்சி பெற்று வருவதால் இந்நகரில் இயங்கும் இச் சங்கம் மேன்மேலும் நன்கு செயலாற்றி நம்மவர்க்கு எதிர்காலத்தில் பெரும் பயன் விளைக்கும். நகரத்தார் அனைவரும் சங்கத்திற்கு ஒல்லும் வகையாலெல்லாம் உதவவேண்டுகிறோம்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்

கல்வி வளர்ச்சிக் கழகம்

திருச்சிராப்பள்ளி.

எல்லாச் செல்வங்களிலும் கல்விச் செல்வமே மேலானது என்ற குறிக்கோளால் உந்தப்பட்டு, உயர் கல்வி பயிலும் நம் சமூக மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கடனாகக் கொடுத்து உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் இச் சங்கம் தொடங்கப்பெற்றது.

செட்டியார் அன்பர்கள் அனைவரிடமும் இயன்ற அளவு நிதி திரட்டி நமது சமூக மாணவர்கள் எங்கெங்கெல்லாம் படிக்க முன்வருகிறார்களோ அங்கெல்லாம் நிதி கொடுத்து உதவ வேண்டுமென்பது எங்கள் அவா. இச் சங்கம் 25—7—53 அன்று (Chettiars' Educational Association) என்ற பெயரால் நிறுவிப் பதிவு செய்யப்பெற்றது.

இதற்கு முதன் முதல் மனமுவந்து ரூ. 1001 பணம் எழுத முன்வந்தவர்கள் திரு சா. ராம. சித. பழநியப்ப செட்டியார் அவர்கள் ஆவர். அவர்களையே தலைவராகக்கொண்டு இச்சங்கம் இயங்கி வருகிறது. திரு மு. அ. அருணாசலம் செட்டியார் அவர்கள், ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் போன்றவர்கள் எங்களை ஊக்குவித்தும் எங்களுக்கு உதவி செய்தும் வருகிறார்கள்.

சங்கத்தின் நிர்வாகிகள் வருமாறு :—

தலைவர் :

சா. ராம. சித. பழநியப்ப செட்டியார் அவர்கள்.

துணைத்தலைவர் :

தி. சு. பழ. ப. சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

செயலாளர் :

சு. ராம. சு. சுப்பையா செட்டியார் அவர்கள்.

செயற்குழு உறுப்பினர் :

வயி. அ. வயி. வயிரவன் செட்டியார் அவர்கள், அரு. அண்ணாமலை செட்டியார் அவர்கள், ராம. ரத்தினம் செட்டியார் அவர்கள்.

நமது சங்கத்தின் வாயிலாக உதவி பெற்று முன்னுக்கு வந்தவர்கள் பலர் ஆவர். அவர்களில் பலர் பெருவாரியாக மார்க்குகள் வாங்கித் தேர்வு அடைந்து உயர்ந்த பதவிகளில் இருந்து வருவது நாம் பெருமைப்பட வேண்டியதாகும். ஏறத்தாழ ரூ. 10,000/- உதவித் தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திருச்சி தேசியக் கல்லூரியில் திரு ஆர். இராமனாதன் செட்டியார் எம்.பி., அவர்கள் தம் தகப்பனாரின் பெயரால் ஒரு (Endowment) அறக்கட்டளை நிறுவியுள்ளார்கள். அதிலிருந்து இரு மாணவர்களுக்கு அதாவது புகுமுக வகுப்பில் வகுப்பில் படிக்கும் மாணவன் ஒருவனுக்கும் பி. ஏ. வகுப்பில் படிக்கும் மாணவன் ஒருவனுக்கும் கல்லூரிச் சம்பளம் இனாமாகக் கொடுக்கப்படுகிறது. நமது சங்கம் சிபாரிசு செய்யும் மாணவர்களுக்கு இந்த உபகாரச் சம்பளம் அளிக்கப்பெறுகிறது.

நம் வேண்டுகோளுக்கு இணங்கி அவ்வப்போது இந்த உபகாரச் சம்பளத்தை நமது மாணவர்களுக்குக் கொடுத்து உதவி வரும் ஆர். இராமனாதன் செட்டியார் எம். பி., அவர்களுக்கு இச்சங்கம் பெரிதும் நன்றி செலுத்துகிறது.

நகரத்தார் சங்கம்

மதுரை.

தோற்றமும் பணிகளும்

மன்னர் பின்னோர் என்னும் பெருஞ் சிறப்புப் பெற்ற நகரத்தார் குலம் அண்மைக் காலத்தில் வளங்குன்றிப் பின்தங்கியிருக்கின்றது. மீண்டும் அது பெருவாழ்வு பெறுதற்கு ஒன்றுபட்ட முயற்சி தேவை. பல்வேறு காலங்களில் நகரத்தார் ஏற்படுத்திய பொது அற நிறுவனங்களை யும் அவற்றிற்காக வாங்கிய சொத்துக்களையும் ஓர் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்து நன்முறையில் பாதுகாத்தால் அவை தரும் வருவாயைக் குல முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தஇயலும்; இதற்கென ஒரு சங்கம் தோன்றி உயர்தரக் கல்வி பெற விரும்பும் நகரத்தார் இளைஞர்கட்கு உதவித் தொகை யளித்தும் வேலை வேண்டுவோருக்கு அதனைப் பெற்றுக் கொடுத்தும் நகரத்தார் குலத்தின் பொது முன்னேற்றத்திற்குப் பொறுப்பேற்கவேண்டும் என்னும் எண்ணங்கள் மதுரையில் உள்ள நகரத்தார்களிடத்தில் கிளர்ந்தெழுந்தன. அதன் விளைவாக 8.4.56 அன்று மதுரை நகர விடுதியில் கலைத் தந்தை உயர்திரு. கருமுத்து. தியாகராசச் செட்டியார் தலைமையில் நிகழ்ந்த நகரத்தார் பேரவையில் 'நகரத்தார் சங்கம்' உருவாகியது. அவர்களேசங்கத்தின்தலைவராகஇருக்கஇசைந்தார்கள். சங்கம் தோன்றுவதற்கு உறுதுணையா யிருந்த பூலாங்குறிச்சி திரு. வ.ராம. வள்ளியப்ப செட்டியாரும் கண்டரமாணிக்கம் திரு. லெ. அழகு சுந்தரம் செட்டியாரும் துணைத் தலைவர் களாய் அமைந்தார்கள். இராசா சர். மு அ. முத்தையா செட்டியாரையும் டாக்டர் அழகப்ப செட்டியாரையும் சங்கம் புரவலர்களாகக் கொண்டது. அரிமளம் திரு. செ. செல்லப்பனும் ஆ. தெற்கூர். திரு. மு. சொக்கலிங்கமும் செயலர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர். பலதுறைகளிலும் அலுவல் செய்யும் நகரத்தார் களைக் கொண்ட செயற்குழு அமைக்கப் பட்டது. அமைப்புக் கூட்டத்திலேயே சங்கத்திற்கு நன்கொடையாக ரூ 11000/= பெறப் பட்டது.

முதலாண்டில் 240 பேர் உறுப்பினராகச் சேர்ந்தார்கள். 6 மாணவர்கட்கு உயர் கல்விக்காகத் 'திரும்பப் பெறும் உதவித் தொகை' அளிக்கப்பெற்றது. 40 பேருக்கு வேலை பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இரண்டாவது ஆண்டில் திரு. மு. சொக்கலிங்கத்துக்குப் பதிலாகத் திரு. அரு. தியாகராசன் செயலராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். மதுரை, திருப்பரங்குன்றம், வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் ஆகிய இடங்களில் உள்ள நகர விடுதிகளையும் மதுரைப் பிட்டுத் தோப்பில் உள்ள காலி மனை, மண்டபம் ஆகிய வற்றையும் சங்கம் ஒப்புக்கொண்டு ஆட்சி செய்து வருவதெனக் தீர்மானிக்கப்பெற்றது. சங்கத்தின் அலுவலகம் மதுரை நகரவிடுதிக்கு மாற்றப்பட்டது. மாணவர் 4 பேருக்கு உதவித் தொகை யளிக்கப் பெற்றது. 42 பேருக்கு வேலை தேடிக் கொடுக்கப் பெற்றது.

மூன்றாவது ஆண்டில் திரு. செ. செல்லப்பனுக்குப் பதிலாகத் திரு. சுப. அண்ணாமலை செயலராகத் தெரிவு செய்யப்பெற்றார். இவ்வாண்டில் உறுப்பினர் தொகை 334 ஆக உயர்ந்தது. 38 பேருக்கு வேலை தேடித் தரப் பட்டது. 9 பேருக்கு உதவித் தொகை யளிக் கப்பட்டது. மதுரை மாரியம்மன் தெப்பக்குள விடுதியில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

நான்காவது ஆண்டில் 15 மாணவர்க்கு உதவிச் சம்பளம் அளிக்கப் பெற்றது. 27 பேருக்கு வேலை தேடித் தரப்பட்டது. முன்னைய ஆண்டுகளைவிட மிகுதியான வெளியூர் உறுப்பினர்கள் சேர்ந்தனர். சங்கத்தின் முயற்சியால் மதுரைக்கும் தேவகோட்டைக்கும் இடையே விரைவு உந்துகள் (Express Buses) போக்குவரவு, டி. வி. எஸ்., எம். டி. டி. நிறுவனங்களால் தொடங்கப்பட்டது.

ஐந்தாவது ஆண்டில், மலேயாவில், இச் சங்கத்திற்கு 40 உறுப்பினர்கள் சேர்ந்தனர். நன்கொடையாக ரூ 9227/- பெறப்பட்டது. 10 மாணவர்கட்கு உதவித் தொகை அளிக்கப் பெற்றது. குறைவான கல்வியுடைய நகரத்தார் இளைஞர்கட்கு ஆலைகளில் தொழிலாளர் வேலை கொடுக்கவேண்டுமென்று கருமுத்து. தியாகராசச் செட்டியாரவர்களைச் செயலர்கள் இடைவிடாது வேண்டியதற்கு இணங்க, அவர்கள் தம் தேனூர்ச் சிவகாமி ஆலையில் 100 பேருக்குத் தொழிலாளர் வேலை கொடுத்தார்கள். அவர்கள் இப்போது வேலை உறுதியும் ஊதியமிகுதியும் பெற்று நன்கு பணியாற்றி வருகிறார்கள்.

நகரத்தார் இல்லங்களில் திருமணம், புதுமை முதலிய சிறப்புக்கள் நிகழும்போது சங்கத்திற்குக் குறைந்த அளவு ரூ 11/- ஆவது மகமையாக உதவவேண்டுமென்று செயலர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்கு இணங்க இவ்வாண்டில் ரூ 110/- மகமையாகப் பெறப்பட்டது.

டாக்டர். இராம. அழகப்ப செட்டியாரின் மறைவிற்குப் பின், பள்ளத்தூர். அ. மு. மு. முருகப்பச் செட்டியார் அவர்கள் புரவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஆறுவது ஆண்டில் உறுப்பினர் தொகை 971 ஆக உயர்ந்தது. செயலர்கள் இவ்வாண்டில் புதிதாக வாழ்நாள் உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியைத் தொடங்கினர். இவ்வாண்டிலேயே ரூ 101/= செலுத்தி 65 வாழ்நாள் உறுப்பினர் சேர்ந்தனர். செயலர்களின் முயற்சியால் சங்கத் தலைவர் கருமுத்து. தியாகராசச் செட்டியார் அவர்கள், சங்கவாயிலாக விண்ணப்பிக்கும் மணமாகாப் பெண்களின் பெற்றோருக்கு, ஊருக்கு ஒரு பெண்ணிற்கு ரூ 1501/= வீதம் திருமணத்திற்கு உதவியளிக்க முன்வந்தார்கள். அதன்படி இதுவரை 3 திருமணங்கட்குக்கொடுத்துதவியுள்ளார்கள். அடுத்த ஆண்டில் விசாலாட்சி ஆலை அதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியாரவர்களும் ஒரு திருமணத்துக்கு ரூ 501/= வீதம் உதவியளிக்க முன்வந்து, அதன்படி உதவி வருகிறார்கள். சங்கச் செயற்குழு உறுப்பினராகிய காரைக்குடி. இராம. வீர. இராம. இராமசாமி செட்டியாரவர்கள் ஒரு திருமணத்திற்கு ரூ 1500/= வீதம் உதவியளித்து இதுவரையில் பல திருமணங்களை நடத்திவைத்துள்ளார்கள்.

சங்கத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்களும், வீடு வீடாகச் சென்று சங்கத்திற்குப் பெரு நிதி சேர்த்தவர்களும் நகரத்தார் குல முன்னேற்றமே சிந்தனையாகக் கொண்டவர்களுமாகிய சங்கத் துணைத்தலைவர் வ. ராம. வள்ளியப்ப செட்டியார் இவ்வாண்டில் பருவுடல் நீத்து மறைந்தார்கள். அவர்களின் பிரிவு சங்கத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவர்களின் இடத்தில் காரைக்குடி. திரு. மெ. செ. மெ. மெ. மெய்யப்பச் செட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்த ஆண்டில் 20 மாணவர்கட்கு உதவிச் சம்பளம் வழங்கப்பட்டது.

ஏழாவது ஆண்டில் சுப. அண்ணாமலைக்குப் பதிலாக திரு. பெரி. உடையப்பன் செயலர் ஆனார். 5 மாணவர்கட்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது. வாழ்நாள் உறுப்பினர் தொகை 133 ஆக உயர்ந்தது.

மதுரை மீனாட்சியம்மை திருக்கோயிலில் அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தார் ரூ. 25 இலட்சம் செலவிலும் மற்ற நகரத்தார்களும் அரிதின் முயன்று செய்த பெரிய திருப்பணிகளை, அண்மையில் அக் கோயிலின் திருப்பணிக் குழுவினர் மறைத்துப் புத்தகமும் கல்வெட்டும் வெளியிட்ட செயலை வன்மையாகக் கண்டித்து, 101 நகரத்தார்கள் கையெழுத்திட்ட விண்ணப்பங்கள் குடியரசுத் தலைவர்க்கும் தமிழக முதலமைச்சர்க்கும் தொடர்புள்ள உயர் அலுவலர்கட்கும் சங்கத்தின் முயற்சியால் அனுப்பப்பட்டன. செட்டிநாட்டு ஊர்களில் நகரக் கூட்டங்கள் கூட்டி, இதுபற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பச் சங்கம் முயற்சி யெடுத்துக்கொண்டது. ஏழாவது ஆண்டுப் பேரவையில், தவறான செய்திகளையுடைய புதிய கல்வெட்டுக்களை அகற்றுமாறு திருப்பணிக் குழுவினரை வேண்டித் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டது. இம் முயற்சிகளில் விரைவில் வெற்றி பெறுவோம் என்பது உறுதி.

இவ்வாண்டில் மதுரை நகர விடுதியின் நடுக் கூடத்தில் மின் விசிறிகள் பொருத்தப்

பெற்றன. சங்கத்தின் சார்பில் நூல் நிலையம் ஒன்று இங்கு நிறுவப்பட்டது. பேரவையில் தேவகோட்டை, தமிழ் வள்ளல் திரு. உ. ராம. மெ. சுப. சேவு. மெய்யப்பச் செட்டியாரவர்கள் அதனைத் திறந்துவைத்தார்கள். அவர்கள் சங்கத்தின் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். மதுரை மீனாட்சி புத்தக நிலைய உரிமையாளரும் சங்கத்தின் முன்னாட் செயலருமான திரு. செ. செல்லப்பன் 101 நூல்களை அன்பளிப்பாக உதவினார்கள். பதிப்பகம் நடத்தும் நகரத்தார்கள் இந்நூல் நிலையத்தைப் பெருக்க நூல்கள் தந்துதவுமாறு வேண்டுகிறோம்.

சங்கத்திற்கு இன்றுவரை நன்கொடையாகப் பெறப்பட்ட தொகை ஏறக்குறைய ரூ 35000/- திருமண மகமை ரூ 1188/- இத்தொகை வறுமையால் மணமாகாமலிருக்கும் பெண்ணின் திருமணத்திற்குப் பயன்படுத்தப்படும்.

நகரத்தார்களுள் பெருந்தொழில் நடத்தும் செல்வர், உயர் பதவியாளர், தொழில் துறைப் பட்டந்தாங்குவோர் ஆகியோரின் பெயர்களை இயன்றவரை சேர்த்து ஏழாவது ஆண்டு அறிக்கையில் வெளியிட்டுள்ளோம். இது மேலும் விரிவாக வெளியிடப்படும்.

நகரத்தார் குலம் மேன்மையடையப் பல் வகையிலும் பாடுபடும் நகரத்தார் சங்கம் வளர மனம் உவந்து ஒத்துழைப்புத் தரவேண்டி இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

நகரவிடுதி வடக்குச்சித்திரை வீதி, மதுரை-1	**அரு. தியாகராசன்** **சுப. அண்ணாமலை** செயலர்கள்

தட்ப வெப்பநிலையில் செட்டிநாட்டுப் பகுதியைவிடச் சிவகாசி வட்டாரம் வறண்டிருக்கிறது. இருப்பினும் அங்கே தீக்குச்சித் தொழிலும் வண்ண அச்சுத் தொழிலும் மிகச் சிறந்த முறையில் நவீன இயந்திரங்களுடன் நடக்கின்றன.

பம்பாய்ப் பகுதியில் பீவண்டி என்னும் ஊருக்குச் சென்றிருந்தேன். அங்கே வீடுதோறும் விசைத்தறிகள் பொருத்தப்பட்டு இயங்கிவருகின்றன. அந்த ஊர் இலட்சம் மக்கள் கொண்டதாயினும் அங்கே ஒரு பதினாயிரம் தறிகள் இயங்குகின்றன. ஒவ்வொருவரும் நன்றாக வாழ்கின்றார்கள். அவர்களுடைய அயரா முயற்சியைப் பாராட்டி அரசினர் விதிகளைத் தளர்த்திப் பெருவாரியான சலுகைகளை அளித்திருக்கிறார்கள். அதுபோல மதுரைக்கு 40 மைல் தொலைவிலுள்ள செட்டிநாட்டுப் பகுதியும் தொழிலால் வளம்பெற முடியும். பிழைப்பிற்காக நாம் மாளிகைகளைக் கைவிட்டு ஓட வேண்டிய இன்னல் ஏற்படாது.

லெ. நாராயணன் செட்டியார் அவர்கள்
22-8-1962, மதுரை நகரத்தார் சங்கச் சொற்பொழிவு.

சமஸ்தான மன்னர்கள் என்றிருந்தவர்களில் பலர், அரசாங்க உத்தியோகஸ்தர்களாக இப்போது பணியாற்றி வருகின்றனர். பலர் தொழில் ஸ்தாபனங்களில் சேர்ந்து தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களுடைய பழங்கால அந்தஸ்தையும் கௌரவத்தையும் கவனித்தால் இப்போது இவர்கள் ஈடுபட்டிருக்கும் தொழில்கள் மிகக் குறைவானது என்று நினைக்கவேண்டும். காலம் மாறுவதற்கு ஏற்ப, தங்கள் மனப்பான்மையையும் தொழில்களையும் நடவடிக்கைகளையும் மாற்றி அமைத்துக் கொள்ளுவதுதான் அறிவுள்ள யாவரும் செய்யும் செயல்.

அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள்
16-7-1961, நகரத்தார் சங்கம், மதுரை. சிறப்புச் சொற்பொழிவு.

சென்னை நகரத்தார் சங்கம்

27. பவழக்காரத் தெரு, சென்னை-1

தொடக்கமும் செயல்திட்டங்களும்

நம் சமூக ஒருமைப்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் பணியாற்ற ஓர் அமைப்பு அவசியமென்றும் தனிப்பட்டவர்களின் முயற்சியைவிட கூட்டு முயற்சியினுல் கிட்டும் பலன் அளவிடற்கரிதென்றும் கருதி கீழ்க்கண்டவர்கள் 32, பவழக்காரத் தெரு, சென்னை 1-ல் கூடி விரைவில் சங்கம் ஒன்று நிறுவுவதென 15—8—63-ம் நாளன்று முடிவு செய்தனர்.

1. நாகமுத்தையா
2. அரு. பழ. அருணுசலம்
3. அ. கருப்பையா
4. வே. திருநாவுக்கரசு
5. மு. அழகப்பன்
6. இராமசாமி சேதுராமன்
7. சுப. தண்ணீர்மலை
8. மெய் உடையப்பன்

அம்முடிவிற்கேற்ப சென்னை நகரத்தார் சங்கம் என்ற பெயரில் சங்கம் அமைத்து உறுப்பினர் சேர்க்கும் பொறுப்பை மேலே கண்டவர்கள் ஏற்றுக்கொண்டனர். திருவாளர்கள் மு. அழகப்பன் (பள்ளத்தூர்) சொ. சொக்கலிங்கம் (இராமச்சந்திரபுரம்) இருவரும் பொருளாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

சங்கம் அமைத்தலின் அவசியம் பற்றி திருவாளர்கள் கண்ணதாசன், நாகமுத்தையா இருவரும் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்று வெளியிடப் பெற்றது. அதன் பின் நம் சமூகத்தவர்கள் ஓரளவு ஆதரவு தரவே சங்கத்தைப் பதிவு செய்யும் விருப்போடு முதற் செயற்குழுத் தேர்வு 26—1—64வ 144 நிர். பவழக்காரத் தெரு.சென்னை 1-ல் நடைபெற்றது. அவ்வமயம் திருவாளர்கள் நாகமுத்தையா (சண்முகநாதபுரம்) அ. தியாகராசன் (சிறுகூடல்பட்டி) செயலாளர்களாகவும், திருவாளர்கள் (தேவகோட்டை) P. S. P. L. மெய்யப்பன் (பள்ளத்தூர்) மு. அழகப்பன் இருவர்களும் பொருளாளர்களாகவும் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அடுத்து நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் சிறுவயல் திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் மதகுபட்டி, கண. இராமனுதன் (2) பள்ளத்தூர் S. RM. P. L. சுப்ரமணியம், துணைத் தலைவர்களாகவும் நியமிக்கப் பெற்றனர். அதை அடுத்து சங்கத்தின் விதிமுறைகள் வரையறுக்கப் பெற்று 26-3-64ம் நாள் சங்கம் பதிவு செய்யப்பெற்றது.

1. சங்கத்தின் நோக்கம்

நகரத்தார் சமூகத்தினரிடையே நல்லதோர் தொடர்பையும் ஒற்றுமையையும் வளர்த்து, சமய சமூக பொருளாதார நலன்களைப் பாதுகாத்து கல்வி, கலை முதலியவற்றில் முன்னேற்றம் காணுதல்.

2. நோக்கத்தை நிறைவேற்றும் முறைகளாவன:

அ. நகரத்தார்களில் ஏழை மாணவ மாணவியர்களுக்கு உபகாரச் சம்பளம் தருதல், உணவு கொடுத்து உதவுதல், உடை வழங்குதல், தங்க இடவசதி தேடித்தருதல்.

ஆ. நகரத்தார்களில் தகுதி உள்ளவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்க முயலுதல்.

இ. நகரத்தார்கள் செய்யும் தொழில்களின் வளர்ச்சிக்கு இயன்ற உதவிகளைச் செய்தல்.

ஈ. நகரத்தார்களில் வசதியின்மையால் மணமாகாத ஆண், பெண்களுக்கு மணம் முடிக்க உதவிசெய்தல்.

உ. கல்வி அறிவைப் பெருக்குவதற்காக கல்வி நிலையங்கள், நூல் நிலையங்கள்

நிறுவுதல், நிறுவிய நிறுவனங்களின் நிர்வாகத்திற்கான உதவிகள் புரிதல்.

ஊ. நகரத்தார்களின் கூட்டு இறை வழிபாட்டிற்கு வழி செய்தல்.

எ. நகரத்தார்களில் வறியநிலையில் பிணியால் துன்புறுகிறவர்களுக்கு இயன்ற வரை மருத்துவ உதவிகள் புரிதல்.

ஏ. கூட்டுறவு பண்டகசாலைகள் நிறுவுதல்.

ஐ. முத்தமிழின் வளர்ச்சிக்காகவும் நாட்டின் ஐக்கியத்திற்காகவும் பாடுபடுதல்.

ஒ. நகரத்தார்களின் முன்னேற்றத்திற்காக எழுதப்பெற்ற நூல்களை புதுப்பித்தல், பதிப்பித்தல் முதலியன.

இச்சங்கத்தில் ஆண்டு உறுப்பினர்கள் ஆண்கள்—465. பெண்கள்—6. ஆயுள் உறுப்பினர்கள் மூவர். ஆதரவாளர்கள் ஏழு பேர்கள். காப்பாளர் ஒருவர் சேர்ந்திருக்கிறார்கள். மேலும் உறுப்பினர்களைச் சேர்க்க ஆர்வமுள்ள நம்மவர்கள் பலரும், செயற்குழு உறுப்பினர்களும் முயன்று வருகின்றனர். அலுவலகங்களில் வேலை செய்து வருபவர்கள் ஓய்வு நேரங்களில் மட்டுமே சங்க வேலைகளில் ஈடுபட இயலும் ஆதலால் சங்க வேலை சிறிது தடைப்படுகிறது.

சங்கத்தின் திட்டங்களை நிறைவேற்றப் பெரிய அளவில் நிதி தேவைப்படுகிறது. நிதி வசூல் குழு, கலை நிகழ்ச்சி அமைப்புக் குழு என இரண்டு தனிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இக் குழுக்களின் முயற்சியாலும், நம் சமூகப் பெருமக்களின் ஆதரவாலும் நம் சமூகத்தினரின் முன்னேற்றத்திற்காக இயங்கி வரும் ஏனைய பல சங்கங்களின் ஒத்துழைப்பாலும், இச் சங்கம் மேலும் மேலும் முன்னேற வேண்டிய நிலையில் இருந்து வருகிறது.

இச்சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக சமீபத்தில் வேலை வாய்ப்பை இழந்த நம்மவர்களில் 23 பேர்களுக்கு பள்ளத்தூர் அ. மு. மு. குடும்பத்தினர் நடத்திவரும் தொழிற்சாலைகளில் வேலைகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. நம் சமூகத்தவர்கள் திருவொற்றியூரில் நடத்தி வரும் மாசிமக உற்சவத்திற்கு இரு நகர விடுதித் தெண்டாயுத பாணிகளும் புறப்பட்டுச் செல்லும் நாளில் சங்கத்தின் சார்பாகப் பட்டுச் சாத்தி சங்க உறுப்பினர்கள் இயன்ற வரை ரதங்களுடன் சென்றதும், உற்சவதினங்களில் சங்கத்தின் தொண்டர்கள் இயன்ற பணிகளைச் செய்ததும் பலராலும் பாராட்டப் பெற்றது.

தொழில், வாணிபம் கருதி இவண் வந்திருக்கும் நம்மவர்கள் பலர், வாடகை இல்லங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அத்தகையோர்கள் வீடுகள் தேவை ஏற்படும் போதும் காலி செய்யும் போதும் சங்கத்திற்குத் தெரிவித்தால் வீடு தேடும் நம்மவர்கட்கு இடையாட் கூலி (Brokerage) இன்றி வீடுகள் கிடைக்க வசதி செய்ய இயலும். இன்னோரன்ன சிறு பணிகள் தொட்டு கல்வி கற்க வசதியற்ற இளைஞர்கட்கு கல்விச்செலவுக்கும், மணமாகாதபெண்களுக்கு மணமுடிக்கவும் பணவுதவி செய்தும் வேலை வாய்ப்பற்றோர்க்கு வேலை தேடித்தரவும் சங்கம் தன்னால் இயன்ற பணிகளைச் செய்யும் என்பது உறுதி. நம்மவர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் சங்கத்திற்குப் பெரிதும் கிடைத்தால் சங்கம் பயன்மிகுந்த செயலாற்றுவது மிகஎளிதாகும்.

சங்க அலுவலகத்தில் தொலைபேசி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பெற்று வருகிறது.

ஆகஸ்டு 9-ம் நாள் ராஜா அண்ணாமலை மன்றத்தில், சங்கத்திற்கு நிதி திரட்ட ஒரு நாடகம் நடத்த ஆவன செய்து வருகிறோம்.

மலாசியாவிலுள்ள நகரத்தார்கள் கோயில் பணங்கள் பிற பொதுப் பணங்கள் ஆகியவற்றில் பெரும்பகுதியை இப்போதே இந்தியாவுக்கு மாற்றிக் கொள்ளுவது நலம் என்று சங்கம், மலாசியா நகரத்தார்களுக்குத் தெரிவித்திருக்கிறது.

இதுவரை சங்க உறுப்பினர்களாக 485 பேர் சேர்ந்துள்ளனர். இவ்வாண்டுக்குள் ஓராயிரம் உறுப்பினர் சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம்.

மு. அழகப்பன்

ஓவியத்தின் உயர்வு

எஸ். அண்ணுமலை
கல்கத்தா

ஆய கலைகள் அறுபத்து நான்கில் ஓவியக் கலையும் ஒன்று. இக்கலையில் சிறப்புற்று, இயற்கையின் எழிலை, வண்ணங்களால் அழகு வடிவங்களாகத் தீட்டித்தந்து, தாமனுபவித்த இன்பங்களைப் பிறரும் அனுபவிக்கச்செய்த பெருமக்கள் பலர் ஆவர். பண்டைத் தமிழிலக்கியங்களைப் புரட்டிப் பார்த்தால் அக்காலத்திலிருந்தே தமிழ் மக்கள் இக்கலையில் மேன்மையுற்று விளங்கினர் என்பது தெரியவருகிறது. பார்த்த உருவங்களை அப்படியே மனத்தில் பதிய வைத்துக்கொண்டு, பின்னர் தத்ரூபமாக விளங்கும்படி வண்ணங்களில் வடித்தெடுக்கும் அளவிற்குத் திறமைபெற்று அவர்கள் சித்திரக் கலையில் சிறந்து விளங்கியிருக்கின்றனர். இக்கலையின் நுணுக்கங்களை மிகத் தெளிவாக அறிந்திருந்தனர் என்பதை,

> ''சித்திரமும் கைப்பழக்கம்,
> செந்தமிழும் நாப்பழக்கம்...''

என்ற பாடலிலிருந்து நன்கு அறியலாம். ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு தொடர்ச்சியாகச் சித்திரத்தை வரைந்து பழகுகிருனே அவ்வளவுக்கவ்வளவு அவன் அக்கலையில் மேன்மையுறலாம் என்ற உண்மையை ''சித்திரமும் கைப்பழக்கம்'' என்ற சொற்கள் எவ்வளவு இரத்தினச் சுருக்கமாக விளக்குகின்றன!

இக்காலத்தில் மேல் நாடுகளில் புகழ்பெற்ற ஓவியர்களால் வரையப்பட்ட சித்திரங்கள் பெருஞ் செல்வமாகப் போற்றப்பட்டு வருகின்றன என்பதை நாம் அறிகிறோம். வின்ஸி, மைக்கேல்ஏஞ்சலோ, ரூபென்ஸ், ரெம்பிராண்ட் போன்ற சிறந்த சைத்ரீகர்களால் வரையப்பட்ட ஒவ்வொரு படமும் இன்று பல ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

கீழ்நாடுகளில் முக்கியமாக இந்தியா, பர்மா, தாய்லாந்து, சீனு, ஜப்பான் முதலிய நாடுகள் இக்கலையில் சிறந்து விளங்குகின்றன. பட்சிகள், மிருகங்கள், பூக்கள் வரைவதில் சீன ஜப்பான் சைத்ரீகர்கள் உலகப் புகழ் பெற்றவர்கள். மொகலாயச் சித்திரம் (Moghul Painting) இந்தியச் சித்திரம் (Indian Painting) முதலிய பிரிவுகளில் நம் நாடு மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. டி. பி. ராய் சௌத்ரி, கோபால் கோஷ், நந்தலால் போஸ் முதலிய இந்தியச் சைத்ரீகர்கள் உலகப் புகழ்பெற்று விளங்குகின்றனர்.

திருவிதாங்கூர் அரசகுடும்பத்தைச் சேர்ந்த ரவிவர்மா தீட்டிய படங்களைப் பார்த்து மகிழாதார் யாரே! இங்கிலாந்து தேசத்தின் முன்னுள் பிரதமர் சர்ச்சில் துரையும், அமெரிக்க ஜனுதிபதியாக இருந்த ஐசன்ஹோவரும், திருமதி கென்னடியும், கவி ரவீந்திரநாத் தாகூரும், டாக்டர்களும் எஞ்ஜினியர்களும், அரசியல் வாதிகளும் சட்ட நிபுணர்களும், ஆண்களும் பெண்களும், இக்கலையை ஒரு சிறந்த பொழுது போக்காகப் பயின்று மிகத் தேர்ச்சியுற்றனர் என்றுல், இக்கலையினை நாம் முறையாகப் பயின்று அதனுல் பெரும்பயனடையலாம் என்பது நன்கு புலப்படுகிறது.

இப்பொழுது நம் நாட்டில் சித்திரக் கலையை முறையாகப் பயில கல்கத்தா, பம்பாய், டில்லி, சென்னை போன்ற பெரிய நகரங்களிலும் ஏராளமான சிறிய நகரங்களிலும், கல்லூரிகளும் பிற வசதிகளும் உள்ளன. கல்கத்தாவில் உள்ள (College of Arts and Draughtsmanship) என்ற சித்திரக் கல்லூரி இரவு 6 மணி முதல் 9 வரை பயிற்சி அளிக்கிறது. அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்கள் பயிற்சி பெற இது மிகவும் வசதியாக இருக்கிறது. இக்கல்லூரியில் பயிலும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. மூன்ருண்டுகள் பயின்று, 1963-ல் நடந்த இறுதித் தேர்வில் முதல் பிரிவில் தேர்ச்சி பெற்றேன்.

இப்பொழுது அனேக நகரங்களில், பகல் நேரங்களில் பயில வசதி இல்லாதவர்கள் பயிலுவதற்கென்றே, மாலை நேரங்களிலும்

இரவு நேரங்களிலும், தனிப்பட்ட ஓவியர்கள் நடத்தும் "ஸ்டுடியோக்கள்" (Art Studios) அனேகம் இருக்கின்றன. இவைகளிலும், சித்திரக் கல்லூரிகளிலும் நம் மாணவர்கள் பயிற்சிபெற்று, சித்திரம் வரைதலை ஒரு தொழி லாகவோ, அல்லது "ஓய்வு நேரத் தொழிலா கவோ" (Part - time job) கொண்டு பெரு நன்மையடையலாம்.

தற்கால உலகில் விளம்பரத் துறையிலும், சினிமாத் துறையிலும், பத்திரிகைத் துறை யிலும் சைத்ரீகர்களுக்கு மிகுந்த கிராக்கி யுண்டு. லக்ஷ்மண், சங்கர், மாலி, தாணு, கோபுலு போன்றவர்களின் கேலிச் சித்திரங்கள் (Cartoon) நமக்கு நகைப்பையூட்டி நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றன.

நம் சமூக இளைஞர் பலர் இக் கலை பயின்று பயனடைய இக்கட்டுரை துணையாகவும் தூண்டுகோலாகவும் இருக்கும் என்று நம்பு கிறேன்.

நமக்கு என்றுமே சாதிமத விரோதம் கிடையாது. எல்லோரும் வாழ வேண்டும் என்று மனமார விரும்புபவர்கள் நாம். 'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்று நம்புபவர்கள். ஆனால் இன்றைய காலப்போக்கில் நமது நிலை மிகவும் பின் தங்கியதாக ஆகிவிட்டது. நாம் நெடுங்காலமாக நவீனக் கல்விமுறையில் கவனம் செலுத்தாமல் இருந்துவிட்டதே அதற்குக் காரணம். அதனாலேதான் நம்மிடையில் நீதி, நிர்வாக, போலீஸ்துறைகளில் உயர்நிலை உத்தியோகஸ்தர்கள் ஒருவர் கூட இன்றுவரை இல்லை. அப்படியிருந்தும் நம்மை அரசாங்கம் ஒரு பின்தங்கிய வகுப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை. செல்வத்தாலும் தொழிலாலும் பதவியாலும் மிக உன்னதமான நிலையில் இருப்பவர்களைக்கூட, 'மிகவும் பின்தங்கிய வகுப்பினர்' என்று குறிப்பிட்டு எல்லா வசதிகளையும் தந்து கொண்டிருக்கிறது அரசாங்கம். இவற்றையெல்லாம் நாம் மனத்தில் கொள்ள வேண்டும். அரசாங்கம் தக்க சலுகையும் பாதுகாப்பும் தரவேண்டும் என்று சட்ட ரீதியான வழிகளில் நாம் முயலவேண்டும்.

மெ. செ. மே. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள்
26-8-1962, நகரத்தார் சங்கம், மதுரை.
ஆரும் ஆண்டு விழாச் சிறப்புரை

மெலிவுற்ற நம் மக்கள் நிலையை உயர்த்துவதும் ஏழை மாணவர்களைப் படிப் பிப்பதும், கண்ணீரும் கம்பலையுமாக வருந்தும் கன்னிப் பெண்கட்குத் திருமணம் செய்து வைப்பதும் நம் செல்வர்களின் இன்றியமையாக் கடமையாகும். செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் அன்றோ?

இதற்கு ஒரு வழி. ஆங்காங்குச் சிக்கிக்கிடக்கும் நகரத்தார்களின் கோயில், சத்திரம், தருமப் பெரும்பணங்களை மீட்டு ஒன்று சேர்த்து ஒரு குழுவின் மேற் பார்வையின்கீழ்க் கொண்டுவந்து பயன்படுத்தலேயாகும். இதற்கு ஆன கிளர்ச்சி யும் முயற்சியும் இளைஞர்கள் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்கள்
தலைமையுரை, நகரத்தார் சங்கம், மதுரை. 16-7-1961

பர்மாவில் நகரத்தார்கள் கல்விப்பணி

சொ. சுப. சுப்பிரமணியன் செட்டியார்
காரியதரிசி, நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம், பர்மா.

பர்மாவிற்கு நம்மவர்கள் வந்து சுமார் நூறு ஆண்டுகள் ஆகின்றன என்று மதிப்பிடப் பெறுகிறது. நம்மவர்கள் ஆதியில் தாய்நாட்டிலிருந்து வரும் போதே சிறுவர்களையும் கூடவே அழைத்து வந்தார்கள். தங்களுடன் வைத்திருந்து தொழிற்கல்வியை கற்கச்செய்து சிறு வயதிலேயே தொழிலில் ஈடுபடுத்தி வந்தார்கள். அவ்விதம் கற்ற சிலர் கணக்குகளில் மிகத் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர்கள்.

நாளடைவில் புதிய கல்வி முறையை கற்க வேண்டிய அவசியத்தை நம் சமூகம் உணர்ந்தது. அதன் பயனுகப் பல இளைஞர்களின் முயற்சியால் இரங்கூனில் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் துவக்கப் பெற்று நம் பையன்கள் கல்வி பயின்று வந்தார்கள். பிறகு பர்மா நகரத்தார்கள் எல்லோருடைய கூட்டு முயற்சியால் கம்பையில் ஒரு உயர்நிலைப் பள்ளி 1928-ல் தோற்றுவிக்கப்பெற்றது. மஹாத்மா காந்தி அடிகளால் திறந்துவைக்கப் பெற்று அது மிகவும் சிறப்பாக நடந்து வந்தது. சமீப காலத்தில் அதை பர்மிய அரசாங்கத்தார் ஏற்று நடத்தி வருகிருர்கள்.

இரங்கூன் நகரத்தார்களும் நாட்டுப் புறத்து நகரத்தார்களும் 1927-ம் வருஷத்தில் இரண்டு லக்ஷ ரூபாய் வரை இரங்கூன் சர்வ கலாசாலைக்குக் கொடுத்துநாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் பொருளாதாரப் பகுதி என்று ஒரு தனிப் பகுதி தோற்றுவித்து அதில் பொருளாதார சம்பந்தமான பாடங்களை நடத்திவர ஏற்பாடு செய்தார்கள். இப்போதும் அந்தநிதி பர்மா யூனியன் பிரதம நீதிபதியைத் தலைவராகக் கொண்ட ஒரு போர்டின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. யுத்தத்திற்குப் பிறகு அந்த பொருளாதாரத் தனிப் பகுதிநிறுத்திவிடப்பெற்ருலும், நமது நன்கொடைநிதியிலிருந்து பொருளாதார சம்பந்தமான பிற வெளியீடுகள், ஆராய்ச்சிகள் முதலியன நடந்துவருகின்றன.

கம்பையிலுள்ள பள்ளிக்கூடத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டு கொடுத்த நஷ்டஈட்டுத் தொகையிலிருந்து ஆண்டுக்கு ஆறு மாணவ மாணவிகள் வீதம் இந்தியாவிலும், இரண்டு பேர் வீதம் மேல்நாடுகளிலும் படிக்கப் பொருளுதவி செய்ய ஆரம்பித்து, அதுபோல் ஓராண்டு செய்யப்பெற்றது. ஆனுல் பர்மா சர்க்காரின் அயல்நாட்டுச் செலாவணி கட்டுப் பாட்டினுல் அத்திட்டம் கைவிடப்பட்டது.

பிறகு பர்மாவிலேயே நம்மவர்களின் பிள்ளைகளுக்கும், நம் வழித்தோன்றலான பிள்ளைகளுக்கும்மாதாந்திரம் பள்ளிச் சம்பளங்களைக் கொடுக்கும் திட்டம் 1958-ம் வருஷம் முதல் அமுல் செய்யப்பெற்றுள்ளது. மாதந்தோறும் நூற்றுக்கு அதிகமான பிள்ளைகளுக்கு பள்ளிச் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் மற்ற சமூகத்தினர் நடத்தும் பள்ளிகளுக்கும் நம் கழகத்திலிருந்து ஆண்டுதோறும் நன்கொடைகள் வழங்கிவருகிருேம். கீமந்தான் செயின்ட் மைக்கெல்ஸ் அந்தகர்கள் பள்ளிக் கூடத்திற்கு பல வருஷங்களாக வருஷம் ஒன்றுக்கு கியா. 500. வீதம் நன்கொடையும் இரங்கூன் பாய்ஸ் ஹோமுக்கு கியா. 300. வீதம் நன்கொடையும் கொடுக்கப்பெற்றுள்ளது. மோல்மேன் தமிழ் இளைஞர் சங்கத்தார் நிறுவிய கல்வி நிலையக் கட்டிடத்திற்கு நம் கல்விக் கழகத்திலிருந்து கியா. 5001 நன்கொடை வழங்கப்பெற்றது. இரங்கூன் காண்டோகலே கல்வர்ட் ரோடு, ஹரிஜன சேவா சங்கம் இலவச ஸ்கூல் கட்டிட நிதிக்கு கியா. 1001 வழங்கப்பெற்றது. இன்னும் பல பள்ளிக்கூடங்களுக்கும் இவ்வித உதவி செய்யப் பெற்று வருகிறது.

பர்மாவில் இரங்கூன் நகரில் மக்கள் பெருக்கம் மிகுதியால் சுகாதாரம் பாதிக்கப்பெற்று வந்ததை மாற்ற எண்ணி இராணுவ சர்க்கார் இரங்கூனை அடுத்து வட ஓக்களப்பா, தென்

ஒவ்க்களப்பா, தாக்கேடா முதலிய பட்டணங்களை நிர்மாணம் செய்தபோது, நம் கழக நிதியிலிருந்து வட ஒவ்க்களப்பா நகரில் ஏறத்தாழ கியா. 20,000. செலவில் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் கட்டி சர்க்கார் நிர்வாகத்தில் ஒப்புவிக்கப்பெற்றது.

நம் தாய்நாட்டின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பரப்பும் வகையில் திருக்குறளை பர்மிய மொழியில் வெளியிட கல்விக் கழகத்தில் ஏற்பாடு நடைபெற்று வருகிறது. இதில் முக்கிய பங்குகொண்டுள்ளவர். திரு. காந்தி அண்ணாமலை செட்டியார் ஆவார்கள்.

பர்மாவில் கல்வி பரப்பும் முகத்தான் செக்காலை மெய்யப்ப செட்டியார் அவர்கள் பியோப்புவே என்ற நகரில் காந்தி மெமோரியல் லைப்ரரி என்ற வாசகசாலையைத் தோற்றுவித்துள்ளார்கள். இந்திய, பர்மிய மொழிகளில் சில ஆயிரம் நூல்கள் அதில் உள்ளன.

UNIVERSITY OF RANGOON

In 1927-28 the Chettiars of Burma donated £ 7,250 (sterling) in British Government Bonds to the University of Rangoon. The High Court of Judicature at Rangoon sanctioned a scheme in 1949, detailing the manner in which the fund must be utilised, since it was left unutilised after 1941. From 1928 to 1941 lectures on banking and commerce were instituted and the charges therefor met from the fund.

The fund is administered by a Committee consisting of

1. The Chief Justice of the Supreme Court of the Union of Burma,
2. The Chairman of the Upper House of the Burmese Parliament,
3. The Speaker of the Lower House of the Burmese Parliament,
4. The Chairman of the Board of Directors of the Union Bank of Burma,
5. The Chief Justice of the High Court at Rangoon,
6. The Auditor-General, and
7. The Vice-Chancellor of the University of Rangoon.

The Official Trustee of the Union of Burma is the Ex-offiicio Secretary of the Trust.

---

3. Recorded a letter dated 19th February, 1953 from the Honorary Secretary, The Nattukkottai Chettiars' Association, Burma, conveying the following proposals for the use of the Nattukkottai Chettiar Fund :—

(a) The Committee agrees that the capital of the Fund be increased to K 2,50,000 from the accumulated income now lying with the Trustees.

(b) The Committee agrees that the recurring income of the Fund be used for the financing of the Economic Research Project, for the publication of Research Journals and other works on Economics and other allied subjects.

(c) The Committee agrees that the sums held by the Trustees over and above the compass of K 2,50,000 be used at their discretion to finance the Economic Research Project, according to requirements.

It was decided to accept these proposals and also the request of the Association that a statement of accounts of the Nattukkottai Chettiar Fund be sent to the Association at the end of each financial year. The further request that 2 copies of the Research Journals to be published be presented to the library of the Association would be forwarded to the University.

(Sd.) G. P. KIRKHAM,
Secretary.

கம்பைக் கல்வி நிலையம்

காந்தி அண்ணுமலை
துணைத் தலைவர்
கம்பை தனவைசியர் கல்விக் கழகம்
இரங்கூன்

தனவணிகர் வெளிநாடு சென்றால் 40 ஆண்டுகளுக்குமுன் தம் ஆண் மக்களையும் உடனழைத்துச் செல்வார்கள். தம் தொழிலை நடத்தநேரும் காலத்தில் அவர்களை ஏற்றவர்களாக உருவாக்குவதே அவர்கள் நோக்கமாக இருந்தது. வாழையடி வாழையாய் வந்த பழக்க வழக்கங்களை மாற்றியமைத்துக்கொள்வதில் தயக்கம் கொண்டார்கள். அப்போது இரங்கூன் நகரில் துடிப்பாயிருந்த இளைஞர்கள் "ஊதுகிற சங்கை ஊதுவோம் விடியும் போது விடியட்டும்" என்று கருதி தனவைசியர் இளைஞர் சங்கம் என்ற பெயரில் ஓர் நிறுவனத்தை 1928ல் அமைத்தார்கள்.

தொழில் நிறுவனங்களில் திண்ணைப் பள்ளியில் படித்ததும் வேலையிலமர்ந்திருந்த சிறுவர்கள் நிலையைப் பார்த்து முன்னேறிவரும் உலகிலே இவர்கள் ஆங்கிலக் கல்வி பயிலாதிருந்தால் பின் தங்கிவிடுவார்கள் எனக் கருதிப் பள்ளிக்கூடம் ஒன்றை அமைக்கமுயன்றார்கள். அதற்காகப் பல நாடகங்களை நடத்தி அதன் மூலம் நிதியைப் பெருக்கினர்கள். அவர்களின் விடாமுயற்சியின் பயனுக இரங்கூன் நகரில் ஆரம்பப்பள்ளி ஒன்றைத் துவக்கி, அதில் தமிழ்—ஆங்கில மொழிகளை இரவு நேரங்களில் கற்க வசதி செய்தார்கள்.

இளைஞர்களின் பேரார்வத்தைக் கண்ட தனவணிக குலப் பெருமக்கள் முன்வந்து 1928ல் இரங்கூனிலிருந்து 6 மைல் தொலைவிலுள்ள கம்பை நகரில் மூன்றும் வகுப்பு வரையுள்ள கல்வி நிலயத்தை "தனவைசியர் கல்விக் கழகம்" என்ற பெயரில் நிறுவினர்கள். மஹாத்மா காந்தியடிகளின் முன்னிலையில் பள்ளி ஆரம்ப விழா நடைபெற்றது. பிள்ளைகளை உடனழைத்து வந்த பெற்ருேர்கள் தம் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்ப்பதில் ஆர்வம் காட்டினர்கள்.

அப்போதைய அரசினரின் சட்ட திட்டப்படி ஓராண்டுக்கு ஓர் வகுப்பு என்றிருந்துவந்த நிலையைத் தளர்த்தி நமது பள்ளி மாணவர்கட்கு ஆறுமாதத்திற்கோர்முறை முழுத் தேர்வு வைத்து நடத்த இசைந்தனர். பள்ளி ஆரம்பித்த பத்தாண்டுகள்வரை ஆறு மாதத்திற்கு ஓர் வகுப்பு என்ற முறை அமலிலிருந்து வந்தது. இவ்வித விசேஷ சலுகையை அக்கால அரசு நம்மவர்க்கென வழங்கிவந்தது. மாதம் இருபது ரூபாய்ச் செலவில், கல்விப் பயிற்சிக் கட்டணம், புத்தகம், உணவு, மருத்துவவசதி, விளையாட்டு வசதி எல்லாம் ஒவ்வொரு மாணவரும் பெற்று வந்தனர். இன்றோ அத்தனை வசதிக்கும் மாதம் 150 செலவிட்டாலும் அந்த நல்வாய்ப்புக் கிட்டாது.

இப்பள்ளியின் வளர்ச்சியைக் கண்டு கொடைவள்ளல் அழகப்பச் செட்டியார், இராஜாஜி, இராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் முதலிய பெருமக்கள் நல்வாழ்த்துக் கூறியுள்ளார்கள்.

நூற்றுக்கணக்கான தனவைசிய இளைஞர்கள்—(இரண்டாம் உலகப் போர்க்காலத்திற்கு முன்பு) பத்தாம் வகுப்பு வரை பயின்ற மாணவர்கள் பாரதத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, மலேசியா, பர்மா-சயாம்-வியட்னும்-இலங்கை முதலிய நாடுகளில் உயர் பதவிகளிலும் மருத்துவம், விஞ்ஞானம், வியாபாரம்--பத்திரிகை—அச்சகம் முதலிய துறைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

1942ல் இந்திய தேசியப் படையின் பயிற்சி முகாமாக இப்பள்ளி பயன்பட்டது. இரண்டாம் போர் முடிவில் இரங்கூன் பல்கலைக்கழகத்தை இங்கு சில காலம் நடத்தினர்கள். காலப் போக்கில் முந்திய நிலைமாறி - உணவு விடுதி வசதியின்றி உயர்நிலைப் பள்ளியாக நடத்தப் பெற்றது.

பர்மிய அரசு 16 ஏக்கர் பரப்புள்ள இப் பள்ளிக் கட்டிடம், நிலம் முதலியவற்றைத் தமக்கு வேண்டும் எனக் கேட்டபடியால் 1952ல் நம் கல்விக் கழகத்தார் அந்த உடைமையை கி. 4,60,000/-திற்கு விலைப்படுத்தினார்கள். அதன் பின்னர் அதை பர்மிய அரசினர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியாக மாற்றியமைத்துக் கொண்டார்கள்.

கல்விக் கழகம் தன் ஆரம்பப் பணியைத் தொடர்ந்து நடத்திவர இயலாமையால் 1958 முதல் ஆண்டொன்றுக்கு 150 பிள்ளைகளுக்கு கி. 3 முதல் கி. 30/- வரை இலவச உபகாரச் சம்பளம் (Free Schoarships) வழங்கி வருகிறது. 1963 வரை கி 58,000/- வரை உதவிச் சம்பளம் கொடுக்கப்பெற்றிருக்கிறது. ஆங்கில முறைப்படி கணக்கு வைத்துக்கொள்ளுதல், டைப் அடித்தல், சுருக்கெழுத்துப் பயிற்சி, கைத்தொழில் படிப்புகளுக்கு-மொத்தச் சம்பளத்தில் பாதித் தொகையை இனமாக வழங்குகிறார்கள். இத்தகைய நற்பணிக்கு முதற் காரணமாக இருந்தவர்கள் தனவணிக இளைஞரே. அவர்தம் நல்லெண்ணம் இன்னும் நல்ல பலனளித்து வருவது கண்டு சமூகப் பெருமக்கள் மகிழ்வெய்துவது திண்ணம்.

மலாயாவில் மாதம் ஒரு திருவிழா

சித்திரை
வைகாசி
ஆனி
ஆடி
ஆவணி
புரட்டாசி
ஐப்பசி
கார்த்திகை
மார்கழி
தை
மாசி
பங்குனி

செட்டியார்கள் எந்த நாட்டிற்குச் சென்றாலும் ஒருவனைக் கூடவே துணைக்கு அழைத்துக்கொண்டு போவது வழக்கம். அவன் தான் முருகன். செட்டியார்கள் அனுஷ்டான பிரம்மச்சாரிகளாக இருப்பதால் முருகன் தெண்டாயுதபாணி கோலத்தில்தான் இருப்பான். அவன் அண்ணன் கணபதியும் சில சமயம் வருவான். அநேகமாக மாதம் ஒரு விழா மலாயாவில் நடைபெறும்.


சித்திரா பவுர்ணமி பேராவில் விசேஷம். வைகாசி விசாகம் ஈப்போவிலும் தைப்பிங்கிலும்; ஆவணி சதுர்த்தி சிரம்பானில் விசேஷம். புரட்டாசி நவராத்திரிக்கு சிங்கப்பூரில் பல இன்னிசைக் கச்சேரிகள். முறையாக நடைபெறும். ஐப்பசி சஷ்டி கோலப்பிலா. திருக்கார்த்திகை மூவாரும் கிள்ளானும். தைப்பூசம் பினாங்கில், அரசியலார் சலுகைகளுடன் எல்லா இனத்தவரும் கலந்துகொண்டு நடைபெறும். பத்துமலையில் தமிழர் நடத்துவது பெருங் கொண்டாட்டம், தனி ரயில் பஸ் போகும். மாசி மகம் மலாக்காவிலும், கிட்டாவிலும் சிறப்பாய் நடைபெறும். பங்குனி உத்தரம் கோலாலம்பூரில் முன்னர் மூன்று நாள் நடந்தது. இப்பொழுது ஒரு நாள் முருகன் வெள்ளி ரதத்தில் பவனி வருவான்.

செட்டியார்கள் முருகனுக்கு நல்ல கோயில் பல இடங்களில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். யுத்த காலத்தில் ஆண்டவன் வீட்டில் குடியிருக்க நேர்ந்தது. சிரமம் வராமல் அவர்களையும் இதர பக்தர்களையும் காப்பாற்றினான் முருகன்.

—கா. இராமநாதன்.

(நான் கண்ட மலாயா என்னும் நூலில்)

மலாசியாவில் நகரத்தார்களின் கல்விப்பணி



ஸ்ரீ தெண்டாயுதபாணி பள்ளிக்கூடம்

கோலாலம்பூர்

மலேயா வாழ் செட்டியார்கள் அங்கு ஒரு கல்லூரி அமைத்துக் கல்வித் தொண்டு செய்ய வேண்டும் என்று மலேயா சென்றிருந்தபோது வள்ளல் அழகப்பா வேண்டுகோள் விடுத்தார். அதன்படி பெருநிதி சேர்க்கப்பட்டது. திரு. க. வீ. அழ. மு. இராமனுதன் செட்டியார் அவர்கள், பலர் துணை கொண்டு அதனைத் தொடங்க ஏற்பாடு செய்தார்கள்.

1955 பிப்ரவரி 7-ஆம் நாள் பினங்கு தண்ணீர்மலை தெண்டாயுதபாணி கோயிலில் கூடிய கூட்டத்தில் 'செட்டியார் கல்விக்கழகம்' உருவாயிற்று.

இக் கழகம் 1957 மார்ச் 22-ஆம் நாள் பதிவு செய்யப்பெற்றது. சாதி மத வேறுபாடின்றி அனைவர்க்கும் பயன்படுமாறு கல்வி நிலையம் அமைப்பதே கழகத்தின் குறிக்கோள் என வரையறுக்கப்பட்டது.

க. வீ. அழ. மு. இராமனுதன் செட்டியார் அவர்களும் அ. சொ. அண்ணாமலை செட்டியார் அவர்களும் நிதிவசூல் செய்ய 1960-இல் மலாய் நாடெங்கும் உள்ள நகரத்தார்களிடம் மேற்கொண்ட பெருமுயற்சி நன்றியுடன் பாராட்டத்தக்கது. மலேயா அரசு அன்பளிப்பாக 60,000 வெள்ளியை வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

பள்ளிக்கூடத்தை, மலேயாவின் தலைநகராகிய கோலாலம்பூரிலேயே கட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது. கோலாலம்பூர் நகரத்தார்கள் பல இலட்சம் வெள்ளி மதிப்புள்ளதும் தலைநகரின் குறிப்பிடத்தக்க பகுதியில் அமைந்ததுமான நான்கு ஏக்கர்ப் பரப்புள்ள இடத்தை, பள்ளிக்கு அன்பளித்தனர். இந்தக் கொடை இன்றேல், இப்பள்ளி உருவாகியிருக்க முடியாது.

1962-இல் பள்ளி தொடங்கப்பெற்றது. Sri Thandayuthapani National Type Primary (English) School என்று பெயரிடப்பட்டது. ஏழு பிரிவுகள் கொண்ட முதல் வகுப்பு ஏற்பட்டது. அடுத்த ஆண்டில் மேலும் ஆறு பிரிவுகள் ஏற்பட்டன. சொந்தக் கட்டிடம் கட்டும்வரை, இப்பள்ளி பாட்டுரோடு பெண்கள் பள்ளிகளில் நடந்து வந்தது.

கட்டிட அமைப்புத் துறையில் வல்லவரான டி. சி. வாங் என்பவர் வரைந்த திட்டப்படி, கட்டிமுடிக்கும் வேலையை மிங் அண்டு கம்பெனியார் செம்மையாய்ச் செய்தனர். 1,60,000 வெள்ளியில் கட்டிடம் கண்ணையும் கருத்தையும் ஈர்க்குமாறு இருமாடிகளுடன் கட்டி முடிக்கப்பெற்றது.

29-8-1963-இல், பள்ளிக் கட்டிடம் மலேயாக் கூட்டரசின் கல்வியமைச்சர் துவான் ஹாஜி அப்துல் ஹமீதுகான் பின் ஹாஜி சகாவத் அலிகான் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இக்கட்டிடம், முற்றுப்பெற இருக்கும் பெரிய கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்கும். கட்டிடத்தின், அடுத்த கட்டத்திற்கு 1,20,000 வெள்ளி செலவிட முடிவு செய்துள்ளோம். இது 1964 இறுதியில் கட்டி முடிக்கப்பெறும்.

இருபாலருமாக காலை மாலை வகுப்புக்களில் 800 குழந்தைகள் முதல் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் படிக்கின்றனர். ஆசிரியர் எண்ணிக்கை (தலைமையாசிரியர் திரு. குமாரசாமி உட்பட) 17.

இப்பள்ளியின் டிரஸ்டிகளாக உயர்திரு. அ. சொ. அ. அண்ணுமலை செட்டியார், உயர்திரு. சி. நாக. நாகப்ப செட்டியார், உயர்திரு. ராம. இராமனுதன் செட்டியார் ஆகியோர் இருந்து வருகின்றனர்.

பள்ளி ஆட்சிக்குழு வருமாறு:—

தலைவர் - சி. நாக. நாகப்ப செட்டியார் அவர்கள்.

துணைத் தலைவர் - முக. பெரி. பழநியப்ப செட்டியார் அவர்கள்.

பொருளாளர் - மு. சித. மு. கார்ப்பொரேஷன்.

செயலர் - நா. பெரி. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள்.

விவேகாநந்தர் பள்ளி
கோலா லம்பூர்

நகரத்தார்கள் இக் கல்வி நிலையத்துக்கு 40,000 வெள்ளி நன்கொடை கொடுத்துள்ளனர்.

சிங்கப்பூர்

சிங்கப்பூர் நகரில் பள்ளிக்கூடம் கட்டுவதற்காக அரசாங்கத்திடம் நிலமும், ரொக்கமும் நன்கொடையாக வழங்க, சிங்கப்பூர் நகரத்தார்கள் முடிவு செய்துள்ளனர்.

சுப. நா. கரு. நாச்சியப்ப செட்டியார்,
கௌரவ காரியதரிசி, நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்கம்.
49, டாங்கு ரோடு, சிங்கப்பூர்-9.

உறுப்பினர்

சா. நா. அ. சொ. அண்ணுமலைசெட்டியார் அவர்கள்.

வெ. கண. கண்ணப்ப செட்டியார் அவர்கள்.

கா. இராமனுதன், பி. ஏ., பி. எல்., அவர்கள்.

ராம. ப. ராம. இராமனுதன் செட்டியார் அவர்கள்.

சி. உ. கா. காசிவிஸ்வனுதன் செட்டியார் அவர்கள்.

ஆவி. ப. முரு. மு. முரு. பழநியப்ப செட்டியார் அவர்கள்.

மு. கண்ணப்ப செட்டியார் அவர்கள்.

நாக. ராம. இராமசாமி செட்டியார் அவர்கள்.

சி. அ. சி. அருணுசலம் செட்டியார் அவர்கள்.

சா. ஈ. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

சா. ராம. சா. நாராயணன் செட்டியார் அவர்கள்.

தெண்டாயுதபாணி திருவருளால், மலேசியா வாழ் நகரத்தார்களின் தலை சிறந்த கல்விப்பணியாக விளங்கும் இந் நிலையம் மேன் மேலும் சிறப்புற்று ஓங்குக!

ஈப்போவில் செட்டியார் கலாசாலை

வி. ச. முத்தையா

"திரை கடலோடியும் திரவியம் தேடு" என்னும் தமிழ் மூதாட்டியின் பொன் மொழிக் கிணங்க இற்றைக்குச் சற்றேறக்குறைய நூருண்டுகளுக்கு முன்னரே கடல் கடந்து அயல் நாடுகளுக்குச் சென்று தங்களுக்கே உரித்தான கொடுக்கல் வாங்கல் தொழிலைச் சிறப்புடனும் நேர்மையுடனும் தொடர்ந்து செய்து வருகின்றவர்கள் தனவணிகர் என்று அழைக்கப்படும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களாவார்கள். பொருளீட்டும் பொருட்டு அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்ருர்களெனினும் அந்த ஒரே குறிக்கோளில் மட்டும் அவர்கள் நின்றுவிடவில்லை. தாங்கள் சென்றேறிய நாடுகளின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் தனித்த அக்கறை காட்டி வந்திருப்பதுடன் அந்தந்த நாடுகளில் வாழ்ந்துவரும் ஏனைய மக்களுடன் இரண்டறக் கலந்து ஒரே குடும்பத்தினராய் வாழ்ந்து வருகிருர்கள்.

இப்படி அவர்கள் வாழும் நாடுகளில் தூரக் கிழக்கில் அண்மையில் சுதந்திரம் பெற்று முன்னேற்றப் பாதையில் பீடு நடைபோடும் நீர்வளம் நிலவளம், கனிவளம், கலைவளமும் கணக்கறக் கொழிக்கும் மலேசிய நாடும் ஒன்று.




சா. லெ. செ. செட்டியப்ப செட்டியார், J. P.
(கலாசாலை நிறுவியவர்)

வளரும் மலேசியாவில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு அரசாங்கத்திடையும் மக்களிடையும் நல்ல பெயர் நிலவி நாட்டின் கலைவளர்ச்சிக்காகவும் கல்வி வளர்ச்சிக்காகவும் இவர்கள் தங்கள் மேலான பங்கைச் செய்திருக்கிருர்கள். இன்றும் செய்து வருகிருர்கள்.

மலேசியாவின் மூலப் பொன்னுகத் திகழும் ஈயத்தைவாரி வாரித்தரும் சுரங்கங்கள் நிறைந்த பேருக் (வெள்ளி) மாகாணத்தின் பெருமை மிக்க தலைநகரம் ஈப்போ. மலேசியாவின் அழகிய நகரம் என்ற சிறப்பைப் பெற்றிருக்கும் இந்நகரின் இடையில் நெளிந்தோடும் கிந்தா நதி நகரைப் பழைய நகரம் என்றும் புதுநகரம் என்றும் இரண்டாகப் பிரித்திருக்கின்றது. அரசாங்க அலுவலகங்களும், வியாபார நிலையங்களும், இரயில் நிலையமும், நகர மண்டபமும் பழைய நகரில்தானிருக்கின்றன. இங்குதான் தனவணிகர்களின் தொழில் நிலையங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் காரைக்குடியைச் சேர்ந்த திரு. சா. லெ. செ. செட்டியப்ப செட்டியார் என்பவர் இந்நகரில் செட்டியார் சமூகத்தில் புகழ்பெற்று விளங்கினர். அவருடைய நேர்மை, நாட்டுப் பற்று, சேவை இவைகளுக்காக அரசாங்கம் அவருக்கு J. P. (சமாதான நீதிபதி) என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியது. அன்னர் தம் பணிகளில் ஒன்ருக இந்நகரில் வதியும் தமிழ்க் குழந்தைகளுக்குத்தமிழ்க் கல்வி ஊட்டும் நாட்டத்தில் அறங்களில் மேலாம் கல்விச்சாலை ஒன்றை அமைத்து, அதற்குத் தமிழ்ப் பெரும் புலவர் பெயரில் "திருவள்ளுவர் இலவசக் கலாசாலை" என்று பெயர் சூட்டி அவ்வறச் சாலையைத் தன் சொந்த முயற்சியாலேயே பத்து ஆண்டுகள் சிறந்த முறையில் நடத்திவந்தார்.

1934-ஆம் ஆண்டில் ஈப்போ வாழ் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இப்பள்ளியைத் தங்கள் தெண்டாயுதபாணி கோவிலுடன்



ஈப்போ செட்டியார் கலாசாலைக் கட்டிடத்தில் ஆசிரியர்கள் மாணவர்கள் நிர்வாகிகள்
CHETTIARS' N. T. P. SCHOOL (TAMIL) 120, LAHAT ROAD, IPOH

இணைத்து, ரிங்கி 50,000/—மதிப்புள்ள லகாட் ரோடு 120-ஆம் எண் கட்டடத்தைப் பள்ளிக் கூடத்திற்காக வழங்கிப் பள்ளியின் பெயரைச் 'செட்டியார் கலாசாலை' என மாற்றி நடத்தி வந்தார்கள். பின்னர் அரசாங்கத்தின் நிதி உதவியைக் கொண்டு அரசாங்கச் சட்ட திட்டங்களின்படி மிக நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள்.

முதல் வகுப்பிலிருந்து ஆறும் வகுப்பு வரை போதிக்கப்பட்டு வரும் இப்பள்ளியில் இப்போது 140 மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள். ஒரு தலைமை ஆசிரியர் உட்பட நான்கு ஆசிரியர்களும் மூன்று ஆசிரியைகளும் பணியாற்றி வருகிறார்கள். தமிழ், ஆங்கிலம், தேசீய மொழி மலாய், தோட்ட வேலை, தையல் வேலை முதலியவை இங்கு கற்றுக்கொடுக்கப் படுகின்றன.

திரு. வி. ச. முத்தையா செட்டியாரைத் தலைவராகக் கொண்டுள்ள ஒரு நிர்வாகக் குழு பள்ளியின் நிர்வாகத்தைக் கவனித்து வருவதுடன் அதன் முன்னேற்றத்திற்கும் உயர்விற்கும் தொண்டாற்றி வருகிறது. இதற்கு முன் இக்குழுவில் தலைவர்களாக விருந்து தங்கள் நற்பணியை நல்கிய திருவாளர்கள் கி. சுப. அண்ணாமலை செட்டியார், பெ. சு. அருணாசலம் செட்டியார் இருவருக்கும் இப்பள்ளி நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

மலேசியாவில் செட்டியார்கள் பெயரில் உள்ளதும் அவர்களின் முதற் பள்ளியுமான இக் கலைக்கோவில் நாளுக்கு நாள் வளர்ந்து நிலையான பெயரையும் புகழையும் பெற்று விளங்க எல்லாம் வல்ல திருமுருகன் அருள் புரிவானாக.

சீர்வரிசை

ஆறு. அழகப்பன், B. A. (Honours)
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

குடிப் பெருமை

தெய்வம், தமிழ், கல்வி இம்மூன்றும் உலகி லுள்ளளவும் வரலாற்றில் நகரத்தார்கள் சிறப் பிடம் பெறுவார்கள். தமிழ்கூறு நல்லுலகத்தை ஆண்ட மூவேந்தர்களுக்குப் பிறகு சமயத்தை யும் மொழியையும் காக்கும் காவலர்களாக மட்டும் அவர்கள் விளங்காமல் பெரும்புரவலர் களாகவும் விளங்கி வருகிருர்கள். அவர்களின் தெய்வ சிந்தனை நிரம்பப்பெற்ற உள்ளமும், அவ்வுள்ளத்திலிருந்து முகிழும் உயர்ந்த எண்ணங்களும் தமிழ் நாட்டிற்குப் பெரும் பயனை விளைவித்திருக்கின்றன.

இந்நாகரிகக் குடியினர் அரசியல் என்ற பருவத்தால் ஏற்பட்ட பொருளாதாரப் புயலி ஞல் பெரிதும் பாதிக்கப்பட்டதுண்டு. ஆனல் பழம் பிறப்பிலும் இப்பிறவியிலும் அவர்கள் செய்த நன்மைகளினல் அவர்கள் வாழுமிடங் களும் அவர்களும் பெரிதும்' சேதத்திற்கு ஆளாகாமல் தப்பினர்கள். இருப்பினும் செட்டி நாட்டிற்குப் பெருமையும்,பசுமையற்ற வறண்ட அந்நிலத்திற்குப் பசுமையாகவும் விளங்கிய 'கொடிகள்' பாதிக்கப்பட்டதுண்டு. பொருளா தார அரக்கன் நகரத்தார் பெண்களின் வாழ்க்கை வளத்திற்குப் பெரிதும் தடையாகி விட்டான்.வணிக மரபில் தோன்றிய கண்ணகி, மாதவியால் வாழாமல் போனதுபோல் 'பொரு ளாதாரம், என்ற மாதவியால் கண்ணகியின் பெண் சந்ததியினர் வாழ்விற்கேற்ற காவல னைப் பெருது வருந்த வேண்டிய நிலை இன்று ஏற்பட்டு விட்டது. அவ் வருத்தத்தினை நீக்கவும் வருந்தும் கண்களில் இருந்து வழியும் கண்ணீ ரைத் துடைக்கவும் நகரத்தார்கள் அனைவரும் நினைத்தல் வேண்டும் என்பதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

நகரத்தார் திருமணம்

நகரத்தார்கள் திருமண விழாவினை மிகப் பெரிதாகக் கருதியவர்கள். அவர்கள் கொண் டாடும் பல விழாக்களிலும் சடங்குகளிலும் திருமண விழாவே மிகப் பெரியதாகும். பத்து நாட்கள் திருமணம் நடைபெற்ற அக்காலமா யினும், மூன்று நாட்கள் நடைபெறும் இக்கால மாயினும், அவர்கள் திருமணத்திற்குப் பெரும் முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். சிலரைப்போல திருமணத்தைச் சாதாரணமா கவும், பொழுது போக்காகவும், அலுவலக நிகழ்ச்சியாகவும் அவர்கள் கருதிவிடுவதில்லை.

பத்துநாள் திருமணம்

மாப்பிள்ளை அழைப்பிற்குமுன் பெண் வீட் டார் முதல் மூன்று நாட்கள் 'கூடி ஆக்கி உண் ணுதல்' 'சீர்வரிசை பரப்புதல்' மனை போடுத லும், நான்காவது நாளில், மாப்பிள்ளை அழைத் தலும் ஐந்தாவது நாள் திருப்பூட்டுதலும், ஆருவது நாள் மாப்பிள்ளை குதிரை ஏறி மண வறை இருத்தலும், ஏழாவது நாள் பணமெழு திச் சீராட்டுதலும், எட்டாவது நாள் மாப் பிள்ளையும் பெண்ணும் மஞ்சள் நீராடலும், ஒன்பதாவது நாள் பெண் அழைத்துச் செல்லு தலும், பத்தாவது நாள் மாப்பிள்ளை வீட்டில் பெண் அழைத்த விருந்து நடத்தலும் ஆகப் பத்து நாட்கள் நடைபெற்று வந்தன. வருவாய் நல்ல வளமாக இருந்த காலத்தில் இவை நடை பெற்று வந்தன. இன்று நடைபெறும் திரு மணங்கள் பத்து நாட்கள் நடைபெருவிட்டா லும், பத்து நாட்களில் நடைபெறும் திருமணச் சடங்குகளைக் கைவிட்டுவிடவில்லை.

சீர் வரிசை

நகரத்தார் செய்யும் சீர் வரிசையைப் பற்றி அதிகமாக விளக்க வேண்டியதில்லை. வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் தம் மகளுக்குச் செய்த சீர் வரிசையைப்பற்றி இன் றும் பலர் பேசக் கேட்டிருக்கலாம். கல்வியிற் பெரியவன் கம்பன் தன் கவிதைகளின் மூலம் கண்ட கற்பனை போலவும் வருணனை போலவும் அமைந்த அவ்வளவு பெரிய சீர் வரிசையை


இங்கு சொல்லமுடியாவிட்டாலும் சில ஆண்டு களுக்கு முன் நகரத்தார் இனத்தில் நடை பெற்ற ஒரு நடுத்தரக் குடும்பத்தில் செய்த சீர் வரிசைகளின் முழுவிவரம் மாதிரிக்காக இரண்டு மட்டும் பின்னல் தரப்படுகிறது.

வகைகள்

பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுக்கும் சீர்தனம் மாமியார் சாமான் பிற முறைதலைகள் ஆகியவற்றிற்குக் கொடுக்கும் பணம் தவிர பெண்ணுக்கு வைரம் தங்கம் வெள்ளி இவற்றல் செய்து கொடுக்கும் நகை களும், கனத்தால் கழுத்தை நோவச் செய்யும் தங்கத்தால் செய்த தாலியும் (கழுத்துரு) தவிர வெள்ளிச் சாமான்கள், எவர்சில்வர் சாமான்கள், வெள்ளைப் பித்தளைச் சாமான்கள், பித்தளைச் சாமான்கள், மங்குச் சாமான்கள், செர்மன் சாமான்கள் மரச் சாமான்கள், பிளாஸ் டிக் சாமான்கள், இரும்புச் சாமான்கள், கண்ணுடி ஜாடி வகைகள், தோல் பெட்டி இரும்புப் பெட்டி வகைகள் மெத்தை ஜமுக் காளத் துணி வகைகள், மாப்பிள்ளைச் சாமான் கள் முதலியவைகள் பெண்ணுக்கு அளிக்கும் சீர்வரிசைகளாகக் கொடுக்கப்படும். அவற்றைப் பல நகரத்தார் 'பெண்டுகள்' இரவு பகலாக முனைந்து அகலமும் விரிவும் கூடிய மாட மாளிகையில் பரப்பி வைப்பார்கள். இவ் வகைச் சாமான்கள் முழுவதையும் எழுதின் சீர்வரிசைச் சாமான்கள் வீட்டை அடைத்துக் கொள்வதுபோல், இம் மலரின் நிறைந்த பக்கங் களை அவை அடைத்துக்கொள்ளும் ஆதலால் சீர்வரிசையில் வைக்கப்பட்ட வெள்ளிச் சாமான்கள் பித்தளைச் சாமான்க்ள் ஆகிய இரண்டின் விபரங்கள் மட்டும் இங்கே கொடுக் கப்பட்டிருக்கின்றன. சாமான்கள் நகரத்தார் பெண்கள் அழைக்கின்ற பெயராலேயே தரப் படுகின்றன. பிற்காலத்தில் சமூகவியலாருக் கும் வரலாற்று ஆசிரியர்களுக்கும் (Sociologist & Historian) பயன்படுமாதலால் அவை இரண் டின் விபரமும் அப்படியே கொடுக்கப்பட்டிருக் கின்றன.

வெள்ளிச் சாமான்கள் வரிசை

பிள்ளையார் ஒன்று, நிலவிளக்கு ஒன்று, சிலேட்டு விளக்கு ஒன்று (உருப்படி மூன்று) விளக்குச் சட்டி மூடியுடன் ஒன்று, சங்கு இரண்டு பக்கம் பூண் பிடித்தது ஒன்று, பொங்கி மரவை ஒன்று, விபூதித் தாம்பாளம்



ஒன்று, மாடவிளக்கு இரண்டு, சட்டி ஒன்று செம்பு ஒன்று, காப்பி ஆத்துகிற சட்டி ஒன்று, ஐந்து அடுக்குகளைக் கொண்ட வெள்ளி அடுக்கு ஒன்று, ஐந்து சட்டிகளைக்கொண்ட பிள்ளையார் நோன்படுக்கு ஒன்று, கரகச் சட்டி ஒன்று, கரகச் செம்பு ஒன்று, கிண்ணி ஒன்று, நெய்க்கிண்ணம் மூடி உட்பட ஒன்று, நெய் வாளி ஒன்று, கரண்டி ஒன்று, ஓவல் பிளேட் ஒன்று, கிண்ணி ஒன்று, கொப்பி ஒன்று, சுருள் ஒன்று, கெண்டிச் செம்பு ஒன்று, உலக்கைப் பூண் இரண்டு, ஏடு ஒன்று, எழுத்தாணி ஒன்று 'கொலம் வாளம்பிள்ளை' (குலம் வாழும் பிள்ளை) ஒன்று, சந்தனப் பேலா சிறியது ஒன்று, வெள்ளி லோட்டா இரண்டு, ஐஸ் லோட்டா ஒன்று, படி ஒன்று.

பித்தளைச் சாமான்கள் வரிசை

நிலவிளக்கு ஒன்று, ஒத்த மூக்கு விளக்கு ஒன்று, மாடவிளக்கு ஒன்று, மலையாளம் விளக்கு ஒன்று, நெல் அவிக்கிற அண்டா சிறியதும் பெரியதும் மூடியுடன் இரண்டு, வேம்பாசெட் ஒன்று, காசாலை பீலிவைத்த அண்டா ஒன்று, காசாலை அண்டா வளையம் போட்டது மூடியுடன் ஒன்று, ரசம் சாம்பார் அண்டா இரண்டு, ஐந்து சட்டிகளைக்கொண்ட போகணி அடுக்கு ஒன்று, ஐந்து சட்டிகளைக் கொண்ட சோற்றுச் சட்டி சீவு அடுக்கு ஒன்று, ஐந்து சட்டிகளைக் கொண்ட மைசூர் சட்டி அடுக்கு ஒன்று, ஐந்து சட்டிகளைக் கொண்ட சோற்றுச் சட்டியடுக்கு ஒன்று, இருபது சட்டிகளைக்கொண்ட அவிச்சு ஊத்துகிற சட்டியடுக்கு நான்கு, இருபத்தைந்து சட்டிகளைக் கொண்ட பந்தியடுக்கு ஐந்து, பத்துச் சட்டிகளைக் கொண்ட கடகால்வாளி அடுக்கு இரண்டு, கோழி அவிக்கின்றசட்டி பெரிது ஒன்று, மாக் குழைக்கிற சட்டியொன்று, மைசூர் சட்டி சிறியதும் பெயரிதும் ஐந்து, காசாணிச்சட்டி சிறியதும் பெரியதும் இரண்டு, வெண்ணெய்ச் சட்டி இரண்டு, விளக்கிடுகிற சட்டி மூடியுடன் ஒன்று, பத்தொன்பது குழிகள் கொண்ட இட்டலிச் சட்டி ஒன்று (உருப்படி மூன்று), பதினன்கு குழிகள் கொண்ட இட்டலிச்சட்டி ஒன்று (உருப்படி மூன்று), ஏழு குழிகள் கொண்ட இட்டலிச் சட்டி ஒன்று (உருப்படி மூன்று),



நான்கு குழிகள் கொண்ட இட்டலிச்சட்டி ஒன்று (உருப்படி மூன்று), டிக்காசப் போகணி சிறியதும் பெரியதும் மூன்று, டிபன் காரியர் சிறியதும் பெரியதும் இரண்டு, அடுக்குச்சட்டி ஒன்று (உருப்படி நான்கு) ஆணிக்கால் சட்டி சிறியதும் பெரியதும் இரண்டு, சொருகுசட்டி சிறியதும் பெரியதும் ஒன்பது, சொருகு கூசா சிறியதும் பெரியதும் நான்கு, பலகாரச்சட்டி சிறியதும் பெரியதும் மூடியுடன் மூன்று, தயிர்ச் சட்டி மூடியுடன் ஒன்று, பால் சட்டி மூடியுடன் ஒன்று, மோர்ச்செம்பு மூடியுடன் ஒன்று, தெக் களூர் தவலை ஐந்து, தெக்களூர்த் தவலை மூடி யுடன் ஒன்று, காசாலைத் தவலை மூன்று, குடம் ஐந்து, பால் தவலை இரண்டு எண்ணெய் நெய்ச் செம்பு இரண்டு, பொங்கலிடுகிற தவலை இரண்டு, எச்சில் பணிக்கம் ஒன்று, கடகால் வாளி சிறியதும் பெரியதும் மூன்று, தெக்களூர் செம்பு ஐந்து, பொங்கலிடுகிற செம்பு ஐந்து, உருண்டைச் செம்பு சிறியதும் பெரியதும் மூன்று, காளாசரிக் கூசா (திருக்காளாஸ்திரி) ஒன்று, திருச்சூர் கூசா ஒன்று, பால் செம்பு முறி மூடியுடன் இரண்டு, பூக்குடலை ஒன்று, கடைத்தெருத்தட்டு ஐந்து, பழைய தட்டு சிறிய தும் பெரியதும் மூன்று, மோல்மேன் தட்டு இரண்டு, வேணித்தட்டு சிறியதும் பெரியதும் நான்கு, மைசூர் தட்டு சிறியதும் பெரியதும் மூன்று, காப்பி ஆத்துகிற தட்டு சிறியதும் பெரியதும் மூன்று, தண்ணீர் பானை மூடி இரண்டு, விபூதி பூசுகிற கிண்ணம் இரண்டு, டபரா இரண்டு, ரெட்டைப் போகணி ஒன்று, மோர்ப் போகணி ஒன்று, பாக் குரல் சிறியதும் பெரியதும் இரண்டு, தீபக்கால் ஒன்று, திராசுத்தட்டு ஜோடி ஒன்று, படிக்கல் செட் ஒன்று (உருப்படி ஏழு) படி செட் ஒன்று (உருப்படி நான்கு) சம்படம் சிறிய தும் பெரியதும் ஒன்பது, சுருள் ஒன்று, பொட்டுக்கிண்ணம் இரண்டு, சூடத் தட்டு ஒன்று, லோட்டா செட் ஒன்று (உருப்படி நான்கு) லோட்டா பத்து, ஐஸ் லோட்டா சிறியதும் பெரியதும் இரண்டு, முக்காலி ஒன்று, நெல் தோண்டுகிற கரண்டி ஒன்று, முறச் சோற்றுக் கரண்டி ஐந்து, பால் காய்ச்சுகிற கரண்டி சிறியதும் பெரியதும் நான்கு, தோசைக் கரண்டி ஒன்று, குன்னக்குடிக் கரண்டி பெரிசு இரண்டு, குன்னக்குடிக் கரண்டி சிறியது பதினான்கு, இட்டுவட்டி இரண்டு, கேத்தல் மூடி ஒன்று, குளிக்கிற காசாலைச்சட்டி ஒன்று.

இவ்வாறு அமைந்த வெள்ளி, பித்தளைச் சாமான்களின் வகைகளைப்போல மேலே குறிப்பிட்ட பிறசாமான்களின் வகைகளும் அவற்றிற்கேற்ப அமைந்திருக்கும் சீர்வரிசை களை நேரில் பார்க்கின்றபொழுது அல்லது கேட்கின்றபொழுது நகரத்தார் சமூகமற்றவ ருக்கு வெள்ளிக்கடை பித்தளைக் கடைக்குச் சென்றுவிட்ட உணர்வு தோன்றும். இச் சீர் வரிசைகள் பரப்பப்பட்டுள்ள இடம் சிலப்பதிகா ரத்தில் ஊர்காண்காதையில் வருணிக்கப்படும் அங்காடித் தெருபோல் அமைந்திருக்கும். காப்பியத் தந்தை இளங்கோவடிகள் அல்லது கவிச்சக்கரவர்த்தி கம்பன் அக்காட்சியைக் காண்பரேல் பலகாதைகள், படலங்கள் எழுதிப் பேருவகை கொள்வார்கள்.

செய்த காலம்

வளமான காலத்தில் இச் சீர்வரிசை வகை வகையாகச் செய்து பெருமை தேடிய நகரத் தார் சமுதாயம் இன்றைய நிலையில் 'இக் கடை' வைக்கத் திகைத்துப் பெருமூச்சு விடுகின்றது. வேகமாக வளரும் உலகத்தின் போக்கிற்கும் காலத்திற்கும் தகத் தங்களுடைய சில பழக்கங் களை அவர்கள் மாற்றிக்கொள்ளத் தயங்குவ தால் ''மணம்'' அவர்களுக்கு மலைப்பாகத் தோன்றுகிறது. ஒரு காலத்தில் இப்படிச் செய்த சீர்வரிசைகளினால் பல குடும்பங்கள் நசித்துப் போன காலத்தில் அச் சீர் வரிசைகள் நல்லமுத மாக இருந்தது உண்மை தான். ஆனால் செய்ய முடியாத காலத்தில் ''கௌரவத்திற்காக'' வாழ்வைப் பாழாக்கிக் கொண்டிருப்பது விவேக மாகாது.

வெள்ளியுலகம்

இரும்பால் படி செய்து அளக்கும் உலகில் நகரத்தார்கள் வெள்ளியால் படி செய்து அளப்ப வர்கள். கொல்லனை அழைத்து உலக்கைக்கு இரும்புப் பூண் போடும் உலகில் அவர்கள் ஆசாரியை அழைத்து வெள்ளிப் பூண் போடு பவர்கள். ஓலைப் பெட்டியில் பொருள் எடுத்துச் செல்லும் சாதாரணமக்கள் உலகில் அவர்கள் வெள்ளியோலையாற் செய்த பெட்டியில் பொருள் எடுத்துச் செல்பவர்கள். களிமண்ணாலும் கல் லாலும் கண்ட கடவுள்களை வெள்ளியால் கண்டவர்கள். ஓலையாலும் இரும்பாலும் ஏட்டை யும் எழுத்தாணியையும் கண்ட உலகில் வெள்ளி யால் ஓலையும் எழுத்தாணியும் செய்தவர்கள்.

இது போல ஈட்டியும் வேலும் செய்து பாய்ச்சும் உலகில் வெள்ளியால் 'கிலிக்கி'யும் தங்கத்தால் ஈட்டியும் செய்து 'மகர் நோன்பில்' தங்கள்பிள்ளைகள் கையில் கொடுத்து வாழை மரத்தில் பாய்ச்சி அச்சாற்றை குழந்தைகள் நெற்றியில் இடுபவர்கள். வெள்ளி வட்டிலில் உணவு உண்பவர்கள். பித்தளையால் செய்து தாளம் போடும் உலகில் வெள்ளியால் செய்து 'தாளம்' போடுவார்கள், வெண் சங்கிற்கு இரு புறமும் 'வெள்ளிப்பூண்' போட்டுச் சங்கு ஊதியவர்கள்.

விடமுடியுமா?

இப்படிப்பட்ட மேம்பட்டகுடி எப்படி விரைவில் தம் பழக்கங்களை விட்டுவிட முயலும்? விரைவில் செட்டியார்கள் சீர்வரிசையை விட்டு விடுவார்களா?—இப்படிச் சிலர் நினைக்கலாம். அப்படி நினைப்பவர்கள்-ஏன் விடமுடியாது-? என்ற இவ்வினாவையும் அவர்கள் தங்கள் அடி மனத்தில் எழுப்பிப் பார்த்து விடை காண வேண்டும்.

மறைந்தவைகள்

நகரத்தார்கள் சமூகத்தில் பெண்களுக்குச் செய்த திருவாதிரை மறைந்தது. தலைப்பிள்ளைக்கும் பிறபிள்ளைகளுக்கும் செய்த புதுமையும், கார்த்திகைப் புதுமையும் பழமையாயின. பல நாட்கள் நடைபெற்ற திருமணம் மூன்று நாளாகி அதுவும் ஒரேவீட்டில் ஒரேநாளாகி விட்டது. திருமணம் செய்த பிறகும், பிள்ளை பிறந்த பிறகும் 'வேறு' வைத்த பிறகும், மார்கழி மாதத்தில் மூன்று நாட்கள் எடுக்கும், 'வேவு' நினைத்துப் பார்க்கும் நிலை எய்தி விட்டது. ''முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை'' என்ற தொல்காப்பிய நூற்பாவுக்கு ஏற்பவும், ''தனம் தேடிப் போகும் இடத்திற்குத் தையலரை அழைத்துப் போகக் கூடாது'' என்ற முதுமொழிக்கு ஏற்பவும், பொருள் தேடச் செல்லும்பொழுது பெண்களை அழைத்துச் செல்லக் கூடாது என்ற மரபை மாற்றியமைத்து மனைவியரையும் உடன் அழைத்துச் செல்லும் பழக்கம் தோன்றிவிட்டது. வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் எந்த மூலையில் வணிகம் செய்து கொண்



டிருந்தாலும் சொந்த ஊருக்கு வந்து பிள்ளை களுக்குத் திருமணம் செய்து வந்தவர்கள் இப் பொழுது வணிகம் செய்து வாழுமிடங்களிலும் திருமணம் நடத்துகிறார்கள். இவை நகரத்தார் தம் பழக்கங்களை கைவிட்டிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு.

அரசாங்கச் சட்டம்

திருமணத்தின்பொழுது அளவுகடந்து சீர் வரிசை அளித்தல் கூடாது என்று மத்திய அரசியலார் இயற்றிய ''வரதட்சணைத் தடை மசோதா'' தங்களுக்காகவே இயற்றப்பட்ட தாகக் கொண்டு நகரத்தார் அதனைப் பின்பற்ற வேண்டும். சீர்வரிசையின் கொடுமை குறைந் தால் ஏழைநகரத்தார் குடும்பங்களில் பெண்கள் மணம் நுகர வழி பிறக்கும்.

நகரத்தார் மகளிர்

அரசியலார் பெண்களுக்குப் பள்ளி இறுதி வரை இலவசப் படிப்பு என்ற சலுகையை நம் இனத்துப் பெண்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நகரத்தார் இளைஞர்களும் பெண்களும் 'கல்வி' ஞாயிற்றொளியைப் பெறு கின்றபொழுது 'சீர்வரிசை' என்ற இருள் மறைந்தாலும் மறையலாம்!

தாயுமானவர்

பயிர்வாடிடாமல் தண்ணீரளித்து உயிர் வாழ உணவு கொடுத்தவன் தந்தையாகின் றான். அழும் குழந்தையின் கண்ணீரைத் துடைத்துப் பாலூட்டிப் பசியைப் போக்கிய வள் தாயாகின்றாள். வனிதையர் வாழ்வு கருகி டாமல் பாதுகாத்து அவர் தம் விழிகளிலிருந்து வழியும் கண்ணீரைத் துடைத்து வாழ்வு கொடுத்தவர் ''தாயுமானவர்'' ஆகின்றார்.

ஏற்றந் தரும் நிதியம்

நம் சமூகம் நலிந்துவிட்டது என்று கூறுவது தோல்வியை ஒப்புக்கொண்டது ஆகும். நான் அவ்வாறு கருதவில்லை. நலிவும் வளமும் வலை ஏற்ற இறக்கம்போல் மாறி மாறி வரக்கூடியது. இது இயற்கையில் ஏற்படுகிற மாற்றம்; நிலைத்து நிற்காதது. ஊக்கந்தான் நிலைத்து நிற்கக்கூடியது. ஆகவே ஊக்கத்துடன் இன்றையச் சூழ்நிலையைச் சமாளித்துக் கொண்டால் நம்மை எதிர்நோக்கி வரவேற்கப்போவது ஏற்றந்தான்; வெற்றிதான்.

திரு. உ. ராம. மெ. சுப. சேவு. அண.
அண்ணாமலை செட்டியார்.

★

தருமந் தரும் நிதியம்

நமது மரபினர் மதுரை, திருச்சி, சிதம்பரம், திருவானைக்காவல், ஸ்ரீரங்கம், மாயவரம், காஞ்சீபுரம், சென்னை போன்ற இடங்களில் சத்திரம், பசுமடம், விடுதி பாடசாலை போன்ற நிறுவனங்கள் நிறுவி உள்ளார்கள். அவைகளில் நமது மாணவர்களுக்கு தங்குவதற்கு இடமும், இலவச உணவும் கொடுக்க முன் வந்தார் களானால் பெரிய உதவியாகும். ஷ நிறுவனங்களின் தரும நிதியிலிருந்து உதவிச் சம்பளமும் கொடுக்க முன் வந்தால் வேறு நிதி திரட்ட வேண்டிய அவசியமிராது. இதைவிட அவர்களுக்கும் வேறு சிறந்த தருமமும் வேண்டுவதில்லை.

திருச்சிராப்பள்ளி செட்டியார்கள் கல்வி வளர்ச்சிக் கழகம்
ஏழாவது ஆண்டு அறிக்கை

பண்டிதமணி அவர்கள் நினைவுக் குழு

மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் நம் செந்தமிழ் நாட்டில் பெரும் புலவராக விளங்கித் தமிழர் சமுதாயத்திற்குப் பெருமையும் சிறப்பும் தந்தவர்கள்; பேராசிரியராக இருந்து மாணவர் பலர் தமிழில் தேர்ச்சி பெற்றுப் பயன் பெற முன்னின்றவர்கள்; பல சங்கங்களும் கல்லூரிகளும் நிறுவி அவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள்; அறிவுத்துறையில் பெருவிழாக்கள் எடுத்து இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தித் தமிழ் நாடு பயனடையச் செய்தவர்கள்; வட மொழியிற் சிறந்த நூல்களான கௌடில்யம், சுக்கிர நீதி முதலிய அர்த்த சாத்திரங்களையும், மிருச்சகடிகம் முதலிய நாடக நூல்களையும் தமிழில் தந்திருப்பதோடு, நம் அருமைத் தமிழ் மொழியில் உரைநடை நூல்களும், திருவாசகத்திற்குக் 'கதிர்மணிவிளக்கம்' என்ற பேருரையையும் ஆக்கியிருப்பவர்கள். இப் பெருமகனாரிடம் அன்பு கொண்டவர்களடங்கிய நினைவுக் குழு ஒன்று நிறுவப் பெற்றிருக்கிறது.

(தலைவர், துணைத் தலைவர், செயலாளர்கள் தவிர) செயற் குழு உறுப்பினர்கள் :—

உயர்திரு. அ. சொ. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், காரைக்குடி.

பேராசிரியர். லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

டாக்டர். வ. சுப. மாணிக்கம் அவர்கள், முதல்வர், அழகப்பா கல்லூரி.

உயர்திரு. வ. செ. சிவலிங்கம் செட்டியார் அவர்கள்,
தலைவர், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிப்பு.

உயர்திரு. வடு. லெ. சுப்பையா செட்டியார் அவர்கள்,
தலைவர், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிப்பு.

உயர்திரு. பழ. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள்,
தலைவர், சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி.

உயர்திரு. பாலகவி. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை.

பேராசிரியர். மு. அருணாசலம் பிள்ளை அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

உயர்திரு. ம. சி. முத்துராமக் கோனார் அவர்கள்,
தலைவர், ஊராட்சி மன்றம், மகிபாலன்பட்டி.

உயர்திரு. சி. ராம. நாகப்பன் அவர்கள், மகிபாலன்பட்டி.

உயர்திரு. கதி. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

பண்டிதமணி அவர்களின் பிறப்பிடமாகிய மகிபாலன்பட்டியில் ஒரு கல்வி நிலையம் நிறுவவும், அவர்கள் ஆக்கித் தந்துள்ள நூல்களை வெளியிட்டு அவர்கள் புகழ் பரப்பவும், அவர்களது உருவச் சின்னங்கள், உருவப் படங்கள் ஆகியவற்றைத் தகுதி வாய்ந்த இடங்களில் வைக்கவும் இக் குழுவினர் கருதியுள்ளனர்.


நம்மிடையே வாழ்ந்த பெரும் புலவர் அவர்களுடைய நினைவாக மேற்கொள்ளப்படவிருக்கும் இச் செயல்களுக்குப் பெரும் பொருள் வேண்டியதிருக்கிறது. தமிழ் மொழியில் பற்றுள்ள அனைவரும் தமிழ் நாட்டில் தலை சிறந்து விளங்கிய பண்டிதமணி அவர்களிடம் அன்பு கொண்ட எல்லோரும் எங்கள் முயற்சிக்கு ஆதரவுதர இக் குழு வேண்டுகிறது. மகிபாலன்பட்டி. சி. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் பெயருக்குப் பணம் அனுப்பி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

கருமுத்து. தியாகராசன்
தலைவர்.

சேவு. அ. அண்ணாமலைச் செட்டியார்.
துணைத் தலைவர்.

சி. ராம. இராமசாமிச் செட்டியார்.
'சோமலெ'.
செயலாளர்கள்.

'கங்கை இந்தியாவின் சிறப்பு மிக்க ஆறு. வான் பொய்ப்பினும் தான் பொய்யாத இப்பேராறு நமது தொன்றுதொட்ட பண்பாட்டின் நிலைக்களனாகும்' என்று தம் உயிலில் ஜவஹர்லால் நேரு எழுதியுள்ளார்.



சமயச் சடங்குகளில் நம்பிக்கையில்லாத நேரு பெருமகனாரே போற்றும் இப்புனித ஆற்றின் கரையில் பல இடங்களில் நகரத்தார்கள் அன்ன சத்திரங்கள் அமைத்துள்ளனர். அவற்றுள் தலையாயது காசி நகரச் சத்திரம், இதனோடு இணைந்த நிறுவனங்கள் பல. இவை அனைத்தின் விவரமும் வரலாறும் அடங்கியது,

காசி நகரச் சத்திர

நூற்றாண்டு மலர்

காசி முதலிய தலங்கள் பற்றியும் வெளிநாடுகளில் நகரத்தார்கள் செய்துள்ள சமயப் பணிகள் பற்றியும் அரிய கட்டுரைகளும் கவிதைகளும் நகரத்தார்கள் பற்றிய பிற குறிப்புக்களும் ஆதாரமான செய்திகளும் இம் மலரில் உள்ளன. 312 பக்கங்களும் பல வண்ணப் படங்களும் கொண்ட இச் சீரிய வெளியீட்டை நகரத்தார் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பேணிப் போற்ற வேண்டும்.


பதிப்பாசிரியர் : 'சோமலெ'

கிடைக்குமிடம் :

இரங்கூன் நகர விடுதி,

பவளக்காரத் தெரு, சென்னை - 1.

சென்னையில் விலை ரூ. 1-50



நகரத்தார்களின் கல்விப் பணி

நகரத்தார்களின் கல்விப் பணி நாடறிந்தது என்று பலர் கூறுவர் எழுதுவர் எண்ணுவர். எனினும், நாம் அனைவரும், விவரமாக இப்பணியைத் தெரிந்து கொண்டிருக்கிறோம் என்று உறுதியாய்ச் சொல்ல இயலாது. ஆகையால், இயன்றவரை விவரங்கள் சேகரித்து, இப்பகுதியை வெளியிட்டிருக்கிறோம்.


நகரத்தார்கள் கோயில் திருப்பணிகள் செய்ததோடு சேர்த்து, தேவாரப் பாடசாலைகள் முதலியவற்றை அமைத்தனர். எனவே அவைகளின் பட்டியலும் இங்கு தரப்படுகிறது. பின்னர், காலப்போக்கில் இப்பள்ளிகளில் பல தொடக்கப்பள்ளியாயும் உயர்நிலைப்பள்ளியாயும் ஆயின.

பாலர் பள்ளிகள், முதல் பல்கலைக் கழகங்கள் வரை நகரத்தார் நிறுவியுள்ள கல்வி நிலையங்களைப்பற்றிய விவரங்களை வகுத்தும் தொகுத்தும் வகைப்படுத்தியும் கொடுத்துள்ளோம். இவற்றை நிறுவிய வள்ளல்களுக்கு இதன் வாயிலாக நகரத்தார் மாணவர் சங்கம் அஞ்சலி செலுத்துகிறது.


பக்திக்குத்தானு பணத்தைச்
செலவழித்தோம்

பகுத்தறிவுக் கோயில்களாம்
பள்ளிகளும் நாம் சமைத்தோம்

— கவிஞர் கண்ணதாசன்



கலாசாலைகள்



சிவ ஆகம சித்தாந்த பரிபாலன சங்கம் தேவகோட்டை

சத்திரம் சோம., தேவகோட்டைக் குறு நிலமன்னர் அரு. முதலிய பெருமக்களால் இச் சங்கம் 1914-இல் தொடங்கப்பெற்றது. நகரச் சிவன் கோயிலின் சார்பில், கோயிலருகே இச் சங்கத்திற்கென ஒரு கட்டிடம் கட்டப்பெற்றது. ஆகமச் சுவடிகள் இங்கு பேணி வைக்கப் பெற்றுள்ளன. சில சுவடிகள் வெளியிடப் பெற்றுள்ளன.

செந்தில்நாத ஐயர் முதலிய ஆசியர்களை வைத்து ஆகம சாத்திரப் பாடங்கள் பயிற்று விக்கப்பெற்றன. 1939 அளவில் இச்சங்கம் செயல்படாது போயிற்று.

1962 இறுதியில் சங்கம் மீண்டும் உயிர் பெற்று, ஞாயிறு தோறும் மாலையில் பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் சாத்திரப்பாடம் நடத்தி வருகிறார்கள். சங்க வெளியீடாகிய, சைவ சித்தாந்தப் பரிபாஷை பயிற்றுவிக்கப்படுகிறது.

தேவாரப் பாடசாலை பாகனேரி

பெரி. அழ. மு. மு. குடும்பத்தார் ரூபாய் 15,000 செலவில் கட்டிடம் கட்டி, இப் பாட சாலையை நிறுவினர். தகுதி வாய்ந்த தேசிகர் பலர் இருந்து இன்றும் பாராயணங்கள் செய் கின்றனர்.

மாணிக்கவாசக வித்தியாசாலை சோக்கனேந்தல்

இது 1918 அளவில் நகரப் பொதுவில் தொடங்கப்பெற்று 20 ஆண்டுகள் நடை பெற்றது.

சித்திவிநாயகர் வித்தியாசாலை பலவான்குடி

இது, திட்டைத் திருக்கோயில் திருப்பணிச் செல்வர் சிவநேசன் இராமசாமி செட்டியார் அவர்களால் பல்லாண்டுகள் பலவான்குடியிலும் பிறகு சோழநாட்டில் திட்டையிலும் நடத்தப் பெற்றது.

மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலை காரைக்குடி

சைவசித்தாந்தப் பேரறிஞரும் பெரும்புலவருமான காரைக்குடி சொக்கலிங்க ஐயா அவர்களுடைய முயற்சியால், இந்த வித்தியாசாலை தோற்றுவிக்கப்பெற்றது. பிற்காலத்தில், இது உயர்நிலைப்பள்ளியாக மாற்றப்பெற்றது.

கற்பக விநாயகர் கலாசாலை கோனாபட்டு

பரிதாபி வைகாசி 28-இல் சு.மு. மகாதேவ முருகப்ப செட்டியார் அவர்கள் இதைத் தொடங்கினார்கள். சமய நூல்கள் தமிழ் இலக்கண இலக்கியங்கள், வடமொழி, ஆங்கிலம், பன்முறைத் திருமுறை ஆகிய பாடங்கள் நடைபெற்றன. 40 ஆண்டுகள் இவ்வாறு நடைபெற்ற பிறகு, இது சரசுவதி உயர்நிலைப் பள்ளியாக மாறிற்று.

இங்கே படித்தவர்கள் தொகை 1,000 இருக்கலாம். குறிப்பிடத்தக்க மாணவர்கள் பண்டித நாராயணசுவாமி (திருவையாறு), பாலகவி முத்துவேந்தர் ஆகியோர். பாண்டித்துரை தொடங்கிய நான்காம் தமிழ்ச் சங்கத்தின் முதல் மாணவரான பண்டித கோபால ஐயர், இதன் முதல் தலைமை ஆசிரியராக இருந்தார்.

இக்கலாசாலையின் துணை நிறுவனங்களாவன:-

ஞான சம்பந்த நற்சபையும், 3,000 நூல்கள் கொண்ட வாணி மந்திரப் புத்தகச்சாலையும். இந்நூலகம் இப்போது சரசுவதி உயர்நிலைப்பள்ளியில் இருக்கிறது.

மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை சிதம்பரம்

இது 1928 அளவில் காரைக்குடி சொக்கலிங்க ஐயா அவர்களால் சிதம்பரத்தில் தொடங்கப்பெற்றது. மாணவர்களுக்குச் சாப்பாடு போட்டுச் சைவ சாத்திரப் பாடங்கள் கற்பிக்கப் பெற்றன.

சொக்கலிங்க ஐயா அவர்களும், பழநி ஈசான சிவாச்சாரியார் அவர்களும் இவ் வித்தியாசாலையில் ஆசிரியர்களாக இருந்தனர்.

தேவாரப் பாடசாலை திருக்களர்

காரைக்குடி அரு. சா. அரு., பாகனேரி பெரி. அழ. மு. மு, ஆகிய இரு குடும்பத்தினர்க்கும் பொதுவாக இப்பாடசாலை நடைபெற்று வருகிறது.

சமஸ்கிருதப் பாடசாலை திருவண்ணாமலை


இராமச்சந்திரபுரம் தீ. சொ. தீ. நாகப்ப செட்டியார் அவர்கள் ஒரு ஆசிரியரையும் 35 மாணவர்களையும் கொண்ட சமஸ்கிருதப் பாடசாலையை இந்நகரில் 1915-இல் நிறுவி ஆண்டுதோறும் சில ஆயிரம் ரூபாய் செலவு செய்தார்கள். 15 ஆண்டுகள் சிறப்பாக நடைபெற்ற பின், 1930-இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் இப்பள்ளி தொடர்ந்து நடத்தப் பெறவில்லை.

மேற்கூறிய பாடசாலைகள் தவிர, நகரத்தார்கள் வடமொழி வேதப் பாடசாலைகளைத் தமிழ் நாடெங்கும் நூற்றுக் கணக்கில் ஏற்படுத்தியுள்ளனர்.

சிதம்பரத்தில்:—காரைக்குடி மெ. செ. மெ. பாடசாலை
காரைக்குடி சு. ராம. சு. அ. சு. நா. பாடசாலை
கானாடுகாத்தான் வெ. சா. பாடசாலை

திருவானைக்காவில்:—காரைக்குடி அ. மு. க. பாடசாலை
பள்ளத்தூர் ப. ராம. பாடசாலை
கண்டனூர் வயி. அ. பாடசாலை

வேதாரண்யத்தில்:—பள்ளத்தூர் வே. த. வே. பாடசாலை
திருவையாற்றில் :—காரைக்குடி நேமங் கோயில் வகையரு பாடசாலை
ஆகியவையும் குறிப்பிடத்தக்கவை.



அழகப்பா ஆயத்தப்பள்ளி
அழகப்பாபுரம், காரைக்குடி-3
(Alagappa Preparatory School)

பல மொழியாளரின் குழந்தைகள்-சிறப்பாக, மின்சார வேதியல் ஆராய்ச்சி நிலையத்து ஊழியர்களின் சிறுர்கள்-நலங்கருதி, அழகப்ப வள்ளல் 1955-இல் இப்பள்ளியை நிறுவினர். எவ்வயதினராயினும், ஆங்கிலமும் இந்தியும் கட்டாயமாகப் பயிலவேண்டும் என்பது இப்பள்ளியின் நடைமுறையாகும்.

தியாகராசர் நர்சரிப்பள்ளி
ஆ. தெற்கூர்

தியாகராசர் கல்வி அறக்குழுவினர் நடத்திவரும் இப்பள்ளி இளஞ்சிறுர்களிடையே நல்ல பழக்கவழக்கங்களை வளர்க்கப் பேருதவி புரிகிறது. இங்கு படிப்பதற்குக் கட்டணம் எதுவும் கிடையாது. இருபத்துமூன்று குழந்தைகளுடன் இப்பள்ளி 12-7-63 முதல் நடைபெற்று வருகிறது.

கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்கள் இப்பள்ளியின் செயலாளராகப் பணியாற்றி வருகிருர்கள்.

சோலை ஆச்சி நர்சரிப் பள்ளி
பள்ளத்தூர்

இப்பள்ளி சேலம் ஜவஹர் மில் இயக்குநர் எம். எஸ். உடையப்ப செட்டியார் அவர்களால், தம் அன்னையார் பெயரில் 20-8-62-இல் தொடங்கப்பெற்றது. தமிழ்மொழி வாயிலாகவே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

சேலத்தில் பதிவு செய்யப்பெற்ற செண்பகவல்லி தர்மக் கல்வி நிறுவனத்தால் இப்பள்ளி நடத்தப்பட்டு வருகிறது.

இக்காலத்துக்குத் தக்கவாறு கட்டிடம், கருவிகள் யாவும் வழங்கப்பட்டுள்ளன. நர்சரி, கிண்டர்கார்டன், பிரைமரி வகுப்புக்கள் உண்டு.

எம். எஸ். எஸ். காசிச் செட்டியார்,
கரஸ்பாண்டண்டு

செண்பகவல்லி நர்சரிப் பள்ளி
சேலம்-7.

இப்பள்ளி சேலம் ஜவஹர் மில் இயக்குநர் பள்ளத்தூர் எம். எஸ். உடையப்ப செட்டியார் அவர்களால் தம் மகள் நினைவாக 3-6-1963-இல் தொடங்கப்பெற்றது. ஆங்கில மொழி வாயிலாகப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

சேலத்தில் பதிவு செய்யப்பெற்ற செண்பக வல்லி தர்ம கல்வி நிறுவனத்தால் இப்பள்ளி நடத்தப்பட்டு வருகிறது.

இக்காலத்துக்குத் தக்கவாறு கட்டிடம், கருவிகள் யாவும் வழங்கப்பட்டுள்ளன. நர்சரி, கிண்டர் கார்டன், பிரைமரி வகுப்புக்கள் உண்டு.

எம். எஸ். ஓ. சொக்கலிங்கம்,
கரஸ்பாண்டண்டு.

அழகப்பா மாண்டிசோரி பள்ளி
அழகப்பாபுரம், காரைக்குடி–3

இளஞ்சிறுர்கள் பால்மணம் மறந்து கல்வியில் ஆர்வம் பெறச் செய்வதற்காக இவ்வகைப் பள்ளிகள் தொடங்கப் பெறுகின்றன.

இது *1953* முதல் உணவு விடுதியுடன் இயங்கி வருகிறது. மூன்று வயது முதல் ஏழு வயது வரை உள்ள குழந்தைகள் இப்பள்ளியில் சேர்த்துக்கொள்ளப் பெறுகின்றனர்.

மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் நினைவு
பிரிப்பரேட்டரி ஸ்கூல்
நமனசமுத்திரம்

இவ்வூரில் பஞ்சாலை நடத்தியதால், இப்பள்ளி ஏற்பட்டது. சிதம்பரம் செட்டியார் அவர்கள் நினைவாக அவர்தம் மக்கள் முத்தையா, பெத்தாச்சி ஆகியோர் இருவரும் இந்த ஆயத்தப் பள்ளியை நிறுவினர்.

பகலுணவு படைக்கப்படுவதால் ஏராளமான மாணவ மாணவிகள் இப்பள்ளியில் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

ஆலையின் மேற்பார்வை மாறிவிட்ட போதிலும், மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் நினைவு அறக்குழுவினர், தொடர்ந்து பள்ளியை நடத்தி வருகின்றனர்.

மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் நினைவு
பாலர் பள்ளி
வேப்பேரி, சென்னை–7

M. CT. M. Chidambaram Chettiar Memorial Preparatory School, Vepery, Madras-7.

இப்பள்ளி, தம் அருமை நண்பர் சிதம்பரம் செட்டியார் நினைவாக வள்ளல் அழகப்பரால் தோற்றுவிக்கப்பெற்று, அழகப்பச் செட்டியார் கல்வி நிறுவனத்தாரால் நடத்தப்பெற்று வருகிறது.

எழும்பூர், கீழ்ப்பாக்கம், புரசைப் பகுதியில் தமிழ் மொழியில் பாடங்களைக் கற்பித்து ஆங்கில மொழியையும் அழுத்தமாகச் சொல்லிக் கொடுக்கும் தொடக்கப்பள்ளி இல்லாத குறையைப் போக்க எண்ணி, டாக்டர் அழகப்பச் செட்டியார் *1954*-ஆம் ஆண்டில் இப்பள்ளியை லேடி முத்தையா செட்டியார் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்தில் தொடங்கினர்.

முதல் ஐந்து வகுப்புக்கள் இப்பள்ளியில் உள்ளன.


சத்துரு சங்காரக்கோட்டை

முறையூர் பெரி. பழ. குடும்பத்தார் சத்துரு சங்காரக் கோட்டையில் ரூபாய் *30,000* செலவில் அன்ன சத்திரம் கட்டினர். இப்பொழுது இதில் மாண்டிசோரி பள்ளி நிறுவி நடத்தப் பெற்று வருகிறது.

'அருசொ'

பக்கம்—57

இரண்டாம் உலகப்போரில் சேதமடைந்ததால், 1964-ல் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் பர்மா நகரத்தார்கள் புதுப்பித்துள்ள பசுமந்தான் தெண்டாயுதபாணி கோயிலின் தோற்றம்



விசாலாட்சி தொடக்கப்பள்ளி
ஆ. தெற்கூர்

தியாகராசர் கல்வி நிறுவனத்தார், இப் பள்ளியை நடத்தி வருகின்றனர். பள்ளியின் பெயர் தியாகராசச் செட்டியார் அவர்களின் மனைவியார் விசாலாட்சி ஆச்சி அவர்களைக் குறிப்பதாகும்.

இராமனுதபுரம் மாவட்டக் கழகத்தார் இவ்வூரில் நடத்தி வந்த தொடக்கப்பள்ளி 1-6-1957 முதல் மேற்கண்ட பெயரில் நடை பெற்று வருகிறது. ஐந்து வகுப்புக்கள் உள்ளன. 130 பெண் குழந்தைகள் உள்பட 360 பேர் கல்வி பயின்று வருகின்றனர்.

விசாலாட்சி தொடக்கப்பள்ளி
ஆவினிப்பட்டி

இவ்வூர் பெ. பெரி. இலக்குமணன் செட்டியார் அவர்கள் 1931-இல் ரூபாய் 10,000 செலவில் கட்டிடம் கட்டி, இப்பள்ளியைத் தொடங்கி நடத்தி வருகிறார்கள்.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் தொடக்கப்பள்ளி
கீழச்சிவற்பட்டி

இப்பள்ளியில் 223 சிறுவர்களும், 193 சிறுமியரும் கல்வி பயின்று வருகின்றனர். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் உயர்நிலைப் பள்ளியின் மேற்பார்வையில் இருந்து வருகிறது.

மங்கள விநாயகர் வித்தியாசாலை
மகிபாலன்பட்டி

இவ் வித்தியாசாலை, நகரத்தார்களின் பொருளுதவியாலும் பண்டிதமணி அவர்களின் முயற்சியாலும் தொடங்கப்பெற்றுப் பல்லாண்டு நடைபெற்று இப்போது 'யூனியன்' பள்ளியாகத் திருப்பத்தூர் ஊராட்சிமன்ற ஒன்றியத்தாரின் ஆட்சியில் இருந்துவருகிறது.

இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டவும் இதனை நடுநிலைப் பள்ளியாக்கவும், பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் நினைவுக் குழுவினர் முயன்று வருகின்றனர்.

இராமசாமி - சண்முகம் கல்விச்சாலை
மருதிப்பட்டி

முறையூர் ராம. தெய்வராயன் செட்டியார் அவர்கள் ரூபாய் 6,000 செலவில் இப்பள்ளியை 28-8-61-இல் நிறுவினார்கள். இது சிங்கம் புணரி ஊராட்சிமன்ற ஒன்றியத்தாரால் இப்போது நடத்தப்பெற்று வருகிறது.

முறையூர்

இவ்வூர் நகரத்தார்கள் 1925-ஆம் ஆண்டு அளவில் ரூபாய் 10,000 செலவில் கட்டிடம்

கட்டி, ஆரம்பப்பாடசாலை நிறுவினர். இது இன்றளவும் நடைபெற்று வருகிறது.

'அருசொ'

சு. வெ. கதி. சிகப்பி ஆச்சி வித்தியாசாலை விராமதி

சு.வெ.கதி. கதிரேசன் செட்டியார் அவர்களும், அன்னுர் மனைவி சிகப்பி ஆச்சி அவர்களும் ரூபாய் 70,000 செலவில் கட்டிடம் கட்டி 1934-இல் இக்கல்வி நிலையத்தை நிறுவினர். தொடக்கப்பள்ளியாகப் பல ஆண்டுகள் நடைபெற்றுப் பின்னர் உயர் தொடக்கப்பள்ளி ஆயிற்று. அதற்கேற்ப, கட்டிடங்கள் விரிவு படுத்தப்பட்டன.

இப்போது மீண்டும் தொடக்கப்பள்ளியாகி, நன்கொடையாளர்களின் மகன் சோமசுந்தரம் செட்டியார் அவர்களின் மேற்பார்வையில் பள்ளி இயங்கி வருகிறது.

இல. பழநியப்பன்

அழகியதேவி வித்தியாசாலை அழகாபுரி (கோட்டையூர்)

இப்பள்ளி 15-4-1939-இல் தோன்றிற்று. ஐந்தாம் வகுப்புவரை பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இப் பள்ளியை நிறுவிய நன்கொடையாளர் உயர்திரு. சித. அ. சித. நாச்சியப்ப செட்டியார் அவர்கள் ரூபாய் 10,000/- பெறக்கூடிய கட்டிடமும் ஆயிரம் ரூபாய் பெறுமான தளவாடசா மான்களும் வழங்கியுள்ளார்கள்.

36 மாணவர்களும் 29 மாணுக்கிகளும் ஆக மொத்தம் 65 பேர் பயிலுகின்றனர்.

நிர்வாகம் திரு. நாச்சியப்ப செட்டியார் அவர்களிடமே இருந்து வருகிறது. அரசாங்க மான்யம் பெற்று ஆசியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

சித.அ.சித. நாச்சியப்ப செட்டியார்
கரஸ்பாண்டண்டு.

சிட்டாள் ஆச்சி நினைவுத் தொடக்கப்பள்ளி கண்டனூர்

உயர்திரு. வீ. தெ. வீரப்ப செட்டியார் அவர்களின் வள்ளன்மையால் நடைபெற்று வரும் இப்பள்ளியில் 430 மாணவர்களும் ஆசிரியர் (இருபாலருமாக) 19 பேரும் இருக்கிறார்கள்.

புதுவயல்

புதுவயல் நடுவீதியில் ஆவி. பழ. சு. குடும்பத்தார் ரூபாய் 10,000 செலவில் கட்டிடம் கட்டி 1915-ஆம் ஆண்டு அளவில் பள்ளிக் கூடம் நிறுவினர். இதுவே, புதுவயலில் ஏற்பட்ட முதல் பள்ளியாகும்.

'அருசொ'

அழகப்பா ஆதாரப்பள்ளி (தொடக்கப்பள்ளி) அழகப்பாபுரம், காரைக்குடி-3

இப்பள்ளி, கல்லூரி வட்டத்தில் வாழ்பவர்க்கு வசதியாக வள்ளல் அழகப்பர் கொடையால் ஏற்பட்டது. 1954-இல் முதல் ஐந்து வகுப்புக்களுடன் தொடக்கப்பள்ளியாக அமைந்து 1955 முதல் ஆதாரப்பள்ளியாக 350 மாணவர்களுடன் நடைபெற்று வருகிறது.

காந்தி சமதர்மப் பாடசாலை அமராவதிபுதூர்

இது, பிச்சப்பா சுப்பிரமணியம் செட்டியார் அவர்களாலும் அவர்களுடைய நண்பர்களாலும் காந்தியக் கொள்கைப்படி பல்லாண்டுகள் நடத்தப்பெற்றது.

S. R. M. S. சாத்தப்ப செட்டியார் தொடக்கப்பள்ளி சண்முகநாதபுரம்

இப்பள்ளி 13—11—1935-இல் தேவகோட்டை பி. எஸ். சாத்தப்ப செட்டியார் அவர்களால், தம் தந்தையார் நினைவாகத் தாம் பிறந்த ஊரில் நிறுவப்பெற்று, செம்மையான முறையில் நடத்தப் பெற்றுவருகிறது.

யூனியன் தொடக்கப்பள்ளி புதுவளவு, பாகனேரி

இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட, பாகனேரி பெரி. அழ. மு. மு. குடும்பத்தார் காளையார் கோயில் ஊராட்சி மன்ற ஒன்றியத்துக்கு ரூபாய் 6,000/– அன்பளித்துள்ளனர்.

இராமாயி நினைவுத் தொடக்கப்பள்ளி
நடராசபுரம்

இக்கல்விக்கூடம் 10—7—1946-ல் முரு. ராம. முரு. ராம. முருகப்ப செட்டியார், முரு. ராம. முரு. ராம. இராமனுதன் செட்டியார் ஆகிய சகோதரர்களின் தந்தையார் திரு. இராமசாமி செட்டியார் அவர்களின் பெயரால் தொடக்கப்பள்ளியாக ஐந்து வகுப்புக்களுடனும், ஐந்து ஆசிரியர்களுடனும் நிறுவப் பெற்றது. 1949-ஆம் ஆண்டில் உயர் தொடக்கப்பள்ளியாக எட்டு வகுப்புக்களையும், பத்து ஆசிரிய ஆசிரியைகளைக் கொண்டதாகவும் வளர்ச்சி பெற்றது. 1962-ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப் பட்டு இராமசாமி செட்டியார் நினைவு உயர் நிலைப்பள்ளி என்ற பெயருடன் திகழ்கிறது.

தொடக்க வகுப்புக்கள் தனியாகப் பிரிக்கப் பட்டு மதிப்பிற்குரிய அதிபர் உயர் திரு. முருகப்ப செட்டியாரின் காலஞ் சென்ற மகள் நினைவாக இராமாயி நினைவுத் தொடக்கப் பள்ளி என்று அழைக்கப்படுகிறது. இப்பள்ளியில் 245 பிள்ளைகள் கல்வியறிவு பெறுகின்றனர். எட்டு ஆசிரிய ஆசிரியைகள் பணியாற்றி வருகின்றனர்.

இத் தொடக்கப்பள்ளியின் அதிபர் முருகப்ப செட்டியார் அவர்களும், நிர்வாகி இராமனுதன் செட்டியார் அவர்களும் பள்ளி நலனுக்காக அளவிலா வகைகளில் உதவுகின்றனர். ஏழை மாணவ மாணவியருக்கு எழுது பலகைகளும், பாட நூல்களும், பென்சில், குறிப்புப் புத்தகம் ஆகியனவும் கொடுத்து வருகின்றனர். "பகல் உணவுத் திட்டத்"தை அரசினர் கொண்டுவரப் பல ஆண்டுகளுக்குமுன்பே குறிப்பிட்ட ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கி வந்திருக்கின்றனர். அடிக்கடி பள்ளி மாணவ மாணவியருக்குச் சீருடைகள் வழங்கப்படுகின்றன. ஆசிரிய ஆசிரியைகளின் தேவைகளை மிகவும் சிறப்புடன் கவனித்து வருகின்றனர். ஆசிரியர்கள், மாணவ மாணவிகளுக்காக 800 புத்தகங்களுடன் ஒரு நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்குத் தேவையான பொருள்களை ஒரு குறைவுமின்றி அவ்வப்போது கொடுத்து ஊக்கமளிக்கின்றனர். எங்கள் பள்ளி மாணவ மாணவியருள் வசதியில்லாத பலர் அதிபர், நிர்வாகி ஆகியோர் உதவியால் மேற் கல்வி பயின்று பெரிய பதவிகளில் பணியாற்றி வருகின்றனர். அடிக்கடி இளஞ்சிறுர்களுக்கு தின்பண்டங்கள், முதலியன வழங்கப்பெறும். இரவில் பிள்ளைகள் பள்ளிகளில் வந்து கல்வி பயில வசதி செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக இக்கல்வி நிலையத்தைக் கண்களைக் காக்கும் இமைகள்போல அதிபர் திரு. முருகப்ப செட்டியார் அவர்களும், நிர்வாகி திரு. இராமநாதன் செட்டியார் அவர்களும் பாதுகாத்து வருகின்றமை போற்றுதற் குரியது.

வி. ஆர். இலக்குமணண்,
தலைமை, ஆசிரியர், உயர்நிலைப்பள்ளி.

குப. இராம. துவக்கப்பள்ளி
நாட்டரசன்கோட்டை

இப் பள்ளி குப. இராமனுதன் செட்டியார் அவர்களின் நன்கொடையால் ஏற்பட்டது. ஆசிரியர் எழுவர். மாணவர் தொகை 223.

வலம்புரி அலர்மேலு ஆரம்பப்பள்ளி
பொன்னமராவதி

இப்பள்ளி வலம்புரி வடுகநாதன் குடும்பத்தினரால் 9—5—1930-இல் தொடங்கப் பெற்றது. சிறந்த ஆசிரியர்கள் பணியாற்றியிருக்கின்றனர்.

பெண் குழந்தைகள் ஐந்தாம் வகுப்புவரை படிக்க இங்கு வசதி உண்டு. 31—10—1954 முதல் இப்பள்ளிக்குப் நன்கொடையாளர் குடும்பத்தார் பொன்னமராவதியில் கட்டியுள்ள கவினுறு கட்டிடத்தில் இப்பள்ளி நடைபெற்று வருகிறது.

பழனியப்பர் கல்லூரி
வலம்புரி

இக்கல்லூரியின் தோற்றம் 1918-ஆம் ஆண்டு ஆகும். கல்லூரித் தலைவர் உயர்திரு. ஆ. பழ. பாலசுப்பிரமணிய பிள்ளை ஆவார்கள். தலைமை ஆசிரியர் திரு. பா. மாணிக்கவாசகம் அவர்கள். ஆசிரியர்கள் 15 பேர், மாணவர்கள் 601. அதில் ஆண் 313, பெண் 288. முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை இங்கு நடைபெறுகின்றன.

இக்கல்லூரியின் பழைய கட்டிடத்தைக் கொடுத்து உதவியவர்கள் ஆ. வி. ராம. குடும்பத்தார் ஆவர். கட்டிடத்தின் மதிப்பு ரூபாய் இருபதினுயிரம் ஆகும். அழகியதொரு புதுக் கட்டிடத்தை உயர்திரு. குப. சு. பழ. பழநியப்ப செட்டியார் அவர்கள் வழங்கியுள்ளார்கள். இதன் மதிப்பு ரூபாய் 35,000 ஆகும்; மேலும் புதுக்கட்டிடங்கள் கட்ட அவர்கள் முன்வந்துள்ளனர். அன்னுர் கொடை உள்ளம் வாழ்க!

புலவர் கதி. சுந்தரம்.

சித்தி விநாயகர் சேந்தமிழ்க் கலாசாலை வலையபட்டி

இக்கலாசாலையின் தோற்றம் 11-11-1920. 44 ஆண்டுகளாக நன்முறையில் நடந்து வருகிறது. இக்கலாசாலையின் பொறுப்பாளர்கள் உயர்திரு. நா. மு. ராம. நா. சொக்கலிங்கம் செட்டியார், எம். எல். சி. அவர்களும் உயர் திரு. நா. மு. ராம. பழநியப்ப செட்டியார் அவர்களும் ஆவர். 1961 முதல் நா. மு. ராம. பழநியப்ப செட்டியார் அவர்களே கலாசாலையின் பொறுப்பை ஏற்று நடத்தி வருகிருர்கள். இக்குடும்பத்தார் பள்ளிக்கூடக் கட்டிடம், இடம் முதலியவற்றிற்காக ரூபாய் பதினையாயிரம் செலவிட்டிருக்கிருர்கள். சுமார் 30 ஆண்டுகள் ஆசிரியர்கள் சம்பளமாக ஐம்பதினுயிரம் செலவு செய்துள்ளனர். இக்கலாசாலையின் ஆண்டு விழாக்களில் தலைமை ஏற்ற பெரியார்களுள் புதுக்கோட்டை மன்னர் உயர் திரு. வி. ஆர். துரைராஜா அவர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள். இக்கலாசாலையில் ஆசிரியர்கள் நால்வர்; மாணவ, மாணவியர் 193. தலைமை ஆசிரியர் எஸ். சிங்காரம், முதல் ஐந்து வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

நூல் நிலையம் ஒன்று இருக்கிறது. அதில் 400 நூல்கள் இருக்கின்றன. 1920 முதற் கொண்டே மாணவரிடம் சம்பளம் வாங்காமல் நடந்துவரும் இக்கலாசாலையை இப்பகுதி மக்கள் ''தர்மப் பள்ளிக்கூடம்'' என்றே அழைத்து வருகின்றனர்.

புலவர் கதி. சுந்தரம்,
சுப.முத்துப்பழநியப்பன்.

திருவள்ளுவர் சேந்தமிழ்க் கலாசாலை வேந்தன்பட்டி

இக்கலாசாலை பிரமோதூத ஆவணி 13வ (29—8—1930) தொடங்கப்பெற்றது. வேந்தன் பட்டி நகரத்தார் அனைவரும் சேர்ந்து ரூபாய் 15,000 செலவில், கலாசாலைக்கு 1947-இல் கட்டிடம் கட்டினர்.

முதல் ஐந்து வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர் இருவர் பணிபுரிகின்றனர். மாணவர் எண்ணிக்கை 65.

அரசாங்க உதவி எதுவும் இன்றியே, கலாசாலை நடைபெற்று வருகிறது. உயர்திரு. லெ. நா. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் இக் கலாசாலையின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருந்து வேண்டும் உதவிகளை மனமுவந்து செய்து வருகிருர்கள்; பள்ளியில் ஒரு விநாயகர் திருவுருவத்தை அவர்கள் பிரதிட்டை செய் திருக்கிருர்கள்.

வெங்கட்ராமய்யர்
தலைமை ஆசிரியர்

கோப்பனுபட்டி

1930-இல் இவ்வூர் நகரத்தார்கள் ரூபாய் 10,000 செலவில் தொடக்கப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டிப் புதுக்கோட்டை அரசினரிடம் ஒப்படைத்தனர். அரசினர் அக்கட்டிடத்தில் நடத்திவந்த பள்ளி, இப்போது பொன்னமராவதி ஊராட்சி மன்ற ஒன்றியத்துத் தொடக்கப் பள்ளியாக இயங்கி வருகிறது.

குழிபிறை

மு. சித. இராம. இராமனுதன் செட்டியார் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் தொடக்கப் பள்ளி ஒன்றும் நடைபெற்று வருகிறது. செட்டியாரின் நிர்வாகத்தின் கீழ் அவரது சொந்தக் கட்டிடத்தில் (ஓடு வேய்ந்த) ஒரு பகுதியும் நகரப் பொதுமக்கள் கட்டிடத்தில் வாடகை கொடுத்து ஒரு பகுதியும் நடைபெற்று வருகிறது.

மாணவ தொகை 280.

ஹரிஜன ஆரம்பப்பள்ளி, இராமச்சந்திரபுரம்

இப்பள்ளி 1920 முதல் 1932 வரை ஆண்டு தோறும் ரூபாய் 1,000 செலவில் சொ. தீ.

நாகப்ப செட்டியார் அவர்களால், சேரிக்கு அருகேயுள்ள ஒரு கட்டிடத்தில் நடத்தப் பெற்றது. அரசாங்கத்தின் கொள்கைக் கிணங்க, ஏனைய சமூகத்தார் படிக்கும் பள்ளி யுடன் இப்பள்ளி இணைக்கப்பெற்றது.

பெண்கள் ஆரம்பப்பள்ளி
இராமச்சந்திரபுரம்

இப்பள்ளி 1920 முதல் 1932 வரை ஆண்டு தோறும் ஓராயிரம் ரூபாய் செலவில் இவ்வூர்ப் பெருவள்ளல் சொ. தீ. நா. அவர்களால் நடத்தப் பெற்றது. பின்னர், அரசாங்கத் தாரின் கொள்கைக்கு இணங்க ஆடவர் பள்ளி யுடன் இணைக்கப்பெற்றது.

ஏழை மாணவர்க்கு உணவும் உடையும் வழங்கப்பெற்றன.

ஸ்ரீபாடலேசுவரர் இலவசத் தொடக்கப்பள்ளி
திருப்பாதிரிப்புலியூர்
தென் ஆர்க்காடு மாவட்டம்

இப்பள்ளி, பாடலேசுவரர் கோயில் திருப் பணியாளரும் பலவகையில் திருப்பாதிரிப் புலியூரின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து அந்நகரின் வரலாற்றில் அழியாப்புகழ் பெற்ற வருமாகிய இராமச்சந்திரபுரம் தீ. சொ. குடும் பத்தைச் சேர்ந்த சொ. தீ. நாகப்ப செட்டியார் அவர்களால், இலவசப் பள்ளியாக 1910 அளவில் முதல் ஐந்து வகுப்புக்களுடன் ஏற் படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் ரூபாய் 6,000 செலவு செய்யப் பெற்றது. பின்னர் அது இலவச நடுநிலைப்பள்ளியாகச் சில ஆண்டுகள் நடைபெற்றது.

நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட இருந்த நிலையில் 1931-இல் உலகப் பொருளாதார மந்தம் ஏற்பட்டு பள்ளி யின் வளர்ச்சி தடைப்பட்டு வரலாறும் முற்றுப் பெற்றது.

மீனாட்சி ஆரம்பப் பாடசாலை
அண்ணாமலைநகர்
தென் ஆர்க்காடு மாவட்டம்

தமிழ்ப் பெருவள்ளல் ராஜா சர். அண்ணா மலை செட்டியார் அவர்களால் இப்பள்ளி 19—8—1926-இல் 26 மாணவர்களுடன் தொடங்கப்பெற்றது. இப்பொழுது ஆசிரியர் 11 பேரும், மாணவர்கள் 259 பேரும், மாணவி கள் 241 பேரும் உள்ளனர்.

பாடசாலை, நல்ல கட்டிடத்தில் அமைந் துள்ளது. பட்டப்படிப்புகள் உள்ள அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் இந்த ஆரம்பப் பள்ளி அதன் எல்லைக்குள்ளே அமைந்திருப் பதால் ஒரு மாணவன் முதல் வகுப்பிலிருந்து பெரும் பட்டம்வரை ஓர் இடத்திலிருந்து கொண்டே கல்வி கற்கலாம் என்ற பெரு வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர்கள், ஆசிரியப் பெருமக்களின் குழந்தைகளும், சிப் பந்திகளின் குழந்தைகளும் கல்வி கற்க இப் பள்ளி பேருதவியாக இருக்கிறது.

ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர் கள், தம் அறுபான் ஆண்டு விழாவில் ரூபாய் 6,000 இப்பள்ளிக்குக் கொடுத்துள்ளார் கள். இப்பொழுது ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் மேற்பார்வையில் பள்ளி நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

டாக்டர் எஸ். எம். லெட்சுமணன் செட்டி யார் அவர்கள் இப்பள்ளியின் கரஸ்பாண்டன் டாக இருந்து வருகிறார்கள்.

கே. பாலசுப்பிரமணிய ஐயர்,
தலைமை ஆசிரியர்.

ராணி மெய்யம்மை தொடக்கப்பள்ளி
காந்திநகர், அடையாறு, சென்னை-20.

இப்பள்ளி 11—6—1956-இல் தொடங்கப் பெற்றது. முதல் ஐந்து வகுப்புக்கள் நடை பெறுகின்றன. இருபாலருமாக மொத்தம் 672 பேர் கல்வி பயிலுகின்றனர்.

இப்பள்ளியை ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களைப் புரவலராகக் கொண்ட காந்திநகர் கல்விக் கழகம் நடத்தி வருகிறது.

கே. சீத்தாலெட்சுமி,
தலைமை ஆசிரியை.

ராஜா அண்ணாமலைபுரம் தொடக்கப்பள்ளி
(கிழக்கு)
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28

இப்பள்ளி 1—7—1956-இல் தொடங்கப் பெற்றது. முதல் ஐந்து வகுப்புக்கள் நடை

பெறுகின்றன. இருபாலருமாக 828 பேர் கல்வி பயிலுகின்றனர்.

செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்களின் வள்ளன்மையால் வளர்ந்துவரும் காந்திநகர் கல்விக் கழகத்தார் நடத்திவரும் பல கல்வி நிலையங்களுள் இதுவும் ஒன்ருகும்.

டி. சுந்தராம்பாள்,
தலைமை ஆசிரியை.

ராஜா அண்ணுமலைபுரம் தொடக்கப்பள்ளி (மேற்கு)
ராஜா அண்ணுமலைபுரம், சென்னை-28.

இப்பள்ளி 18—6—1956-இல் தொடங்கப் பெற்றது. ஐந்து வகுப்புக்களிலுமாக 448 பேர் கல்வி கற்று வருகின்றனர்.

இப்பள்ளியை ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களைப் புரவலராகக் கொண்ட காந்திநகர் கல்விக் கழகம் நடத்தி வருகிறது.

எம். வி. விஜயலெட்சுமி,
தலைமை ஆசிரியை.

சோக்கலிங்க மீனுட்சி வித்தியாசாலை
குருவிக்கோண்டான்பட்டி

இவ்வூர் உயர்திரு. AS.ST. சிதம்பரம் செட்டியார் அவர்களால் 30—10—1941-இல் இப்பள்ளி ஏற்பட்டு ஐந்தாம் வகுப்புவரை நடைபெற்று வருகிறது. 43 மாணவிகள் உட்பட 134 பேர் கல்வி பயின்று வருகின்றனர்.

அழ. லெட்சுமணன் செட்டியார்,
மிதிலைப்பட்டி.

ஸ்ரீ தண்டாயுதபாணி துவக்கப்பள்ளி
கண்டமாணிக்கம்

இப்பள்ளி 1933-ல் துவக்கப்பட்டு 14—6—1937-ல் அரசியலாரின் அங்கீகாரம் பெற்றது.

இன்று 155 சிறுவர்களும் 137 சிறுமியருமாக 292 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். மூன்று ஆசிரியைகளும் எட்டு ஆசிரியர்களுமாக பதினெருவர் பணி புரிந்து வருகின்றனர்.

பள்ளிக்கு வேண்டிய உபகரணங்கள், மற்றும் துணைப்பொருட்கள் அனைத்தும் நிர்வாகி பெரி. பெரி. சுப. பெரியகருப்பன் செட்டியார் அவர்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கின்றன. இப்பள்ளி கல்விப் போதனையில் இவ்வட்டாரத்தில் முதன்மையான பள்ளியாகத் திகழ்கின்றது. பள்ளியின் ஒரு பகுதியில் பொதுமக்களுக்காக படிப்பகம், நூல் நிலையம், வானொலிப்பெட்டி இவை வைக்கப்பட்டு 'செகந்நாதர் படிப்பகம்' என்ற பெயரால் இயங்கிப் பொதுமக்களுக்குத் தொண்டு செய்து வருகிறது. கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக ஏற்பாடு செய்யப் பெறுகின்றன.


பி. எஸ். வித்தியாசாலை, கண்டமாணிக்கம்.

எங்கள் தொடக்கப்பள்ளி 1904 - இல் ஆரம்பிக்கப்பட்டது. மாடியுடன் கூடிய சொந்தக் கட்டிடத்தில் பள்ளி நடந்து வருகிறது. எங்கள் பள்ளியில் 253 பிள்ளைகள் படிக்கின்ருர்கள், 25 பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுகின்றது.

கரு. மாணிக்கவாசகம்,
பள்ளித்தாளாளர்.

★

மாயவரத்திலுள்ள (பள்ளத்தூர்) அ. மு. பாடசாலையிலிருந்து 7 முதல் 10-ஆவது வகுப்பு வரையுள்ள பள்ளி மாணவர்களுக்கு, தங்க இடமும் இலவச உணவும் தருகிருர்கள். இதுபோன்று திருவானைக் கோவிலில் உள்ள ப. ராம. ப. பாடசாலையிலும், திருவரங்கத்திலுள்ள (அரியக்குடி) இராதாகிருஷ்ணன் செட்டியார் சத்திரத்திலும் குறிப்பிட்ட மாணவர்களுக்கு உணவும் உறையுளும் உதவி வருகிருர்கள். இவர்களைப் பின்பற்றிப் பல ஊர்களில் உள்ள சத்திரம், பாடசாலை, விடுதி, பசுமடம் இவைகளிலெல்லாம் நம் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தகுந்த முறையில் உதவ முன்வர வேண்டும்.



உயர் தொடக்கப் பள்ளிகள்

HIGHER ELEMENTARY SCHOOLS

விவேகானந்தர் கல்விக்கழகம் ஆவினிப்பட்டி

பழ. அ. அண்ணாமலை செட்டியார் குடும்பத்தார் 1930-இல் ரூபாய் 15,000 செலவு செய்து கட்டிடம் கட்டி, இப்பள்ளியைத் தொடங்கினர். தமிழ்க்கல்வி இங்கு சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது.

நன்கொடையாளர் மகன் பழநியப்பசெட்டியார் அவர்களின் மேற்பார்வையில்பள்ளி நடைபெற்று வருகிறது.

ஸ்ரீ பணிச்சாருடையவர் தர்மகலாசாலை கண்டவராயன்பட்டி

இது 8—6—1930-இல் உயர்திரு. சி. உ. ராம. இராமசாமி செட்டியார் அவர்களால் நிறுவப்பெற்றது. அவர்களே பள்ளியின் ஆட்சியை நடத்தி, அதன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள். பள்ளி, சர்க்காரால் அங்கீகரிக்கப்பெற்று மானியம் வழங்கப் பெறுகிறது. மாணவ மாணவியரிடம் ஒரு போதும் சம்பளம் வசூலிக்கப் பெற்றது கிடையாது.

கட்டிடத்திற்காகவும் பிறசெலவுகளுக்காகவும் நன்கொடையாளர் செலவுசெய்த தொகை ரூபாய் 41,861 ஆகும். இது தவிர, இவர்கள் ஆண்டுதோறும் ரூபாய் 1,000வரை பள்ளிக்குச் செலவு செய்கிறார்கள்.

ஒன்றும் வகுப்பு முதல் எட்டு வகுப்புக்கள் இருக்கின்றன. ஆறுமுதல் எட்டு வகுப்புப் பிள்ளைகளுக்கு நெசவுத்தொழில், பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.

இப்போது பள்ளியில் பயிலும் மாணவர், ஆண் பெண் உள்பட, எண்ணிக்கை 245.

எங்கள் பள்ளியின் தொடக்கத்திலும், இடையிடையே ஆண்டு விழாக்காலங்களிலும் மகிபாலன்பட்டி மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கியும், பார்வையிட்டும் உள்ளார்கள்.

இக்கலாசாலையின் புதுக்கட்டிடம் 2-6-1940-இல் திறந்து வைக்கப்பெற்றது.

இக்கலாசாலையின்முன் பள்ளமாயிருந்த எஸ். நெ. 34/2 சர்க்கார் இடத்தை எலியனேஷன் மூலம் விளையாட்டுத் திடலுக்குப் பெற்று மானேஜ்மெண்டிலிருந்து தன் சொந்தச் செல

வில் சுமார் ரூபாய் 5,000/-வரை செலவுசெய்து தூர்த்து சுற்றுச் சுவர் எடுக்கப் பெற்று, தற் பொழுது மாணவ மாணவிகள் விளையாடும் திடலாக இருக்கிறது. பொதுமக்கள் உபயோ கத்திற்கு குடி தண்ணீர்க்கிணறு ஒன்றும் வெட் டப்பெற்றிருக்கிறது. இத்திடலை உண்டாக்க இவ்வூர்த்தொண்டர் திரு. நா. அருணாசலன் செய்த தன்னலமற்ற சேவைகளுக்காக அன்னு ருக்கு 12-6-52-ல் பாராட்டு வழங்கப்பெற்றது.

பழைய மாணவர் நிறுவியுள்ள ''வள்ளுவர் நூல் நிலையத்தில்'' ஓராயிரம் தமிழ்ப் புத்தகங் கள் இருக்கின்றன.

10-6-1956-இல் இக்கலாசாலையின்வெள்ளி விழா சிறப்பாக நடைபெற்றது.

சொக்கலிங்க வித்தியாசாலை
லெட்சுமீபுரம்

இது, இவ்வூர்ச் செல்வரும் சென்னையில் பெரு வணிகராக இருப்பவருமான உயர்திரு. ந. சொ. அரு. அருணாசலம் செட்டியார் அவர் களால் 6—3—1927-இல் தொடங்கப்பெற்றது.

எட்டாம் வகுப்புவரை உண்டு.

நூல் நிலையம், காந்தி வாசகசாலை, பொருட் காட்சிச்சாலை முதலியன உண்டு. பக்தியை வளர்க்கும் பல சிறுநூல்கள் வெளியிடப்பட்டு வேண்டுவோர்க்கு அன்பளிப்பாக அனுப்பப் படுகின்றன. கல்வியும் ஒழுக்கமும் துணை நின்று தழுவுமாறு சைவ சமய உணர்ச்சியும் தமிழ்ப் பற்றும் மாணவரிடையே வளர்க்கப் பெறு கின்றன.

சரசுவதி வித்தியாசாலை
சிராவயல்

இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் இவ் வூர் நகரத்தார்கள் ஒரு கட்டிடம் கட்டி, திண் ணைப் பள்ளிக்கூடம் நிறுவினர். பிறகு, அப் பள்ளி மாவட்டக்கழகப் பொறுப்பில் தொடக்கப் பள்ளியாக நடத்தப் பெற்றது.

1961 முதல், இது உயர்தொடக்கப்பள்ளி யாக நடைபெற்றுவருகிறது. ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை, 200 மாணவ மாணவி கள் பயிலுகின்றனர். இந்நகர்ச் செல்வரும் சென்னை நகரத்தார் சங்கத் தலைவருமான உயர்திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் அவர் கள் ரூபாய் 27,000 வழங்கியுள்ளமையால் பள் ளிக்கூடத்திற்கு மேலும் இடமும் புதிய கட்டிட மும் கிடைத்துள்ளன. இதனுல் அடுத்த ஆண் டில், உயர்நிலைப்பள்ளியாகும் வாய்ப்பு ஏற்பட் டிருக்கிறது.

தாகூர் உயர்தோடக்கப்பள்ளி
அரண்மனை சிறுவயல்

நகரத்தார்களின் பொருள்கொண்டு ஏற் பட்ட இப்பள்ளியில் முதல் எட்டு வகுப்புக்கள் உள்ளன. மழலைக் குழந்தைகள் முதல் எட்டாம் வகுப்பு மாணவ மாணவியர் வரை இருக்கின்றனர். ஆசிரியர் பதினெருவர்.

இப்பள்ளியை மேற்பார்ப்பதில் முழுநேர மும் செலவிட்டு, பள்ளியின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு வருபவர்கள் குப. இராமனுதன் செட்டியார் அவர்கள் ஆவார்கள். அன்னுரு டைய ஆர்வமும் ஈடுபாடும் பெரிதும் பாராட் டத்தக்கன.

லெ. இராமனுதன், எம். ஏ.

ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார்
உயர் தோடக்கப்பள்ளி,
ஒக்கூர்

இவ்வூர்ச் செல்வரும் இவ்வூரில் மருத்துவ மனை அமைத்த வள்ளலுமாகிய திருவாளர் சிக. அரு. க. அரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் 5-9-1952-இல் இப்பள்ளியை நிறுவி னுர்கள். ரூபாய் 25,000 செலவில் பள்ளிக் கென அவர்கள் கட்டிடம் கட்டிக் கொடுத் திருக்கிறுர்கள். 18-12-1963-இல் அன்னுர் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்கள். அதன் பின்னர் அவர்களுடைய அருமை மைந் தர் இராமனுதன் செட்டியார் அவர்கள் பள்ளி யின் செயலாளராக இருந்து வருகிறுர்கள். இவர்கள் தம் தந்தையர் நினைவாக ரூபாய் 22,000 செலவில் ஒரு கட்டிடம் கட்டி வருகிறுர்கள்.

இப்பள்ளியில் 1 ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்புவரை உண்டு. மாணவர்கள் 208 பேரும், மாணவிகள் 111 பேரும் ஆக 319 பேர் பயின்று வருகின்றனர். ஆசிரியர் எண் ணிக்கை, பத்து.

சி. ஜெகந்நாதன்
தலைமை ஆசிரியர்.

நாராயணன் செட்டியார் உயர் நிலைத் துவக்கப் பள்ளி அலவாக்கோட்டை

இப்பள்ளி, நா. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் நன்கொடையால் ஏற்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மெய்யப்பா உயர்தர ஆரம்பப்பள்ளி, கல்லுப்பட்டி

இப்பாடசாலை 1931 முதல் சரஸ்வதி வித்தியாசாலை என்ற பெயரால் காமராஜா என்பவரால் நிர்வகிக்கப்பட்டது. 1935 முதல் திரு. பழ. மெ. பழ. சாமினாதன் செட்டியார், திரு. பழ. மெ. மெ. முத்தையா செட்டியார் ஆகிய இருவரும் இப்பள்ளியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வருகின்றனர். பாடசாலை நிறுவியவர்களில் ஒருவரான திரு. சாமினாதன் செட்டியார் மூத்த மகன் கணேசன் செட்டியார் இப்போது நிர்வாகியாக இருந்து வருகிறார்.

பள்ளிக் கட்டிடம் நிர்வாகிகளின் பொதுக் குடும்ப நிதியிலிருந்து 1936-இல் கட்டப்பெற்றது. மேலும்மேலும் கட்டிடம் கட்ட எண்ணியும் அவ்வெண்ணம் இரண்டாவது உலகப்போரினால் செயல்படவில்லை.

1940-இல் எட்டாம் வகுப்புவரை நடத்த நிரந்தர அங்கீகாரம் வழங்கப்பட்டது. உயர்தர ஆரம்பப்பள்ளிக்குத் தேவையான அத்தனை தளவாடங்களும் உள்ள ஒரு பூர்த்தி பெற்ற பாடசாலையாக நடந்து வருகிறது. மாணவர்கள் ஆண்டுதோறும் 75 சதவிதத்துக்குக் குறையாமல் தேர்வு பெறுகிறார்கள்.

1931-இல் 63 மாணவர்களுடனும், இரண்டு ஆசிரியர்களுடனும் உள்ள ஆரம்பப் பள்ளியாய் இருந்து இப்போது 300 மாணவர்களும் எட்டு ஆசிரியர்களும் ஒரு கைத்தொழில் ஆசிரியரும் உள்ள உயர்தர ஆரம்பப் பள்ளியாக விளங்குகிறது. இப்பள்ளி இக்கிராமத்தை அடுத்துள்ள சுமார் பத்துக் கிராமங்களில் வாழ்பவர்களுக்கு எட்டாம் வகுப்புவரை கடந்த 33 ஆண்டுகளாக இலவசக் கல்வி அளித்து வந்திருக்கிறது. காரைக்குடிக் கல்விச் சரகத்திலுள்ள சிறப்பான பள்ளிகளில் ஒன்றாக இது திகழ்ந்து வருகிறது.

எஸ். பரமசிவம்,
தலைமை ஆசிரியர்.

திருநாவுக்கரசு வித்தியாசாலை நேமுத்துப்பட்டி

அப்பர் பெருமானின் பெயர்தாங்கி ஒளிரும் ‘திருநாவுக்கரசு வித்தியாசாலை’யை உயர்திரு. சி. வி. நா. பழநியப்பச் செட்டியார் அவர்கள் 20-9-1926-இல் நிறுவினார்கள்.

நிறுவியபொழுது ஆசிரியர்ஒருவர். மாணவ மாணவிகள் முப்பத்தொருவர். வகுப்புக்கள் ஒன்று முதல் நான்கு வரை.

நோக்கம் : சிறுவர் சிறுமியர்க்குத் தமிழ், பொது அறிவு, கணிதம், ஆங்கிலம், கைத்தொழில் இசை முதலிய ஆரம்பக்கல்வியை இலவசமாகப் போதிப்பது.

1946-ஆம் ஆண்டுவரை அரசியலார் அங்கீகாரமின்றி நடைபெற்று வந்தது. 1947–ஆம் ஆண்டு முதல் அரசாங்க அங்கீகாரம் பெற்று நடந்து வருகின்றது. இப்பொழுது ஆசிரிய ஆசிரியைகள் 14. மாணவர் 223, மாணவிகள் 150. வகுப்புக்கள் ஒன்று முதல் எட்டுவரை.

துணை நிலையங்கள்: திருநாவுக்கரசர் நூல் நிலையம், வாகீசர்வாசகசாலை, அப்பர் இசையரங்கு, இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், திருவள்ளுவர் தொழில் நிலையம், அப்பர் அமுதகம்.

பழ. நா. நாராயணன் செட்டியார்.

மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் ஞாபகார்த்த உயர்தர ஆரம்பப் பாடசாலை காணாடுகாத்தான்

இப்பாடசாலை இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தின் நிர்வாகத்திலிருந்து மு. சித. மு. குடும்பத்தாரின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டு 4-6-1956 முதல் கனம் மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் அவர்களின் பெயரால் நடைபெற்று வருகிறது. இப்பொழுது எட்டு வகுப்புகள் உள்ளன. 401 ஆண்களும் 263 பெண்களும் இப்பள்ளியில் கல்வி பயின்று வருகின்றனர். தலைமை ஆசிரியரும் மற்றும் 17 ஆசிரிய ஆசிரியைகளும் பணியாற்றி வருகின்றனர். ஏறத்தாழ 15,000 ரூபாய் செலவில் புதிதாக மூன்று பகுதிகளாகக் கட்டிடங்கள் கட்டப்

பட்டுள்ளன. 5,000 ரூபாய் செலவில் ஆசனங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. உபகரணங்களும் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏழை மாணவர்கட்குப் பகல் உணவு அளிக்கப்படுகிறது. அரசாங்க உதவி நீங்கலாக, சராசரி ஆண்டொன்றுக்கு நிர்வாகிகள், ரூபாய் 2500 செலவு செய்கின்றனர். மாணவ, மாணவிகளுக்குப் புத்தகங்களும் உடைகளும் இனமாக வழங்கப்படுகின்றன. நிர்வாகிகளால் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்கள் தெற்கூர்க்கு வந்திருந்த போது ரூபாய் 1,001 பள்ளிச் சீர்திருத்த நிதிக்கு நன்கொடையாகக் கொடுக்கப் பெற்றது.

ஏ. பி. நடேசன் செட்டியார்
மானேஜர்

கழக உயர்தோடக்கப்பள்ளி
உ. சிறுவயல்

இவ்வூர் நகரத்தார்கள் பலஆண்டுகளுக்கு முன் ரூபாய் 20,000 செலவில் கட்டிடம் கட்டி, மாவட்டக்கழகத்தில் ஒப்புவித்தனர். பள்ளி, அக்கழகத்தாரால் நடத்தப்பெற்று வருகிறது.

ஸ்ரீசரசுவதி வித்தியாசாலை
புதுவயல்

ஆங்கிரச ஆண்டு தைத் திங்கள் 4-ஆம் நாள் பெரி. சித. ராம. அவர்களின் கட்டிட வாயிலில், திருவருள் துணையும் தமிழ்த் தாயின் தண்ணளியும் அன்பர்களின் அன்பும் ஆர்வமும்கொண்டு ஸ்ரீசரசுவதி வித்தியாசாலை ஆறு மாணவர்களுடனும் 14 மாணவிகளுடனும் தொடங்கப்பெற்றது. நான்கு வகுப்புக்களாகப் பிரித்துக் கல்வி கற்பிக்கப்பெற்றது. இந்நகர் தனவணிகச் செல்வர்கள் சிலரைப் புரவலர்களாகவும், பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் அவர்களைச் செயலராகவும் கொண்டு நன்கு நடைபெற்றுவருகிறது.

இப்பள்ளி வெள்ளி விழாக் காணும் போது, திரு. வி. சாம்பசிவன் அவர்கள், தலைமையாசிரியராகவும் மற்றும் ஏழு துணை ஆசிரியர்களும், ஒரு ஆசிரியையும், 147 மாணவர்களையும், 112 மாணவிகளையும் ஐந்து வகுப்புக்களாகப் பிரித்துக் கல்வி புகட்டினர்கள். இன்றைய நாளில் (32 வது ஆண்டு) திரு. வி. சாம்பசிவன் அவர்களை தலைமை ஆசிரியராகவும், மற்றும் ஆறு துணை ஆசிரியர்களும், இரு ஆசிரியைகளும் கைத்தொழில் வகுப்புக்காக ஒரு ஆசிரியரும், 162 மாணவர்களையும், 110 மாணவிகளையும் ஏழு வகுப்புக்களாகப் பிரித்துக் கல்வி கற்பித்து வருகிருர்கள். இப்பொழுது பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் அவர்களை மேலாளராகவும், மெ. சிதம்பரம் செட்டியார் அவர்களைத் தாளாளராகவும் கொண்டு பள்ளி சீருடன் நடைபெற்று வருகிறது.

ஆண்டுதோறும் நிர்வாகத்தினர் பள்ளி வளர்ச்சிக்காக ரூபாய் 1,500 வரை உதவுகிருர்கள்.

ஆருவது ஆண்டுத் தொடக்கத்தில், அரசாங்க அங்கீகாரம் பெற்ற இந்நகர் பங்களாப் பள்ளியின் நிர்வாகத்தை 1-7-1938 முதல் ஒப்புக்கொண்டு, அத்துடன் இணைத்து துவக்கப்பள்ளியாக, கலைமகளின் பெயராகிய ஸ்ரீசரசுவதி வித்தியாசாலை என்ற பெயரிலேயே நடைபெற்று வந்தது. ஆனல் அண்மை நகர் கண்டனூரில் சிட்டாளாச்சி நினைவு உயர்நிலைப் பள்ளி தோன்றிய காரணத்தால், வித்தியாசாலை துவக்கப் பள்ளியாக மீண்டும் மாறியது.

பின்னர் சில ஆண்டுகள் கழித்து, அதாவது 1962-ஆம் ஆண்டு ரூன் முதல் உயர்தரத் துவக்கப் பள்ளியாக மாறி நன்கு பணி ஆற்றி வருகிறது.

நாட்டில் காகிதப் பற்ருக்குறை ஏற்பட்ட காலத்தில், இப்பள்ளியில் கைத்தொழில் ஆசிரியரைக் கொண்டு காகிதம் செய்யப்பட்டது. இன்றைய நாளில் தையல்தொழில் போதிக்கப் பெறுவதுடன், மாணவ மாணவிகளுக்கு இலவசமாக ஆடைகள் அவர்களைக் கொண்டே தைத்துக் கொடுக்கப்படுகின்றன.

பெரி. சித. ராம. இல்லத்து வாயிலில் தோன்றிய நம் வித்தியாசாலை சிறிது நாள் அழ. பெரி. வீர. ராம. கட்டிடத்தில் வாடகை இல்லாமல் இருந்தும் பெரி. ஏ. வீர. கட்டிடத்திலும் பின் மேற்படி அழ. பெரி. வீர. ராம. அவர்கள் குடும்பத்தாரால் நன்கொடையாகத் தரப்பெற்ற இடத்தில் வெகுதானிய சித்திரை 31-ஆம் நாள் கால்கோள் விழா நிகழ்ந்தது. வித்தியாசாலைச் செயலர் திரு.

பெ. ப. வீ. அரு. இராமசாமி செட்டியார் அவர்களின் பெரும் பொருள் உதவியோடும் மற்றும் பல அன்பர்களின் பொருள் உதவியைக் கொண்டும், பல பெரியோர்களின் உழைப்பினுலும் கட்டிட வேலைகள் பிரமாதி ஆண்டில் இனிது நிறைவேறின.

இப்பள்ளியில் பயின்று பட்டமும் பதவியும் பெற்ருேர் பலர் ஆவர். விரிவு அஞ்சி அப்பட்டியலை இங்கே தர இயலவில்லை.

கவிஞர் அரு. சோமசுந்தரம்

சி. மு. ஆரம்ப உயர்தர வித்தியாலயம் பனையப்பட்டி

சி. மு. குடும்பத்தார் ரூ 20,000 மதிப்புள்ள தங்கள் கட்டிடத்தில் இப்பள்ளியை 1942-இல் நிறுவினர். அக்கால முதலே இது உயர் தொடக்கப் பள்ளியாக நடைபெற்றுவருகிறது.

சி. மு. மு. அரு. அருணுசலம் செட்டியார் அவர்களுடைய மேற்பார்வையில் இக்கல்வி நிலையம் நடைபெற்றுவருகிறது. 350 பிள்ளைகள் கல்வி பயிலுகின்றனர். புதிதாகக் கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

தஞ்சாவூர் அருணுசலம் செட்டியார் கழக உயர்தொடக்கப்பள்ளி, கோட்டையூர்.

இப்பள்ளி இவ்வூரினரான 'தஞ்சாவூர்' அருணுசலம் செட்டியார் அவர்களின் கொடையால் தோன்றி, அரசினரால், இராமநாதபுர மாவட்டக் கழகத்தின் வாயிலாக நடத்தப்படுகிறது.

யூனியன் உயர்தொடக்கப்பள்ளி உலகன்பட்டி

இப்பள்ளிக்கு உரிய இடமும் கட்டிடச் செலவில் பாதித் தொகையும் உயர்திருவாளர்கள் பழ. சுப. சுப்பிரமணியன் செட்டியார், கரு. மு. பழநியப்பச் செட்டியார், கரு. நா. கருப்பன் செட்டியார் ஆகியோர்களால் வழங்கப்பெற்றன.

முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை நடைபெற்று வருகிறது. பள்ளியின் ஆட்சி, சிங்கம்புணரி ஊராட்சிமன்ற ஒன்றியத்தாரிடம் இருந்துவருகிறது.

S. பழநியப்பன்

சன்மார்க்க சபை உயர் தொடக்கப்பள்ளி மேலைச்சிவபுரி

இவ்வூர்ச் சன்மார்க்க சபை, தொன்று தொட்டு நடத்திவரும் தொடக்கப் பள்ளியில் பயின்ற மாணவர்களை இப்பகுதியெங்கும் காணலாம்.

இப்பள்ளி, சேதுக்கரசி ஆச்சி பழ. சிதம்பரம் செட்டியார் ஆகியோரது கொடையால் தனிக்கட்டிடம் பெற்றுத் தொடக்க உயர் நிலைப்பள்ளியாக வளர்ந்துள்ளது. 541 மாணவ, மாணவியர் பயில்கின்றனர்.

உயர்நிலைப்பள்ளியாக ஆக்க முயற்சி நடைபெற்று வருகிறது.

பழ. பழநியப்பன்

ஸ்ரீ கணேசர் உயர்தொடக்கப்பள்ளி விசுவநாதபுரம், இராமச்சந்திரபுரம்

இது. பி. கு. நா. குடும்பத்தாரால் தொடக்கப்பள்ளியாகத் தொடங்கப்பெற்று, அவர்கள் 25,000 ரூபாய் செலவில் பாங்குற அமைத்துள்ள கட்டிடத்தில் சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டுகளாக நடைபெற்று வருகிறது.

1964 முதல், உயர்தொடக்கப்பள்ளியாக நடைபெற்று வருகிறது.

திருவாளர் வயிரவன் செட்டியார் அவர்கள் இப்பள்ளியின் செயலாளராக இருந்து வருகிருர்கள்.

அ. அண்ணுமலை

வள்ளுவர் பள்ளி குழிபிறை

அரியலூர் இரயில் விபத்தில் இவ்வூர் மு. ராம. மு. பழ. முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்களின் அண்ணன் மகன் 15 வயதில் இறந்துபட்டார். அன்னுரின் நினைவாக இப்பள்ளிக்கு ரூபாய் 15,000 செலவில் மு. மு. ராம சிகப்பி ஆச்சி அவர்கள் கட்டிடம் கட்டிக் கொடுத்தார்கள். 1963 முதல் ஆரும் வகுப்பும் ஏற்பட்டு ஏழு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ''வள்ளுவர் பள்ளி'' என அதற்குப் பெயர் மாற்றம் செய்துள்ளனர். மாணவர் தொகை 230.

ஆறு. மெய்யப்பன்

லெ. அரு. உயர்தோடக்கப்பள்ளி
மாநகரி

இப்பள்ளி 1927-இல் ஏற்பட்டது. இவ்வூர் லெ. அரு. அவர்கள் ரூபாய் 25,000 மதிப்புள்ள கட்டிடம் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அண்மையில் ரூபாய் 9,000 செலவில் ஒரு கட்டிடம் கல்லல் ஊராட்சி மன்ற ஒன்றியத்தினர் கொடுத்த ரூபாய் 4,500 உதவியுடன் - கட்டப்பெற்றிருக்கிறது.

முதல் எட்டு வகுப்புக்களிலுமாக 138 மாணவியரும் 168 மாணவரும் கல்விபயின்று வருகின்றனர்.

திருவாட்டி லெ. அரு. லெ. உண்ணுமுலை ஆச்சி அவர்களின் மேற்பார்வையிலும் பொது மக்களின் ஆதரவிலும் நடைபெற்றுவரும் இப்பள்ளி, நிலக்கரி தோண்டும் முயற்சி திருவினையானபின், மேலும் சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

ச. அற்புதராஜ்,
தலைமையாசிரியரும் செயலாளரும்.

மகளிர் இல்லம் உயர் தோடக்கப்பள்ளி
அமராவதிபுதூர்

இப்பள்ளி ஈசுவர ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்துஎட்டாம் நாளில்(10-4-1938) சீத்திருத்தச் செம்மல் திரு. சொ. முருகப்பா அவர்களால் தம் பொருள் கொண்டும், பிற நகரத்தார்களின் பொருளுதவியோடும் ஆரம்பிக்கப் பெற்றது. இப்பள்ளியில் ஒன்று முதல் எட்டு வகுப்புகள் வரை இருக்கின்றன. மேலும் சிறு பிள்ளைகளுக்காக மாண்டிசோரி பள்ளிக்கூடம் ஒன்றும், ஏழைப் பிள்ளைகளுக்காக இலவசச் சாப்பாட்டு விடுதி ஒன்றும் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. மொத்தம் 350 மாணவர்கள் இங்கு கல்விகற்று வருகின்றனர். சொ. முருகப்பாவின் குமாரர் திரு. வீரபாண்டியன் பி. ஈ., அவர்கள் இப்பள்ளியின் செயலாளராக இருந்து பணியாற்றி வருகிறார்.

மு. வீரபாண்டியன்.

மு. கும. பெரி. பழநியப்பா — ஜானகி ஆச்சி உயர்தரப்பாடசாலை, சேவ்வூர்

இப்பள்ளி இவ்வூர் பழநியப்ப செட்டியார் குடும்பத்தாரால் 1-8-57-இல் நிறுவப்பெற்றது. முதல் ஏழு வகுப்புக்கள் உள்ளன. இரண்டு ஏக்கர்ப் பரப்புள்ள நிலமும் விளையாட்டு மைதானமும் உள்ளன. ரூபாய் 21,000 செலவில் கட்டிடம் கட்டப்பெற்றிருக்கிறது.

மீனாட்சி சிவலிங்கம் பஞ்சாயத்து யூனியன் உயர்தர ஆரம்பப்பாடசாலை, மிதிலைப்பட்டி

ந. பழ. சித. மு. ந. நல்ல கருப்பன் செட்டியார் அவர்களின் கொடை வளத்தால் இப்பள்ளி 1-10-55-இல் ஏற்பட்டு, இவ்வூரிலேயே எட்டாம் வகுப்புவரை படிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இரு பாலருமாக 89 பேர் கல்வி கற்று வருகின்றனர்.

திரு. நல்லகருப்பன் செட்டியார் அவர்கள் ரூபாய் 16,000 செலவில் கட்டிடம் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். பள்ளி ஆண்டுவிழா முதலியவற்றைச் செம்மையாய் நடத்தியும் மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களும் சீர் உடைகளும் வழங்கியும் வருவது குறிப்பாகவும் சிறப்பாகவும் பாராட்டத்தக்கது.

அழ. லெட்சுமணன் செட்டியார்,
மிதிலைப்பட்டி.

யூனியன் உயர்தோடக்கப்பள்ளி
பூலாங்குறிச்சி

15-6-43-இல் மாவட்டக்கழகத் தொடக்கப்பள்ளியாக இது ஏற்பட்டது. பனையப்பட்டி சி. மு. மு. முத்தையா செட்டியாரவர்கள், தன் அருமை மகள் விசாலாட்சி ஆச்சி நினைவாக இப்பள்ளியை நிறுவ ரூ. 10,000 நன்கொடை வழங்கியதால், இப்பள்ளிக்கு ரூ. 20,000 செலவில் மாவட்டக் கழகத்தார் கட்டிடம் கட்டியிருக்கின்றனர்.

யூனியன் தலைவர் வ. செ. சிவலிங்கம் செட்டியார் அவர்கள் முயற்சியால் இப்பள்ளியின் வளர்ச்சிக்கும் புதிய கட்டிடங்களுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

சேவாஸ்ரமம், திருவண்ணாமலை

வேலூருக்குச் செல்லும் நெடுஞ்சாலையை அடுத்து, இந்த ஆசிரமம் 1958-இல் நிறுவப்பெற்றது. ஏழை மாணவர்க்குச் சிறுவர் இல்லத்தில் (ஆர்பனேஜ்) உறைவிடமும் உணவும் வழங்கப்படுகின்றன ; வசதியுள்ளவர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

உயர்துவக்கப்பள்ளி 30-9-1960-இல்தொடங்கப்பெற்றது. 13 ஆசிரியர்களும் 310 மாணவமாணவியரும் உள்ளனர். ரூபாய் 45,000 செலவில் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது.

இதன் மானேஜர் அண்டு கரஸ்பாண்டெண்ட் நகரத்தார் மரபினரும் துறவியும் திருவண்ணுமலை ஈசான்ய மடத்தின் தலைவருமான ஸ்ரீமத் இராமனுத சுவாமிகள் ஆவார்கள். தேவகோட்டை தி. சு. பழ. ப. சிதம்பரம்செட்டியார் அவர்கள், காரைக்குடி எஸ். ஆர். எம். எஸ். நாராயணன் செட்டியார் அவர்கள் உட்பட நகரத்தார் பலர்இந்த ஆசிரமத்தின்புரவலராகவும் போஷகராகவும் உள்ளனர்.

தக்கர் பாபா வித்தியாலயம்
சென்னை

அரிசனங்களுக்காக நடைபெறும் இந்த வித்தியாலயத்தில் ஒரு மண்டபம் நிறுவ டாக்டர் அழகப்ப செட்டியார் ஒன்றேகால் இலட்சம் ரூபாய் வழங்கினர். இம்மண்டபத்திற்கு காந்தியடிகள் கல்நாட்டினர்.

தியாகேசர் ஆலை உயர் தோடக்கப்பள்ளி, மணப்பாறை திருச்சி மாவட்டம்.

மீனாட்சி குடியிருப்பு உயர் தோடக்கப்பள்ளி பரவை, மதுரை மாவட்டம்

தியாகராசர் குடியிருப்புப் பள்ளி, பசுமலை, மதுரை.

மீனாட்சி வித்தியாசாலை, மதுரை.

தியாகராசர் வித்தியாலயம், அழகப்பா நகர், கேரளம்

மேற்கண்ட ஐந்து கல்வி நிலையங்களும் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் வள்ளன்மையால் உருவாகி தியாகராசர் கல்வி நிறுவனத்தாரால் நடத்தப்பட்டு வருகின்றன. விவரங்கள் வந்து சேராமையால், இக்கல்வி நிலையங்களின் பெயர்களை மட்டும் தந்திருக்கிறேம்.

ஹிந்தி—தமிழ்ப்பாடசாலை
பியாப்புவை, பர்மா


பியாப்புவையில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை அமைக்கும் முயற்சி செக்காலை காந்தி மெய்யப்பர் பொருளுதவியாலும் சீரிய எண்ணத்தாலும் நகரத்தார்களின் ஒத்துழைப்பாலும் திருவினையாயிற்று. ஒரு விரிவான இடத்தில் பள்ளிக்கூடம் 1930 முதல் நடைபெறுவதாயிற்று. காந்தி மெய்யப்பரின் மேற்பார்வையில் 1941 இறுதிவரை அதாவது ஆங்கிலேயர் பர்மாவை விட்டு வெளியேறும்வரை இப்பள்ளி சிறப்பாக நடைபெற்றது.

ப. ம. பூமிநாதன்,
தலைமை ஆசிரியர்,
காமராஜ் தேசியப்பாடசாலை,
இரங்கூன்.

ஆங்கிலோ சைனீஸ் ஸ்கூல் டெலுக் ஆன்சன்
மலாசியா.

இந்நகரில் அமெரிக்கர்கள் நிறுவி மலாசியா அரசாங்க ஆதரவுடன் இக்கல்லூரி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நாட்டரசன்கோட்டை வெ. கண. கண்ணப்ப செட்டியார் அவர்கள், தம் தந்தையார் வெள்ளையப்ப செட்டியார் அவர்கள் பெயரால் 25,000 வெள்ளி மதிப்புள்ள நூல் நிலையக் கட்டிடம் கட்டிக் கொடுத்திருக்கிறர்கள். இப்பள்ளியில் ஒரு வகுப்பறை அமைக்க குழிபிறை வ. ராம. சி. சின்னையா செட்டியார் அவர்கள் 2,5000 வெள்ளி வழங்கியுள்ளார்கள்.



உயர்நிலைப் பள்ளிகள்

(HIGH SCHOOLS)

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப்பள்ளி காரைக்குடி

இப்பள்ளி 13-6-1913-இல் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர வித்தியாசாலை என்ற பெயரில் தொடங்கப்பெற்றது. கட்டடம் வழங்கி ஆயுள் காலம் வரை தலைவராக விளங்கியவர் திரு. AV. PL. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஆவார்கள்; அவருக்குப் பிறகு தலைவராக திருவாளர் மெ.செ.ச. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பணி செய்தார்கள். இப்போது தலைவராக இருப்பவர்கள் முத்த. வெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள். பள்ளிச் செயலராக, திருவாளர்கள் முத்த. வெ. வெள்ளையன் செட்டியார், மு. ராம. பெரியணன் செட்டியார், மெ. செ. மெ. மெ. மெய்யப்பச் செட்டியார் ஆகியோர் இருந்தனர். இப்போது மெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் செயலராக இருந்து வருகிறார்கள்.

பள்ளியின் பழைய மாணவர்களுள் டாக்டர் அழகப்பச் செட்டியார் குறிப்பிடத்தக்கவர் ஆவார். ஆணும் பெண்ணும் ஆக, 1,500 மாணவர்கள் பயிலுகின்றனர். ஆசிரியர்கள் எண்ணிக்கை 46.

நகரத்தார்களால் தோற்றுவிக்கப் பெற்ற முதல் உயர்நிலைப்பள்ளி இதுவே ஆகும். காரைக்குடி நகரத்தார்கள் பலர் இப்பள்ளிக்கு உதவியுள்ளனர்.

திரு. அ. மு. க. மு. சித. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள் மனைவி திருமதி இலக்குமி ஆச்சி அவர்களின் நன்கொடையால் ரூபாய் 50,000 செலவில் 'இலக்குமி மாளிகை' 1-6-1964-இல் திறந்துவைக்கப் பெற்றது.

—கவிஞர் முடியரசன்

டாக்டர் அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நன்முறை உயர்நிலைப்பள்ளி அழகப்பாபுரம், காரைக்குடி—3

Dr. Alagappa Chettiar Training College Model High School

ஆறாம் வகுப்பு முதல் 11-ஆம் வகுப்புவரை உள்ள இவ்வுயர்நிலைப்பள்ளி, ஆசிரியப்பயிற்சிக் கல்லூரியின் உறுப்பாக 1951 முதல் நடைபெற்று வருகிறது. 218 மாணவியர் உட்பட 684 இளைஞர் பயிலுகின்றனர். பொறியியல் பாடமும் அலுவலக வேலைப் பாடமும் கற்பிக்கப்படுகின்றன.

V. நாராயணன்
தலைமை ஆசிரியர்.

கல்யாண கிருஷ்ண கழக உயர்நிலைப்பள்ளி
அரியக்குடி

மாவட்டக் கழகத்தார் நடத்திவரும் இவ்வுயர்நிலைப்பள்ளியில் இருபாலரும் பயிலுகின்றனர். இப்பள்ளிக்கான கட்டிடங்கள் முதலியவற்றை உதவ இவ்வூர் இராதாகிருஷ்ணன் செட்டியார் அவர்கள் முன்வந்துள்ளார்கள்.

தே. இலக்குவன்

சுப்பிரமணியன் செட்டியார்
குருகுல உயர்நிலைப்பள்ளி
அமராவதி புதூர்

இப்பள்ளி பிரமோதூத ஆண்டு வைகாசித் திங்கள் 25-ஆம் நாள் காரைக்குடியில் ஒன்று முதல் ஐந்து வகுப்புக்களைக் கொண்ட தொடக்க நிலைப்பள்ளியாகத் தோன்றியது. அப்பொழுது இருபதே மாணவர்கள் இருந்தனர். இக்குருகுலத்தைத் தோற்றுவித்த குலபதி திரு. சா. சு. சுப்பிரமணியன் செட்டியார் ஆவர்.

பின்னர் தாது ஆண்டு கார்த்திகைத் திங்கள் 28-ந் தேதி அமராவதிபுதூரில் சொந்தக் கட்டிடத்தில் இப்பள்ளி இயங்கத் தொடங்கியது. 1936-இல் அரசியலார் இசைவுடன் எட்டாம் வகுப்பு வரை ஏற்பட்டு 300 மாணவர்கள் கல்வி பயின்றனர்.

மாணவர்கள் கொடுத்துவந்த குறைந்த கட்டணத்தில் அவர்களுக்கு உணவு, பள்ளிக் கட்டணம், நூல்கள், உடை, வைத்தியம் ஆகிய வசதிகளும் அளிக்கப்பெற்றன.

1958 முதல் இது உயர்நிலைப்பள்ளியாக நடைபெற்று வருகிறது. ஐந்து முதல் பதினொரு வகுப்புக்கள் வரை உள்ளன. 450 மாணவர்கள் படிக்கின்றனர். 15 மாணவியர் கல்வி பயிலுகின்றனர். இப்பள்ளியுடன் தொன்றுதொட்டு இணைந்து ''குருகுலம்'' (மாணவர் விடுதி) பணிபுரிந்து வருகிறது. கடவுள் உணர்ச்சி, கடமை, ஒழுங்கு, உடல்நலம், சிறப்பான கல்வி முதலிய நலன்கள் மாணவர்கட்கு உண்டாகப் பள்ளியும், விடுதியும் ஒன்றுபட்டு நன்முறையில் உழைத்து வருகின்றன.

இப்பள்ளியை ''சுப்பிரமணியன் செட்டியார் கல்வி அறங்காவலர் குழு'' நடத்தி வருகின்றது. இக்குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டது. இதன் தலைவர் கலைக் காவலர் திரு. ராம. வீர. ராமசாமி செட்டியார் ஆவர். நிர்வாகி சுப்பிரமணியன் செட்டியார் குமாரர் சா. சு. முருகப்ப செட்டியார் ஆவர்.

இப்பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்து ஆவன செய்துவரும் திரு. எஸ். கே. நடராச நாயுனர் அவர்களின் தலைமையில் மாணவர் விடுதியும், சிறுவர்க்கான இரண்டு முதல் நான்கு வகுப்புக்கள் வரை உள்ள தனிப் பள்ளியும் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன.

தலைமை ஆசிரியர் திரு. நா. திருவிக்கிரமன் அவர்களின் குன்றுத ஊக்கமும், ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் கொண்டு ஆண்டுதோறும் பள்ளி இறுதித் தேர்வில் மாணவர்கள் நல்ல வெற்றி பெறுகின்றனர்.

புலவர் சுப. இலக்குவன்

முத்துக்கருப்பன் - விசாலாட்சி நகராட்சி
உயர்நிலைப்பள்ளி
காரைக்குடி

இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட இந்நகர் அரு.மு.மு. அருணசலம் செட்டியார் அவர்களும் இளவல்களும் 1953-ஆம் ஆண்டளவில் ரூபாய் 10,000/- கொடுத்துள்ளனர். நன்கொடையாளரின் பெற்றோர்களின் பெயர்கள் பள்ளிக்கு இடப் பெற்றுள்ளன.

அருணசலம் செட்டியார் உயர்நிலைப்பள்ளி
பள்ளத்தூர்
(A. C. High School, Pallatur)

உயர்திரு உ. அ. பெரி. மு. அருணசலம் செட்டியார் அவர்களின் அருள் உள்ளத்தால் இப்பள்ளி 4-11-1925–இல் தொடங்கப்பெற்றது. செட்டிநாட்டில் நிறுவப்பெற்ற கல்வி நிலையங்களுள் இது பழமையானது. அக்காலத்திலேயே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டப் பெற்றது. $7\frac{1}{2}$ ஏக்கர்ப் பரப்புள்ள விளையாடும் இடமும் அமைக்கப்பட்டது. பருத்தி நெசவு, கோரம்பாய் நெசவு முதலியன கற்பிக்கப் படுகின்றன.

இவ்வுயர்நிலைப்பள்ளி பலரும் பாராட்டும் வகையில் நடைபெற்று இவ்வட்டாரத்தின் கல்விப் பெருக்கத்திற்குக் காரணமாக இருந்து வருகிறது.

எஸ். தோதாத்ரி.

சிட்டாள் ஆச்சி நினைவு உயர்நிலைப்பள்ளி கண்டனூர்

இப்பள்ளி, உயர்திரு. வீ. தெ. வீரப்ப செட்டியார் அவர்களால் தன் அன்னையின் நினைவாக நிறுவப்பெற்றது. இப் பள்ளியின் அடிக்கல் 24-11-1941-இல் நாட்டப்பட்டது. இப்பள்ளி பத்து ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இப்பள்ளிக்கு சுமார் மூன்று ஏக்கர் இடம் கண்டனூர் நகரத்தார்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டது. இப்பள்ளி 1943-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ந் தேதி 250 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று 800 பேர் கல்வி பயின்று வருகின்றனர். 1948-ஆம் ஆண்டில் பொறியியல் வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. 28 ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

இப்பள்ளியில் ஒரு பெரிய விளையாட்டு மைதானம் இருக்கிறது. இலக்கிய இலக்கண அறிவும் தாய்மொழி ஆர்வமும் இப்பள்ளி மாணவர்களிடம் சாலச்சிறந்து காணப்பெறுகின்றன: ஓவியத்துறையில் இந்தப் பள்ளி மாணவர்கள் சிறந்த முறையில் பயிற்சி பெறுகின்றனர். அவர்களால் தீட்டப் பெற்றுள்ள தலைவர்களின் படங்கள் இப்பள்ளியின் இறை வணக்க மண்டபத்தை அலங்கரிக்கின்றன.

இப்பள்ளியை நிறுவிய வீரப்ப செட்டியார் அவர்கள் இப்பள்ளியை நல்ல விதமாகக் கவனித்து வருகிறார்கள்.

இராமனுதன் செட்டியார் உயர்நிலைப்பள்ளி புதுவயல்

இப்பள்ளி இந்நகர் VD.M.RM.இராமனுதன் செட்டியார் அவர்கள் பெயரால் அவர் மகன் முத்தையா செட்டியார் அவர்கள், பேரன் இராமனுதன் செட்டியார் அவர்கள் ஆகியோரால் 17—6—63-இல் நிறுவப்பெற்றது. 6, 7, 8, 9, வகுப்புகள் அப்போது தொடங்கப்பெற்றன. 1964-இல் பத்தாம் வகுப்பு தொடங்கப் பெறும். இப்பொழுது 250 மாணவர்களும் எட்டு ஆசிரியர்களும் உள்ளனர்.

பள்ளி ஆட்சியினராகிய நாங்கள் இவ்வூரிலுள்ள தொடக்கப்பள்ளி ஒன்றையும் எடுத்து நடத்தி வருகின்றோம். இதில் முதல் ஐந்து வகுப்புகளில் 235 பேர் படிக்கின்றனர்.

உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசாங்கத்தின் துணைகொண்டு எட்டு ஏக்கர் 59 சென்டு இடம் வாங்கப் பெற்றிருக்கிறது.

இவ்வுயர்நிலைப்பள்ளி ஏற்பட்டதால் கல்வி அறிவைப் பருக நாள்தோறும் கண்டனூருக்கு நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் நடந்து செல்ல வேண்டியநிலை தவிர்க்கப் பெற்றிருக்கிறது. அடுத்த சில ஆண்டுகளுக்குள்ளேயே இப்பள்ளி பெரு வளர்ச்சியடைய மீனாட்சியம்மையின் திருவருளை வேண்டுகிறோம்.

ராம. மு. இராமனுதன்
கரஸ்பாண்டென்ட்.

விசாலாட்சி உயர்நிலைப்பள்ளி ஆ. தெற்கூர்

கலையுலகை வாழ்விக்கும் வணிகர் கோமான்;
கவின்தமிழர்; தொழிலதிபர்;
முதன்மை பெற்றார்
மலையானதிண் ணெஞ்சர்; மாரி போன்றார்;
மணையரசி நினைவாய்இப் பள்ளி தந்தார்;
நிலையோங்கித் 'தமிழ்நாடு' நிலவச் செய்வோர்
நீள்புகழ்க் கல்லூரிபல நித்தம் காண்பார்;
தலையாய பெருவள்ளல் தியாக ராசர்
தமிழ்த்தாயின் அருமந்த செல்வர் வாழி!

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள இவ்வுயர்நிலைப்பள்ளி 10—7—1947-இல் எட்டாம் வகுப்புவரை உள்ள பள்ளியாக அரும்பி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி பெற்று வருகிறது. ஆண்டுதோறும் மாணவர் தொகை பெருகவே, ஊக்கமும் உள்ளக்கிளர்ச்சியும் கொண்ட கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய கண்டார் வியக்கும் மாளிகை போன்ற பெருங் கட்டடத்தை இவ்வுயர்நிலைப்பள்ளிக்கு அமைத்துள்ளார்கள்.

இக்கட்டிடத்திற்கு ரூபாய் 4,32,138 செலவாகியிருக்கிறது. 36 ஏக்கர்ப் பரப்புள்ள இடம் பள்ளிக்கு வழங்கியுள்ளனர். இக்கட்டிடம், ஜவஹர்லால் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பெற்றுப் பொலிவுடன் விளங்குகிறது.

அன்புரு மனைவியின் அரும்பெயர் விளங்கக்
கருமுத்து தியாக ராசன் கவின்பெற
அமைத்த விசாலாட்சி உயர்கலா சாலை
நற்கலைக் கோயிலின் பொற்புடைக்
கூடத்தைச்
சீரிளஞ் சிறுர்கள் சிறந்து பயிலப்
பாரத அமைச்சின் தலைமணி
நேரு பெருமகன் திறந்தனர் மகிழ்ந்தே.

15—4—1959.

பொறியியல் பாடமும், பயிர்த்தொழிற் பாடமும் சிறப்பாகப் படிப்பதற்கு இப்பள்ளியில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. நூல்நிலையத்தில் 9,800 நூல்கள் உள்ளன. ரூபாய் 1,42,000 செலவில் மாணவர் உணவு விடுதி கட்டப்பட்டுள்ளது. சுற்று வட்டத்திலுள்ள ஊர்களிலிருந்து மாணவர்கள் நாள்தோறும் பள்ளி உந்துவண்டியில் அழைத்துவரப் பெறுகின்றனர்.

மாவட்ட ஆக்கிப் பந்தயங்களில் இப்பள்ளி மாணவர்கள் பல ஆண்டுகள் பரிசு பெற்றிருக்கின்றனர். ஆண்டுதோறும் பண்டிதமணி நாள் இப்பள்ளியில் கொண்டாடப்படுகிறது.

பெண்கள் உயர்நிலைப்பள்ளி தனியே இயங்கி வருவதால் ஆடவர் மட்டுமே இப்பள்ளியில் சேர்த்துக்கொள்ளப் பெறுகின்றனர்,

இப்பள்ளி ஆட்சியிலும் வளர்ச்சியிலும், ஆட்சிக்குழுத் தலைவர் கருமுத்து. தி. சுந்தரம் செட்டியாரவர்கள் பேரார்வம் காட்டி வருகிறுர்கள்.

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி ஒருமுறை எழுதியதுபோல, கல்வி நிலையங்களால் புகழ் பெற்று,

“ஆ. தெற்கூர் என்று
ஊர் ஒன்றிருக்குதாம்—அதன்
அருமை பெருமை உரைத்தற்
கரிதாம்!—ஆ! ஆ!”

என்று தமிழகத்தில் பலரும் பாடக்கூடிய காலம் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

பி. ஆர். வீரப்பன்
தலைமை ஆசிரியர்

ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரர் உயர்நிலைப்பள்ளி கீழச்சிவற்பட்டி

அரசியலார் பொருள் உதவியை நாடாத, பண்டை முறையில் முற்றிலும் ஒரு தமிழ்ப் பள்ளியாக 4—9—1925-இல் தொடங்கப் பெற்று, மீனுட்சி சுந்தரேஸ்வரர் கலாசாலை என்ற பெயரால் மூன்று ஆண்டுகள் நடைபெற்றது. 1928-ஆம் ஆண்டு துரைத்தனத்தார் அங்கீகாரம் பெற்று, உயரதர ஆரம்பப் பள்ளியாக மாறி, 1949-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30-ந் தேதி வரை இயங்கிவந்தது. பள்ளியின் நிர்வாகம் 1934-ஆம் ஆண்டு வரை உயர்திரு. எ. நா. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள், உயர்திரு. அ. பெரி. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் இருவர் வசமும் பின்னர் தனித்து உயர்திரு. எ. நா. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்களிடமும் இருந்து வந்தது. 1948-ஆம் ஆண்டு பிற்பகுதியிலும், 1949-ஆம் ஆண்டு முற்பகுதியிலும், பொதுவாக இவ்வூர் நகரத்தார் பெருமக்கள் பலராலும், சிறப்பாக உயர்திரு. எ. நா. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் முயற்சியால், 1949-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 9-ஆம் நாள் உயர்நிலைப்பள்ளியாக மாறியது.

நன்கொடை:—கீழச்சிவற்பட்டி பி. அழகாபுரி நகரத்தார்களிடம் ரூபாய் 29,000-மும், இவ்வூர் நகரத்தார் பெருமக்கள் தனிப்பட்டவர்களிடம் ரூபாய் 60,000-மும், அயலூர் நகரத்தார்களிடம் ரூபாய் 6,500-ம், இவ்வூர் மீனுட்சி கிளப் அங்கத்தினர்களிடம் ரூபாய் 3,200-ம், இதர நன்கொடை வகையில் ரூபாய் 11,000 மும், ஆக எல்லா வகையிலும் ரூபாய் 1,09,700 நன்கொடையாகப் பெற்றிருக்கிறது.

மேலும், வகுப்பறை பற்றுக்குறை காரணமாக, பள்ளிக்குப் பின்புறத்தில், உயர்திரு. எ. நா. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்களிடமிருந்து ரூபாய் 5,500 நன்கொடை பெற்று இருவகுப்பறைகள் கட்டப்பெற்றன.

சில ஆண்டுகளுக்குப் பிறகும், வகுப்பறைகள் பற்றுக்குறை வந்ததால் பள்ளிக்குப் பின்புறமுள்ள அள. மு. உள்ளிட்டார் இடத்தில், அவர்களிடம் கட்டிடம் கட்ட அனுமதி பெற்று, அரசாங்கத்தாரிடம் ரூபாய் 10,000-மும் பெற்று, கீழச்சிவற்பட்டி, பி. அழகாபுரி, விரா

மதி, சிறுகூடற்பட்டிப் பெருமக்கள் ஜவரிடம் நன்கொடை பெற்று, ஐந்து வகுப்பறைகள் கொண்ட ஓர் அழகான கட்டிடம் கட்டப் பெற்றது. மேலும் அள. மு. உள்ளிட்டார் $5\frac{1}{2}$ ஏக்கர் இடத்தை பள்ளிப் பிள்ளைகள் விளையாட சில நிபந்தனைகளின் பேரில் அனுமதி தந்திருக்கிறார்கள்.

இப்பொழுது பள்ளியில் 450 மாணவர்களும், 150 மாணவிகளும் கல்வி பயின்று வருகின்றனர். பள்ளியில் பணியாற்றுவோரின் எண்ணிக்கை 27 ஆகும்.

தேர்வு முடிவுகள், கட்டுப்பாடு ஆகிய எல்லா வகையிலும், பள்ளி முன்னேற்றமடைந்திருப்பதற்குக் காரணம் நிர்வாகக்குழுவின் அருஞ்சேவையும், தலைமை ஆசிரியர், ஆசிரியப் பெருமக்களது உழைப்புமே.

எங்கள் பள்ளித் தலைவர் உயர்திரு. எ. நா. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்களாலும் செயலாளர் உயர்திரு. அள. அ. மு. கரு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்களாலும், இதர நிர்வாகக்குழுவின் அங்கத்தினர்களாலும் நகரப் பெருமக்களாலும், தலைமை ஆசிரியர் உயர்திரு. ஓ. சிவராமபிள்ளை அவர்களாலும், பள்ளி மேன்மேலும் நற்புகழோடு விளங்க ஆண்டவன் அருள்புரிவானாக!

இராம. அழகப்பன்

ஸ்ரீ தண்டாயுதபாணி உயர்நிலைப்பள்ளி கண்ட மாணிக்கம்.

25—1—1933-ல் தொடங்கப்பட்ட இப் பள்ளி மூன்றாண்டுகள் ஆரம்பப் பள்ளியாக இருந்து, பின் உயர்திரு.பெரி.சுப. நாராயணஞ் செட்டியார் அவர்களின் அரும் பெரும் முயற்சியால் 1936-ல் ஓர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியாக அரும்பியது. உயர்திரு. பெரி. பெரி. சுப. பெரியகருப்பன் செட்டியார் அவர்களின் தனிப் பெரு முயற்சியால் 1951-ல் நடுத்தரப் பள்ளியாகவும், 1953-ல் உயர்நிலைப் பள்ளியாகவும் மலர்ந்து 1954—55-லிருந்து முற்றுப் பெற்ற உயர்நிலைப் பள்ளியாய் மணம் வீசி நிற்கிறது.

இவ்வாண்டு இப்பள்ளியில் 346 மாணவர்களும், 134 மாணவிகளும் ஆக 480 பிள்ளைகள் கல்வி பயின்றுவருகின்றனர்.

நூல் நிலையத்தில் 5674 நூல்கள் உள்ளன.

விஞ்ஞானம் ஆய்வுக்கூடத்தில் ரூ. 3000-க்கு மேலான விஞ்ஞானக் கருவிகள் இருக்கின்றன. பள்ளிக்குச் சொந்தமான 'புரொஜக்டர்' (Sound-Projector) உள்ளது. ஆண்டு தோறும் ''Film Strips'' வாங்கப்படுகின்றன.

இப்பள்ளி நன்முறையில் நடைபெற ரூ. 75,000-மதிப்புள்ள சொத்துக்களை நன்கொடையாக அளித்ததுமல்லாது, அவ்வப்போது வேண்டும் நிதியுங் கொடுத்து, இக்கல்வி நிலயம் வளர அரும்பாடுபடும் நம் பள்ளிக்காப்பாளர் உயர்திரு. பெ. பெரி. சுப. பெரியகருப்பஞ் செட்டியார் அவர்களின் வள்ளன்மையை என்னென்று போற்றுவது!

ஆண்டு தோறும் நிர்வாகத்திற்கென ரூ. 5000-க்கு மேல் உபரிச்செலவிட்டு வருகிறார்கள். இப்பள்ளிக் கட்டிடத்தின் முன்புறமும் கீழ்ப்புறமும் உள்ள நிலப்பகுதிகளை அரசினரின் துணையுடன் நில ஆர்ஜிதம் செய்ய முயன்று அதில் முடிவு காணும் நிலையில் உள்ளனர்.

விளையாட்டுகளுக்கெனச் சுமார் ஐந்து ஏகர் பரப்புள்ள பெரிய திடலையும், விவசாயத் தொழிற் பயிற்சிக்கென நிலபுலன்களையும், அழகிய பள்ளிக் கட்டிடத்தையும் பெற்றுச் சிறப்புற விளங்குகிறது இப்பள்ளி.

21 ஆசிரியர்களும் 2 ஆசிரியைகளும் பணி புரிகின்றனர். மாணவர்கள் முன்னேற்றம் கருதி உழைத்து வரும் நிர்வாகி அவர்களும் அன்னார் மகன் சுப்பிரமணியன் அவர்களும் நற்பெயர் ஈட்டி வருகின்றனர்.

சாத்தப்பா கழக உயர்நிலைப்பள்ளி நெற்குப்பை

இப்பள்ளி இவ்வூர் சாத்தப்பா குடும்பத்தாரின் வள்ளன்மையாலும் தொடக்கச் செலவுக்காக சா. பழ. மு. சா. நாச்சம்மை ஆச்சி அவர்கள் அன்புடன் அளித்த ரூபாய் 8,200 நன்கொடையாலும் 11—6—1956-இல் இராமநாதபுர மாவட்டக் கழகத்தாரால் தொடங்கப் பெற்றது.

வேந்தன்பட்டிச் சாலையில் ஆறு ஏக்கர்ப் பரப்புள்ள இடமும் கட்டிடமும் ராம. சா. குடும்

பத்தாரால் வழங்கப்பெற்றுள்ளன. இவற்றுக் காக இவர்கள் ரூபாய் 50,000 செலவிட்டுள்ளது பாராட்டுதற்குரியது. 19—4—1961 முதல் பள்ளி, புதிய கட்டிடத்தில் நடைபெற்று வரு கிறது. அதற்கு முன்னர், ராம. சா. குடும்பத் தார் ஏறத்தாழ நூறு ஆண்டுகளாக நடத்தி வரும் தரும மடத்துக் கட்டிடத்தில் பள்ளி நடை பெற்று வந்தது.

இப்போது 272 மாணவ மாணவியர் கல்வி கற்று வருகின்றனர். 1963-இல் பள்ளி இறுதித் தேர்வில் 93% மாணவர்கள் வெற்றி பெற்றனர். ஹரிஜன விடுதி அமைக்கத் திட்டம் உளது.

பள்ளியின் ஆட்சி, கலெக்டர் அவர் களுடைய மேற்பார்வையிலும் தனிக் கல்வி அதிகாரி அவர்களுடைய ஆணைக்குட்பட்டும் இருந்து வருகிறது. ராம. சா. குடும்பத்தாரின் பொருளுதவியுடன் ஆண்டு விழாக்கள் சிறப் பாக நடைபெற்று வருகின்றன.

ராமசாமி,
தலைமை ஆசிரியர்.

என். எஸ். எம்.வி.பி. எஸ். உயர்நிலைப்பள்ளி தேவகோட்டை

தேவகோட்டை நகரத்தார்கள் 1921-இல் இப்பள்ளியை நிறுவி, இதை நடத்துவதற் கென்று ஒரு சங்கமும் ஏற்படுத்தினர். சங்கத் தின் பெயரால் 'நகரத்தார் ஸ்ரீ மீனாட்சி வித்தியா பரிபாலன சங்கம் உயர்நிலைப்பள்ளி' என்று பள்ளிக்குப் பெயரிடப்பெற்றது.

1926-இல் இது முற்றுப்பெற்ற உயர்நிலைப் பள்ளி ஆயிற்று. 1945-இல் விசாலமான கட்டி டமும் பரந்த விளையாட்டு மைதானமும் ஏற் பட்டன,

அ. ராம. அ. லெ. அ. முத்துவீரப்ப செட்டியார்,
கரஸ்பாண்டண்டு,

S. RM. S. சாத்தப்ப செட்டியார் உயர்நிலைப்பள்ளி சண்முகநாதபுரம்

இது 1—6—1960-இல் பி. எஸ். எஸ். சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் உயர் தொடக்கப் பள்ளியாகவும் 13—7—1963-இல் உயர்நிலைப்பள்ளியாகவும் ஆக்கப்பெற்றது. திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களைத் தலைவராகவும் சண்முகநாதபுரம் S. RM. சாத்தப்ப செட்டியார் அவர்களைச் செயலாள ராகவும் கொண்ட ஆட்சிக் குழுவினரால் பி. எஸ். சாத்தப்ப செட்டியார் நினைவு அறநிலை யத்தின் நிதியுதவியுடன் சிறப்பாக நடத்தப்படு கிறது.

அரு. சோமசுந்தரன், எம்,ஏ.,பி.டி.,
தலைமை ஆசிரியர்.

கல்லல் முருகப்பா உயர்நிலைப்பள்ளி கல்லல்

1947-ம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் தேதி கல்லல் முருகப்பா உயர்நிலைப்பள்ளி துவக்கப் பட்டது.

ஆ.மு. ஆ.முரு. முருகப்ப செட்டியார், முரு. சுப. மலையாண்டி செட்டியார், முரு.சுப.மாணிக் கம் செட்டியார், முரு. பழ. குழந்தைவேலன் செட்டியார் ஆகிய நான்கு பேர்கள் கொண்ட குழு, பள்ளியை நிர்வகித்து வருகிறது. இப் பொழுது ஆ. மு. ஆ. முரு. முருகப்ப செட்டி யார் அவர்கள் கரஸ்பாண்டெண்டாக இருந்து வருகிறார்கள்.

பள்ளிக்கு ரூபாய் 35,000-க்கு எண்டோ மெண்ட் வைத்திருக்கிறார்கள்.

பள்ளி, ஆ. மு. ஆ. முரு. குடும்பத்தாரால் கட்டப்பட்ட பள்ளிக்கூடம், ஒரு வாடகைக் கட்டிடம், ஆகிய இரண்டு கட்டிடங்களில் நடந்து வருகிறது.

1949 ஆம் ஆண்டு முதல் மேல் வகுப்பு மாணவர்களுக்கு பொறியியல் (என்ஜினியரிங்) கல்வி போதிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு 429 மாணவர்களும் 92 மாணவிகளும் படித்து வருகிறார்கள். 22 ஆசிரி யர்கள் பணியாற்றி வருகிறார்கள். சென்ற ஆண்டு நம் பள்ளியில் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு சென்ற 44 மாணவர்களில் 23 பேர்கள் தேர்வு பெற்றார்கள்.

கரஸ்பாண்டெண்ட் முருகப்ப செட்டியார் அவர்களின் தகப்பனார் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியாரவர்கள் பெயரால் இந்தப்பள்ளி நிறுவப்பெற்றுள்ளது.

எஸ். தர்மராஜன்,
தலைமை ஆசிரியர்.

இராமசாமி செட்டியார் நினைவு உயர்நிலைப்பள்ளி
நடராசபுரம்

இவ்வூர் முரு. இராம. முரு. இராம. முருகப்ப செட்டியார், முரு. இராம. முரு. இராம. இராமனுதன் செட்டியார் ஆகியோருடைய முயற்சியால் 26—1—62-இல் உயர்நிலைப்பள்ளி தொடங்கப்பெற்றது. தொடக்க ஆண்டில் 6, 7, 8, 9-ஆம் வகுப்புக்களுடனும் ஒன்பது ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது பத்தாம் வகுப்புவரை இருக்கிறது. 92 ஆண்களும் 41 பெண்களும் கல்வி கற்கின்றனர்.

ஏழை மாணவர்கள் எள்ளளவும் இன்னல் இன்றிப் பன்னரும் கலைஞானத்தால் திகழ அவர்களுக்கு வேண்டிய புத்தகங்களை இலவசமாக அளிப்பதும், அவர்களுக்கு உணவு, உறையுள் முதலியன கொடுப்பதும் குறிப்பிடத்தக்கது.

தங்கள் தந்தையின் நினைவுக்கு அறிகுறியாக நிர்வாகிகளால் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளி அம்பலவாணன் அருளால் மேன்மேலும் சிறப்பதாக! அவர்களுடைய அரிய பெரிய திட்டங்கள் நிறைவேறுவதாக!

வீர. இலக்குமணன்,
தலைமை ஆசிரியர்.

ச. ராம. உயர்நிலைப்பள்ளி
நாட்டரசன்கோட்டை

இப்பள்ளி 1929-இல் நடுநிலைப்பள்ளியாகத் தோன்றி 1—7—1940 முதல் உயர்நிலைப்பள்ளியாகத் திகழ்கிறது. இப்போது 14 செக்ஷன்கள் உள்ளன. மாணவ மாணவியர் எண்ணிக்கை 569.

பள்ளி நிறுவிய இராமனுதன் செட்டியார் அவர்கள் பெயராலேயே பள்ளி நடைபெற்று வருகிறது. முப்பதாண்டுகளுக்குமேல் பள்ளியின் வளர்ச்சியில் அக்கறை காட்டிய அப்பெருமகனுர் 29—5—1960-இல் இறைவன் திருவடி நிழலை எய்தினுர்கள். அதன்பிறகு, அவர்தம் மக்களாகிய இராமசாமி செட்டியார், சங்கர நாராயணன் செட்டியார், சிதம்பரம் செட்டியார் ஆகியோர் பள்ளியை மேற்பார்த்து வருகின்றனர்.

ஐந்து ஏக்கர் பரப்புள்ள இடத்தில் 2½ இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிக் கட்டிடம் கட்டப்பெற்றது. இதில் ரூபாய் 35,000 மட்டும் அரசினர் வழங்கினுர்கள்.

அண்மையில் அரசினர் அளித்த ரூபாய் 16,500 உடன் ரூபாய் 11,500 செலவிட்டு, பள்ளி நிர்வாகிகள் ரூபாய் 28,000 செலவில் பொறியியல்கூடம் கட்டினர். இவை தவிர ரொக்கமாக ரூபாய் 7,000-ம் இலங்கையில் தென்னந்தோப்பும் இராமநாதன் செட்டியார் அவர்களால் பள்ளிக்கு மூலதனமாக எழுதி வைக்கப்பெற்றன. இலங்கைத் தென்னந்தோப்பு ரூபாய் 65,000-க்கு விற்கப்பட்டு பள்ளியின் நிதியாக இருந்து வருகிறது.

பள்ளியின் கரஸ்பாண்டண்டு தேவகோட்டை வழக்கறிஞர் ஆர். சீனிவாச அய்யங்கார் அவர்கள் ஆவார்கள்.

எம். கே. இராமமூர்த்தி, பி. ஏ., எம். ஈடி
தலைமை ஆசிரியர்.

கூராண்டான் செட்டியார் கழக உயர்நிலைப்பள்ளி
கீழப்பூங்குடி

இப்பள்ளி 21—6—63–இல் ஏற்பட்டது. ஆறும் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை 200 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

இவ்வூர் நகரத்தார்கள், தங்களுக்குரிய மிளகாய்சுவாமி கோயில் விடுதி என்னும் பெரிய மாளிகையைப் பள்ளிக்கூடத்திற்கு வழங்கியுள்ளனர். கூராண்டான் செட்டியார் குடும்பத்தினரும் பொருளுதவி செய்து பள்ளியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றனர்.

எஸ். வெள்ளையப்பன்

அரசர் உயர்நிலைப்பள்ளி
சிவகங்கை

இப்பள்ளியின் ஒரு மண்டபம் கட்ட ஏற்பட்ட ரூபாய் 14,000 செலவில் பாகனேரி பெரி. அழ. மு. மு. குடும்பத்தார் ரூபாய் 6,000 நன்கொடை வழங்கியுள்ளனர்.

ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் உயர்நிலைப்பள்ளி (O. V. C. High School) மானுமதுரை

மானுமதுரை வித்தியா அபிவிருத்தினி சங்கத்தார் நடத்திவந்த 'இந்து நடுநிலைப்பள்ளி'க்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலையில், ஒக்கூர் சி. கரு. சி. கரு. சிந்தாமணி செட்டியார் அவர்களும், அவர்தம் இளவல்களான அடைக்கப்ப செட்டியார் அவர்களும், அருணுசலம் செட்டியார் அவர்களும் 1920-இல் பள்ளியை நடத்தும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக் கொண்டனர். அதன் பயனாய் அவர்கள் தந்தையாரின் புகழ் இப்பள்ளியின் வாயிலாக நின்று நிலவி வருகிறது.

1924-இல் இப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப் பெற்றது.

1935-இல் 87,000 ரூபாய் செலவில் இப்பள்ளிக்கு தோற்றப் பொலிவுடன் கூடிய சிறந்ததோர் கட்டிடம் கட்டப்பெற்றது. விளையாடுவதற்கு ஐந்து ஏக்கர்ப் பரப்புள்ள இடம் வாங்கப்பெற்றது. 67 மாணுக்கியர் உட்பட 918 பேர் கல்வி பயின்று வருகின்றனர். ஆசிரியர் எண்ணிக்கை 32.

பள்ளியை மேற்பார்வை செய்து நிதி பற்றுக்குறையைத் தம் பொருளிலிருந்து ஏற்று வருபவர்கள், செயலர் ஆத. கருப்பஞ் செட்டியார் அவர்களும், சிந்தாமணி செட்டியார் அவர்களும் ஆவார்கள்.

இப்பள்ளி நிர்வாகிகள் தொடக்கப்பள்ளி ஒன்றையும் நடத்தி வருகின்றனர். இவ்விரு கல்வி நிலையங்களும் மானுமதுரையின் சுற்றுப்புற மக்களுக்கு பெருந்தொண்டு புரிந்து வருகின்றன.

இராமச்சந்திரன்,
தலைமை ஆசிரியர்.

வலம்புரி வடுகனுதன் உயர்நிலைப்பள்ளி பொன்னமராவதி

இவ்வுயர்நிலைப் பள்ளி வலம்புரி வடுகநாதன் செட்டியார் குடும்பத்தாரால் 20ஆண்டுகளுக்குமுன் தொடங்கப்பெற்றது. இக்குடும்பத்தார், இப்பகுதியில் பெரும்புகழும் செல்வாக்கும் உடையவர்கள். இப்பள்ளிக்கு ரூ 75,000 மூலதனம் வைத்துள்ளனர்.

1954 அளவில், இப்பள்ளிக்குச் சிறந்த முறையில் கட்டிடங்கள் கட்டப் பெற்றன. மாணவ மாணவிகள் ஏறத்தாழ ஓராயிரம் பேர் படிப்பதால், இது இவ்வட்டாரத்தின் பெரிய பள்ளிகளுள் ஒன்ருகத் திகழ்கிறது.

வடு. வைரவன் செட்டியார், வடு. இலக்குமணச் செட்டியார், வடு. நாகப்ப செட்டியார், வடு. வடுகநாதன் செட்டியார் ஆகிய நான்கு சகோதரர்களும் தங்கள் தந்தையார் பெயரால் இப்பள்ளியையும் தங்கள் தாயார் பெயரால் அலர்மேலு பெண் கல்லூரியும் நிறுவியுள்ளனர்.

இராங்கியம் ஸ்ரீ சிவகாமி அம்பாள் உயர்நிலைப்பள்ளி இராங்கியம்

இராங்கியத்தில் வெகு காலமாக ஓலைச்சுவடியும் திண்ணைப் பள்ளிக்கூடமுமாக இருந்து வந்த 5, 6 பள்ளிகளை முதலில் இணைத்துஇராங்கியம் அம்பிகையின் பெயர் கொண்ட "ஸ்ரீ சிவகாமி அம்பாள் வித்யாசாலை" என்றதோர் ஆரம்பப்பள்ளி 11-3-1944-இல் 5 வது வகுப்பு வரை தொடங்கப் பெற்றது. பின்னர் முதல் மூன்று படிவங்கள் தொடர்ந்து ஆரம்பமாகி மூன்ரும்படிவம் வரை ஸ்ரீ சிவகாமி அம்பாள் செகண்டரிப் பள்ளியாகத் திகழ்ந்து வந்தது. அப்பால் 17-6-1949-இல் உயர்நிலைப்பள்ளியின் அடிச்சுவடாக நான்காம் படிவம் ஆரம்பமாயிற்று.

நகரத்தார் பலரின் விடாமுயற்சியாலும் ஒத்துழைப்பாலும் நன்கொடைகள் வசூலிக்கப் பெற்று திரு. நா. அ. அண்ணுமலை செட்டியார் அவர்களின் சீரிய மேற்பார்வையில் 80,000/– செலவில் புதிய கட்டிடம் கட்டப்பெற்றது.

1951-52-ஆம் ஆண்டு முதல் 6 வது படிவம் ஆரம்பிக்கப் பெற்று ஒரு பூரண உயர்நிலைப்பள்ளியாகத்திகழ்ந்துவருகிறது.இப்போது திரு. நா. அ. நாகப்ப செட்டியாரவர்களின் ஒப்பற்ற நிர்வாகத்தால் சுமார் 300 மாணவ மாணவிகளுடனும் 15 ஆசிரியர்களுடனும் இப்பள்ளி இப்பகுதியிலேயே ஒப்பற்றதோர் உயர்

நிலைப்பள்ளியாக அரசாங்கத்தாரின் நிரந்தர அங்கீகாரம் பெற்றுச் சிறந்த முறையில் செய லாற்றி வருகிறது.

வெளியூர் மாணவ மாணவியர் இங்குவந்து கல்வி பயில்வதற்கு வசதியாக இப்பள்ளியில் ஓர் உந்துவண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. இருபாலருமாக 300பேர்படிக்கின்றனர்.

இவ்வுயர்நிலைப்பள்ளியின் கட்டிடங்களும், பூங்காவும் பணயப்பட்டிச்சாலையின் அருகே பொலிவுடன் அமைந்துள்ளன. நா. அ. அண் ணாமலை செட்டியார் அவர்களுடைய சீரிய மேற் பார்வையில் கட்டிடங்கள் கட்டப்பெற்றன. அன்னார் மகன் நாகப்ப செட்டியார் அவர்கள் இப்பள்ளியின் செயலராக இருந்து பள்ளியின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

அழ. லெட்சுமணன் செட்டியார்,
மிதிலைப்பட்டி.

இராமசாமி செட்டியார் உயர்நிலைப்பள்ளி அண்ணாமலைநகர்

இக்கல்வி நிலையம் 26-6-1944-இல், முதல் படிவத்துடன் நடுநிலைப்பள்ளியாக ஏற்பட்டு, 1945-இல் உயர்நிலைப்பள்ளி ஆயிற்று. இதை நிறுவிய பெருங்கொடை வள்ளல் செட்டிநாட்ட ரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஆவார்கள். உயர்நிலைப்பள்ளியாக மாறிய போது, தம் சொந்த மாளிகையான 'இந்தியன் கெஸ்ட் ஹவுஸ்' என்ற கட்டிடத்தை அரசர் அவர்கள் பள்ளிக்கு அன்பளித்தார்கள்.

இப்பொழுது மாணவர்கள் 267, மாணக் கியர் 117. ராஜா சர் அண்ணாமலை செட்டி யார் டிரஸ்ட், இப்பள்ளியை நடத்தி வருகிறது.

இப்பள்ளி டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் மேற்பார்வையில் சீரிய முறையில் இயங்குகிறது. தென்னார்க் காடு மாவட்டத்தில் ஒழுக்கம், படிப்பு முதலிய வற்றில் முன்மாதிரியாக இருந்து வருகிறது. டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் உத வியால் இப்பொழுது ரூபாய் இரண்டரை இலட் சத்தில் பள்ளிக்கட்டிடங்கள் கட்டப்பட இருக் கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புக்குச் செல்ல இருக்கின்ற மாணவர் களுக்கு அவ்வெல்லையில் அமைந்த இப்பள்ளி "ஏணி" போல அமைந்திருக்கிறது.

பல்கலைக் கழகம் அருகே உள்ளதால் இங்கு படித்துவரும் மாணவர்கள் திறமையும், முன்னேறிச்செல்ல வேண்டும் என்ற அவாவும் உடையவர்களாக விளங்குகின்றார்கள். நான்கு ஆசிரியர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளி யில் இப்பொழுது பதினாறு ஆசிரியர்கள் பணி யாற்றி வருகின்றார்கள்.

பேராசிரியர் திரு. எஸ். எம். லெட்சுமணன் செட்டியார் அவர்கள் இதன் கரஸ்பாண்டண்டு ஆக இருந்து வருகிறார்கள். வித்துவான் எஸ். சோமசுந்தரம், எம். ஏ., எல். டி., தலைமையில் இப்பள்ளி கட்டுப்பாடு நிறைந்ததாக விளங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் கூடுதலாக மாணவர் தேர்ச்சி பெற்றதற்கு உரிய கேடயம் பல ஆண்டுகளில் இப்பள்ளிக்குக் கிடைத்திருக் கிறது.

ஆறு. அழகப்பன்

இந்துமத பாடசாலை வாலாஜாபாத்

உழைப்பின் உருவமாய் விளங்கும் 'அப்பா' வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களின் அயரா முயற்சியால் 40 ஆண்டுக் காலமாக வளர்ந்து, தமிழ்கூறு நல்லுலகெங்கும் புகழ் பெற்றுள்ள இக்கல்வி நிலையத்தின் தொடக்க கால வரலாற்றில் நகரத்தார்களுக்கும் சிறுபங்கு உண்டு.

கானாடுகாத்தான் சா. ராம. அரு. ராம. அவர்களும் காரைக்குடி ஏவி. எம். அவர் களும் சிராவயல் மு. சோம. அவர்களும் இப் பள்ளிக்கு நன்கொடைகள் வழங்கியுள்ளனர். கொத்தமங்கலம் ராமன் செட்டியார் அவர்கள், இப்பாடசாலையில் விருந்தினர் மாளிகை அமைத் துள்ளனர்.

வாழ்ந்து முறிந்து, தாயும் தந்தையும் இன்றி வருந்தும் நகரத்தார் மாணவர் 10 பேர் இப்பள்ளியில் உணவும் உறையுளும் பெற்றுப் படித்துவருகின்றனர்.

நாச்சியப்பா கழக உயர் நிலைப் பள்ளி செம்பொன்னூர் (செம்பனூர்)

இவ்வூர் கும. நா. சுப. மா. குடும்பத்தார் நிறுவி உயர் தொடக்கப்பள்ளியாக நடத்தி

அரசினரிடம் இக்கல்வி நிலையத்தை ஒப்புவித்தனர். இது இப்போது உயர்நிலைப்பள்ளியாக ஆக்கப் பெற்றிருக்கிறது.

உ. இ. மு. முத்தையா அம்பலம் கழக உயர்நிலைப்பள்ளி, பாகனேரி

மாவட்டக் கழகத்து உயர்தொடக்கப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக்க இவ்வூர் நகரத்தார்கள் ரூ. 5000-ம் நாட்டார்கள் ரூ. 5,000-ம் வழங்கினர். உயர்நிலைப் பள்ளிக்குரிய கட்டிடம் கட்ட முத்தையா அம்பலம் அவர்கள் முன் வந்தார்கள்; அன்னார் பெயர் பள்ளிக்கு இடப் பட்டது.

ஸ்ரீபூமீஸ்வரசுவாமி இலவச உயர்நிலைப்பள்ளி இராமச்சந்திரபுரம்

இப்பள்ளி இந்நகர்ச் செல்வரும் அறச் செயல்களால் அழியாப் புகழ் பெற்று என்றும் மக்கள் உள்ளங்களில் குடிகொண்டிருப்பவரு மாகிய பெருந்தகை சொ. தீ. நாகப்ப செட்டியார் அவர்களின் கொடையாகும்.

இது 9-7-1917-இல் தோன்றிற்று. உயர் நிலைப்பள்ளிப் படிப்பை அரசாங்கத்தார் இலவசமாக ஆக்கியது 1964-இல். இந்நிகழ்ச்சிக்கு 47 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வாறு எண்ணி, எண்ணியதைச் செயல் படுத்திய சிறப்பு, வள்ளல் சொ. தீ. நா. அவர்களைச் சேரும்.

கட்டிடங்களுக்கும் தளவாடங்களுக்குமாக அவர்கள் அக்காலத்தில் செலவிட்ட தொகை ஒன்றே முக்கால் இலட்சம் ரூபாய் ஆகும் (இன்றைய விலையளவில் இது ஆறு இலட்சத்துக்கு மேற்பட்டதாகும்) பிற செலவுகள் மேலும் இரண்டு இலட்சம் ரூபாய் ஆகும்.

பௌதீக, இரசாயன ஆய்வுக்கூடங்களுக்குப் பொருள்கள் வாங்க நேர்ந்தபோது, புதுக் கோட்டை அரசர் கல்லூரி ஆய்வுக்கூடங்களில் இருந்தது போன்றே, உயர்நிலைப்பள்ளிக்கும் எல்லாப் பொருள்களையும் நாகப்பச் செட்டியார் அவர்கள் வாங்கிய பெருந்தன்மை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

அரசாங்க மானியம் என்பது, 'புதுக் கோட்டை அம்மன் காசு' கூடப் பெருமல், இப் பள்ளிக்குரிய எல்லாச் செலவுகளும் நாகப்பர் அவர்களாலே செய்யப் பெற்றதும் ஒரு சிறப்பு எனலாம்.

ஏழை மாணவர்க்கு உணவும் உடையும் வழங்கப்பெற்றன. புதுக்கோட்டை அரசர் களும் மகாத்மா காந்தியடிகளும் இப்பள்ளிக்கு வருகை புரிந்துள்ளனர்.

இப்போது ஆறும் வகுப்பு முதல் 11-ஆம் வகுப்பு வரை உள்ளன. 250 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். நாகப்ப செட்டியார் அவர்களின் மக்கள் அடங்கிய ஒரு ஆட்சிக்குழு பள்ளியை நடத்தி வருகிறது.

கழக உயர்நிலைப்பள்ளி அரிமளம்

1949 அளவில் இவ்வூரில் அமைந்துள்ள கழக உயர்நிலைப் பள்ளிக்கு ப. சி. ப. முரு. மீனுட்சி ஆச்சி அவர்கள் ரூபாய் 5,000 செலவில் மேசை, நாற்காலிகள் அளித்துள்ளார்கள். அவர் மகன் செல்லப்ப செட்டியார் தம் இளைய மைந்தன் சிதம்பரத்தின் நினைவாக இப்பள்ளியில் ஒரு நூலகம் அமைத்துள்ளார்; தேவார திருவாசகப் புத்தகங்களை அச்சிட்டு அரிமளம் நல்வழிக் கழகத்தின் மூலம் இலவசமாக வழங்கி வருகிருர்.

செ. முருகப்பன்,
இளம்பாரி.

சு. கதி. காந்தி உயர்நிலைப்பள்ளி இராயவரம்

இராயவரம் கணிதமேதை சு. கதி. கதிரேசன் செட்டியார் அவர்களால் அரிமளம் திரு. செ. அ. செ. செல்லப்ப செட்டியார் அவர்கள் துணை கொண்டு 1927 சனவரி 27-ஆம், நாள் காந்தி ஆரம்பப் பாடசாலை நிறுவப்பெற்றது. அப்பொழுதே இப்பள்ளியில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த குழந்தைகள் பலருக்குக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டது.

சு. கதி. கதிரேசன் செட்டியாரவர்கள் தம் அறுபதாம் ஆண்டு நினைவாக யுவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 16-ஆம் நாள் 1-11-35-இல் தன்

கைப்பொருள் கொண்டு ஒரு கட்டிடம் கட்டுவித்தார்கள்.

இப்பள்ளியின் வளர்ச்சி கருதி 1936-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ஆம் நாள் இவ்வூர்ப் பெருமக்களின் ஆதரவைநாடி பதினேரு பேர்கள் அடங்கிய ஆட்சிக்குழு ஒன்றுஅமைக்கப்பெற்று பள்ளியின் நிர்வாகம் அக்குழுவிடம் ஒப்படைக்கப் பெற்றது.

இவ்வூர்ப் பழம்பெரும் குடும்பத்தினராகிய திரு. வெ. மு. சி. பெ. மு. பெரியணன் செட்டியார் அவர்கள் ஆட்சிக்குழுவின் தலைவராகவும், சென்னை சக்தி காரியாலய உரிமையாளரும் சிறந்த தமிழ்த் தொண்டருமாகிய திரு. வை. கோவிந்தன் அவர்கள் ஆட்சிக்குழுவின் செயலாளராகவும் பொறுப்பேற்று முதலில் பணியாற்றினுர்கள். ஏழைக் குழந்தைகளுக்கு அரசினர் உதவியின்றி ஆட்சிக் குழுவினரே சம்பளச்சலுகை கொடுத்துக் கல்வி பயிற்றுவித்து வந்தனர்.

இந்நகரில் சொக்கலிங்கபுரம், புதுமனை என்ற இரு இடங்களில் இருந்து வந்த ஆரம்பப் பள்ளிகளை 15-7-1938-இல் இப்பள்ளியில் சேர்த்து ஒரே பள்ளியாக ஆக்கி நல்ல முறையில் கல்வித் தொண்டினை ஆற்றி வந்தனர்.

இப்பள்ளி புதுக்கோட்டைத் தனியரசின் அங்கீகாரம் பெற்று 1938-இல் நடுநிலைப் பள்ளியாயிற்று. ஆட்சிக்குழுவின் தலைவராக விளங்கிய திரு. பெரியணன் செட்டியாரவர்கள் காலமானபின் திரு ப. வ. ராம. குழந்தையன் செட்டியார் அவர்கள் தலைவராக இருந்து பணியாற்றி வருகிருர்கள். திரு. வை. கோவிந்தன் அவர்கள், திரு. மு. அ. மு. முத்துராமன் செட்டியார் அவர்கள், திரு. சித. சுப. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள், திரு மு. அ. மு. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்கள் ஆகியோர் செயலாளர்களாகப் பணியாற்றியுள்ளார்கள். 1956-ஆம் ஆண்டு முதல் திரு. அ. கு. அரு. அருணசலம் செட்டியார் அவர்கள் செயலாளராகப் பணியாற்றி வருகிருர்கள்.

நடுநிலைப் பள்ளியாக இயங்கியபோது அரசாங்கத்தினின்று உதவித் தொகை கிடைத்தாலும் ஆண்டுதோறும் ஆட்சிக்குழுவினர் தம் கைப்பொறுப்பில் ரூபாய் 2,000 வரை மேலும் செலவு செய்து பள்ளியை நடத்தி வந்தனர். புதுக்கோட்டைத் தனி அரசு இந்திய அரசாங்கத்துடன் இணைக்கப்பெற்றபின் சென்னை மாநில ஆட்சியின்கீழ் இயங்கிய சென்னை மாநிலக் கல்விக் குழுவின் ஆணைக்கு ஒப்ப 1-7-1948 முதல் ஆரம்பப்பள்ளி, நடுநிலைப் பள்ளி என்ற இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றுத் தனித்தனித் தலைமை ஆசிரியர்களின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது.

1961-62 கல்வியாண்டு முதல் திரு. அ. சுவாமிநாதன் பி. ஏ. பி. டி. அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்து ஆட்சிக்குழுவுடன்கலந்து ஆலோசித்து, பள்ளி சிறந்தோங்கப் பணி புரிந்து வருகிருர்கள்.

ஆட்சிக்குழுவின் பெருமுயற்சியால் 6-6-62-இல் இப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது. இந்த கல்வி ஆண்டில் 11-ஆம் வகுப்பு ஆரம்பிக்கப் பெற்று முழுநிலை பெற்ற உயர்நிலைப்பள்ளியாக விளங்குகிறது.

பள்ளிக்கு இடம் போதாமையால் புதிதாக 13 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. 237மாணவர்களும், 120 மாணவிகளும் கல்வி பயின்று வருகிருர்கள். தலைமை ஆசிரியர் உள்பட 13 ஆசிரியர்கள்பணியாற்றிவருகிருர்கள். ஆரம்பப் பள்ளிகளில் 219 மாணவர்களும், 187 மாணவிகளும் கல்வி பயின்று வருகிருர்கள். ஆரம்பப் பள்ளியில் தலைமை ஆசிரியர் உள்பட 10 ஆசிரியர்களும் பணியாற்றி வருகிருர்கள். இப்பொழுது உயர்நிலைப்பள்ளிக்கு உரிமையான பழைய கட்டிடம், அஞ்சலகத்துக்குக் குடிக்கூலிக்கு விடப்பட்டு அந்த வருவாயும் பள்ளி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப் பெற்று வருகிறது. உயர்நிலைப்பள்ளிக்கு புதியதாக கட்டிடம், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்ட ஆட்சிக்குழுவினர் தீர்மானித்திருக்கின்றனர். 13 ஆண்டு காலத்திற்குமுன் வாங்கப்பெற்ற மூன்று ஏக்கர் நிலத்தில் விவசாயப் பயிற்சி 4 ஆண்டுகளாக அளிக்கப்படுகிறது. கோழிப் பண்ணையும் நிறுவப்பெற்றுள்ளது.

செ. செல்லப்பன்,
மீனுட்சி புத்தக நிலையம், மதுரை.

சத்தியமூர்த்தி உயர்நிலைப்பள்ளி
திருமெய்யம்

இராமச்சந்திரபுரம் தீ. நா. முத்தையா செட்டியார் அவர்கள் ரூபாய் ஐம்பதினு

யிரம் செலவில் கட்டிடங்கள் கட்டி, ரூபாய் பத்தாயிரம் செலவில் நூல் நிலையம் அமைத்து ''சத்தியமூர்த்தி உயர்நிலைப்பள்ளி'' நிறுவி அதை நடத்தி வந்திருக்கின்றனர். இப்போது இது, அரசினரால் ''செகண்டரி பள்ளி''யாக நடத்தப் பெற்று வருகின்றது.

இராமனாதன் செட்டியார் உயர்நிலைப்பள்ளி நற்சாந்துபட்டி

இது 11-6-1954-இல் நடுநிலைப்பள்ளியாய்த் தொடங்கப்பெற்றது. ஆறும் வகுப்பு முதல் பதினொன்றும் வகுப்பு வரை உண்டு. மாணவர் 273 பேரும் மாணவியர் 69 பேரும் பயில்கின்றனர். பள்ளியை நிறுவிய வள்ளல் கு. ராம. குமர. குமரப்ப செட்டியார் அவர்கள் ஆவார்கள். அன்னாரின் மதிப்பிற்குரிய தந்தையார் பெயரே பள்ளிக்கு இடப்பெற்றிருக்கிறது.

ரூபாய் 15,000/- ரொக்கமும், ரூபாய் 35,000/- மதிப்புள்ள நிலமும் பள்ளியின் எண்டோமெண்ட் தொகையாக நன்கொடையாளர் கொடுத்துள்ளார்கள். உபகரணங்கள் அரசாங்க உதவியின்றி நன்கொடையாளரால் அளிக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர பள்ளி நடத்தும் செலவுக்காக ரூபாய் 3,000/-க்கு குறையாமல் நன்கொடையாளர் ஆண்டுதோறும் அளித்து வருகிறார்.

கரூர் உட்பட்ட புதுக்கோட்டைக் கல்வி வட்டத்திலேயே இத்துறையில் இப்பள்ளி முதன்மையாக இருந்ததால் மாவட்ட கல்வி அதிகாரி வழங்கும் சுழற்கோப்பையை மீண்டும் சுழல விடாமல் இங்கேயே இருத்திக் கொள்வதற்கான பெருமுயற்சியை இவ்வாண்டு செய்துள்ளோம். இவ்வாண்டு எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதியுள்ள 45 பேர்களுள் மிகப்பலர் வெற்றி பெறுவர் என்று நம்பி இருக்கின்றோம். வேறு சில விசேஷ நிகழ்ச்சிகளும் ஈண்டு குறிப்பிடத்தக்கனவாகும். கண்காணிப்புக்கு உட்பட்ட சுயப்படிப்புத் திட்டம் இப்பள்ளியில் இவ்வாண்டு துவக்கப்பட்டுள்ளது (சூபர்வைஸ்டு ஸ்டடி). காலையில் ஒரு மணிநேரம் மாணவர் பலர் பள்ளியில் வந்து ஆசிரியர் முன்னிலையில் படித்தும் ஐயம்தெளிந்தும் நலம்பெற்று வருகின்றனர். கல்வி இயக்குனர் துவக்கியுள்ள ஞானத்தந்தை திட்டத்தை ஒட்டி விராயச்சிலைப்பள்ளி இப்பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ளது. அப்பள்ளி மாணவருக்கு இப்பள்ளியின் நூல் நிலையத்தைப் பயன்படுத்த வழி செய்துள்ளோம். டில்லியிலுள்ள (யுனைடெட் ஸ்கூல் ஆர்கனைஸேஷன்) நடத்தும் ஐக்கிய நாடுகள் போட்டியில் 16 மாணவர்கள் பங்குகொண்டு அனைவரும் வெற்றி பெற்றனர், பலர் உயர்ந்த மார்க்குகளும் பெற்றனர்.

இப்பொழுது வாடகைக் கட்டிடத்திலேயே பள்ளி நடைபெறுகிறது. எல்லா வசதிகளும் பொருந்திய புதிய கட்டடம் உருவாகிக் கொண்டு வருகிறது. இக் கட்டடத்திற்கு ஏற்படும் ஒரு இலட்சம் ரூபாய்ச் செலவில் அரசினர் ரூபாய் 35,000/- உதவித் தொகையாகக் கொடுக்க இசைந்துள்ளார்கள். மீதித்தொகை முழுவதும் பள்ளி நிறுவிய குமரப்ப செட்டியார் அவர்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

தென்னிந்தியக் கல்விக்கழகம் தில்லி

தில்லியில் தமிழ்நாட்டினர் நடத்திவரும் கல்வி நிலையங்களின் ஆட்சிக்குழுவாகிய, தென்னிந்தியக் கல்விக் கழகத்திற்கு டாக்டர் அழகப்ப செட்டியார் ரூபாய் 25,000 வழங்கியுள்ளார்.

மு. சித. இராம. இராமனாதன் செட்டியார் உயர்நிலைப்பள்ளி, குழிபிறை.

முப்பது ஆண்டுகட்குமுன் சிறுசிறு பள்ளிகளாக இவ்வூரில் இயங்கிய பள்ளிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, மு. சித. இராம. இராமனாதன் செட்டியார் அவர்கள், தம் பெயராலேயே உயர்தொடக்கப்பள்ளி ஒன்றினை நிறுவினார். அதில் ஈ. எஸ். எல். சி. வரை பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. பின் 1951-இல் புதிய கட்டிடம் கட்டப்பெற்று நடுநிலைப்பள்ளியாக மாறி 1959 முதல் உயர்நிலைப்பள்ளியாக இயங்கி வருகிறது.

மாணவர் தொகை 289.

சரசுவதி உயர்நிலைப்பள்ளி கோனாபட்டு

இந்நகரில் நகரத்தார்களின் பொருளுதவியால் ஏற்பட்ட கற்பக விநாயகர் கலாசாலைக்

கட்டிடம் நகரப் பொதுவில் ரூபாய் ஐம்பதினு யிரம் செலவில் புதுப்பிக்கப்பட்டு உயர்நிலைப் பள்ளியாக நிறுவப் பெற்றது. சு. மு. ராம. முரு. முருகப்ப செட்டியார் அவர்களின் சிறந்த முயற்சியாலும் சீரிய மேற்பார்வையாலும் இப் பள்ளி இயங்கி வந்தது. அன்னார் காலத்திற் குப் பின், 1963 முதல் இப்பள்ளியை நடத்தும் பொறுப்பை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் ஏற்க இசைந்தார்கள். தி. மாணிக்க வாசகம் அவர்கள் பள்ளியின் செயலாளராக இருந்து வருகிறார்கள். பள்ளிக்குப் புகழும் பொருளும் புதுக் கட்டிடங்களும் சேர, செயலர் முயன்று வருவது பாராட்டுக்குரியது.

தியாகராசர் உயர்நிலைப்பள்ளி வசந்த நகர், மதுரை

தியாகராசர் கல்வி நிறுவனத்தார் நடத்தி வரும்கல்வி நிலையங்களுள் இதுவும் ஒன்று. இப் பள்ளியில் பல நூறு மாணவர்கள் கல்விபயின்று வருகிறார்கள். மதுரை மாநகரின் புகழ்பெற்ற பள்ளிகளுள் இதுவும் ஒன்று.

தியாகராசர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி நன்முறை உயர்நிலைப்பள்ளி, மதுரை-9

ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு பயிற்சி பெறுபவர்கட்கு உறுதுணையாக, இப்பள்ளி தியாகராசர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியால் நடத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளி வண்டியூர் தெப்பக்குளக்கரையில் உள்ளது.

ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம் திருப்பராய்த்துறை

இத் தபோவனம் திருப்பராய்த்துறையில் யுத்த நெருக்கடியிலும் விரைவில் நிறுவப் பெற் றதற்கு, கானாடுகாத்தான் வெ. வீர. நா. அருணா சலம் செட்டியார் அவர்களுடைய உற்சாகமும் தூண்டுதலுமே முதற் காரணமாகும். இவர் இந்த ஸ்தாபனத்துக்கு உப தலைவராக அமர்ந் துள்ளார். இவர் அளித்துள்ள நன்கொடை ரூபாய் 13, 500.

ஆதாரம்: புரவலர் குழாம்
ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவன வெளியீடு
1954 மார்ச்சு.

சித்பாவனந்த சுவாமிகளுக்கு உறுதுணை யாய் இருந்து 20 ஆண்டுகளாக இப்பள்ளியின் வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டிருப்பவர் பள்ளத்தூர் கா. இராமநாதன் அவர்கள் ஆவார்கள்.

ஸ்ரீ மு. நாராயணன் செட்டியார் உயர்நிலைப்பள்ளி, கோப்பனாபட்டி.

தோல் தொழிலில் சிறந்து விளங்கும் பெரு மகனாராகிய உயர்திரு. மு. நாராயணன்செட்டி யார் அவர்கள் இப்பள்ளியை 1-6-1961-இல் நிறுவியுள்ளார்கள். அரசினரின் உதவி எதுவு மின்றி 20 ஏக்கர் இடமும், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடங்களும் நாராயணன் செட்டி யார் அவர்களால் வழங்கப் பெற்றுள்ளன.

ஆறுவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்பு வரை நடைபெற்று வருகின்றன. இவ்வூரில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று நடை பெற்று வருவதால், நாராயணன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் மாணவர் மட்டுமே சேர்த்துக்கொள்ளப் பெறுகின்றனர். இப்போது பயிலுபவர் எண்ணிக்கை 300.

நாராயணன் செட்டியார் டிரஸ்டு, இவ் வுயர்நிலைப்பள்ளியை நடத்தி வருகிறது. நாராயணன் செட்டியார் அவர்கள் டிரஸ் டின் தலைவராகவும் அவர் தம் மகன் நா. முத்துக் கருப்பன் செட்டியார் அவர்கள் பள்ளியின் செயலாளராகவும் இருந்து வரு கிறார்கள். பல ஊர்களிலிருந்து கல்வி பயில வரும் ஏழை மாணவர்களில் 26 பேர் களுக்கு நிர்வாகத்தினர் தம் செலவிலேயே பகலுணவு படைக்கிறார்கள். விவசாயம், கைத்தறி முதலிய தொழிற் கல்வி கற்பிக் கப்பெறுகிறது. விரைவில் நல்லதோர் உணவு விடுதியும், உறைவிடமும் ஏற்படுத்தத் திட்ட மிடப்பட்டுள்ளது.

அரசினர் மான்யத்துடன் ஏறத்தாழ 17 ஆயிரம் ரூபாய் செலவில் அறிவியல், சமூகம், கைத்தொழில், கேள்விக் காட்சிக் கல்விப் பொருள் வாங்கப்பெற்று பரிசோதனைக் கூட மொன்றும் அமைக்கப் பெற்றுள்ளது.

ஆ. நாராயணன்.

வேதாரணியம்

இத்தலத்தில் அன்னதானச் சத்திரம் நடத்திவரும் பாகனேரி பெரி. அழ.மு.மு. குடும் பத்தார், வேதாரணியம் பள்ளிகளில் பயிலும்

ஏழை மாணவர் பத்துப் பேருக்கு நாள்தோறும் மூன்று வேளை உணவு படைக்கின்றனர்.

இராமசாமி செட்டியார் உயர்நிலைப்பள்ளி சிதம்பரம்

சிதம்பரத்தில் 1869 முதல் ஒரு ஆரம்பப் பாடசாலை நடைபெற்று வந்தது. 1914-இல் இப்பள்ளியின் ஆட்சிப் பொறுப்பை, சிதம்பரம் நகராண்மைக் கழகத் தலைவராக இருந்தவர் களும் திரு. ஆர். இராமனுதன் செட்டியார், எம். பி., அவர்களின் தந்தையாருமாகிய திவான்பகதூர் மு. ராம. இராமசாமிசெட்டியார் அவர்கள் எடுத்துக்கொண்டு, சிறந்தமுறையில் கட்டிடம் அமைத்து இதை உயர்நிலைப்பள்ளி யாக்கினர். 1918-இல் இப்பள்ளி ராஜா சர் அண்ணுமலை செட்டியார் அவர்களின் மேற் பார்வைக்கு வந்தது.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு முன் னேடியாக விளங்கிய மீனுட்சி கல்லூரி, இவ் வுயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்தில் தான் தொடங்கப் பெற்றது.

இப்பள்ளிக்கு ஆறு ஏக்கர்ப் பரப்புள்ள இடமும், மாணவர் விடுதியும், சிறந்த நூல் நிலையமும் உள்ளன. உயர்நிலைப்பள்ளியான நிகழ்ச்சியின் பொன்விழா 1964-இல் கொண் டாடப்பெறும்.

மாணவ மாணவியர் தொகை 986.

இது, தென் ஆர்க்காடு மாவட்டத்தின் புகழ் பெற்ற கல்வி நிலையங்களுள் குறிப்பிடத் தக்கது.

பி. ஆர். சுவாமிநாதன், எம். ஏ., எல். டி.,
தலைமை ஆசிரியர்.

அண்ணுமலை முதியோர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, தேசமுகி (திருக்கழுக்குன்றம்)

Annamalai Senior Basic Training School Desumugi P. O. Chingleput Dt.

இப்பள்ளி, இருபதாண்டுகளுக்குமுன் அரி மளம் கணபதி செட்டியார் அவர்களால் தொடங்கப்பெற்றது. புதுவயல் வயிரவன் செட்டியார் அவர்கள் இப்பள்ளிக்கு ஒரு கட்டி டம் கட்டியுதவினுர்கள்.

பத்தாண்டுகளாக, இப்பள்ளியை நடத்தும் பொறுப்பை பழநியப்பா பிரதர்ஸ் உரிமையாளர் இராயவரம் செ. மெ. பழநியப்ப செட்டியார் அவர்கள் செம்மையாய்ச் செய்து வருகிருர்கள். 50 மாணவர்கட்குப் பகலுணவு படைக்கப்படு கிறது. மாணவர் தொகை 350. பள்ளி தொடங்கியது முதல் பள்ளிக்கட்டணம் வசூ லிக்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

செங்கற்பட்டு ஏ. நமச்சிவாய முதலியார் அவர்கள் இப்பள்ளியின் அன்ருட ஆட்சியைக் கவனித்து வருகிருர்கள். பள்ளியின் செயலர், ஓ. சிறுவயல் அழ. அழகப்பன் (ரத்னம்) அவர்கள் ஆவார்கள்.

வெள்ளையன் செட்டியார் உயர்நிலைப்பள்ளி திருவோற்றியூர்

இப்பள்ளி 1956 சூலைத் திங்களில் செங்கற் பட்டு மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியாக உருவெடுத்தது. அவ்வமயம் 310 மாணவரும் 177 மாணவியரும் கல்வி பயின்றனர். அன்று முதல் நாளொருமேனியும் பொழுதொரு வண் ணமுமாகப் படிப்படியாக வளர்ந்து, 1963-64-இல் 780 மாணவரும் 346 மாணவியரும் பயின்று வருகின்றனர். ஏழு ஆண்டுகள் இப் பள்ளியைச் செங்கை மாவட்டக் கழகத்தாரே நடத்தி வந்தனர்.

வளர்ச்சியுறும் இப்பள்ளியைத் தொடர்ந்து நடத்தி வருவதிலும் பெரு வெள்ளமெனப் பெருகிவரும்கல்விவளர்ச்சிக்கும்ஊக்கத்திற்கும் ஏற்பக் கட்டட, பிற வசதிகள் அமைத்துக் கொடுப்பதில் பல இடையூறுகள் இருந்து வந் தன. இந்நிலையில் இப்பள்ளியை எடுத்து நடத்தும் பொறுப்பினை அ.மு.மு. அறநிறுவனத்தின் தலைவரும் வணிகப் பெருமகனுருமான உயர்திரு அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள் முன் வந்தார்கள். இது திருவொற்றியூர் வாழ் பெருங்குடி மக்களுக்குக் கிடைத்ததொரு பெரும் பேருகும். கழக அதிகாரிகளும் கல்வித் துறை அதிகாரிகளும் இதற்கு இசைவு தந்த னர். அதன் விளைவாக எமது பள்ளியின் ஆட்சி 1963 சூன் 10-ஆம் நாள் அ. மு. மு. அறநிறுவனத்துக்கு மாற்றப்பெற்றது. அ.மு.மு குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்த காலஞ்சென்ற வெள்ளையன் செட்டியார் அவர் களின் பெயரைப் பள்ளி தாங்கி, நாடோறும்

வளர்ந்து வருகிறது. உயர்திரு ஏ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்கள் பள்ளி ஆட்சிக்குழுவின் செயலாளராக இருந்து ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறுர்கள்.

பள்ளிக்கூடத்திற்கென ஆறு ஏக்கர் நிலம் திருவொற்றியூர் நெடுஞ்சாலையருகே வாங்கப்பட்டுள்ளது. மிக விரைவில், புதுக் கட்டடம் எழும்பும். கல்வி வளர்ச்சிக்குரிய எல்லா வசதிகளும் உடனடியாகக் கொடுக்கப்படும். இக் கலைக்கோயில் மேன்மேலும் சிறந்து விளங்க இறைவன் அருள்புரிவாராக.

எஸ். ஈ. ஜெயபாலன்,
தலைமை ஆசிரியர்.

சர் இராமசாமி முதலியார் உயர்நிலைப்பள்ளி அம்பத்தூர்

அம்பத்தூரைச் சேர்ந்த வேங்கடபுரத்தில் நடேசய்யர் என்பார் பல்லாண்டுகளுக்குமுன் நடத்திய திண்ணைப்பள்ளி, அம்பத்தூர் கல்விக் கழகத்தின் மேற்பார்வையில் 1927-இல் உயர் தொடக்கப்பள்ளியாயிற்று. 1953-இல் 15,000 ரூபாய்ச் செலவில் கட்டிடம் கட்டப்பெற்றது.

அக்கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அ. மு. மு. அற நிறுவனத்தார் 12-9-1957-இல் அப்பள்ளியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதை உயர் நிலைப்பள்ளி ஆக்கினர். புதிய இடத்தில் இரண்டு இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டிடம் கட்டப் பெற்றது. இக்கட்டிடம் 22-6-60-இல் திறந்து வைக்கப்பெற்றது. செக்ரட்டேரியல் படிப்பும், பொறியியல் படிப்பும் பயிலப் பத்தாம் வகுப்பில் வசதி செய்யப்பெற்றிருக்கிறது. 380 மாணவிகள் உட்பட 1216 பேர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

எம். எம். முத்தையா
கரஸ்பாண்டென்ட்.

ஏ. வி. எம். சாரிட்டிஸ் ஆவிச்சி உயர்நிலைப்பள்ளி, விருகம்பாக்கம் (சாளிகிராமம்) செங்கற்பட்டு மாவட்டம்.

சென்னை நகருக்கு அணித்தே அமைந்துள்ள தென்னிந்தியாவின் ஹாலிவுட்டில் இவ்வுயர்நிலைப்பள்ளி 1963-முதல் இயங்கிவருகிறது. ஏ. வி. எம். மெய்யப்ப செட்டியாரவர்களின் டிரஸ்ட், இப்பள்ளியை நிறுவி நிதிப்பொறுப்பை ஏற்று வருகிறது. அன்றாட ஆட்சியைக் கவனிக்க 'ஆவிச்சி உயர்நிலைப்பள்ளி சாரிட்டபிள் சொசைட்டி' என்ற குழு நியமிக்கப்பெற்றிருக்கிறது.

6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை உண்டு. மாணவர் தொகை 250. நிலையான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஏவி. எம். மெய்யப்ப செட்டியாரவர்களின் தந்தை ஆவிச்சி செட்டியார் அவர்களின் பெயர் பள்ளிக்கு இடப் பெற்றிருக்கிறது.

எம். முருகன்
கரஸ்பாண்டண்டு

சர். எம். சிடி. முத்தையா செட்டியார் உயர்நிலைப்பள்ளி, வேப்பேரி, சென்னை-7.

சி. ஆர். சி. உயர்நிலைப்பள்ளி என்ற பெயரில் பல்லாண்டுகள் நடைபெற்ற கல்விநிலையம் தொடர்ந்து நடைபெற இயலாத நிலையிலிருந்தது. அதையறிந்து, 1929-இல் சர். எம். சிடி. முத்தையா செட்டியார் அவர்கள் தாமேநடத்த இசைந்தார்கள். ஆனால், ஒரு சில நாட்களிலேயே அவர்கள் இயற்கை எய்த நேர்ந்தது.

மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் அவர்கள், தம் தந்தையார் விருப்பத்தை நிறைவேற்றி, 1929 ஆகஸ்டில் பள்ளியின் மேற்பார்வையை ஏற்றுத் தந்தையாருக்கு நினைவுச் சின்னம் உண்டாக்கினுர்கள்.

சென்னை மாநகரில் மிகவும் புகழ் பெற்ற ஒரு கல்விநிலையமாக, இவ்வுயர்நிலைப்பள்ளி விளங்குகிறது. திறமையான மாணவர்களை உருவாக்குவதும் ஆட்சி செம்மையாக நடத்தப் பெறுவதும் இப்பள்ளியில் குறிப்பிடத்தக்கன.

உயர்நிலைப்பள்ளிக்கும் உணவு விடுதிக்கும் கவினுறு கட்டிடங்கள் அமைந்துள்ளன. 1840 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

மாணவர்கள் முகாம் போட்டுத் தங்குவதற்கு சிதம்பரம் செட்டியார் அவர்களுடைய

பறங்கிமலை, ஆவடிப் பண்ணைகள் பயன்படுத்தப் பெறுகின்றன.

இப்பள்ளியின் ஆட்சிக்குழுவில் டாக்டர் அழகப்பச் செட்டியார் பல்லாண்டுகள் உறுப்பினராக இருந்து பள்ளியின் வளர்ச்சியில் பேரார்வம் காட்டி வந்தார்கள்.

ராஜா முத்தையா உயர்நிலைப்பள்ளி
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.

இவ்வுயர்நிலைப்பள்ளி ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின்பால் பெருமதிப்புடைய நண்பர்களால் 9-6-1957-இல் தொடங்கப் பெற்று 694 மாணவ மாணவியர்களுடன், சென்னை மாநகரில் சிறந்த பள்ளிகளுள் ஒன்றாக நடைபெற்று வருகிறது.

டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின்வள்ளன்மையாலும் அன்னாருடைய அன்புகெழுமிய நண்பர் உயர்திரு. எம். பி. தாமோதரன் அவர்களுடைய கண்காணிப்பாலும் மேற்பார்வையாலும் இப்பள்ளி நாளும் வளர்ந்து பெரும்புகழ் பெற்றிருக்கிறது.


வி. அருணஜதை,	எஸ் ஸ்ரீராமன்,
தலைமை ஆசிரியர்.	செயலாளர்-பொருளாளர்

ராணி மெய்யம்மை உயர்நிலைப்பள்ளி
காந்திநகர், சென்னை –20.

காந்திநகர் கல்விக் கழகத்தார் 11-6-1956-இல்இவ்வுயர்நிலைப் பள்ளியைத் தொடங்கினர். 905 மாணவ மாணவியர் இங்கு கல்வி பயிலுகின்றனர். பள்ளிக்கென, கட்டிடம் கட்டப் பெற்றிருக்கிறது.

பள்ளிக்குழுவின் பண்புசால் தலைவர் எம்.பி தாமோதரன் அவர்கட்கும், கொடை வள்ளல் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கட்கும் நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

எஸ். ஸ்ரீராமன்,	ஏ. ஜார்ஜ்,
செயலாளர்-பொருளாளர்.	தலைமை ஆசிரியர்.



மகளிர் உயர்நிலைப் பள்ளிகள்
(GIRLS' HIGH SCHOOLS)

கலைமகள் கல்லூரி
கோப்பனைபட்டி

இது 5—9—1935-இல் என் தந்தையார் அ. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்களால் தம் பொருளுடன் நகரத்தார்களின் பெரும் பொருளுதவியும் பெற்று, நிறுவப்பெற்றது. இக்கல்லூரியின் கவினுறு கட்டிடங்களுக்கு அந் நாளிலேயே ரூபாய் ஒன்றரை இலட்சத்துக்கு மேல் செலவாகியுள்ளது.

1960-இல் இக்கல்லூரியின் வெள்ளிவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. வெள்ளிவிழா மலர் ஒன்று வெளியிடப் பெற்றது.

கல்லூரியின் பரப்பு ஏறத்தாழ, பத்து ஏக்கர். கல்லூரியின் நூல்நிலையமும் வழிபாட்டு மண்டபமும் குறிப்பிடத்தக்கவை. உணவு விடுதி உண்டு.

1960 வரை இங்கு கலைச்செல்வி, கலைமணி என்ற பட்டப் படிப்பு வகுப்புகள் நடைபெற்று வந்தன. அதன் பிறகு இக்கல்லூரி உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பெற்றது. நான்காம் வகுப்பு முதல் 11-ஆம் வகுப்புவரை நடைபெறுகின்றன. மாணாக்கியர் தொகை 174, ஆசிரியர் எண்ணிக்கை 11.

நகரத்தார் சமூக மாணவிகளைக் கல்வி கற்கச் செய்த பெருமையில் இக் கல்லூரிக்குச் சிறப்பான பங்கு உண்டு.

அ.மெ. தியாகராசன்,
கரஸ்பாண்டண்டு.

மகளிர் உயர்நிலைப்பள்ளி, அரிமளம்

இது 1963-இல் தொடங்கப்பெற்றது. ஆரம்பச் செலவுக்காக ரூபாய் 12,000-அளிக்க இசைந்தது, இந்நகர் உயர்திரு. ப. செ. கதி. செல்லப்ப செட்டியார் அவர்கள் ஆவார்கள். முதல் வருடத்திற்குரிய தொகையையும் கட்டியிருக்கிறார்கள்.

பள்ளிக்காக ஐந்து ஏக்கர் நிலமும், கட்டிடச் செலவுக்கு (அரசாங்க நிதி உதவி நீங்கலாக) ரூபாய் 12,500-ம் கொடுக்க இந் நகர் நகரத்தார்கள் மனமுவந்து முன்வந்திருக்கின்றனர். அதற்கு நிதி வசூலிக்க, உயர்திரு. லெ. மு. அருணாசலம் செட்டியார் அவர்களைத் தலைவராகவும் உயர்திரு. ச. அண்ணாமலைச் செட்டியார் அவர்களைச் செயலாளராகவும் கொண்ட கட்டிடக்குழு பணியாற்றி வருகிறது.

மாவட்டக் கழகப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பி. அழகாபுரி

இந்நகரிலுள்ள ''சேவா சமாஜத்தின்'' முயற்சியுடனும், பல இனத்தைச் சேர்ந்த

பொது மக்களின் ஒத்துழைப்புடனும் 1964 ஜூன் மாதம் துவக்கப்பட்டது.

கீழச்சிவற்பட்டி, பி. அழகாபுரி, விராமதி ஆகிய மூன்று ஊர்களிலும் உள்ள நகரத்தார் பலர் இப்பள்ளியைத் தொடங்குவதற்குத் தேவையான பொருளுதவி செய்தனர்.

இல. பழநியப்பன்

ஸ்ரீ மீனாட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி காரைக்குடி

கல்விப் பயிர் வளரும் காரைக்குடியில் பல உயர்தரப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் இப் பள்ளி ஒன்றே பெண்களுக்கான பள்ளி. தாலுகா போர்டார் 1912-இல் நிறுவிய ஆரம்பப் பள்ளியை 2—11—1917-இல் மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அப்பொழுது 23 மாணவிகள் மட்டுமே பயின்று வந்தனர்.

1939-இல் இது இடைநிலைப்பள்ளி ஆயிற்று. திரு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் மைந்தர் மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்களின் கொடை வளத்தால் இது உயர்நிலைப்பள்ளி ஆயிற்று.

1958 வரை எவ்வித சம்பளமும் வசூலிக்காமல் இப்பள்ளி நடத்தப்பெற்றது; முற்றும் இலவசமாகக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டது. மாணாக்கியர்க்குப் பாடநூல்கள், எழுது பலகைகள், தையற் கருவிகள் யாவும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. ஆசிரியைகள் தங்குவதற்கு வீடுகளும் கொடுக்கப்பட்டன.

1961 முதல் அரசாங்க உதவி இப்பள்ளிக்குக் கிடைத்து வருகிறது. அரசினரின் புதிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப இப்பள்ளி நடத்தப்பெற்று வருகிறது.

இப்போது 532 மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இம்மாவட்டத்தில் மகளிர் உயர்நிலைப்பள்ளிகளுள் இப்பள்ளி தலைசிறந்து விளங்குகிறது. 25—11—1962-இல் திரு. மெய்யப்ப செட்டியார் உயிர் நீத்தபின் அவர் மகன் சொக்கலிங்கம் செட்டியார் இப்பள்ளியின் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

விசாலாட்சி தியாகராசர் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆ. தெற்கூர்

இருபாலரும் கல்வி பயின்ற விசாலாட்சி உயர்நிலைப்பள்ளியில் படித்த 64 மகளிரைக் கொண்டு இப்பள்ளி 12—7—1962-இல் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் வள்ளன்மையால் ஏற்பட்டது. உணவு விடுதி உண்டு. ஆறும் வகுப்பு முதல் பதினோராம் வகுப்புவரை உள்ளன.

தற்காலிகமாக, விசாலாட்சி உயர்நிலைப் பள்ளியின் பழைய கட்டிடத்தில் இப்பள்ளி நடைபெற்று வருகிறது. இப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட, ஆடவர் பள்ளிக்கு எதிரே ஆறு ஏக்கர்ப் பரப்பளவுள்ள இடம் வாங்கப் பெற்றிருக்கிறது.

தி. சுந்தரம் செட்டியார்,
தலைவர்.

நகரப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தேவகோட்டை

அ.ராம. அ. லெ. அ. முத்துவீரப்ப செட்டியார் அவர்களும் அவர்கள் இளவல் அருணசலம் செட்டியார் அவர்களும், நகரப் பெண்கள் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக்க ரூபாய் 35,000 வழங்கியுள்ளனர்.

பெத்தாள் ஆச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி தேவகோட்டை

இவ்வுயர்நிலைப்பள்ளி தேவகோட்டை நகரத்தார்கள் ஸ்ரீ மீனாட்சி வித்தியா பரிபாலன சங்கத்தின் சார்பில் நடத்தப்படுகிறது.

இச்சங்கத்தார் 40 ஆண்டுகளாக தொடக்கப்பள்ளி ஒன்றையும் நடத்தி வருகின்றனர். தேவகோட்டை நகரத்தார் பலர் இவ்விரு கலைக்கோயில்களின் வளர்ச்சிக்குப் பெரும் பொருள் நல்கியுள்ளனர்.

அரு. சோமசுந்தரன்.

பெரி. அழ. மு. மகள் தெய்வானை ஆச்சி கழக மகளிர் உயர்நிலைப்பள்ளி, பாகனேரி

தெய்வானை ஆச்சி அவர்கள் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ளதும் 40 ஆண்டுகளுக்குமுன் கட்டியதும் சத்திரமாக நடத்தி வந்ததுமாகிய கட்டிடத்தையும் கொடுத்து, தொடக்கச் செலவுக்கு ரூபாய் 12,000-ம் உபகரணங்களுக்கு ரூபாய் 8,000-ம், அன்பளித்தார்கள். அதன்பயனாய் 24—6—1963-இல் இப்பள்ளி ஏற்பட்டு 140 மகளிர் படித்து வருகிறார்கள். இராமநாதபுர மாவட்டத் தனிக் கல்வி அதிகாரி இப்பள்ளியை நடத்திவருகிறார்.

பெரி. அழ. மு. நா. நாராயணன் செட்டியார்.
பாரி அச்சகம்.

பாரதீய கிராமின் மகிளா சங்கம் கிளை நிலையம்—கண்டனூர்

முதியோருக்கான இப்பள்ளி 1964-இல் தொடங்கப் பெற்றிருக்கிறது. இவ்வூர் அன்னபூரணி—வீரப்பன் அவர்களைத் தலைவியாகக் கொண்டு நிறுவப்பெற்றிருக்கிறது.

20 வயதுமுதல் 35 வரையுள்ள பெண்களுக்கு இலவசமாக உணவும் இருக்க இடமும் தந்து இரண்டு ஆண்டுகளுக்குள் எஸ். எஸ். எல். சி. தேர்வுக்குத் தகுதியுள்ளவர்களாகச் செய்ய இப்பள்ளி உதவுகிறது. சேர விரும்புவோர் எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

லேடி எம். சிடி. முத்தையா செட்டியார் மகளிர் உயர்நிலைப்பள்ளி, புரசைவாக்கம், சென்னை.

இப்பள்ளி 1944 ஜூன் மாதத்தில், மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் அவர்களால், தம் தாயார் நினைவாக ஏற்படுத்தப்பெற்றது.

800 மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர். இப்பள்ளியின் பெயரும் புகழும் எங்கும் பரவியுள்ளன. 1962-இல் இப்பள்ளியிலிருந்து எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதிய அனைவரும் தேர்ச்சிபெற்றது குறிப்பிடத்தக்கது.

150 ஏழை மாணவியர்க்கு, நிர்வாகிகள் பகலுணவு படைக்கின்றனர்.

மகளிர் உயர்நிலைப்பள்ளி, ராஜா அண்ணாமலைபுரம்


ராஜா முத்தையா உயர்நிலைப்பள்ளியின் பெருவளர்ச்சியின் விளைவாக அது ஆடவர்க்கு மட்டுமே உரிய உயர்நிலைப்பள்ளியாகஆயிற்று. அதன் பயனாய், 15—6—1961-இல் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களைப் புரவலராகக் கொண்டதும் 5,000 பேருக்குக் கல்வி வாய்ப்பு வழங்கி வருவதுமாகிய காந்திநகர் கல்விக்கழகம் இப்பள்ளியைத் தொடங்கிற்று. இதில் 493 பேர் கல்வி பயின்று வருகின்றனர்.

எஸ். ஸ்ரீராமன்
செயலாளர் - பொருளாளர்.

சரசுவதி சீனிவாசன்
தலைமை ஆசிரியை.

பன்னலம் செழிக்கப் பாரில்
பல்கலை வளம்பெற் றோங்கத்
தென்னிலப் பாண்டி மன்னர்
செந்தமிழ் வளர்த்த தேபோல்
மன்னிய எங்கள் சென்னை
மாணவர் சங்கத் தொண்டு
பொன்னெனப் பொலிவு பெற்றுப்
புவிமிசை நீடு வாழ்க!

—அ. முருகப்ப செட்டியார் (மாநகரி)
மானேஜர், இரங்கூன் நகரவிடுதி.



கல்லூரிகள்

அழகப்பா கல்லூரி
அழகப்பாபுரம், காரைக்குடி-3
Alagappa College

3-7-1947-இல் அடையாற்றில் பெசண்டு அம்மையார் நூற்றுண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியார் 'புதிய கல்லூரிகள் நிறுவப் பலர் முன்வர வேண்டும்' என்று ஆர்வத்தோடு வேண்டுகோள் விடுத்தார். உடனே டாக்டர் அழகப்பா எழுந்திருந்து 'இராமநாதபுர மாவட்டத்தில் ஒரு கல்லூரி நிறுவுவேன்' என்று உரைத்தார். ஒரு திங்களுக்குள் 11-8-1947-இல் காரைக் குடியில் காந்தி மாளிகையில் கல்லூரி தோன்றிற்று.

ஓராயிரம் ஏக்கர் பரப்புள்ள காடுகள் வாங்கப்பெற்றன. அழகப்பர் அவற்றைக் காடழித்து நாடாக்கியதை

"நரியிசைத்த காடு நகராய்ச் சிலம்பின்
வரியிசைக்கப் பள்ளி வகுத்தான்; —
உரியசைத்துப்
பாம்பா டிடமெல்லாம் பந்தா டிடமாகும்
தாம்பாடு கன்னியர்க்குத் தாம்."*

என்ற பாடலால் அறியலாம்.

அதைத் தொடர்ந்து காரைக்குடி இரயில் பாதைக்கு அருகாமையில் கட்டிடங்கள் அணியணியாக எழுந்தன. உமையாள் விடுதி, வீரப்ப அம்மான் விடுதி, விசாலாட்சி விடுதி ஆகியவையும் கட்டப்பெற்றன.

கட்டிடங்கள் விரைந்து உருவானதை டாக்டர் வ. சுப. மாணிக்கம் பின்கண்டவாறு பாடியுள்ளார்:

"வெள்ளி விடியுமுன் வீறுசால் கட்டிடங்கள்
உள்ளும் உயரம் உயர்த்துவான் -
நள்ளிரவும்
மின்விளக்கம் வைத்து மிகவிரைந்து
கட்டினன்
பொன்விளக்கங் கண்ட புதிர்."

புகுமுகவகுப்பு, பி. ஏ., (அரசியல், பொருளாதாரம்), பி. எஸ்ஸி., (கணிதம், பௌதீகம், வேதியல், தாவரம், உயிரியல், நிலவியல்), பி. காம்., எம். ஏ., (தமிழ்) வகுப்புக்கள் உள்ளன.

* கொடை விளக்கு – டாக்டர் வ. சுப. மாணிக்கம்

1300 மாணவர்கள் இக்கல்லூரியில் பயின்று வருகின்றனர்.

கல்லூரி வட்டத்தில் பவநகர் விளையாட்ட ரங்கு அமைக்கப் பெற்றிருக்கிறது. வள்ளல் அழகப்பர் விருப்பப்படி இவ்விடத்திலேயே அவ ரது உடல் எரியூட்டி அடக்கம் செய்யப் பெற்றது.

தியாகராசர் கல்லூரி, மதுரை.

தமிழ்நாட்டின் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் இக்கல்லூரி, கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களாலும், அவர் தம் மக்கள் சுந்தரம் செட்டியார், மாணிக்க வாசகம் செட்டியார் ஆகியோராலும் 1-6-1944 இல் தோற்றுவிக்கப்பெற்ற 'தியாகராசர் அறக் குழு'வால் 1949-இல் தொடங்கப் பெற்றது.

வைகை ஆற்றுக்கும் மாரியம்மன் தெப்பக் குளத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந் திருந்த இராமநாதபுரம் மன்னரின் மாளிகை யைத் திருத்தியும் விரிவாக்கியும் அதைச் சுற்றி லும் 11 ஏக்கர் பரப்பில் புதிய கட்டிடங்களைக் கட்டியும் இக்கல்லூரி ஏற்படுத்தப்பட்டது. எழிலார்ந்த நீச்சற் குளம் ஒன்றும் உளது.

பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு, பி. ஏ., பி. எஸ். ஸி., எம். ஏ. வகுப்புக்கள் இக்கல்லூரி யில் உள்ளன.

மாணவர் உணவு விடுதியும், சிறந்த நூல் நிலையமும், உயர் ஆராய்ச்சிகளுக்கேற்ற விஞ் ஞான ஆய்வுக் கூடங்களும் இக் கல்லூரியில் உள்ளன.

இளைஞர்களிடையே தமிழ்மொழி ஆர் வத்தையும், அறிவையும், வளர்ப்பதில் இக் கல்லூரி நனிசிறந்து விளங்குகிறது. வேதியல், உயிரியல் துறைகளும் இக் கல்லூரியில் புகழ் பெற்றவை.

தி. சுந்தரம் செட்டியார் அவர்கள் இக் கல்லூரியின் செயலாளராக இருந்துவரு கிறார்கள்.

அரசர் கல்லூரி, புதுக்கோட்டை

இக்கல்லூரிக்கு, 1946-இல் கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் ரூபாய் 50,000 வழங்கி யுள்ளார்கள்.

தேசியக் கல்லூரி திருச்சிராப்பள்ளி

இக்கல்லூரியின் பெரு வளர்ச்சிக்கு நகரத் தார்கள் மிகவும் உதவியுள்ளனர்.

குறிப்பாக, திருச்சி மாவட்டத்தின் வர லாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத் தக்க பணிகளைச் செய்துள்ள பெத்தாச்சி வள்ளல் இக்கல்லூரியின் வளத்திற்கு உயிர் நாடியாக விளங்கினார்கள். இதைப் பற்றிய ஒரு சிறு குறிப்பை சாரநாதன் மெமோரி யல் வால்யூம் என்ற நூலில் 279 ஆம் பக்கத் திலிருந்து கீழே தருகிறோம். இப்பகுதி 16-2-1947-இல் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் வி. சாரநாதன் எம். ஏ., அவர்கள் கல்லூரியின் வைர விழாவின் போது ஆற்றிய வரவேற்பு உரையின் ஒரு பகுதியாகும்.

தெப்பக்குளத்திற்கு அருகேயுள்ள தேசியக் கல்லூரியின் பழைய கட்டிடத்தில் கானாடு காத்தான் திவான் பகதூர் மு. ராம. இராமசாமி செட்டியார் அவர்கள் கட்டிக் கொடுத்த மண்டபம் ஒன்று உள்ளது. அம் மண்டபம் அவர்கள் பெயரையே தாங்கி நிற்கிறது.

இராமசாமி செட்டியார் அவர்கள் பெய ரால் வழங்கப்பட்டு வரும் உபகாரச் சம்பளங் கள் பற்றிய விவரங்களை இம்மலரில் 32-ஆம் பக்கத்தில் காண்க.

Hon. S. Rm. M. C. T. PETHACHI CHETTIAR of Kanadukathan munificently fostered the growth of the National College at Trichinopoly.

In the continuous influence of one man, the late Sir T. Desikachariar, the College benifited from the blend of cultures, the union of ancient truths and modern practice, which the truly accomplished representative of the local Indian Community might come to possess; and in Justice Seshagiri Iyer, before him, there was another winsome leader, the man having put his hand to the plough and not looking back; while that great benefactor

of every local cause, Diwan Bahadur Pethachi Chettiar, alone made, by his splendid generosity and ardent outlook, the work of those two others possible. To those and to the first Principal, the genial veteran, the late K. Ramanujachariar, and to the founders, of whom one is happily with us even today, let us turn our hearts in simple homage on this occasion.

(An extract from the Welcome address at The National College Diamond Jubilee Celebrations *16—2—1947—* by the Principal Sri Saranathan M. A.)

Ref: Saranathan Memorial Vol.—Page *279.*

விவேகானந்தர் கல்லூரி, சென்னை

இக்கல்லூரி மயிலாப்பூரில் நடைபெற்று வருகிறது. கல்லூரியின் கட்டிடம், கல்லூரி ஏற்படு முன்னரே இராமகிருஷ்ண மடத்துக்காகக் கட்டப்பெற்றது. அப்போது அதற்கு, நகரத்தார்கள் அனைவரும் பொருளுதவினர். சிறப்பாக ஆண்டிப்பட்டிக் குறுநில மன்னராக விளங்கியவர்களும் கானாடுகாத்தானைச் சேர்ந்தவர்களுமான வள்ளல் திவான்பகதூர் சா.ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் கொடுத்த ரூபாய் *50,000* ம் சா. அ. அ. குடும்பத்தார் கொடுத்த பெருந் தொகையும் குறிப்பிடத்தக்கவை. கட்டிடத்தின் வாயிலில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பொருளுதவியால் அது உருவாகிய விவரம் காணப்படுகிறது. சில சமயம் வெள்ளை அடிக்கும்போது, இந்த எழுத்துக்களில் அழுத்தி அடித்து விடுகின்றனர்.

மதுரைக் கல்லூரி

அண்ணாமலை அரசர் மதுரையில் பல்கலைக் கழகம் நிறுவ நினைத்தபோது, மதுரை மாநகரில் நடைபெற்றுவந்த கல்வி நிலையங்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டினார். *1915*-இல் மதுரைக் கல்லூரிக்கு இடம் வேண்டியதிருந்தது. அண்ணாமலை செட்டியார் ரூ. *30,000*வழங்கினார்; பின், அரசினரும் அதே அளவு தொகை கொடுக்க இசைந்தனர். இவ்விரு பணங்களையும் கொண்டு வாங்கிய இடத்தில் தான், மதுரைக் கல்லூரியின் கட்டிடங்கள் இன்று காட்சி தருகின்றன.

அமெரிக்கன் கல்லூரி மதுரை

ஒரு பல்கலைக்கழகம் நிறுவ நினைத்தபோது அண்ணாமலை அரசர், மதுரையிலிருந்த அமெரிக்க ஆங்கிலேய கல்வியாளர்களுடன் நெருங்கிப் பழகினார். அதன் பயனாய் ரெவரண்டு ஜான் மில்லர் காலத்தில், பசுமலை நார்மல் டிரெயினிங் ஸ்கூலுக்கு, அண்ணாமலை செட்டியார் 1914-இல் பசுமலையில் மாணவர்விடுதி ஒன்று ஏற்படுத்தினார். இது "ராவ்பகதூர் சா. ராம. மு. அ. அண்ணாமலை செட்டியார் உணவுவிடுதி" என்ற பெயரில் இன்றளவும் நடைபெற்று வருகிறது. பசுமலை அஞ்சல் நிலையத்திற்கு அருகே இக்கட்டிடம் உளது.

அமெரிக்கன் கல்லூரிக்கு 1915-இல் அண்ணாமலை அரசர் ஒரு மாணவர் விடுதி அமைத்துக் கொடுத்தார்.

தியாகராசர் வணிகக் கல்லூரி, மதுரை.
(Thiagarajar College of Commerce)

பகலில் பல்வேறு பணி புரிபவர்கள், வேலைக்குச் செல்வதற்கு முன்பும், சென்றுவந்த பின்னரும் கல்வி பயில இக்கல்லூரி வாய்ப்பு நல்குகிறது. வணிகக் கல்வியில் பி. காம். பட்டப் படிப்புக்குச் சமமான தேசிய டிப்ளமா தேர்வு எழுத இக்கல்லூரி வழிவகை செய்கிறது.

தி. மாணிக்க வாசகம் அவர்கள் இக்கல்லூரியின் செயலராக இருந்து வருகிறார்கள்.

தியாகராசர் வணிக மேற்பார்வைப் பயிற்சிக் கல்லூரி, மதுரை.
(Thiagarajar Institute of Management Studies, Madurai)

வணிக நிறுவனங்களைச் செம்மையாக ஆட்சி செய்வது ஓர் அரியகலை. அதற்கேற்ற அறிவைப் புகட்டவும், தொழில் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் கையாளப்படும் ஆட்சி முறைகளைத் தெரிவிக்கவும் இக்கல்வி நிலையம் நிறுவப் பெற்றிருக்கிறது.

பட்டம் பெற்றவர்கள் மட்டுமே இக்கல்லூரியில் சேரலாம். குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கு மட்டுமே இங்கு இடம் உண்டு. இத்தகைய கல்வி நிலையங்கள் இந்தியாவில் சிலவே உள.

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலேச்சிவபுரி, திருச்சி மாவட்டம்

மேலச்சிவபுரி சன்மார்க்கசபை, பைந் தமிழ் வளர்க்கும் பழம்பெரும் நிறுவனங்களுள் முன்னிற்கும் மூலவித்தாகும். இதனை முன் மாதிரியாகக் கொண்டே செட்டி நாட்டில் தமிழ் வளர்ச்சிக் கழகங்கள் தோன்றின. 1909-இல் இவ்வூர் வ. பழ. சா. குடும்பத்தினரால் நிறுவப் பெற்று 1959-இல் பொன்விழாக் கொண்டாடிய சிறப்பினதாய்த் தொடர்ந்து தமிழ்த் தொண்டாற்றும் பெற்றியதாய் இலங்கு கிறது. இச்சபை வளர்ச்சிக்காக மேற்படி குடும்பத்தினர் கட்டிட வகையிலும் மூலதன வகையிலும் ரூ. 50,000 வரை அக்காலத்தில் வழங்கினர். மகாமகோபாத்தியாய பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் இச் சபைத் தோற்றத்திற்கு முதற்காரணராவர். அவர்கள்தம் வாழ்நாள் முழுதும் இதன்வளர்ச்சி யில் பெரிதும் கருத்து உடையராய் இருந்து காத்து வளர்த்தனர்.

இச்சபை நான்கு இன்றியமையாக் குறிக் கோள் கொண்டது. (1) அறிஞரைக் கொண்டு சொற்பொழிவு நிகழ்வித்தல் (2) நூல் வெளியிடு தல்(3)நூல்நிலையம் வைத்துப் படிக்க உதவுதல் (4) தனித்தமிழ்க் கல்லூரி நடத்துதல் என்பன வாம். இன்னவற்றோடு சைவசமய வளர்ச்சிக் கும் பாடுபட்டு, தமிழ் அறிஞர்களுக்குப் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தும் வருகிறது.

தமிழறிஞர் அனைவரும் இங்கு வந்து தலைமை தாங்கியும் சொற்பெருக்காற்றியும் சபைக்குச் சிறப்புத் தந்து தாமும் பெருமை பெற்றனர்.

சபை, பண்டிதமணியவர்களின் நூல்களைத் தமிழகத்திற்கு அறிமுகம் செய்தது. சுலோசனை, உதயணசரிதம், சுக்கிர நீதி, மண்ணியல் சிறு தேர் ஆகியவற்றை வெளியிட்டது. உரை நடைக்கோவை (பகுதி ஒன்று) திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, மணி மலர்த்திரட்டு முதலிய நூல்களையும் சபைவெளி யிட்டுக் கொள்ளும் உரிமையை, பண்டிதமணி அவர்களின் மக்கள் அன்போடு வழங்கியுள்ள னர். அந்நூல்கள் அண்மையில் வெளிவர இருக்கின்றன. தொல்காப்பிய நூல் நிலையத் தில் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகியமொழி களில் 4500 நூல்களுக்குமேல் உள்ளன.

சபையின் கண்ணெனத்தகும் உறுப்பு, கணேசர் செந்தமிழ்க் கல்லூரியாகும். இக்கல் லூரி, 1925-இல் இருந்து மதுரைத்தமிழ்ச் சங் கத்துப்பிரவேச,பாலபண்டித,பண்டிதத்தேர்வு களுக்கு மாணவர்களை அனுப்பிற்று. முதல் மாணவரே முதற்பரிசு பெற்றது குறிக்கத்தகும். 1938 முதல் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழ கத்துடன் இணைந்து, தனித்தமிழ் வித்துவான் வகுப்புக்கள் நடத்தி வருகிறது. 1960 வரை 153 மாணவரைப் புகுமுக வகுப்பிற்கு அனுப் பியது. பின்னர் இவ்வகுப்பு நடத்தப் பெற வில்லை. முன்னிலை (Preliminary) வகுப்பிற்கு 1963 வரை, 224 பேர் சென்றனர். இவர்களில் நகரத்தார் 29 பேராவர். சென்ற ஆண்டு வரை முடிநிலை (Final) தேர்விற்குச் சென்றவர்கள் 172 பேராவர். இவர்களில் 19 பேர் நகரத்தார்கள். இதுவரை எல்லா வகுப்புக்களிலுமாக 540 பேர் பயின்றுள்ளனர். இவர்களில் அரசினரின் 1000 ரூபாய்ப் பரிசு பெற்றவர்களும் உண்டு. இங்குப் பயிலும் மாணவர் பலருக்குச் சபை உதவித்தொகையும் அளிக்கிறது. அரசினர் உதவி பெறுவோரை யும் சேர்த்தால், பாதிப்பேர் உதவி பெறும் மாணவராவர். கல்லூரிக்கு அரசினர் உதவி யின்றி ஆண்டொன்றிற்கு ரூபாய் 10,000 வரை ஆகும் நடைமுறைச் செலவை, சபை ஏற் கிறது.

வள்ளல் வ. பழ. சா. பழநியப்பச் செட்டி யார், அன்னார் இளவல் அண்ணாமலைச் செட்டி யார் பழ. சாமிநாதன் செட்டியார் ஆகியோர் சபைத் தலைவர்களாக விளங்கினர். திரு. சாமி நாதன் செட்டியார் 38 ஆண்டுகள் தலைமை யேற்று நன்முறையில் நடத்தினார்கள். இப் பொழுது அவர்தம் தம்பியும் சபைத் தலைவரு மான சிதம்பரம் செட்டியாரவர்கள் இந்நிலையங் களின் நடைமுறைச் செயலாளராயும் இருந்து வருகிறார்கள்.

சபையின் வளர்ச்சி கருதி நிலையான மூல தனம் தொகுக்கக் கருதி, தலைவர் சிதம்பரஞ் செட்டியார் அவர்களும், பண்டிதமணி போல் சபை ஆக்கத்தில் அக்கரை கொண்ட பேராசி ரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார்அவர்களும் மலாய் நாடு சென்றனர். அவண் வாழும் நகரப் பெருமக்களும், ஏனைய தமிழ் மக்களும் அன் போடு வரவேற்றுப் பெருந்தொகை வழங்கிச் சிறப்பித்தனர். கொடைப்பொருள், நிதிக்குழு

வினரால் நன்கு பேணிக்காத்து வளர்க்கப் பெறுகிறது.

இவ்வண்ணம் ஊட்டம் பெற்றுள்ள சபை, ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றிப் பால்போல் இனிக்கப் பலவாறு கல்விப்பணி இயற்றி வருகிறது.

வெ. சு. அழகப்பன்,
முதல்வர்.

மருத்துவக் கல்லூரி

காரைக்குடியில் மருத்துவக் கல்லூரி ஒன்று நிறுவவேண்டும் என்பது அழகப்பாவின் திட்டங்களுள்ஒன்று. திட்டத்தை நிறைவேற்று தற்கு வேண்டும் தொடக்க முயற்சிகளையும் செய்தார். இதற்கென அரசியலார் அமைத்த குழுவும் அழகப்பாவின் திட்டத்திற்கு உடன் பட்டது. இப்பகுதிச் செல்வர்கள் மருத்துவக் கல்லூரியின் நலத்தை அறிந்து பெருநிதி அளித்து அழகப்பாவோடு ஒத்துழைத்திருப் பின், இக்கல்லூரி இதுகாறும் தோன்றியிருக் கும். இனியேனும் தோன்ற ஆவன செய்ய வேண்டும்.

★

நகரத்தார் சங்கம்,

குழிபிறை.

செயல் துடிப்பும், எண்ணத் துணிவும் கொண்ட நல்லிளைஞர் பலர் ஒன்றுகூடி, செய லாற்றத் துடிக்கும் செம்மல்கள் பலரின் துணை கொண்டு 29—4—62-ஆம் நாள் இச்சங்கத்தை நிறுவினோம்.


சங்கத்திற்கென ஒரு கட்டிடம் கட்டித் தந்த பெருமை மு. ராம. மு. பழ. குடும்பத் தினருக்குரியது.

பொருட் குறைவாலும், சுற்றுப்புறச் சூழ லாலும் பாங்குறக் கல்வி பெறாது பாதியிலே படிப்பை முடிக்கும் நம் இளைஞர்கள் நகரத் தார் சங்கங்களின் துணைகொண்டு பொறியிய லும், மருத்துவமும், நிலவியலும் விலங்கியலும், பயிரியலும், கணக்கியலும் இன்னோரன்ன இயல்களும் கற்றுத்தெளிய, நுண்மாண் நுழை புலம் காண ஒல்லும் வழியெல்லாம் வெல்லும் வழி காட்ட இச்சங்கம் முன்னிற்கிறது.

இச்சங்கத்தின் தலைவராக திரு. தெ. அண. அண்ணாமலை செட்டியார் அவர்களும், துணைத் தலைவராக திரு. ஆமு. செ. மு. முத்துக்கருப் பன் செட்டியார் அவர்களும், செயலாளராக திரு. இராம. சிதம்பரம் அவர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மலேயாவில் உறுப்பினர்களைச் சேர்க்கவும், நன்கொடை திரட்டவும் திரு. சித. பழ. பழநியப்ப செட்டியார் அவர்களை நியமித் திருக்கிறோம்.

இது வரை உயர்நிலைப்பள்ளி மாணவர் இருவர்க்கும், மாணவி ஒருதிக்கும் நன் கொடையாகத் தொகை கொடுத்து உதவியிருக் கிறோம்.

ஆறு. மெய்யப்பன்,
துணைச் செயலாளர்.



மகளிர் கல்லூரி
Women's College

டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரி
மதுரை

இக்கல்லூரிக்கு அழகப்ப வள்ளல் அவர்களும் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களும் நன்கொடைகள் வழங்கியுள்ளனர்.

சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி
பள்ளத்தூர்
(Seethalakshmi Achi College for Women, Pallatur)

உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியார் அவர்களின் கொடை வளத்தால் இக்கல்லூரி அவர் தம் ஊராகிய பள்ளத்தூரில் 18-6-1962 இல் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புடன் தொடங்கப் பெற்றது.

1963-இல் பி. ஏ. வகுப்பு ஏற்பட்டிருக்கிறது. தங்கிப் படிப்பவர்க்கு உணவு விடுதியும், வீடுகளிலிருந்து வரும் மாணவிகளை நாள் தோறும் அழைத்துவர சுற்று வட்டார ஊர்களுக்கு உந்துவண்டி வசதியும் செய்யப் பெற்றிருக்கிறது. ஏழை மாணவியர்க்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன.

கே. ரங்கநாயகி அம்மா,
முதல்வர்.

அழகப்பா மகளிர் கல்லூரி
காரைக்குடி


இக்கல்லூரி வள்ளல் அழகப்ப செட்டியார் அவர்களால் தோற்றுவிக்கப் பெற்றுச் சில ஆண்டுகள் கோட்டையூரில் அவர் தம் இல்லத்திலும், பின்னர் அதற்கெனக் காரைக்குடியில் கல்லூரி வட்டத்தில் கட்டப்பெற்ற கட்டிடத்திலும் நடைபெற்றது.

மேரி அரசி கல்லூரி, சென்னை
(Queen Mary's College, Madras.)

தமிழ்நாடு அரசாங்கத்தாரால் இக்கல்லூரி நடத்தப் படுகிறது. இக்கல்லூரியின் பொன் விழாவையொட்டி 1964-இல் மேற்கொள்ளப் பெறும் விரிவான வளர்ச்சியில் நகரத்தார் பெருமக்கள் பலரும், பெண்மணிகளும் முக்கிய பங்கு கொண்டுள்ளனர்.

இளையோர் தொழிற் பள்ளிகள்

(Junior Technical Schools)



இளைஞர் தொழிற்பள்ளி
செட்டிநாடு


எட்டாம் வகுப்புப் படித்து முடித்து, 13 வயதுக்கு மேற்பட்டும் 17 வயதுக்கு உட்பட்டும் உள்ள இளைஞர்கள் தொழிற் பயிற்சி பெறுவதற்காக இத்தகைய பள்ளிகள் அரசாங்க ஆதரவுடன் தமிழ்நாட்டில் சில இடங்களில் தொடங்கப் பெற்றுள்ளன. இவற்றுள் ஒன்றே இப் பள்ளியாகும்.

இப்பள்ளி 1962-இல் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் டிரஸ்டால் அண்ணாமலை பாலிடெக்கினிக்கின் ஒரு பகுதியாகத் தொடங்கப் பெற்றது. இங்கு மூன்றாண்டுகளுக்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவர்களுக்குப் பள்ளிக் கட்டணம் கிடையாது.

ஆங்கிலம், தமிழ், வரலாறு, பூகோளம், கணிதம், அல்ஜிப்ரா, சாமட்டிரி, பௌதிகம், இரசாயனம், பொறியியல் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. தச்சு, கொல்லு வேலைகள் லேத்தில் வேலை செய்தல், பட்டறை வேலைகளில் பயிற்சி ஆகியவை உண்டு. இதில் இப்படிப்பு பயின்றவர்கள் தொழிற்சாலைகளில் சார்ஜ்மென், சூப்பர்வைசர் வேலைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். பாடங்கள் பெரும்பாலும் தமிழிலேயே சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

1964 ஜுன் முதல் இப்பள்ளியை நடத்த, ஜவஹர் மில் டயரக்டர் மு. அ. பழநியப்ப செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட உமையாம்பிகை டிரஸ்ட் விருப்பம் தெரிவித்திருக்கிறது.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
கல்லூரி முதல்வர்.



பல் தொழில் கல்லூரிகள்

(POLYTECHNICS)

அண்ணுமலை பல்தொழிற் கல்லூரி
செட்டிநாடு

அண்ணுமலைப் பல்கலைக் கழகம் கண்ட பெரு வள்ளலாகிய இராசா சர். அண்ணுமலைச் செட்டியார் நினைவாகப் பொதுமக்கள் வழங்கிய நிதியைக்கொண்டு ஏற்பட்ட இராசா சர். அண்ணுமலைச் செட்டியார் நினைவு செட்டி நாடு அறக்குழுவினரால் இக்கல்வி நிலையம் 11—7—1956-இல் நிறுவப்பெற்றது. இந்த அறக்குழுவின் தலைவராகிய டாக்டர் இராசா சர். முத்தையா செட்டியார் அவர்கள் இந்தத் தொழிற் கல்வி நிலையத்துக்கு வேண்டிய இடங்களை வழங்கியுள்ளார்கள்.

செட்டிநாடு இரயில் நிலையத்தை அடுத்து, தோற்றப் பொலிவுடன் காணப்படும் கட்டிடங்கள் இத்தொழிற் பள்ளியைச் சேர்ந்தவையே. சர்வே பயிற்சி பெறுவதற்கு இங்குள்ள திறந்த வெளி மிக வாய்ப்பாக இருக்கிறது.

கட்டிட, இயந்திர, மின்சாரப் பொறியியல் பாடங்களில் மூன்று ஆண்டுப் படிப்பு இங்கு புகட்டப்பெறுகிறது. அவற்றைப் படித்து, தேர்ச்சி பெறும் மாணவர்கள் எல். சி. ஈ., எல்.எம்.ஈ., எல்.ஈ.ஈ. என்ற டிப்ளமாக்களைப் பெறுகின்றனர்.

அரசாங்க உதவியுடன் ஏறத்தாழ 20,00,000 ரூபாய் செலவில் தொழிற் கல்லூரி தொழிற் கூடம், உணவு விடுதிக் கட்டடங்கள் கட்டப் பெற்றுள்ளன. தேசிய மாணவர் படை உண்டு. 60% மார்க் வாங்கும் மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தார் கடன் உதவி செய்கின்றனர். ஓராண்டுக்கு 1,500 ரூபாய்க்குக் குறைவான வருவாயுள்ள பெற்ருேர்களின் குழந்தைகளுக்கு மாநில அரசாங்கத்தார் கடன் உதவி செய்கின்றனர். இவை தவிர பிற்பட்ட மாணவர்களுக்குச் சிறப்பான பல சலுகைகள் உண்டு.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
கல்லூரி முதல்வர்.

முருகப்ப செட்டியார் நினைவு பல் தொழிற் கல்லூரி, ஆவடி

இக்கல்லூரி அ. மு. மு. அறக்குழுவினரால் 1957 ஆகஸ்டு மாதத்தில் திவான்பகதூர் அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள் நினைவாகத் தோற்றுவிக்கப் பெற்றது.

ஆவடி இரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் கிங் கிராஸ் சாலைக்கும் திருவள்ளூர் நெடுஞ்சாலைக்கும் இடையே 30 ஏக்கர்ப் பரப்பில் இக்கல்லூரி அமைந்திருக்கிறது. தொழில் வளர்ச்சியால் சிறப்பும் முக்கியத்துவமும் பெற்றுவரும் பகுதியில் இக்கல்லூரி இயங்கி வருவது மாணவர்கள் தொழிற் பயிற்சி பெற வாய்ப்பாக இருக்கிறது. 12 இலட்சம் ரூபாய் செலவில் எழில்மிகு கட்டிடங்கள், எட்டு இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரக் கருவிகள் கொண்ட தொழிற் கூடமும் கட்டப் பெற்றுள்ளன.

எல்.சி.ஈ., எல்.எம்.ஈ., எல்.ஈ.ஈ., என்ற டிப்ளமாக்களைப் பெறுவதற்கான மூன்று ஆண்டுக் கல்வி இங்கு புகட்டப்படுகிறது. வசதியான உணவு விடுதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திறமை மிகுந்த ஏழை மாணவர்களுக்கு ஆட்சிக்குழுவினர் உபகாரச் சம்பளங்களை வழங்கி வருகின்றனர்.

மு. வெ. அருணசலம்,
கரெஸ்பாண்டென்ட்.

அழகப்பா தொழிற் கல்லூரி அழகப்பாபுரம், காரைக்குடி-3 (Alagappa Polytechnic)

இது 1955 - இல் தொடங்கப்பெற்ற அழகப்பா பொறியியல் கல்லூரியின் உறுப்பாக நடைபெற்று வந்தது. 1962 முதல் தனி நிறுவனமாக இயங்கி வருகிறது. அதற்கேற்ப, கட்டிடங்களும் வேலைக் கூடங்களும் மூன்று உணவு விடுதிகளும் ஏற்பட்டுள்ளன.

எல்.சி.ஈ., எல்.எம்.ஈ., எல்.ஈ.ஈ., படிப்புக்கள் மும்மூன்ருண்டுகளுக்குப் புகட்டப்படுகின்றன.

இராமநாதபுர மாவட்டத்தில் ஏற்பட்ட முதல் தொழிற் கல்லூரி இதுவே.

முத்தையா பல் தொழிற் கல்லூரி அண்ணமலைநகர்

இது, அண்ணமலைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக நடைபெற்று வருகிறது. ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் அண்ணமலைப் பல்கலைக்கழகத்துக்கு ஆற்றியுள்ள பணிகளுக்கு நன்றி கூறும் வகையில் பல்கலைக்கழகத்தார், இக்கல்வி நிலையத்துக்கு அன்னர் பெயரைப் பொறித்துள்ளனர்.

தியாகராசர் பல்தொழிற் கல்லூரி, சேலம்

இக்கல்லூரி கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களால் சேலம் மாநகரில் சூரமங்கலம் பகுதியில் 1958-இல் தொடங்கப் பெற்றது.

எல். சி. ஈ., ஏ. எல். எம். ஈ., எல். ஈ. ஈ., என்ற மூன்ருண்டு டிப்ளமாப் படிப்புக்கள் இங்கு உண்டு. இவை தவிர நூலாலைகளில் நெசவுப் பகுதியில் பணிபுரிய உதவும் எல். டி. எம். என்ற படிப்பும் இங்கு உண்டு. மாணவர் விடுதி ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது.

இக்கல்லூரிக்கு 60 ஏக்கர் பரப்புள்ள இடம் வாங்கப்பெற்று, 15 லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டிடம் உருவாகி வருகிறது. மேலும் 15 லட்சம் செலவில் இயந்திரங்களும் விஞ்ஞானக் கருவிகளும் வாங்கப்பட்டிருக்கின்றன. 96 கதிர்கள் உள்ள நூல் ஆலை, மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 450 மாணவர் கல்வி பயின்று வருகின்றனர்.

தி. மாணிக்கவாசகம் அவர்கள் செயலராகவும் மு. சொ. சொக்கலிங்கம் அவர்கள் இணைச் செயலராகவும் இருந்து வருகின்றனர்.


தியாகராசர் பல்தொழிற் கல்லூரி, அழகப்பா நகர், கேரளம்.

இக்கல்லூரி டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களால் தொடங்கப் பெற்றது. கேரளத்தில் முதன் முதலாக ஏற்பட்ட தொழிற்கல்வி நிலையங்களுள் இது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

அழகப்பர் மறைவுக்குப் பின், இக் கல்லூரியை நடத்தும் பொறுப்பை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

பொறியியல் கல்லூரிகள்

ENGINEERING COLLEGES



பொறியியல் கல்லூரி
அண்ணாமலைநகர்

அழகப்ப வள்ளல் வழங்கிய ஐந்து இலட்சம் மூலதனத்தால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் கல்வியும், வேதியல் பொறியியல் கல்வியும் தொடங்கப்பெற்றன. விவரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்ற பகுதியில் காண்க.

அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரி
அழகப்பாபுரம், காரைக்குடி–3
(Alagappa Chettiar College of Engineering & Technology)

தமிழ்நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்ட முதல் பொறியியல் கல்லூரி இதுவே. கட்டிட, இயந்திர, மின்சாரப் பொறியியல் துறைகளில் பட்டப் படிப்புக்கு இங்கு பயிற்றுவிக்கப்படுகிறது.

ஆய்வுக்கூடங்களும் தொழிற்கூடங்களும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. இரு உணவு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. ஐந்து வகுப்புக்களிலுமாக 600 பேர் பயிலுகின்றனர்.


மாணவர் தொகையை மிகுதியாக்கவும் பட்டம் அடுத்த முதியவர்க்குரிய பொறியியல் படிப்புத் தொடங்கவும் முயற்சி மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது.

தியாகராசர் பொறியியல் கல்லூரி
மதுரை

தமிழ் நாட்டில் தனியார் துறையில் இயங்கி வரும் பொறியியல் கல்லூரிகளில் இதுவும் ஒன்று. திருப்பரங்குன்றம் மலைச்சரிவில் அணியணியாக அமைந்து இக்கல்லூரியின் கட்டிடங்களும், உணவு விடுதிகளும், சாலையிற் செல்வோர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் விளங்குகின்றன.

கட்டிட, இயந்திர, மின்சாரப் பொறியியல், பாடங்களில் பட்டப் படிப்புப் பெற இங்கு பயிற்றுவிக்கப் பெறுகிறது.

தி. மாணிக்கவாசகம் அவர்கள் இக் கல்லூரியின் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்கள்.



ஆசிரியர் கல்லூரிகள் (Teachers' Training Colleges)

டாக்டர் அழகப்ப செட்டியார்
ஆசிரியர் கல்லூரி
அழகப்பாபுரம், காரைக்குடி—3

(Dr. Alagappa Chettiar Training College)

இக்கல்லூரியில், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பிட்டி., படிக்கவசதி செய்யப்பெற்றிருக்கிறது. ஆடவர் 70 பேரும் பெண்டிர் 30 பேரும் ஆண்டுதோறும் சேர்த்துக்கொள்ளப் பெறுகின்றனர். உணவு விடுதிகள் உள்ளன.

தமிழ், ஆங்கிலம், வரலாறு, பௌதிகம் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைச் சிறப்பாகப் பயில இங்கு வாய்ப்பு உண்டு. நன்முறை உயர்நிலைப்பள்ளி, இக்கல்லூரியின் உறுப்பாக நடைபெற்று வருகின்றது.

தியாகராசர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி
மதுரை

(Thagarajar College of Preceptors)

இக் கல்லூரி கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட 'தியாகேசர் அறக் குழு'வினரால் 1956-இல் தொடங்கப் பெற்று சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்றிருக்கிறது.


பி. டி. வகுப்பில் ஆண்டுதோறும் 60 மாணவ மாணவியர் சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர். ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், சமூகவியல் முதலிய பாடங்களைப் பயிற்றுவிப்பதற்கு இங்கு கற்பிக்கப்படுகிறது.

நன்முறை உயர்நிலைப்பள்ளி ஒன்று, இக் கல்லூரியின் உறுப்பாக இயங்கி வருகிறது. பொது மக்களுக்குப் பயன்படும் வண்ணம் சொற்பொழிவுகள் ஆற்றவும், நூல்கள் ஆக்கவும் இக்கல்லூரியின் ஒரு பகுதி பணிபுரிகிறது.

திருவாட்டி இராதா தியாகராசன் அவர்கள் இக்கல்லூரியின் செயலராக இருந்து வருகிறார்கள்.

ஆசிரியர் கல்லூரி, அண்ணாமலைநகர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ட்டி., எம்.ஈடி. படிப்புகள் உள்ளன.



ஆராய்ச்சி நிறுவனங்கள் (Research Institutes)

மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம்
கிண்டி, சென்னை.
Central Leather Research Institute

இந்திய அரசாங்கத்தின் சிறந்த ஆராய்ச்சி நிலையங்களுள் ஒன்றாக இது இயங்கி வருகிறது. தோல் ஏற்றுமதிப் பெரு வணிகர் ஆ. நாகப்ப செட்டியார் அவர்கள் இங்கு பயிலும் ஆராய்ச்சி மாணவர் சிலருக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கி வருகிறார்கள்; தோல் பொருட்காட்சி மண்டபம் அமைக்க ரூபாய் *1,16,000* நன்கொடை கொடுத்திருக்கிறார்கள்.

மத்திய மின்சார வேதியல் ஆராய்ச்சி நிலையம்
அழகப்பாபுரம், காரைக்குடி-3
Central Electro-Chemical Research Institute

இது இந்திய அரசாங்கம் நடத்திவரும் தேசிய ஆராய்ச்சி நிலையங்களுள் ஒன்றாகும். டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் 300 ஏக்கர் நிலமும் 15 இலட்சம் ரூபாயும் வழங்கியதால், இந்நிலையத்தைக் காரைக்குடியில் வைக்க, விஞ்ஞானி டாக்டர் பாட்நகர் இசைந்தார். செல்வாக்குள்ள பலர் இந்நிலையம் காரைக்குடியில் அமைவதற்குத் தடையாயிருந்தனர்; விஞ்ஞான—தொழில் ஆராய்ச்சிக் கழகக் கூட்டத்திலும் இக்கருத்துத் தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழகம் நிறுவும் முயற்சியில் அழகப்பருக்கு இது துணையாக இருக்குமாதலால் காரைக்குடியில் நிறுவுவதையே தாம் விரும்புவதாக ஜவஹர்லால் நேரு அக்கூட்டத்தில் தெள்ளத்தெளியக் கூறி, வள்ளல் அழகப்பரையும் அக்கழகத்து உறுப்பினராக நியமித்தார். 'சுதந்தரா' வார இதழில் காசா சுப்பாராவ் முதலிய பலர் இந்நிலையத்தைச் சென்னையில் நிறுவ மேற்கொண்ட முயற்சிகளும் நிறைவேறவில்லை. *25—7—1948*-இல் இந்த நிலையத்திற்கு ஜவஹர்லால் நேரு அவர்கள் கால்கோள் செய்தார்கள்.

இந்நிலையத்தை அமைப்பதற்குக் காரைக்குடியில் போதிய நீர்வசதியில்லை என்று ஒரு தடை உண்டாயிற்று. பெருங் கிணறுகள் தோண்டி நீருண்மையைக் காட்டினார் அழகப்பர். இவ்வாறு எல்லாத் தடையையும் விலக்கிகாரைக்குடியில் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவிய அழகப்பரின் துணிவு பாராட்டுதற்குரியது.

அரசாங்கத்தார் 50 இலட்சம் ரூபாய்வரை செலவிட்டு, சிறந்த கட்டிடங்களும் வீடுகளும் கட்டியும், இயந்திரங்கள், ஆராய்ச்சிக் கருவிகள் வாங்கியும், மக்னீசியம் மாதிரித் தொழிற்சாலை நிறுவியும் உள்ளனர். மின்சார பாட்டரி கண்டுபிடிக்கப்பட்டதாலும் புதிய ஆராய்ச்சிகள் வாயிலாகவும் இந்நிலையமும் காரைக்குடியும் புகழ்பெற்று வருகின்றன.

இந்நிலயத்தை, சென்னை போன்ற பெரு நகரங்களுக்கு மாற்ற, சிலர் முயன்று வருகின்றனர். இம்முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிவது நம் கடமை.

இராமாநுசம் கணித நிறுவனம்
(Ramanujam Institute of Mathematics)

இந்தியா, குடியரசு நாடாகி அரசியல் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்த 26—1—1950-ஆம் நாளில் டாக்டர் அழகப்ப செட்டியார் தம் அசோக அற நிறுவனத்தின் உறுப்பாக, இந்த ஆராய்ச்சி நிலயத்தை நிறுவினார்கள். டாக்டர் டி. விஜயராகவன், முதல் இயக்குநராக நியமிக்கப்பெற்றார். உயர்கணிதத் துறையில் இவ்வாராய்ச்சி நிலயம் வெளியிட்டுள்ள ஆராய்ச்சித் தாள்கள் உலகக் கணித மேதைகளால் பெரிதும் மதிக்கப்படுகின்றன.

டாக்டர் விஜயராகவன் அவர்கள் உயிர் நீத்த பிறகு இந்த ஆராய்ச்சி நிலயத்தின் எதிர்காலம் இருள் சூழ்ந்திருந்தது. அந்நிலையில் இந்திய அரசாங்கத்தின் இசைவுடன், இந்நிலயத்தை 1—5—1957-இல் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டது. இந்நிலயம் இப்போது, பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக நடத்தப்படுகிறது.

இந்தியப் பல்தமிழ்க் கழகம்
(Indian Tamil Academy)

திரு.வி.க. இல்லம்—காரைக்குடி-1. தமிழ்நாடு

தலைவர்: டாக்டர் வ. சுப. மாணிக்கம்

செயலர்: இராம. பெரியகருப்பன்

தோற்றம் 26—1—1964

நம் தாய்மொழியாம் தமிழ் இந்தியத் தாய் நாட்டில் வழங்கி வரும் மொழிகளுள் மிக்க முது மொழி; ஞாலத்து வழங்கிவரும் மொழிகளுள்ளே ஒரு தொன் மொழி; கடல் கடந்து பரவியுள்ள ஓர் இந்தியமொழி; வடமொழிபோல் பல மொழிக் குழவிகளை ஈன்று புறந்தந்த அன்னை மொழி; மூவரசு ஆண்ட அரசு மொழி; முச்சங்கம் வளர்த்த செம்மொழி; என்றுமுள தென் மொழி.

தமிழின் பழமை தெய்வத்தின் பழமை போன்றது. அளவினும் அளவாகக் கணக்கிட்டாலும், நாலாயிரம் ஆண்டுத் தொன்மையுடையது என்பர். தமிழ் பல்வளம் படைத்த செல்வமொழி. காலந்தோறும் எவ்வாறோ ஏற்பட்ட எத்துணையோ பேரழிவுக்குப் பின்னரும், இன்று எஞ்சியுள்ள அதன் செல்வமே இவ்வளவாயின், முன்னைச் செல்வம் எவ்வளவாமோ? மதித்துப் பார்மின்! இந்நாள் நாம் கற்கும் நூல்களுள் மூவாயிரம் ஆண்டு மூப்புடையது தொல்காப்பியம். தனிவாழ்வையும் பொது வாழ்வையும் போரையும் அமைதியையும் விரிவாகக் கூறும் ஒரு முழுநூல் இது. உலகிற் சிறந்த ஒரு மொழிநூலும் இது. மூவாயிரம் பாடல் கொண்ட பதினெட்டுச் சங்கப் பனுவல்கள் கி.மு. முதல் நூற்றாண்டில் தோன்றியவை. தமிழர்களின் அறவியல் துறவியல் மறவியல் அரசியல் பொருளியல் வாழ்வனைத்தும் இவற்றில் பொதிந்து கிடக்கின்றன. உலகு புகழ் திருக்குறள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே உலகை ஒருலகமாகவும் மக்களை ஓரினமாகவும் அன்பாற் பிணைத்து அறஞ் சொல்லிய நூல். இவ்வறநூல் நடைமுறைக்கு ஒத்தது, யாரையும் நல்வழிப்படுத்தவல்லது. சைவம் வைணவம் சமணம் பௌத்தம் முகமதியம் கிறித்தவம் என்றின்ன பெருஞ் சமயங்கட்கெல்லாம் தனித்தனிக் காப்பியங்கள் கண்ட மொழி தமிழ் மொழி ஒன்றுதான் என்று பாராட்டுப. இறையடி காட்டும் இசைத் தெய்வப் பாசுரங்களும், ஓதி ஒழுகுதற்கு உரிய நீதிச் செய்யுட்களும் தமிழின்கண் கடல்போற் பெருகிப் பரவியுள்ளன. தமிழாற்றல் துயர் கடந்து செல்லும் தூயவாற்றல். இன்றும் தமிழ் வளர்ச்சி குறைவோ எனின், அன்றுகாண். நம் இந்திய மொழிகளுள் முதன்முதல் கலைக்களஞ்சியம் கண்டமொழி தமிழ் மொழியே காண்.

கழகத்தின் குறிக்கோள்

இந்தியப் பல்தமிழ்க்கழகத்தின் குறிக்கோளாவது எல்லா வகையானும் எல்லாத்

துறையானும் தமிழ்மொழியைப் பதினைந்து ஆண்டுக் காலத்தில் தன்னிறைவாக்கவேண்டும்; அதன் தூய தனியியல்பும் மரபும் அடிப்படையிற் குன்ருவாறு போற்றியே எவ்வகை வளர்ச்சியும் செய்யவேண்டும்; உலகவரங்கில் ஒரு பெருமொழிக்கு என்னென்ன செல்வாக்குக்கள் ஆற்றல்கள் உண்டோ அவ்வனைத்தும் தமிழ் பெறச் செய்யவேண்டும்; நல்ல பொருளாதார வளங்களும் பெருவேலை வாய்ப்புக்களும் அறிவாற்றல்களும் தமிழால் எய்தலாம் எனவும் எய்துதற்குத் தமிழ் போதும் எனவும் எண்ணுகின்ற நன்னம்பிக்கையை மக்களுக்கு உண்டாக்கல் வேண்டும்; உண்டாக்குதற்கு உரியனவும் செய்தல்வேண்டும். சில சொல்லாற் கூறின் கழகத்தின் குறிக்கோளாவது அறிவும் ஆற்றலும் சான்ற அனைத்துலக வழக்கு மொழிகளுள் ஒன்ருகத் தமிழ் மொழியைத் தமிழர் தாமும் பிறரும் எண்ணி மதிக்குமாறு அதனைத் தன்னிறைவாக்கல் என்பதாகும்.

முதன் மூன்ருண்டுத் திட்டம்

1. தேர்வுகளும் பட்டங்களும்

இளமணி, பெருமணி, முதுமணி, என்ற மூன்று தேர்வுப் பட்டங்களைக் கழகம் அமைத்துள்ளது. இவற்றுக்கு முறையான பாடத் திட்டங்களையும் வகுத்துள்ளது. பொருத்தமான வினுத்தாட்கள் தந்து கழகம் தேர்வுகளைச் செம்மையாகவும் பொறுப்பாகவும் ஆண்டுதோறும் நடத்தும். தாமே படித்தோ தக்காரிடம் பாடங்கேட்டோ யாரும் இத்தேர்வுகளை எழுதலாம். எழுத முன்வருவார்க்கு வயது வரம்பு முதலான விதிகள் இல.

அரசினரின் பல்வேறு அலுவலகங்களிலும் நகராண்மைக் கழகங்களிலும் பஞ்சாயத்துக்களிலும் தனியார் அலுவலகங்களிலும் பெருந்தொழில் நிலையங்களிலும் அச்சகங்களிலும் பதிப்பகங்களிலும் செய்தித்தாளகங்களிலும் வேலை பார்ப்பாரெல்லாம் இத் தேர்வுகள் எழுதலாம். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள பல்துறை ஆசிரியர்கள் எழுதலாம். கலைத்துறையிலும் அரசியலிலும் சமயத்துறையிலும் உள்ளாரெல்லாம் எழுதலாம். தமிழ்ப்பற்றுக் கொண்டு ஆங்காங்கே பல நூல்களைப் படித்து வரும் ஆடவர் பெண்டிரெல்லோரும் கழகத்தின் பாடத்திட்டங்களை வரன்முறையாகப் படித்துப் பட்டம் பெறத் தேர்வு எழுதலாம். சுருங்கக் கூறின், தமிழ் கற்க விழையுங்கள்! முயலுங்கள்! கழகம் யாரையும் வரவேற்பதல்லது விலக்காது. தமிழருக்கு அடையா நெடுங்கதவும், தமிழுக்கு அஞ்சல் என்ற சொல்லும் உடையதுவே இந்தியப் பல்தமிழ்க் கழகம்.

நல்லமைப்புக் கொண்ட ஒரு பெருங்கழகம் நிரலான பாடத்திட்டம் வகுத்து நேர்மையான தேர்வுகள் நடத்திப் பெருமையான பட்டங்கள் வழங்குமாயின், ஆங்கிலம் கற்ற தமிழ்மக்களும் அறிவு நாடி யலையும் தமிழ் இளைஞர்களும் ஓய்வுநேரத்தை யெல்லாம் தமிழ் கற்கப் பயன்படுத்தி யிருப்பரன்ருே? இத்தகைய வாய்ப்பு தமிழ் மக்களுக்கு இதுவரை இல்லாமை ஒரு குறையே. இக்குறைபாட்டை அறவே களைந்தெறியத் தோன்றியதுவே இக்கழகம். தமிழ் ஆட்சி மொழியாகவும் சட்டமன்ற மொழியாகவும் இயங்கிவரும் இவ் வுரிமைக் காலத்து, பற்பல வினைஞரும் தொழிலரும் தனியாகத் தமிழ் படித்துப் பட்டம் பெறுதற்கு ஓர் எளிய வழி வேண்டியதுதானே. என்ன துறைப் பட்டம் இருந்தாலும், கூட ஒரு தமிழ்ப் பட்டம் இருப்பது குறைவாமோ? கோதிலா நிறைவன்ருே? தாய்மொழிப் பட்டம் தனிமகிழ்ச்சியைத் தருவது; தனிச் சிந்தனைக்குரியது; தளர்ச்சிக் காலத்துத் தாங்கவல்லது. உண்மை, இது வெறும் புகழ்ச்சியில்லை.

மேற்சொல்லிய தேர்வுகள் 1965 மேத்திங்களில் நிகழும். தேர்வெழுதுவோர் 1965 சனவரித் திங்களுக்குள் விண்ணப்பம் அனுப்ப வேண்டும். உரிய விண்ணப்பத் தாள்கள் கழகத்தில் கிடைக்கும். ஆங்காங்கே பணியாற்றிவரும் தமிழ்க் கழகங்களும் தமிழாசிரியர்களும் பல்தமிழ்க் கழகத் தேர்வு எழுத விரும்புவார்க்கு வகுப்புக்கள் நடத்தி ஒத்துழைக்க வேண்டுகின்ருேம்.

2. ஆராய்ச்சிப் பட்டங்கள்

தனித்தமிழ்ப் பட்டம் கொண்ட யாருமே ஆராய்ச்சிப் பட்டம் பெறுதற்கு வழிதுறை யாதும் இல்லை. ஆங்கிலத் தமிழ்ப்பட்டம் உடைய பலர் நிலையும் இதுவே. எண்ணிறந்த தமிழ்ப் புலவர்கள் மேலும் கற்று ஆய்ந்து வளரும் ஆர்வமும் சார்புமின்றிச் சோர்வுற்று வருகின்றனர். தமிழ் அகலமாக வளர்வதுமட்டும் போதாது, ஆழமாகவும் வளர

வேண்டும். ஆதலின் கல்விமணி அறிவுமணி, என்ற இருபெரும் ஆராய்ச்சிப்பட்டங்களைக் கழகம் நிறுவியுள்ளது. நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆராய்ச்சி நூற்கட்டுரைகள் எழுதி முறைப்படி கழகத்திற்குப் பணிக்கவேண்டும். அவற்றின் தகுதியை ஆராய்ச்சிச் சான்றோர் மதிப்பிடுவர். நன்மதிப்புப் பெற்ற கட்டுரைக் குப் பட்டம் அளிக்கப்படும். தமிழின் பல் துறை களிலும் ஆராய்ச்சி செய்யலாம். அரிய புதிய இவ்வாய்ப்பைத் தமிழ் கற்றவர்கள் பயன் கொண்டு பட்டம் பெற்றுத் தாமும் உயர்ந்து தமிழ் மொழியையும் உயர்த்துவர் ஆகுக.

3. ஆக்கப் பட்டங்கள்


அறிவுலகில் முற்றும் புதியதொரு வழியைக் கண்டு முதன் முதலாக இந்தியப் பல்தமிழ்க் கழகம் தொடங்குகின்றது. தம் கூர்த்த மதியால் புதிய பெரும் படைப்புக்களை ஆக்கு வார்க்குப் பட்டம் கொடுக்கும் அமைப்பு, நாம் அறிந்தவரை, இதுவரை எக்கல்விப் பெரு நிலையத்திலும் இல்லை. ஆராய்ச்சி யளவிற்கே பட்டங்கள் அளிப்பது வழக்காருக உள்ளது. ஒரு மொழிக்கு அகலமும் ஆழமும் அவற் ருெடு அடிப்படையான ஆக்கமும் வேண்டு மன்ரேே? ஆக்கம் பெருகப் பெருகவே அகலமும் உண்டாகும், ஆழமும் உண்டாகும். ஆதலின் தலைமணி முதன்மணி என்ற இருபெரும் ஆக்கப்பட்டங்களைக் கழகம் நிறுவியுள்ளது. மொழிக்கும் மக்கட்கும் வழிவழிப் பயன்படும் நிலை சான்ற புத்தம் புதிய நூல்கள் இயற்றி முறைப்படி கழகத்திற்குப் பணிக்கவேண்டும். அறிஞர்கள் அவற்றின் தகுதியை மதிப்பிடுவர். நன்மதிப்பு உடைய நூல்களை இயற்றியவர் கட்கு ஆக்கப் பட்டம் வழங்கப்பெறும்.

இளமணி பெருமணி முதுமணி என்ற மூன்று தேர்வுப் பட்டங்களும், கல்விமணி அறிவுமணி என்ற இரண்டு ஆராய்ச்சிப் பட்டங்களும், தலைமணி முதன்மணி என்ற இரண்டு ஆக்கப் பட்டங்களும் இந்தியப் பல் தமிழ்க் கழகம் கொண்டாடும் பட்டமளிப்பு விழாவில் தக்கவர் தலைமையில் வழங்கப்பெறும்.

4. நற்பயிற்சி வகுப்புச் சான்றிதழ்

இற்றைக் கல்வி நிலையங்களில் தமிழ் ஒலிப் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் சொற்பிழை களும் மரபுப்பிழைகளும் பல்கி வருகின்றன. இவ்வவலம் மிக இரங்குதற்கு உரியது. ஒரு மொழிக்கு உயிரனைய ஒலிகள் சின்னஞ் சிறுவர் சிறுமிகளால் பிழைபட ஒலிக்கப்படுமாயின், கொலையனைய பெருந்தீமை அம்மொழிக்கு வேறு வேண்டியதில்லை. ஒலிப்பிழை ஒன்றுபோதும். இலக்கண இலக்கியங்களும் தமிழ்நெறி தழுவி வரன்முறையாகக் கற்பிக்கப்படவில்லை. ஆத லின் கழகம் நற்பயிற்சி வகுப்பினைத் தானே நடத்த முன்வருகின்றது. இவ்வகுப்பு சிலநாள் நடைபெறும். தமிழ் மொழியியற் கொள்கை களும் திறனுய்வு நெறிகளும் பிறவும் இவ்வகுப் பில் விளக்கப்படும். ஆசிரியத் துறையில் உள்ளவர்கள் சேர்ந்து பயிற்சி பெறுவது பெரும் பயனுடையதாகும். வகுப்பிற் கலந்து பயின் ருர்க்குச் சான்றிதழ் அளிக்கப்படும்.

தேர்வுப்பட்டம், ஆராய்ச்சிப்பட்டம், ஆக்கப்பட்டம், சான்றிதழ் என்ற நால்வகைப் பாங்கினுல் முதன் மூன்ருண்டுத் திட்ட காலத் தில் தமிழ்ப்பணி செய்ய இந்தியப் பல்தமிழ்க் கழகம் முற்படுகின்றது. நம் தமிழ்த் தாய் மொழியின் அடிப்படை இம் முயற்சியால் வலு வடையும். கழகத்தின் நெடும் பணிக்கும் வாய்ப்புக்கள் பெருகும்.



அழகப்பா உடற்கல்விக் கல்லூரி
அழகப்பாபுரம், காரைக்குடி-3

(Alagappa College of Physical Education)

சென்னை ஒய். எம். சி. ஏ. கல்லூரிக்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் ஏற்பட்ட உடற் கல்விக் கல்லூரி இதுவே ஆகும். இது 28—8—1956-இல் தொடங்கி வைக்கப் பெற்றது.


சென்னைப் பல்கலைக்கழகத்து உடற்கல்வி, டிப்ளமா, தமிழ்நாடு அரசாங்கம் வழங்கும் உடற்கல்வி உயர்நிலை ஆசிரியர் சான்றிதழ், தமிழ்நாடு அரசாங்கம் வழங்கும் உடற்கல்வி இளநிலை ஆசிரியர் சான்றிதழ் ஆகியவை பெற இக்கல்லூரியில் பத்து மாதப் பயிற்சி தரப்படு கிறது. மொத்தம் 140 பேர்—ஆடவர் மட்டுமே—இங்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். உணவு விடுதி உண்டு. இங்கு பயிலுபவர்க்கு, மாநில அரசு சில சிறு சலுகைகள் வழங்குகிறது.

உய்யும் ஒரு கோடி !

நகரத்தார்கள் நூற்றுக் கணக்கான விடுதிகள் கட்டியுள்ளனர். இவற்றுக்குப் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளன. இவற்றில் ஒரு சிறு பகுதியை கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்குவது இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றதாகும். அது நம் இனத்து மக்கட்குப் பேருதவியாகும்.

யானை சிந்தும் சிறு எச்சிலால் ஒரு கோடி எறும்பு உயிர் வாழ்வது போல், இந்த விடுதிகளின் செலவில் ஒரு சிறு பகுதியால் நகரத்தார் சமூகத்து எண்ணற்ற ஏழைகள் உய்வு பெறுவர்.

“ வாங்கும் கவளத்து ஒரு சிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயருறு—ஆங்கு அது கொண்டு
ஊரும் எறும்பு இங்கு ஒரு கோடி உய்யுமால்
ஆரும் கிளையோடு அயின்று” —குமரகுருபரர்.



இசைக் கல்லூரி

தமிழ் இசைப்பள்ளி,

தேவகோட்டை

தேவகோட்டை தமிழிசைப் மாநாட்டின் விளைவாக, 1942-இல் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களுடைய ஆதரவில் தேவகோட்டையில் தமிழிசைப்பள்ளி தோற்று விக்கப்பெற்றது. மலேயாவிலும் தாய் நாட்டி லும் உள்ள செட்டியார்களின் உதவியால் ஏறத்தாழ ஐம்பதினுயிரம் வசூலிக்கப்பெற்று, சொந்தக் கட்டிடத்தில் 150 மாணவ, மாணவி கள் வாய்ப்பாட்டு, வாத்திய இசை, நடனம் ஆகிய துறைகளில் பயிற்சி பெற்று வருகின் றனர். தமிழ் நாட்டில் சிறந்து விளங்கும் இந்த இசைப் பள்ளியின் கிளை 1953-இல் காரைக் குடியில் தொடங்கப்பெற்றது. கர்நாடக சுத்த மான (தமிழ்) நடன முறைகளுக்குப் பெரிய அளவில் குழந்தைகளைத் தயாரிக்கும் பள்ளிக் கூடம் இதுவே. இங்கு நடனத்தின் மூலமாக நாடகத்தை—அதாவது, பேச்சின்றி ஊமை யாக, பின்னணியில் பாடல்களைப் பாடகர் பாட—நடித்துக்காட்டி வருகின்றனர்.


அழகப்பா இசைப்பள்ளி
அழகப்பாபுரம், காரைக்குடி-3
(Alagappa School of Music)

இப்பள்ளி 3—2—1956-இல் தொடங்கப் பெற்றது. வீணை, வாய்ப்பாட்டு, பரத நாட்டி யம் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. இங்கு கல்வி கற்பவர்கள் அரசினர் நடத்தும் இசைத் தேர்வுகளில் கலந்து, தேர்ச்சி பெறலாம்.

தமிழ் இசைக் கல்லூரி
ராஜா அண்ணுமலை மன்றம், சென்னை-1.

இது, அண்ணுமலை அரசர் தொடங்கிய தமிழ் இசைச் சங்கத்தாரால் 1961-இல் நிறுவப் பெற்றது.

வாய்ப்பாட்டு, வீணைப்பயிற்சி, தேவார இசைப் பயிற்சி ஆகியவற்றில் மாணவ மாணவி யர் பயிற்றுவிக்கப்படுகின்றனர். வாய்ப்பாட் டுக்கு ஆரம்ப வகுப்பு, இசைச் செல்வம், இசைமணி என்ற மூன்றுவகுப்புக்கள் உள்ளன. மிருதங்கம், பிடில், வீணை, தேவாரம் ஆகியவை பயிலத் தனித்தனி வகுப்புகள் நடைபெறு கின்றன.



பல்கலைக்கழகங்கள்
(UNIVERSITIES)

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தில்லைப் பதியுடையான் சிற்றம்பலந் தன்னில்
அல்லும் பகலும்நின் ருடுகின்ருன்—எல்லைக்கண்
அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து.

—கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

தமிழ்நாட்டில் உள்ள இரு பல்கலைக் கழகங்களுள் ஒன்ருன அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பெருவள்ளல் அண்ணாமலை அரசரின் கொடை வளத்தால் உருவாகி, வளர்ந்து வரும் சிறந்த கல்வி நிலையம் ஆகும்.

1920-இல் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் சிதம்பரத்தில் தம் அன்னையார்பெயரால் 'மீனாட்சி கல்லூரி' நிறுவினர். 1922-இல் பி. ஏ. வகுப்பும் 1925-இல் பி. ஏ., ஆனர்ஸ் வகுப்பும் தொடங்கப்பெற்றன. 1926-இல் விஞ்ஞானப் பகுதிக் கட்டடங்களும் இசைக் கல்லூரியும், 1927-இல் மீனாட்சி தமிழ்க் கல்லூரியும் வடமொழிக் கல்லூரியும் தமிழ் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும் நிறுவப்பெற்றன. இவற்றுக்குரிய கட்டடங்கள் யாவும் அன்றைய அரசாங்கத்தாரிடம் அண்ணாமலைச் செட்டியாருக்கு இருந்த அளவுகடந்த செல்வாக்கால், அரசாங்கத்தின் உதவியுடன் கட்டி முடிக்கப்பெற்றன. அண்ணாமலைச் செட்டியாரின் மேற்பார்வையில் கட்டடங்கள் மிக்க உறுதியாயும் செம்மையாகவும் கட்டப்பட்டன.

அண்ணுமலைச் செட்டியார் 20 இலட்சம் ரூபாயும், முன்ஏற்படுத்திய கல்லூரிக் கட்டடங்களையும் வைத்துப் பல்கலைக் கழகம் நிறுவுக என அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டார். இவ்வேண்டுகோளுக்கு அரசாங்கம் இணங்கிற்று. வைப்புப் பொருளாக இருபது இலட்சம் ரூபாயும், கட்டடங்கள் கட்ட ஏழரை இலட்சம் ரூபாயும், ஆண்டுதோறும் உதவித்தொகையாக ஒன்றரை இலட்சம் ரூபாயும் வழங்க டாக்டர் சுப்பராயனின் அமைச்சரவை இசைந்தது. அப்பல்கலைக்கழகம் அண்ணுமலைப் பல்கலைக்கழகம் என்றும் அதன் சார்பாக உண்டாகும் நகரம் அண்ணுமலைநகர் என்றும் வழங்கப்பெறுமென அரசாங்கத்தார் அறிவித்தனர். அண்ணுமலைப் பல்கலைக்கழகச் சட்டம் 1928-ல் நிறைவேற்றப்பட்டு 1929-இல் அமலுக்கு வந்தது; அண்ணுமலைச் செட்டியாருக்கு "செட்டிநாட்டரசர்" என்ற பரம்பரைப் பட்டம் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்பெற்றது; மூன்று கோடித் தமிழ் மக்கள், அவரைத் 'தமிழ்ப் பெருவள்ளல்' என்று போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

அண்ணுமலைச் செட்டியார் தம் இறுதிநாள் வரை பல்கலைக் கழகத்தைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். திறமையானவர்களையெல்லாம் தேடிப்பிடித்து ஆசிரியராயும் துணைவேந்தராயும் நியமித்தார். தமிழுக்கும் தமிழ் இசைக்கும் ஏற்றம் தந்தார். தமிழில் அரிய நூல்கள் வெளியிட 1930-இலேயே ஆவன செய்தார். அரசாங்கத்தாரிடமிருந்தும், அழகப்ப வள்ளல், திருவிதாங்கூர் மகாராஜா போன்ருேரிடமிருந்தும் பல்கலைக் கழகத்துக்குப் பணம் பெற்றதும் அவருடைய சிறந்த பணிகளாகும். இதுவரை இப்பல்கலைக் கழகத்துக்கு இந்திய அரசாங்கத்தாரும் மாநில அரசாங்கத்தாரும் வழங்கியுள்ள பொருளுதவி இரண்டரைக் கோடி ரூபாய்க்கு மேற்பட்டதாகும். இதனுலும் அரசர் முத்தையா அவர்களின் முயற்சியாலும் பல்கலைக்கழகம் பெருவளர்ச்சியடைந்து நாள்தோறும் விரிவடைந்து வருகிறது.

கீழ்க்கண்ட வகுப்புகள் இங்கு நடைபெறுகின்றன:

1. பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு.

2. மூன்ருண்டுப் பட்டப் படிப்புகள்.

ஆங்கில இலக்கியம், தத்துவம், வரலாறு, பொருளாதாரம், வாணிகம், கணித இயல், புள்ளி விவர இயல், பௌதிகம், இரசாயனம், தாவர சாத்திரம், உயிரின இயல், புவி இயல் (ஜியாலஜி), தமிழ், வடமொழி, தமிழ்ப் புலமை (பி. ஓ. எல்), இசை, வேளாண்மை, சமூகப் பாடங்கள் (Social Sciences) ஆகிய துறைகளிலும் பட்டப் படிப்புக்கள் உள்ளன.

3. பட்டத்துக்கு மேற்பட்ட படிப்புக்கள். (Post Graduate Courses)

மேற்கண்ட பல துறைகளிலும் பட்டம் பெற்றவர்கள் ஆராய்ச்சி செய்வதற்கான வகுப்புகள் உள்ளன.

4. தொழிற் கல்வி.

உயர்நிலைப் படிப்பு முடித்தவர்கள், கட்டடம், பொறி இயல், மின்சாரம் முதலிய துறைகளில் டிப்ளமா பயிற்சி பெற முத்தையா பாலிடெக்னிக் என்ற தொழிற் கல்வி நிலையம் 1959 முதல் நடைபெற்று வருகிறது.

இப்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொறி இயல் துறையில் மேற்கண்ட மூன்று பாடங்களிலும் இரசாயனப் பொறி இயலிலும் (கெமிகல் இன்ஜினியரிங்) பி. ஈ. பட்டம் பெறுவதற்கான பயிற்சி வழங்கப்படுகிறது.

ஆசிரியராக விரும்புவோருக்கு பி. ஈடி., எம். ஈடி. பட்டங்கள் பெறப் பயிற்றும் ஆசிரியர் கல்லூரியும் நடைபெறுகிறது.

வித்துவான், புலவர், சிரோமணி, சங்கீதபூஷணம் ஆகிய டிப்ளமாக்களும் பிரெஞ்சு, ஜெர்மன், தமிழ் இசை, ஓவியம் போன்ற பாடங்களில் சர்ட்டிபிகேட் வகுப்புகளும் நடத்தப் பெறுகின்றன. சென்னை நகர்க்கு வெளியே தமிழ்நாட்டில் வேறு எங்குமே, இத்துணைத் துறைகளில் கல்வி கற்க வாய்ப்பு இல்லை.

1955-இல் இப்பல்கலைக் கழகத்தின் வெள்ளிவிழா நடைபெற்றது. இதன் விளைவாக இந்திய அரசாங்கத்தார் வழங்கிய மூன்று இலட்ச ரூபாய் நன்கொடையை மூலதனமாக வைத்து மொழி இயல் துறை தொடங்கப் பெற்றிருக்கிறது. திராவிட மொழிகளும் வங்க மொழியும் கற்பிக்கப்படுகின்றன.

வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம் தேவாரம் ஆகிய ஒவ்வொன்றிலும் நான்காண்டுப் பயிற்சியை இசைக் கல்லூரி வழங்குகிறது.

கடல்வாழ் உயிரினங்களைப் பற்றிய ஆராய்ச்சி நிலையம் இப்பல்கலைக் கழகத்தின் ஆதரவில் 1951 முதல் பறங்கிப் பேட்டையில் இயங்கி வருகிறது. வெள்ளாறு கடலுடன் கூடும் இடத்தில் ஆராய்ச்சிக் கூடமும் காட்சிக்கூடமும் உள்ளன. புகழ் பெற்ற இந்நிலையம் இந்திய அரசாங்கத்தின் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையமாக அமையத்தக்கது.

பல்கலைக் கழக மானியக் குழுவினர் நமது பல்கலைக்கழகங்களில் குறிப்பிட்ட ஒரு சில துறைகளுக்குத் தாராளமாகப் பொருளுதவுகின்றனர். உரிய துறைகளில், உயர்கல்வியும் ஆராய்ச்சியும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கொப்ப நடைபெற வேண்டுமென்று, அக்குழுவினர் விரும்புகின்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழி இயல் துறையும் கடல் வாழ் உயிரின ஆராய்ச்சித் துறையும் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

வேளாண்மைக் கல்லூரி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மைத் துறையில் பட்டப் படிப்புப் படிப்பதற்குரிய வசதிகள் உள்ளன. இக்கல்லூரி 1960 முதல் நடைபெற்று வருகிறது. நான் காண்டுக் காலத்துக்கு பி. எஸ்சி. (வேளாண்மை) படிப்பும் அதற்கு மேற்பட்ட எம். எஸ்சி. (மைக்ரோ பயலாஜி) படிப்பும் இங்கு உண்டு.

இக்கல்லூரிக்கென மாதிரிப்பண்ணை, பழத் தோட்டம், வானிலை ஆராய்ச்சி நிலையம் ஆகியவை உள்ளன. இந்திய அரசாங்கமும் தமிழ் நாடு அரசாங்கமும் இப்பல்கலைக் கழகத்தில் வேளாண்மைத் துறைக்கு முப்பது இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளன. அமெரிக்க அரசாங்கம் குறிப்பிட்ட சில ஆராய்ச்சிகளுக்காக 1963-இல் மானியங்கள் கொடுத்து உதவியிருக்கிறது.

இக்கல்லூரி ஏற்பட, இப்போது தமிழ்நாடு விவசாயத்துறை இயக்குநராக இருக்கும் (Director of Agriculture) டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியன.

சீர்மலி கொடையால் அறிவினுல் ஆற்றுஞ்
செயற்கருஞ் செயலினுல் உலகிற்
பேர்மலி புகழாற் பல்கலைக் கழகம்
நிறுவிய பெருமையாற் சிறந்தோன்
ஏர்மலி தருநல் இசைத்தமிழ் வளர்க்கும்
ஏந்தல்நம் செட்டிநாட் டரசாம்
நார்மலி யுளத்தண் ணுமலை வள்ளல்
நலமுற நீடுவா ழியவே.

—பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் நகரத்தார்களுக்குப் பங்கு உண்டு.

நகரத்தார்களின் கல்விப் பணியைச் சென்னைப் பல்கலைக்கழகம் பாராட்டி, அண்ணாமலை அரசர்க்கும் அழகப்ப வள்ளலுக்கும் கௌரவ டி. லிட். பட்டங்கள் வழங்கி யிருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகம் அதன் 108 ஆண்டு வரலாற்றில் 20 பேர்கட்கு மட்டுமே கௌரவப் பட்டங்கள் வழங்கியிருக்கிறது என்பதும் ஈண்டு நினைவுகூர்தற்குரியது.

ராஜா சர் முத்தையா செட்டியாரவர்கள் 1936-37-இல் கல்வியமைச்சராக இருந்த காரணத்தால், சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராக இருந்ததும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் 1940 முதல் 1946 வரையிலும் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் 1952 முதல் 1954 வரையிலும் இப்பல்கலைக் கழக ஆட்சிக்குழு (சிண்டிகேட்) உறுப்பினராக இருந்தனர்.

செனேட் உறுப்பினராக 'சோமலெ' இருந்துள்ளார். இப்போது அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்களும், தி. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்களும் செனேட் உறுப்பினர்களாக இருந்து வருகிறார்கள்.

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டுவிழா நிதி வசூல் குழுவின் தலைவராகப் பணிபுரிந்து வெற்றி கண்டவர் மு. அ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஆவார்கள்.

இப்பல்கலைக் கழகத்தின் சிறந்த பகுதிகளாக உள்ள இராமானுசம் கணித நிறுவனமும், டாக்டர் அழகப்ப செட்டியார் தொழில் நுணுக்கக் கல்லூரியும் அழகப்ப வள்ளலின் கொடை வளத்தால் உருவானவை.

அ. மு. மு. அற நிறுவனத்தார், அ. மு. மு. வெள்ளையன் செட்டியார் பெயரில் ஓர் உணவு விடுதியை, அழகப்ப செட்டியார் தொழில் நுணுக்கக் கல்லூரியில் கட்ட நன்கொடை வழங்கியுள்ளனர். மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் பெயரில் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிச் சிறப்பு விரிவுரைகள் நிகழ்த்த, மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் நினைவு அற நிறுவனத்தார் இப்பல்கலைக் கழகத்தில் கட்டளை ஏற்படுத்தியுள்ளனர்.

மதுரைப் பல்கலைக்கழகம்

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர் தலைநகரும் தமிழ் கண்டதோர் வைகைக் கரையில் அமைந்ததுமாகிய மதுரை மாநகரில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவ, தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்து சில முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது.

மதுரையில் பல்கலைக்கழகம் நிறுவும் எண்ணத்தை முதலில் வெளியிட்டவர் அண்ணாமலை அரசர்; பின்னர், பல சூழ்நிலைகளால் பொன்னம்பலத்தில் அவர் பல்கலைக் கழகம் கண்டார். வெள்ளியம் பலத்தில் பல்கலைக் கழகம் உருவாவதற்கு ஏற்ப அடிப்படைக் கல்லூரிகள் பல

MALAYAN THANA-VAISYA YOUTHS' ASSOCIATION

மலாயா தனவைசிய இளைஞர் சங்கம்

37, Ampang Road, Kuala lumpur.

இச் சங்கம் 21—7—1957ல் துவக்கப் பெற்று சிலாங்கூர் மாகாணப் பதிவு அதிகாரியால் சொசைட்டிகள் சட்டத்தின்கீழ் 1164 நிர் பதிவு பெற்ற சங்கமாக 9—8—1957ல் அங்கீகரிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.

இச்சங்கத்தின் முதல் செயற் குழுவிற்கு தமிழ்நேசன் பத்திரிகையில் உதவி ஆசிரியராய்ப் பணியாற்றிய பலவான்குடி கும. சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் செய்த தொண்டுகள் குறிப்பிடத்தக்கவை.

இந்த ஆண்டின் தலைவராய் மிதிலைப்பட்டி சித. சேது. எம். எஸ் ஸி., அவர்கள் இருந்து வருகிறார்கள்.

சங்கத்தின் நோக்கங்கள்:—

1. நகரத்தார் இளைஞர்களின் பொருளாதார சமூக நலங்களைப் பேணுதல்.

2. நகரத்தார் இளைஞர்களின் உடல்நலம், பண்பாட்டுச் சிறப்பு, கல்வி வளர்ச்சி ஆகியவற்றுக்குப் பாடுபடுவது.

3. இசை நிகழ்ச்சிகள், பொழுது போக்கு வாய்ப்புக்கள் நல்குவது.

4. நூல் நிலையங்கள், மண்டபங்கள் முதலியன நிறுவுதல்.

வற்றை அணிஅணியாக அமைத்தும் பல்கலைக் கழகம் தேவை என்பதைப் பலவாறு வலியுறுத்தியும் தூண்டியும் வந்திருப்பவர்கள் தமிழ்ப் பெரு வள்ளல் கருமுத்து தியாகராசர் அவர்கள் ஆவார்கள்.

அழகப்பா பல்கலைக்கழகம்

அழகப்பாவின் தலையான வேட்கை தாம் நிறுவிய பல கல்லூரிகளையும் ஒன்றுபடுத்தி 'அழகப்பா பல்கலைக் கழகம்' என ஒரு தலைமைக்கழகம் அமைப்பது. அவர்தம் இவ்விருப்பத்தை எல்லோரும் அறிவர். தாம் வாழ்ந்த காலத்தே இந்திய அரசோடு கடிதப் போக்குவரத்துச் செய்து அடிப்படைகோலி வைத்திருக்கிறார். சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் தமிழ்நாடு அரசும் அவர் திட்டத்திற்கு அந்நாளில் இசைவு தெரிவித்தனர். அவர் முயற்சியை மேலும் தொடர்ந்து அழகப்பா பல்கலைக் கழகத்தைக் காண்பது தமிழர் கடனாகும்.

விசுவபாரதி பல்கலைக்கழகம் சாந்திநிகேதனம்

கவியரசர் இரவீந்திரநாத தாகூர் நிறுவியுள்ள இப்பல்கலைக் கழகத்தில் தமிழ் நூல் நிலையம் ஒன்று அமைந்துள்ளது. இது அண்ணாமலை அரசருடைய தமிழ்ப் பணிகளில் குறிப்பிடத்தக்கது.

''காந்தி யடிகள் திருவுள்ளம்
கனிந்து போற்றும் குருதேவன்
ஆய்ந்த அகில கலையாளன்
அண்ணல் தாகூர் அமைத்தவுயர்
சாந்தி நிகேதப் பெரும்பொழிலில்
தமிழகம் கமழச் செய்துபுகழ்
ஏந்தும் அண்ணாமலை மன்னன்
என்றும் வாழ்க; வாழ்கவே!"

என்று கவிமணி அவர்கள் இச்செயலைச் சிறப்பித்துள்ளார்கள்.

இரங்கூன் பல்கலைக்கழகம்

இப்பல்கலைக் கழகத்தில் நகரத்தார்கள் ஏற்படுத்தியுள்ள கட்டளையைப் பற்றிய விவரம் 41-ம் பக்கத்தில் காண்க.

கேரளப் பல்கலைக்கழகம்

1943-ஆம் ஆண்டில் இப்பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி நிறுவ டாக்டர் அழகப்ப செட்டியார் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார்.

